ஆத்மஜோதி

1977

30 வது ஆண்டு

சிறப்பு மலர்



ஆசிரியர்
நாமுத்தையா

ஆத்மஜோதி
நிலையம்
நாவலப்பிட்டி, இலங்கை.

ஆதியில் தமிழ் நால்
அகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை
வழுத்துதும்
போத மெய்ஞ் ஞானம்
நலம் பெறற் பொருட்டே

ஆத்மஜோதி 30வது ஆண்டு சிறப்புமலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!

M. K. MUTHURAMALINGAM PILLAI

BOJANA KORADA FACTORY

No. 10-12 & 283-A, CONVENT ROAD,

Phone: 822579. — P. O. Box – 79.

TAIPING — MALAYSIA.

சமர்ப்பணம்

மலர் என்று ஒன்றிருந்தால் அதனை ஆண்டவனிடம் சமர்ப்பணம் செய்து செய்து இன்பங்கண்டது மனிதகுலம். ஆண்டாள் மலரை மாலையாகத் தொடுத்து அணிந்து தானே அழகுபார்த்து கண்ணனுக்குச் சூட்டினாள் என்பது சரித்திரம். பக்தருலகில் ஆண்டவன் வேறு அடியை வேறு அல்ல; இருவரும் ஒருவரே.

வீமனுக்குப் பொறுத்திருந்து சிவபூஜை செய்ய நேரமில்லை; பழக்கமும் இல்லை. கணப்பொழுதிலே காடுகளிலே உள்ள மலர்களை எல்லாம் கண்ணனுக்கு அர்ப்பணஞ் செய்துவிடுவான்.

தாயுமானவர் பூஜை செய்வதற்காக மலர் எடுப்பதற்கு நந்தவனம் நண்ணினார். அவர் எடுக்கச் சென்ற பூக்களில் எல்லாம் ஆண்டவன் இருப்பதைக் கண்டார். எந்த ஆண்டவனை எடுத்து எந்த ஆண்டவனுக்குப் பூஜை செய்வது என சந்தேகம் வந்துவிட்டது. அதனால் மலர் எடுக்காமலே திருப்பிவிட்டார்.

இவை எல்லாம் வாடும் மலர்கள். நாம் சமர்ப்பிக்கும் மலரோ வாடாமலர். ஆண்டவனுடைய அருளாளர்களுடைய முயற்சியினால் சமைந்தமலர். இம் மலரை ஆண்டவன் தனது பக்தர்களை மகிழ்விப்பதற்காகவாவது தவறாது ஏற்றுக்கொள்வான் என்பது எமது நம்பிக்கை.

இதற்கு முன்புள்ள மலர்களைச் சமர்ப்பிக்கும்போது எமது பிரதிநிதியாகத் தேவருலகில் யாரும் இருந்ததாக நினைவு இல்லை. ஆனால் இப்பொழுதோ தேவர்கள் மகிழ்வதைக் கண்டுமகிழ உயர்திரு. க. இராமச்சந்திரா அவர்கள் இருக்கிறார்கள் என்பதை நினைந்து நாமும் மகிழுகின்றோம். அம்மகிழ்வோடு இறைவன் திருவடியில் சமர்ப்பணம் செய்கின்றோம்.

39812

சின்மயானந்த குருவே

அங்கைகொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப
வன்பினா லுருகி விழிநீர்
ஆறாக வாராத முத்தியின தாவேச
வாசைக் கடற்குண் மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே யெனவு மொழி
தழுதழுத்திட வணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்கனேனையுந்
தண்ணருள் கொடுத்தாள்வையோ
துங்கமிகு பக்குவச் சனகன் முதன் முனிவோர்கள்
தொழுதருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியையொரு சொல்லாலுணர்த்தியே
சொரூபானு பூதிகாட்டிச்
செங்கமல பீடமேற் கல்லாலடித்குள்வளர்
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயா னந்த குருவே

தாயுமானவர்

N. SOMAKANDHAN
Justice of the Peace for All Island
Reg. No. 2000/07/M/AI/ B/311
Park Road, Colombo-5



உலகிலுள்ள பிறவிகளுள் மனிதப் பிறவி உயர்ந்த பிறவி. இந்த மனிதப் பிறவியில்தான் துன்பமில்லாமல் ஆனந்தமாக வாழ்வதற்கு பிரயத்தனம் செய்ய முடியும்; எங்கும் நிறைந்துள்ளதான-ஜோதி வடிவமான-பரம்பொருளான ஆத்ம வஸ்து, நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலேயும் இருந்துகொண்டு நம்முடைய ஒவ்வொரு செயலேயும் செய்விப்பதற்கு காரணமாக இருக்கிறது. அந்த பரம்பொருளான ஜோதி வடிவை நம்முடைய உள்ளத்திற்குள் நோக்கி நம்முடைய உண்மையான ஆனந்தத்தை அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்;

இந்து சமய கருத்துகளேயும்-தத்துவங்களேயும் ஆத்மஜோதி பத்திரிகை வாயிலாக ஸ்ரீலங்காவில் நா. முத்தையா அவர்கள் வெளியிடுவதை அறிந்து சந்தோஷிக்கிறேம்.

தற்போது ஆத்மஜோதியின் 30ம் ஆண்டு நிறைவு விசேஷ மலர் வெளியிடுவது கண்டு பரிபூர்ணமாக ஆசிர்வதிக்கின்றேம்.

— நாராயணஸ்மிருதி

ஆசியுரை



— நயினை சிவஶ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் —

ஆத்மஜோதி என்ற வார்த்தையே இன்பம் பயக்கின்றது. என்றும் யாவ ராலும், எக்காலமும், விரும்பப்படுவது இன்பமேயாம். அந்த இன்பமும் உடல் இன்பம், உயிர் இன்பம் என இரண்டு வகை. உடல் நிலையாதது. உயிர் நிலை உள்ளது. ஆதலின் உடலின்பத்திலும் உயிர் இன்பமே மேலானது – வேண்டத் தக்கது. உயிர் இன்பத்தை ஆன்மலாபம் என்று சொல்லுவார்கள்.

ஆன்மலாபத்தை அடைவதற்கு பேரறிவு மெய்யுணர்வு வேண்டும். மெய் யுணர்வைத் தர எழுந்தவைகளே சமயங்கள்.

உலகில் சமயங்கள் பல உள, அனைத்துச் சமயங்களும் மக்களைத் தீயதின் நீக்கி – நல்ல வற்றிற் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டவையே. ஆகவே ஔவை சொன்னபடி எச்சமயத்தோர் சொல்லும் தீதொழிய நன்மை செய் வதே முறை. தீயதை நீக்கி நல்லதைப் போதிப்பவர்களே தக்கார்–அவர்களைச் சமயப் போதகர் என்றும், குருவென்றும் சொல்லலாம்–நாடு நலம்பெற மக் கள் தக்கார் உரை கேட்டு நடக்கவேண்டும்.

எனவே நம் சைவ சமயத்து பரந்த நிலையும் சைவ சமயாசாரி யர்களது விரிந்த உள்ளப் பான்மையும் நன்கு விளங்கும். இத்தகைய பெருநிலை நம் சமயத்திலும் ஏற்படுவதற்கு இறைவனின் பேரறிவும்-பேராற்றலும் இவர் களிடத்து பதிந்திருப்பதே காரணமாம்.

அதே போன்று நமது ஆத்மஜோதி நிலையத்தாரும் தலைவரும் - பத்திரா சிரியரும் இறைவன் கருணையினால் உண்மையோடு தொண்டுச் சேவையாய் செய்தமையால் தான் இன்று முப்பது ஆண்டைத் தொட்டு நின்று மலர்கின்றது. உயிருமுடம்புமாம் முப்பது முதலே என்று ஒரு பழைய கதையுமுண்டு, அப் படியே என்றும் மலர நமது அன்னை நாக பூஷணி அம்பாளை வணங்கி வாழ்த் துகின்றேன்.

சுபம்!

ஆசியுரை



கெங்காதரானந்த - சிவயோகசமாஜம்

ஹிந்து மதம் புனைந்து உருவாக்கியமதமல்ல. அதுஒரு
ஜாதியும் அல்ல. சனதன தர்மத்தின் உட்கருவில்
உடலெடுத்து சுயமாகவே வளர்ந்து வந்த ஒரு
மானிட வம்சாவழியினர். மதம், ஜாதி யாதா
யிருந்தாலும் சரி சனதன தர்மத்தை
உட்கொண்டு வாழ்கின்ற
அனைவரும் ஹிந்துக்கள்.

ஹிந்து மதத்தின் இந்த சாராம்சத்தை ஆத்மஜோதி முப்பது
ஆண்டுகளாக பலவித தியாகங்கள்வழி காலத்திற்
கேணையும் முறையில் ஆத்மீக உலகத்தின் இதய
ஸ்தானத்தில் ஊற்றிக் கொடுத்திருக்கின்றது.
மேலும் ஆத்மீக தத்துவங்களை நவயுகம்
விரும்பி உட்கொள்ளும் முறையில்
சக்தியும், கவர்ச்சியும் உடையதாக்கி
செயல்படுத்தல் வேண்டும். அதற்
காக கருணை கடாக்ஷம் நிறைந்த
பிரம்ம சக்தியின் ஆசீர்வாதம்
ஆத்மஜோதியிலும் அதன்
தெய்வ நெறித் தொண்டர்
களிலும் என்றும்
படிவதாக.

ஆழித்துப்பா

நால்வேதம் நவின்றிடும் நல்லாத்மஜோதி!

"அங்கவை"

முற்பதைக் கடந்திடும் முதுபழஞ்ஜோதி
முத்தைய்யா முழங்கிடும் முத்தமிழ்ஜோதி!
வெற்பதைத் தணித்திடும் விண்கண்டஜோதி
வீறுகொள் சைவத்தை விளக்கிடுஞ்ஜோதி!
தப்பதே காணாத தண்ணொளிர்ஜோதி
தனக்கென வாழாநற் தனிப்பெருஞ்ஜோதி!

\+ + +

பண்டுநெறிதனைப் பகன்றிடுஞ் ஜோதி
பாட்டுடை ஏடாய்ப் பரவிடுஞ்ஜோதி!
தெண்டனிடும் அடியாரைத் தேற்றிடுஞ்ஜோதி
திக்கெட்டும் உலவிடும் திகம்பரஜோதி!
கண்டவர் விண்டிடக் களிப்புறுஞ்ஜோதி
கவின்மழை பெய்திடும் கார்முகில்ஜோதி!
அண்டமதை ஆட்டிடும் அருட்பரஞ்ஜோதி
ஆறறிவுக் கெட்டாத அருளாத்மஜோதி!

\+ + +

இமயத்தைப் போலிங்கு இலங்கிடுஞ்ஜோதி
ஈழமது ஈன்றிட்ட எங்களதுஜோதி!
சமயத்தை வளர்த்திடும் சத்தியஜோதி
சன்மார்க்க நெறிகாட்டும் சமரசஜோதி!
இதயத்தை ஈர்த்திடும் எழில்மிகுஜோதி
இகபரங் காட்டிடும் இனியநற்ஜோதி!
உதயத்தை உணர்த்திடும் ஒப்பற்றஜோதி
உத்தமர் போற்றிடும் உயராத்மஜோதி!

\+ + +

காலத்தால் அழியாத கற்பகஜோதி
கருணையின் வடிவில் கலந்திடும்ஜோதி!
மேலத்தேயவரும் மெச்சிடுஞ்ஜோதி
மேன்மைகொள் சைவத்தில் மிதந்திடுஞ்ஜோதி!
பாலத்தை அமைத்திங்கு பவனிவருஞ்ஜோதி
படித்தவர் கேட்பவர் பற்றிடுஞ்ஜோதி!
ஞாலத்தே வலம்வரும் நற்குணஜோதி
நால்வேதம் நவின்றிடும் நல்லாத்மஜோதி!

With Best Compliments From:

ANANDA STORES

Wholesale Dealers in Textiles.

105, BANKSHALL STRTET,
COLOMBO – 11.

Cable: **VINAYAGAR**

Phone: 27643

தமிழ் வாழ்க!
தமிழ் இனம் வாழ்க!!



எண்ணுங் காரியங்க ளெல்லாம்—வெற்றி
யேறப் புரிந்தருளல் வேண்டும் தொழில்
பண்ணப் பெருநிதியம் வேண்டும்—அதிற்
பல்லோர் துணைபுரிதல் வேண்டும்—சுவை
நண்ணும் பாட்டிணெடு தாளம்—மிக
நன்று வுளத்தழுந்தல் வேண்டும்—பல
பண்ணிற் கோடிவகை இன்பம்—நான்
பாடத் திறனடைதல் வேண்டும்.



மு. பொ. வீரவாகு

புலோலி மேற்கு
பருத்தித்துறை.

ஆத்மஜோதி சிறப்பு மலருக்கு

எமது நல் வாழ்த்துக்கள்!

மில்க்வைற்

ஒரே செலவில் நமக்கும் பிறர்க்கும் நயம்வர
வாய்ப்பான வழியை நாடுதல் உத்தமமல்லவா?

நாடு நலம்பெற நாம் நற்சேவை செய்ய எமது
உற்பத்திப் பொருள்களை வாங்கி உபயோகியுங்கள்.

- மில்க்வைற் நீல சோப்
- நியூ மில்க்வைற் சோப்
- மில்க்வைற் பார் சோப்
- மில்க்வைற் சலவைப் பவுடர்
- மில்க்வைற் மெடிக்கேட்டற் சோப்
- நீம் வாசனை சோப் (வேப்பெண்ணெய் கலந்தது)

வாங்கிப் பாவித்து அதிக லாபம் அடையுங்கள்

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77 — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"

கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு–12

தொலைபேசி: 36063

அஞ்ஞானத்தால் தோன்றிய அனைத்தும்
ஞானம் உதித்தவுடன் மறைந்து போகின்றது.



K. Sittampalam & Sons,
TEXTILE MERCHANTS,
NELLIADY — KARAVEDDY.

வாழ்க்கையைக் கடமையாகக் கொள்ளா
விட்டால், அந்த வாழ்க்கைக்கு
அர்த்தமேயில்லை.



P. VALLIPURAM
General Merchants,
CHUNNAKAM.

குரு யார்?
உண்மையை அறிந்தவர்
தன்னை அன்டின சீடர்களின்
நலனுக்காக பாடுபடுபவர்.



மு. வல்லிபுரம்
திருமகள் புத்தகசாலை
நெல்லியடி - கரவெட்டி.
ஏஜன்ட்: தினபதி - சன்-தவஸ்

தூயோன் எவன்?

எவன் உள்ளமும் மனமும்
தூய்மையாக இருக்கின்றனவோ அவன்



யூனைட்டெட் புத்தகசாலை
பிரதான புத்தக விற்பனையாளர்
ஜெமினி பென்சி பெலஸ்
மெயின் வீதி,
பருத்தித்துறை.

நீ சம்பாதிக்கும் வரையில்தான்
சுற்றத்தார் உன்மீது பரிவு காட்டுவர்.
வளம் குன்றியதும் உன்னை ஏன் என்று கேட்போர்
அரிதாய் விடுவர்.



SIVAKUMARAN STORES

K. K. S. ROAD — CHUNNAKAM

அழகு எது?—

சிலம்



சுந்தரம் பிரதர்ஸ்

மருந்துக்கடை
175, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இந்தப் பிரபஞ்சம் யாருக்கு
வசப்படும்? —

பிரியமாகப் பேசக் கற்றுக்கொண்டு
தருமத்தை அநுஷ்டிப்பவனுக்கு



ஓட்டோ அச்சகம்

122, சென்றல் வீதி,
கொழும்பு - 12
தொலைபேசி: 33351

சிவன் சக்தியுடன் சேர்ந்தே இவ்வுலகு என்றுன்
சக்தி இன்றி சிவன் சற்றும் அசையான்

நுட்பமான ஆபரண வேலைப்பாடுகளுக்கு

அம்பிஹா ஜுவெல்ஸ்

நகை, இரத்தின வியாபாரம்.

59, கன்னுதிட்டி — யாழ்ப்பாணம்.

மயில் வாகனு! வேதத்தின் உட்பொருளே!
அடியார் உள்ளத்தமரும் முருகா!
உலகைக் காக்கும் சிவகுமரா சரணடைகிறேன்.

யாழ்ப்பாணம் திறம் சுருட்டு, புகையிலை
விற்பனையாளர்

ஸ்ரீ குமரன் ஸ்டோர்ஸ்

உரிமையாளர்: S. பொன்னம்பலம்

நிர். 1, கம்பளி வீதி — நாவலப்பிட்டி.

நோயும், 'நான்' என்ற அகந்தையும் ஆட்சி செலுத்தும் இவ்வுலகம் சோகமயமானது. தாமரை இலை மீதிலுள்ள நீர்த்துளி போல நிலையற்றது. இதனை உணர்வாயாக.



எல்லோரும் எப்போதும்
விரும்பிச் செல்லும் ஸ்தாபனம்



A. K. S. & SONS
Jewel House
JAFFNA.

T'phone: 519

நல்லோர் உறவின் பயனுகப் பொருள்களின்
மீதுள்ள பற்றுப்போம். பற்றுக் குறையக் குறைய
மயக்கம் தெளியும். மயக்கம் தீர்ந்தால் சஞ்சல சித்தி
அமைதியுறும். அந்த நிலையில் ஜீவன் உயிருடன்
இருக்கும் போதே விடுதலைப்பேறு
அடைகின்றது;



ஆத்மஜோதி சிறப்பு மலருக்கு
எமது நல் வாழ்த்துக்கள்!



Indrabawan Cool Bar,

K. K. S. ROAD – CHUNNAKAM.

உள்ளே.....

வையம் துயர் தீர வழி	1
ஆத்ம தரிசனம்	6
மகான்களின் மகிமை	10
இராமகிருஷ்ண மிஷனும் .... பணிகளும்	12
முருகன் மகிமை	15
அத்வைத மகா சமுத்திரம்	18
உள்ளும் புறமும் ஒத்து வாழ்தல்	19
கற்பனவும் இனியமையும்	20
சிவாகமக் கிரியைகள்	21
இதுவுமொரு தேரோட்டம்	24
சிவசிந்தனை	26
ஆத்மஜோதி	27
மாவைப்பள்ளு	29
மானிட வாழ்வு	30
ஈயா மனிதரை ஏன் படைத்தாய்	32
பக்தி	35
கலாயோகி கி. ஆனந்தகுமாரசுவாமி	37
செம்பொருள் காணும் அறிவு	41
யாவரும் ஆராய்ந்து தெளியவேண்டிய உண்மைகள்	44
பழமொழி உணர்த்தும் சமய உண்மைகள்	49
பதினெண் சித்தர்கள்	52
இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கை	56
ஸ்பியாக்கள் வகுத்த வாழ்க்கை நெறி	60
வேலன் கை வேல்	62
அமைதியும், ஆற்றலும் பெறக்கூடுமா?	65
பேரானந்தம் பெறவழி	67
மதமும் அதன் சாராம்சமும்	69
கேட்டாரைப் பிணைக்கும் கீதம்	72
குடி கெடுக்கும் குடி	80
இந்து மதம் காட்டும் அறநெறி	84

விலை ரூபா 10-00

பல்லாண்டு வாழ்கவெனப்-
-பல்லாண்டு கூறுதுமே!

அம்பிகைசமேத சங்கரனருளால் வந்தவதரித்திங்கு வளமான பேரருளே எங்கும்பரப்பிட ஓர் திங்கள் ஏடாகி மூப்பது ஆண்டு முழுப்பணிபுரிந்த ஆத்ம ஜோதியே!
மங்காப்புகழொடு நீ மாநிலத்தில் வாழியவே!

தர்மம் மற்றுள சமயமும் தமிழும் துலங்க சமரச மான பணிகள் ஆற்ற பக்தர்கள், சித்தர்கள், தத்துவ ஞானிகள், தவச்செல்வர்கள் ஆகியோரின் ஆசிகள் பெற்றனை. ஆத்மஜோதியே! பக்தர்கள் சொத்தாம்–முத்தையா என்னும் முழு மனதுடையோன் அயரா உழைப்பால் ஆக்கம் பெற்றனை! அவர் பரநல தியாகி பண்புடன் போற்றினர். பண்டிதர் பாமரர் என்றில்லாது எல்லோர் உள்ளத்திலும் புகுந்து பாவங்கள் தீர்க்க வல்ல பக்தியை புகட்டி வேதனை அகற்றி விளக்கொளி ஏற்றி அறிவையும் அன்பையும் கலந்து நற்பணி புரிய பல்லாண்டு வாழ்கவெனப் பல்லாண்டு கூறுதுமே! என்று ஆசீர்வதிக் கின்றேம்.

ஸ்ரீ வடிவேல்ஸ்வாமி ஸ்ரீ மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்தி நகர் — கிளிநொச்சி.

வாழ்த்துகிறோம்

ஆத்மஜோதி நிலையம் சென்ற முப்பதாண்டுகளாக
ஆற்றிவரும் சமய சமூகப்பணி
பல்லாண்டு வளர்ந்து பெருக வாழ்த்துகிறோம்!



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

72, ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை,
கொழும்பு-7.

கோழித்தீன் - பசூ வகைகள், இரசாயன மருந்து
வகைகள் வாங்குவதற்கு சிறந்த ஸ்தாபனம்

Pettah Forage Stores

78, Wolfendhall Street,
COLOMBO - II Phone: 31986

ஆத்மஜோதி 30வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

தங்க நகை அடைவு பிடிப்பதற்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்

Negombo Pawn Brokers

259, Main Street – NEGOMBO

வையம் துயர் தீர வழி

— நா.முத்தையா —

வையம் துயர் தீர வழி அரன் நாமம் சூழுதல் என்பது சம்பந்தர்கருத்து. அதாவது தீய ஒலி அலைகளே எந்த நேரமும் சூழ்ந்திருக்கின்ற உலகத்திலும் உள்ளத்திலும் இறைவன் நாம ஒலி அலைகளை நிறையச் செய்யவேண்டும். அதனால் மனித உள்ளத்தில் நல்ல நினைவுகளை உண்டாக்கலாம். நல்ல நினைவினால் நல்ல பேச்சும் நல்ல செயலும் உண்டாகும்.

இறைவன் திருநாமத்தைப் பன்முறை பகர்தல் ஜபமாகும். ''யஜ்ஞங்களுக்குள் ஜப யஜ்ஞமாக இருக்கிறேன்'' என்பது கண்ணனுடைய வாக்கு. இந்தக் கலியுகத்தில் ஜபப் பயிற்சி ஒன்றே நித்திய சாந்தியை அளிக்க வல்லது. அழியா ஆனந்தம் பெற எல்லாருக்கும் விருப்பம் உண்டு. அதனைப் பெற வேண்டுமானால் இன்றே ஜபத்தை ஆரம்பிக்க வேண்டும். ஜபம் செய்வதற்கு எவ்வித கட்டுப்பாடும் கிடையாது. போக்கிலும் வரத்திலும் இருந்து கொண்டும் நின்று கொண்டும் படுத்துக்கொண்டும் நித்திரையிலும் ஜபம் செய்யலாம். மனத்தை அதாவது குரங்கு போல - நாய்போல - அலைந்து திரியும் மனத்தை இறைவனது நாமமாகிய சங்கிலியால் இறைவன் திருப்பாதத்தில் கட்டிவிட வேண்டும். இதுவே ஜபயோகத்தின் பயனாகும். இறைவன் திருவடிஞானம் என்பதும் இதுவே.

திருமுறை ஓதும்போதும் முடிவிலும் திருச்சிற்றம்பலம் என்று சொல்வது மரபு. திருச்சிற்றம்பலம் என்பது இறைவன் திருவடியைக் குறிப்பதாகும். நமச்சிவாய வாழ்க என்று ஆரம்பித்த மணிவாசகப்பெருமான் ''இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்றும் ''நாதன் தாள் வாழ்க'' என்றும் குறிப்பிடுகின்றார். பிறவியின் பயன் திருவடிஞானம் என்பது போல நாம ஜபத்தின் பயனும் திருவடி ஞானமே.

''திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே''

என்பது திருமூலர் திருவாக்கு.

திருவடியுணர்ந்து ஆருயிர்களை மும்மலப் பிணியினின்றும் செம்மையுற விடுவிக்கும். அவ்வுணர்வே கிடைத்தற்கரிய திருவருட் சித்திகளை எய்துவிக்கும். அதுவே சிவ உலக வாழ்வினைச் சேர்ப்பிக்கும். அவ்வுணர்வே சிவமாம் பெருவாழ்வைக் கூட்டுவிக்கும்.

இத்தகைய பேற்றினைப் பெறுவதற்கு மூல காரணம் நாமஜபமே. ''சிவ சிவ எனச் சிவ கதிதானே'' என்று திருமூலர் இன்னொரிடத்தில் குறிப்பிடுவதும் இதனையே.

வளமையான கானகம்; அங்கு கூடியுள்ள தபோதனர்கள் அனைவரும் தமக்கெனவாழாப் பிறர்க்குரியாளர்கள். சடைமுடியும், வேதம் மணக்கும் மலர்வாக்கும், கருணை பொழியும் கண்மலர்களும் படைத்த மாதவ முனிவர்கள் ஆயிரக்கணக்கில் அங்கு கூடியிருந்தனர்.

அந்த மகாநாட்டுக்கு வேதவியாசர் தலைமை தாங்கினார். ''இனி கலியுகம் பிறக்கும்; அதர்மம் தலைவிரித்துத் தாண்டவம்புரியும்; அக்கலியின் கொடுமையை எப்படி நாம் சமாளிப்பது? கோடை வெயில் போலக் கொதிக்குமே'' என்றார்கள் முனிபுங்கவர்கள்.

வியாச முனிவர் திருவாய் மலர்ந்தருளினார். எங்கும் ஒரே அமைதி. எல்லோரும் அவருடைய மலர் வாக்கையே நோக்கி நின்றார்கள்.

''ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுலாம்
கலி கல்மஷ நாசி னீம்''

—என்று தெளிவுறக்கூறினார் வேத வியாசர்'

''கந்தப்பெருமானுடைய இணையற்ற கீர்த்தி ஒன்றுதான் கலியில் வரும் பாவங்களைப் போக்கவல்லது'' என்றார். தங்களுக்காகச் சொந்தக் கவலைகளின்றி, உலக மாந்தருக்காகவே கவலைப்படும் முனிவர்கள், அவர் வாக்கைக் கேட்டுச் சாந்தம் உற்றனர்.

ஜபம் நேரடியாக இறைவனுடனுள்ள ஒற்றுமைக்கு வழிகோலுகிறது. ஜபம் செய்வது வழக்கமாகிவிட வேண்டும். ''நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே'' என்ற நிலைக்கு நம்மை நாமே பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அது தெய்வீகத்தன்மையுடனும், தூய்மை, அன்பு, சிரத்தை முதலிய உயர் பண்புகளுடனும் அனுஷ்டிக்கப்பட வேண்டும். காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்க ஓதவேண்டும். அங்ஙனம் ஓதுவார்களுக்கு திருவடிப்பேறு தவறுது கிடைக்கும்.

கலியுகத்தில் பெரும்பாலான மக்களின் தேக வலிவு கெட்டிருப்பதால், ஹடயோகம் பயின்று கடவுளை அடைதல் மிகக்கடினம். ஜபம் செய்து கடவுளை அடைதல் மிக எளிது. கலியுகத்தில் இறைவன் நாமத்தை உள்ளம் உருகி ஒருமுறை சொன்னாலே இறைவனது திருக்காட்சி கிடைத்துவிடும்.

துகாராம் என்ற மஹாராஷ்டிர பக்த சிரோன்மணி துருவன், பிரகலாதன், வால்மீகி மஹாரிஷி, ராமகிருஷ்ண பரமஹம்சர், முதலியோர் பகவான் நாமாவை உச்சரித்தே மோட்சம் அடைந்தனர். ஜபயோகத்தின் இறுதியில் சாதகன் சமாதி அடைந்து கடவுளுடன் ஒன்றி விடுகின்றான். நாமம் வேறு நாமி வேறு என்றில்லாமல் இரண்டும் ஒன்றுகிவிடுகின்றன. ''சும்மா இரு சொல்லற'' என்ற நிலை வருகின்றது.

வாயைப் படைத்த ஆண்டவன் அதில் ஒரு நாவையும் படைத்ததோடல்லாது, அதற்குச் சொல்வன்மையும் படைத்துத் தந்துள்ளான். இத்தனையும் அவன் செய்தது, அவன் நாமத்தைச் சொல்லி, அவன் புகழ் பாடவே அன்றி வேறு எதற்கும் அல்ல.

ஆண்டவன் நாமத்தை நாம் உச்சரிப்பதினால் 'நான்' 'எனது' என்ற அகங்கார மமகாரங்கள் நம்மை விட்டு அகன்று விடுகின்றன. 'சேதஸ்' என்ற கண்ணாடி அழுக்காகி விட்டது. அது சுத்தம் அடைவது எப்படி? அதாவது மனக்கண்ணாடியில் உலக வாசனையாகிய அழுக்குக் கறை பிடித்துள்ளது. நாம ஜபம் இந்த அழுக்கைக் கழுவி சுத்தப்படுத்தும் தன்மை உடையது. பிரேமையுடன் ஆண்டவனின் நாமத்தைப் பல முறை சொல்லும் போது 'நான்' 'எனது' என்ற அழுக்குகள் தேய்ந்து மாய்ந்து விடுகின்றன. ஆண்டவனும் அவன் நாமமும் ரச வடிவமாய் இருக்கின்றன. ஆகவே, இந்த ரச வடிவமாய் இருக்கும் ஆண்டவனின் நாமம் 'நான்' 'எனது' என்ற அழுக்குகளைக் கழுவும் ஆற்றல் பெற்றுள்ளன.

ஆண்டவனின் நாமம் நம்மை இந்த சம்சாரத்தினின்று உய்வித்து விடுதலை அளிக்கும் வல்லமை பெற்றுள்ளது. நாம் எல்லோரும் 'பவம்' எனப்படும் சம்சார கானகத்திலே அகப்பட்டுக் கொண்டோம். அந்தக் காட்டிலே 'நான்' 'எனது' என்னும் பாபமாகிய நெருப்பு மூண்டு பற்றிக் கொண்டது. இந்த நெருப்பின் மத்தியில் அகப்பட்டுத் தவிக்கிறார்கள் உலக மக்கள். காட்டில் பற்றிய நெருப்பை அணைப்பது என்பது மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட சாதனை. மழை ஒன்றைத் தவிர இந்த நெருப்பை அணைக்கும் சக்தி வேறெதற்கும் இல்லை. அதே போல் சம்சார கானகத்தில் சிக்கித் திசை அறியாது தத்தளிக்கும் நாம், ஆண்டவனை எண்ணி எண்ணி, அவன் நாமத்தைச் சொல்லும்போது, ஆண்டவன் நாமம் நெருப்பை அணைக்கும் மழை போல் பொழிந்து நம் வாழ்க்கைப் பயணத்தை பூர்த்தி செய்கின்றது.

இது பற்றிக் கருடபுராணத்திலே ஒரு சுலோகம் வருகின்றது. அதன் கருத்து பின் வருமாறு:- ''ஹே மனிதா! பாபமாகிற நெருப்பு பற்றி எரிகிறதைப் பார்த்து நீ பயப்படாதே! அதற்கு மருந்து ஒன்றுள்ளது. அது தான் கோவிந்தனின் நாமம். அது மேகம் போன்றது. கோவிந்தா! கோவிந்தா! என்று இடி முழக்கம் போல் நீ கதறினால் அவனது அருளாகிய மழை பெய்து உன் பாபத்தை நீக்கி விடும்.'' ஆண்டவன் நாமம் நம்மை, 'பவம்' என்னும் காட்டுத் தீயினின்றும் உய்விக்கும் ஆற்றல் உடையது.

ஆண்டவனின் நாமத்தைச் சொல்லும் போது நம்முடைய இதயம் விரிந்து பிரம் மானந்தமாகிய ஒரு பரமானந்தத்தைத் தரும் சக்தி வாய்ந்தது. மனித வாழ்க்கை 'சிரேயஸ்' 'பிரேயஸ்' என்று இருவகைப் படும். சுகம் என்று நாம் நினைக்கும் இந்த உலக விஷயங்கள் அனைத்தும் துக்கமானவை களே. இந்தத் துக்ககரமான உலக விஷயங் களை விரும்பி அதைக் கஷ்டப்பட்டு அடைந்து நாம் எல்லோரும் மோசம் போய் விடுகின் றோம். இதற்குப் 'பிரேயஸ்' என்று பெயர். ஆனால் ஆசைகளை எல்லாம் ஒழிக்க முடியாது என்பதை உணர்ந்து அந்த ஆசை களை எல்லாம் பகவானுக்கே அர்ப்பணஞ் செய்தல் சாலச் சிறந்தது. பகவானுக்காக அர்ப்பணஞ் செய்வது என்பது பகவான் மேல் அன்பு கொள்வது என்பது கருத்து. இந்தப் பிரேமையினால் அடையும் இன்பம் பேரின்பமாகும். இதற்கு 'சிரேயஸ்' என்று பெயர்.

ஸ்ரீ சைதன்ய மகாப்பிரபு சிரேயசை ஆம்பலாக உருவகிக்கின்றார். ஆம்பலை இத யத்திற்கு ஒப்பிடுகின்றார். ஆம்பல் சூரிய வெப்பத்தால் வாடிக் கூம்பியும், சந்திரோத யத்தில் மலர்ந்தும் இருக்கக்கூடிய தன்மை உடையது. இந்த இதயமாகிற ஆம்பல் சம் சார தர்மமாகிற சூரிய வெப்பத்தால் கூம்பி வாடி இருக்கிறது. சந்திரோதய மாகிற ஆண்டவன் நாமத்தைக் கூறும்போது இதயமாகிற ஆம்பல் விரிந்து பிரகாசம் என்ற ஆனந்தத்தைத் தருகின்றது.

ஆண்டவனின் நாமம் நம்மை உல விஷயங்களாகிய ஆசாபாசங்களினின்று விடு வித்து, ஆண்டவனை நாடச் செய்யும் ஆற் றல் வாய்ந்தது. ஆண்டவனை விரும்பி அவன் நாமத்தைச் சொல்லும் காரியம் பிரம் வித்தைக்குச் சமமானது. யோகிகளும் ஞானி களும் படாத பாடுபட்டுத் தேடுவது தான் பிரம வித்தை. பிரம்ம வித்தையாகிற பக் தன் ஆண்டவனைப் பதியாகப் பாவித்து அவன் நாமத்தைச் சொல்லும்போது சகல விதமான ஆசாபாசங்களினின்று விடுபட்டு ஆண்டவனுடன் இரண்டறக் கலந்து, வாழ்க் கையின் இலட்சியத்தை அடைகிறான். கல் யாணமாகிய பெண் ஒருத்தி தன் தாய் தந்தை யர்களையும், சகோதரர்களையும், சுற்றத்தார் களையும் துறந்து தன் பதியை நாடிச் செல்வது போல, பக்தன் ஒருவனும் உலக விஷயங்களா கிய ஆசாபாசங்களையும் துறந்து ஆண்ட வனையே நாடிச் செல்கிறான்.

பகவான் நாமத்தால் ஒவ்வொருவரு டைய உள்ளமும் ஆனந்தத்தால் பொங்கி வழியும் வல்லமை பெற்றுள்ளது. ஆனந்தம் ஒரு எல்லையற்ற கடல். கடல் அலைகள் பொங்கி எழுவதைப் பார்க்கிறோம். அதுபோ லவே பக்தனது உள்ளக்கடல் ஆண்டவனின் நாமம் சொல்லச் சொல்ல ஆனந்தத்தால் பொங்கி வழிகிறது.

ஆண்டவனுக்கு ஆயிரக்கணக்கான நாமங்கள் உள. அவற்றில் எந்த ஒரு நாமத் தையும் உருக்கமுடன் உள்ளங்கனிந்து சொன் னாலும் பூரணமாகிய அமிருதத்தைச் சுவைப் பது போல இருக்கும். நாமம் சொல்லச் சொல்லத் தித்திப்பது, ஊனினை உருக்குவது. உள்ளொளி பெருக்குவது.

ஆண்டவனின் நாமம் எல்லா ஆன்மாக் களையும் குளிப்பாட்டி சுத்திகரணம் செய்து விடுகிறது. நாம் எவ்வளவுக்கெவ்வளவு சத்ய நெறியைக் கடைப்பிடிக்கிறோமோ, சத்ய வாழ்க்கை வாழ்கிறோமோ, அவ்வளவுக்கவ் வளவு நாம் கூறும் ஒவ்வொரு நாமத்திற் கும் வல்லமை உண்டு. நம் வாழ்க்கையில் சத்தியம் இல்லாது போனால், நாம் சொல் லும் நாமங்கட்கும் சக்தி இல்லாது போய் விடும். பகவன் நாமத்தை உச்சரிக்க உச்சரிக்க சரீரமும், இந்திரியங்களும், மனதும், புத்தி யும், ஆனந்த சாகரத்தில் குளிப்பாட்டியது போல் புனிதத் தன்மை அடைந்து விடுகின் றன.

ஆணவக் கலப்பற்ற உணர்ச்சி உடையவனாய் இருப்பவன் பக்தன். 'யான் புல்லினுங்கடை யேன்' என்ற ஒரு உணர்ச்சி படைத்தவனே பக்தன். தன்னைவிடத் தாழ்ந்தது வேறு ஒன்றும் இல்லை. 'கடையிலுங் கடையேன்'

என்ற உணர்ச்சி படைக்கப்பட்டவன் தான் பக்தன். தன்னை அவ்வளவு கீழ்த்தரமாக எண்ணும் பக்தனால் தான் உலக சேவையில் ஈடுபடமுடியும். பொறுமையின் பூஷணமாக விளங்குபவன் பக்தன். அவனது பொறுமை மரம் ஒன்றின் பொறுமையினும் உயர்ந்தது. எப்படி மரம் அதன் கிளைகளையும் இலைகளையும் பறித்து அதற்குத் துன்பம் கொடுக்கும் ஒரு மனிதனுக்கு, பதிலுக்குத் துன்பந்தராது, இன்பமாகிய நிழலையும் காய்கனிகளையும் கொடுத்து உதவி, பொறுமையைக் கையாளுகிறதோ, அதே போன்று பகவத் பக்தனும் பொறுமையை அனுஷ்டிக்கிறான். பக்தன் ஒருவன் உலகத்தில் வாழும் உயிரினங்கள் எல்லாவற்றையும் மதித்து வாழுகின்றான். உலகில் உள்ள நீசவஸ்துவிற்கும் அவன் அடிபணிந்து விழுந்து வணங்குகிறான். இடைவிடாது இறைவன் நாமத்தையே சொல்லுகின்றான்.

ஜபத்திற்கும் தியானத்திற்கும் ஒரு மாறுபாடு உண்டு. ஜபம் மந்திரோச்சாடனம் செய்வது. தியானம் கடவுளின் திவ்ய ரூபத்தையும் கல்யாண குணங்களையும் பற்றிச் சிந்தனையில் ஆழ்ந்து விடுவது. கடவுளைப் பற்றித் தியானம் செய்வது இருவகைப்படும். ஒன்று ஜபத்துடன் சேர்ந்து தியானம். மற்றொன்று ஜபமில்லாத தனித்தியானம். அதாவது ஜபசகிததியானம் என்றும் ஜபரகித தியானம் என்றும் இரண்டுவிதமான தியானம் உண்டு. ஆரம்பத்தில் ஜபத்துடன் தியானம் செய்யலாம்.. இது முற்றிச் சுத்த தியானமாக முடியும். அப்பொழுது ஜபம் தானாக நழுவிவிடும். இவ்வாறு முதிர்ந்தது தான் ஜபத்தின் பலன். அப்பொழுது ஏகாக்கிரம் என்ற மனது ஒன்றுதல் எனும் பயிற்சியை தனியாக ஆரம்பிக்கலாம். எமது மனதுக்கு எது சௌகரியமோ அதற்குத் தக்கதாக ஜபசகித தியானமோ, தனி தியானமோ பயிலலாம்.

ஈசனின் நாமத்தையும் ரூபத்தையும் தனித்தனியாகப் பிரிக்கக்கூடாது. ஏனெனில் எண்ணமும் வார்த்தையும் பிரிக்க முடியாதல்லவா? ஒரு எண்ணம் தோன்றும் பொழுதெல்லாம் அந்த எண்ணத்தைக் குறிக்கும் வார்த்தையும் தோன்றி விடுகின்றது. ஒரு மந்திரத்தை ஜபிக்கும் போது இஷ்டதேவதையை பிரார்த்திப்பதாகவும் அந்த இஷ்ட தேவதை தான் ஜபத்தில் தோன்றி எம்மைக் கடாட்சிப்பதாகவும் நாம் கருத வேண்டும்.

மந்திர ஜபத்தை உணர்ச்சியுடன் செய்ய வேண்டும். அந்த மந்திரத்தின் பொருளைக் குருமூலம் அறிந்து கொள்வது நல்லது. மந்திர தேவதையின் சாந்நித்தியத்தை எங்கும் எல்லாவற்றிலும் உணர வேண்டும். இப்படி தெய்வத்தை அணுகிக்கொண்டே மந்திரோச்சாடனம் செய்தால், அந்தத் தெய்வம் ஹிருதய தாமரையில் பிரகாசிக்கும்.

மனம் ஒன்றுபடுவதற்கு மானச பூஜை சிறந்தது. புஷ்பம் சந்தனம் முதலிய பொருட்களை வைத்துக்கொண்டு கற்பூர ஆரத்தி செய்து வெளியே பூஜை எப்படிச் செய்கின்றார்களோ அதுபோலவேதான் மானஸ பூஜையும். மானஸ பூஜைக்கு மன ஈடுபாடு ஒன்றே தான் தேவை. வேறு எத்தகைய செலவும் இல்லை. நூற்றெட்டுப் பூவுக்குப் பதிலாக லட்சம் பூக்களைக் கொண்டே அர்ச்சனை செய்யலாம். திருப்பாற்கடலைக் கொண்டு வந்தே பாலாபிஷேகம் செய்யலாம்.

எமது இஷ்டமூர்த்தியை முதலில் மனதில் எழுந்தருளப்பண்ணி அதன்பின்பு பூஜைக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் ஆயத்தம் செய்ய வேண்டும். வெளிப்பூஜை மனம் ஈடுபடாமலும் செய்யலாம். ஆனால் மானஸ பூஜை மனஈடுபாடு இல்லாமல் செய்ய முடியாது. மானஸீக ஜபம் பல மடங்கு பலனை அளிக்கிறது.

இடைவிடாத ஜபத்தினாலும் வழிபாட்டினாலும் மனம் பரிசுத்தம் அடைகிறது. அது நல்ல தூயஎண்ணங்களால் நிரப்பப்படுகிறது. நல்ல உயர்ந்த எண்ணங்களையே எண்ணுவதில் தன்னைப் பழக்கப்படுத்தும் ஒருவனுடைய மனமும் நல்லெண்ணங்களை எண்ணுந் தன்மையை விரிவடையச் செய்கிறது. ஜபம் செய்யும்போதும் இறைவணக்கத்தின்

போதும் மனம் இறைவன் தன் திருஉருவத் தையே எண்ணி நிற்கும் நேரம் மனப்பொருள் உண்மையில் அந்த உருவத்தின் தோற்றமா கவே அமைகிறது. பொருளின் பதிவு மனதில் விடப்படுகிறது. தெய்வீக எண்ணங்களே வர வேற்கும் ஒருவன் இடைவிடாத சிந்தனை யினாலும், தியாகத்தினாலும் உண்மையாகவே தெய்வாம்சம் பொருந்தியவனாகவே மாற்றப் படுகிறான். அவனது தன்மை பரிசுத்தப்படுத் தப்பட்டு தெய்வீகமாக்கப்படுகிறது. சிந்திப் பவனும் சிந்திக்கப்படும்பொருளும், வழிபடு பவரும் வழிபடும் பொருளும், எண்ணுப வரும் எண்ணமும் ஒன்றாகவே அமைகின்றன. இதுவே சமாதி. இதுவே ஜபம் அல்லது இறை வணக்கத்தின் பயனாகும்.

பகவந்நாமாக்களைக் கீர்த்தனம் செய்வ தாலேயே ஒருவன் கோரமான கலியினின்று விடுபடலாம். வேதங்களிலோ தர்ம சாஸ்தி ரங்களிலோ சதாசாரங்களிலோ வகுக்கப் பட்ட வைதீகமான கர்மாக்களையோ, உபா சனைகளையோ செய்யவேண்டும் என்பதைக் கலி சிறிதும் எதிர்பார்ப்பதில்லை. எப்போதும் பகவந்நாமகீர்த்தனத்தை மனதாரச் செய் தாலே அவனைக் கலி அண்டுவதில்லை. அதை யும் ஒரு மனிதன் செய்யாவிட்டால் அவனுக்கு விடுதலையே கிடையாது.

எல்லாப் பக்தர்களையும் இணைக்கும் ஒரு மைப்பாட்டில் நம்பிக்கை, ஆத்ம தத்துவத் தில் பற்று, பக்தியில் இனிமை நுகர்தல் இவற் றை எடுத்துரைக்கவல்லது இறைவன் நாம ஜபம் ஒன்றே. ஆ த் மீ க மறுமலர்ச்சிக்குக் காரணமாக அமைந்ததும் பகவந்நாம ஜெபம் தான்.

ஸ்ரீ ராமபிரான் இலங்கைக்குப்போய்ச் சேருவதற்கு முன்னால் கடலின் ஊடாக அணை போட வேண்டியிருந்தது. ஆனால் அவரது பரம பக்தனான அனுமான் ஸ்ரீராமபிரானிடம் வைத்திருந்த திட பக்தியாலும் அவ ரது நாமத்தில் வைத்திருந்த திடநம்பிக்கையா லும் பெற்ற பெரும் ஆன்ம பலத்தால் சமுத் திரத்தையே ஒரு தாண்டாகத் தாண்டி இலங் கையைச் சேர்ந்தான். தா ண் டு ம் போ து சிந்தை ஸ்ரீராமனை நினைக்க, வாய் ராம நாமத் தை ஓதிக்கொண்டிருந்தது. பலவானான அனு மனுக்கு அவனே அறியாத பலத்தைக்கொடுத் தது ராமநாமம்.

ஸ்ரீராமனைவிட ராமநாமம் மிகச் சக்தி வாய்ந்தது என்பர் ஆன்றோர். உண்மையில் ராமனும் ராமநாமமும் ஒன்றே ஆகும். மகா பலவானனான அனுமனுக்கு இருகரைகளுக்கு ஊடாக உள்ள ஓர் அலைகடலைத் தாண்டிச் செல்ல சக்தியையும் உற்சாகத்தையும் வேகத் தையும் கொடுத்துத் துணை செய்தது ஸ்ரீராம நாமம். ஆனால் கரைகளையே காண இல்லா ததும் தாண்ட முடியாததும், துன்ப அலைகள் மிகுந்ததும் ஆன இந்த சம்சார சாகரத்தை தாண்டுதற்கு உறுதுணையாக அமைந்தது பகவந்நாமம் ஒன்றே.

கல்லோடுகட்டி அப்பரைக் கடலிலே போட்டபோது அக்கல்லை மிதக்கச் செய்தது நமச்சிவாய மந்திரம். சுண்ணாம்புக் காளவா யில் அப்பரை இட்டபோது மாசில் வீணையா கவும் மாலை மதியமாகவும் வீசுதென்றலாக வும் இளவேனிலாகவும் பொ ய் கை யா க வும் குளிரச் செய்தது நமச்சிவாய மந்திரம். எலும்பைப் பெண்ணாக்கியதும் பாம்பு கடித் தவனை உயிர்பெற்றெழச் செய்ததும் மூதலை உண்ட பாலனை மீட்டதும் குதிரையிலே கயி லாயம் சேரச்செய்ததும் நமச்சிவாய மந்திரம். இறைவன் நாமத்திற்கு இத்தகைய சக்தி உண்டு. ஆகவே நம் துயர்தீர பகவந்நாமத் தை ஓதுவோமாக!

கரத்தினைத் தட்டும் சத்தம்
காதினிற் பட்டகாலை
மரத்தினிற் றங்கும் புட்கள்
மரத்தை விட்டகலுமாப்போல்
பரத்தினின் நாமம் தன்னைப்
பரிவுடன் பாடும் போது
பறந்திடும் உடம்பை விட்டே
பண்ணிய பாவந்தானே

— ஒரு பக்தன்

ஆத்ம தரிசனம்

— திருமதி. உமாதேவி பத்மநாதன் —

புதுவை

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றுள் தமிழ் மூதாட்டி. அது உண்மை தானே! குறையற்ற நிறைவான மானிடப் பிறவி எடுத்தல் அரிது என்றுல், நற்குணங் களும், நற்பண்புகளும் நிரம்பப்பெற்றவர் களாய் இருப்பது அதனிலும் அரிதாக உள்ளது என்பது'' உள்ளங்கை நெல்லிக்கனி யாகும். மானிடப் பிறவியென்பது எளிதில் கிட்டாதது என்பதை மாணிக்க வாசகரின் மனமுருக்கும் பாடல்களுள் ஒன்று தெளி வாகக் குறிப்பிடுகின்றது.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர ஜங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்!

என்று மனவருத்தத்துடன் கூறி உருகி நிற் கிறார் மாணிக்கவாசகர். இத்தனை பிறப்புக் களையும் எடுத்து என்ன பயன்? எடுக்க, எடுக்கத் தொல்லைதான். சஞ்சித, பிராரப்த, கர்மவினைகள் வளர்ந்து கொண்டு போகின்றதே தவிரக் குறைவதாகக்காணும். அவற்றைக் குறைக்க, பிறவாமல் பேரின்ப வாழ்வு வாழ என்ன செய்யலாம்? என்று எண்ணினார். அதற்கான வழிவகைகளைத் தேடினர். இறுதியில் தன் ஆத்மாவைப் பரி சுத்தமாக்கி, மனத்தாமரையில் ஒளிர்ந்து, பெருவாழ்வு நல்கும் அருட்பெருஞ்சோதி யைக் கண்டார். அதன் ஒளிதான் மாயை யிருள் மூடிய பெருங்காடான, பிறவிப் பெருங்காட்டைக் கடக்க உதவும் என் றுணர்ந்து கொண்டார். மூற்றுமுணர்ந்த நிலையில் தாம் கண்ட ஆத்மதரிசனத்தின் பரவசத்தில், நமக்கெல்லாம் உய்யும் வழிகளை எளியபாமாலைகள் மூலம் எடுத்தோத முற் பட்டார். அவர் மட்டுமா? சுந்தரர், அப்பர், சம்பந்தர், மற்றும் ஏட்டிலடங்கா பலப்பலத் திருவருட் செல்வர்கள் அன்றிலிருந்து இன்று வரை முயன்று வருகின்றனர்.

''ஆத்ம தரிசனம்'' என்றுல் என்ன? என்ற வினு நம்மில் பலருக்கு எழுவது இயற்கை. நம்முள் உறையும் இறைவனை நமக்குள்ளே கண்டு, அவனைத் தரிசனம் செய்வதே'' ஆத்ம தரிசனம்'' என்று சுருக்க மாகக் கூறலாம். அந்த ஒப்பற்ற தரிசனத் தைப் பெற பலவழிகளில் முயல வேண்டும். முதற்படியாக இறைவனை மனதுள், பூசிக்க வேண்டும். இறைவன் பலசெல்வங்கள் நிறைந்த பூமியை மனிதன் அனுபவிக்கப் படைத்தான்.

தன்னை வணங்க, தன் புகழ்பாடப் படைத்தான் என்றுல் அது மிகையன்று. மனி தர்களில் பெரும்பாலோர் பொன்னுக்கும், பொருளுக்கும் அடிமையாகி அவைகளைப் பெறத்தான் இறைவனை வழுத்துகின்றார் களே தவிர உண்மையறிவு பெறும் பொருட் டல்ல

''மதியே மனிதன், மதி மறந்த மனிதன்
மதி தேடும் மனிதன், மதியில் மதியாய்
மதியோடு நிலைத்தவன் மனித ஈசன்''

என்பதை யறியாதவர்கள் இவர்கள். இவர் களைப் போன்றவர்கள் இறைவனைக் காம தேனுவாக, விரும்பியதை அளிக்கும் கற்பக தருவாகக் கொள்கின்றார்களே தவிர பிறவித் தளையை உடைத்தெறிய வல்லவன் என்றே, வினைகளையழிப்பவன் என்றே எண்ணி தமது உயிர்க் கொடியான ஆத்மாவுக்குப் பற்றுக் கோடாகக் கொள்ளும் மன நிலையடையப் பெறுவதில்லை. ஆயிரமாயிரமாகக் கொட்டி அபிஷேக ஆராதனைகள் செய்வதும், மேள தாளங்கள், வாண வேடிக்கைகள் அமைப் பதும், பக்தியல்ல. அறுசுவை உண்டிகள்,

ஆடம்பரமான பூசையார்ப்பாட்டங்கள், பகட்டான வெளிப்பூச்சுக்கள் இவை எதுவுமே உண்மையான பக்திக்குத் தேவையில்லாதன. அவன் வேண்டுவது மலரைவிட மேலான தூய இதய மலர். அதனை அந்தக் கரண சுத்தியுடன் அவனுக்கு அர்ப்பணித்தால் அதைவிடப் பெரிய பூசை வேறு ஏதுமில்லை.

ஆனால் பலர் ஒவ்வொரு காரணத்தைக் கூறி தமக்குத் தாமே சமாதானம் செய்து கொள்கின்றனர். சிலருக்கு வேலைத்தொல்லைகள். பலருக்கு வருவாய் பற்றுக்குறை. மற்றும் பலருக்குக் குடும்பத் தொல்லைகள். இப்படிப் பல காரணங்களைக் கற்பிக்கின்றனர். இவை உண்மையே. ஆயினும் இறைவனை முழு மனதுடன் வழிபட ஒரிரு நிமிடங்கள் ஒதுக்குவதில் தவறில்லை. அதனால் பெருத்த நஷ்டம் வரப்போவதுமில்லை. வேறு சிலர் உண்ணவும், உறங்கவும், உழைக்கவுமே தாங்கள் இருப்பதாக நினைத்து வாழ்வர். இன்னும் சிலர் வாழ்க்கை வாழ்வதற்கே! சாமியாவது பூதமாவது என்பர். "படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள்கோயில்" என்னும் கூற்றை மெய்ப்பிப்பதுபோல்நடந்து கொள்பவர்களும் உண்டு. சாமியாவது? பூதமாவது? வெங்காயம்! என்று கூறும் பகுத்தறிவு வாதிகளும் உண்டு. மலர்களில் பல வகையுள்ளது போல் மனிதர்களிலும் பல வகைப்பட்டவர்கள் உள்ளனர். இதை ஒரு பெரியார் மிகவும் அழகாக

மனிதரிலும் பறவையுண்டு விலங்குமுண்டு
கல்லுண்டு மரமுண்டு
மனிதரிலும் நீர்வாழுஞ் சாதியுண்டு
அநேககுல மனிதருண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரு
மனிதராய் வருவதுண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததேயருமையென
வகுத்தார் முன்னோர்''

என்று கூறுகின்றார்.

இது பல அரிய, அழகிய கருத்துக்களை உள்ளடக்கிய அற்புதமான பாடலாகும். கருத்தை விரித்துரைப்பின் அவை காவிரி போல் பெருகும். எனினும் சுருக்கமாகத் தருகின்றேன்.

பறவைகளில் பல இனங்கள் உண்டு. அன்னப் பறவையானது, பாலையும், நீரையும் கலந்து வைப்பின் நீரைவிடுத்துப் பாலை மட்டும் தனியே பிரித்து அருந்திவிடும் இயல்புடையது. இப்பறவையைப்போலவே, குற்றங் கடிந்து குணத்தைக் கொண்டு வாழும் நல்லோர்களாகிய உத்தமர்கள் மனிதரில் உண்டு. சாதவாகனப் பறவை வானின்று இழியும் மழைத்துளிகளைத் தவமிருந்து ஆவலுடன் உண்ணும். அதைப்போல் பூமியில் உள்ள அற்பப் பொருட்களுக்கோ, சுகங்களுக்கோ ஆசை வைக்காமல் உயர்ந்தவைகளைத் தேடி, நாடி, ஓடிப் பெறுவார்கள். காகங்கள், கோழிகள் சர்வபட்சிணிகள். அவைகளைப் போல் நல்லதையும், கெட்டதையும் செய்யும் மத்திமர்களும் உள்ளனர். உயர உயரப் பறந்தாலும் பருந்தின் பார்வை கீழே, பூமியில் அழுகிப்போன மாமிசப் பிண்டங்களைத் தேடியலையும். அதுபோல் பட்டம், பதவி, செல்வம், கௌரவம் இவை கொண்டு உயர்ந்த நிலையில் இருப்பினும் அவைகளின் துணையால் இழிசெயல்களைச் செய்யும் உளுத்துப்போன உளுத்தர்களும் உள்ளனர். இவர்கள் அதமர்கள் எனப் படுவர்.

இவர்களில் எல்லாம் சேராமல் தனித்து நின்று தம்முடைய சுகுண செயல்களால் நின்றுலவும் பெரியோர்களும் உள்ளனர். வானவரே மனிதராய் அவதரித்தாரோ என்று வியந்து புகழும்படி வாழ்பவர்களும் உண்டு. இத்தகையோர் பெரும்பாலும் மகான்களாக, சமயக்குரவர்களாக, ஞானிகளாக இருப்பார்கள் என்பது கண்கூடான உண்மையாகும். பிறப்பை அறுத்துக்கொள்வது என்பது அவ்வளவு எளிதான செயலல்ல. பிறவாமை வேண்டும் என்றால், இறைவனை மறவாமை வேண்டும். அது ஒன்றுதான் பசுவாகிய ஜீவன், பதியாகிய பரமனுடன் இணைய வழிகோலும்.

இறைவனை வழிபடவேண்டுமென்றால் பெரிய சடங்குகளைச் செய்ய வேண்டும், மந்திரங்கள் ஓத வேண்டும் என்று பலர் நினைத்து மருள்கின்றார்கள். அது தேவையில்லை. இந்து

மதம் அன்பையும், அடக்கத்தையும், சாந்தத்தையும், இரக்கத்தையும் தன்னுள் கொண்டது. அந்த வழிகளை மேற்கொண்டால் இறையருள் பெறுவது எளிதாகும். அடக்கம் தேவை. அடக்கம் என்ற ல் மனவடக்கம் மட்டுமல்ல ஐம்புலன் அடக்கமும் தான். இறை நெறி நிற்க விரும்பின் அடக்கத்தைக் கைக்கொள்க. அதனால் பெரும் பயனுண்டு என்கிறார் திருமூலர்:

பார்ப்பான் அகத்திலே பால்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன!
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே.

பால் பசுக்களாகக் குறிப்பிடப் படுபவை ஐம்புலன்களாகும். மேய்ப்பது மனமாகும். பசுக்களைத் தன்னிச்சைப்படிச் செல்லவொட்டாமல், அவை செல்லும் வழியில் மனதையும் ஓடவிடாமல் தடுத்துக் கட்டினால் அவை ஜீவாத்மாவுடன் ஒன்றி ஆத்ம தரிசனத்தில் இலயித்து சிவஞான அனுபூதி யென்னும் சுவையான பாலைப்பொழியும் என்கிறது திருமந்திரம்.

இரண்டாவதாக வேண்டப் படுவது அன்பு. அன்பு என்ற ல் துன்பத்தையோ, துன்பத்தால் வருந்துகின்றவர்களையோ கண்டதும் 'ஐயோ! பாவம்!' என்று பரிதாபப் பட்டு, அப்பால் சென்றதும் மறந்து விடக் கூடிய அன்பல்ல. அப்படி இருப்பதும் உண்மை அன்பிற்கு அழகுமல்ல. 'அன்பு என்பது சிறு தூறல் அல்ல. போதும், போதும் என்று கூறுமளவு பெருமழையாகக் கொட்டக் கூடியது' என்ற கருத்துப்படி இருக்க வேண்டும். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன். பசியினால் இளைத்தே வீடு தோறும் இரந்தும், பசியாறுது அயர்ந்தவெற்றரை கண்டு உளம் பதைத்தேன்' என்று சொல்லக்கூடிய அன்பாக இருக்கவேண்டும். அதுதான் அன்பு. அது சிவம். 'அன்பே சிவம்' என்பது தானே தமிழரின் தாரக மந்திரம். ஆகவேதான் அன்பு வற்புறுத்தப் படுகின்றது. யார் உண்மையான, மாசு மறுவற்ற, உயர்வு தாழ்வற்ற அன்புள்ளம் கொண்டவர்களோ அவர்கள் பரப்பிரமத்தை, சிவத்தைக் கண்டவர்கள்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமா வதாரும் அறிகிலார்
அன்பே சிவமா வதறிந்த பின்
அன்பே சிவமா யமர்ந் திருப்பாரே.

என்று கூறுகிறார் திருமூலர்.

அன்பு வேறு, சிவம் வேறு என்று யாரப்பா சொன்னார்கள்? அன்பும் சிவமும் ஒன்றுதான். பாலும் சுவையும் போல், மலரும் மணமும் போல், மணியும் ஒளியும் போல் ஒன்றியிருப்பதுதான். அதைப் பிரிக்க முடியாது என்று அறிவுறுத்துகின்றார்.

சரி. அடக்கமும், அன்பும், கருணையும் மட்டும் இருந்தால் போதுமா? பிறவாமல் இருக்க முடியுமா? என்ற ல் அது போதாது. போதவே போதாது. பிறவாமை வேண்டுமானால் தன்னைத்தானே சோதித்துணரும் எண்ணமும், மனப் பாங்கும் வேண்டும். ஆகவே ஒவ்வொருவரும் ஆத்ம சோதனை செய்ய வேண்டும். இரவு துயிலுமுன் இதைச் செய்ய வேண்டும். குறைகள் இதனால் தவிர்க்கப்படும். குற்றங்கள் படிப்படியே குறைந்து வரும், முற்றும் தன்னையுணர்ந்த நிலையில் பரம்பொருளை ஆத்மதரிசனம் செய்யும் பேறும் கிட்டும். ஏனெனில் இறைவன் நமக்குள்ளேயே இருக்கிறான்.

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர் பாராகாயம்
அப்பொருளுந் தானே யவன்.

என்னும் அம்மையார் வாக்குப்படி நமக்குள் இருக்கும் ஜீவாத்மா, பரமாத்மாவின் சிறு துணுக்கே என்பதை முதலில் உணர்ந்து தெளிய வேண்டும். ஜீவாத்மா, மாயை என்னும் திரையால் மூடப்பட்டுள்ளது. அது விலகின் பரப்பிரம்மத்தைக் காணலாம் என்கிறான் கீதாசாரியன். அதை விட்டு விட்டு ஊரெல்லாம், கோயில், குளமெல்லாம் தேடுவது வீண் என்கின்றான்.

"உடலுக்குள் நீ நின்று உலவினதைக் காணுமல்
கடமலே தோறுந் திரிந்து கால் அலுத்தேன் பூரணமே"

என்று தம்மைத் தாமே நொந்து கொள்ளும் பட்டினத்தடிகளும்,

முன்னேற்றம் அடைவதற்கு
முதலில் தன்னம்பிக்கையும்
அடுத்தபடியாக இறைவன் மீது
நம்பிக்கையும் வேண்டும்.

ஆத்மஜோதி 30வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக

கொழும்பு ஸ்டோர்ஸ்

நகரில் சிறந்த ஜவுளி மாளிகை

Bata
Bata
Bata
Bata

பாட்டா பாத அணி விநியோகஸ்தர்கள்

நிர். 38, கொத்மலை வீதி—நாவலப்பிட்டி.

විජිත ස්ටෝර්ස්

සාමාන්‍ය වෙළන්දෝ, වතු බඩු සපයන්නෝ
සහ ප්‍රවාහකයෝ.
85, කොත්මලේ පාර — නාවලපිටිය.



விஜித ஸ்டோர்ஸ்

பல செலவு பொருள் வியாபாரம்

VIJITHA STORES

No. 85, Kotmale Road
NAWALAPITIYA

மனதில் பற்றற்றவர்கள்
பாக்கியவான்கள்.
ஏன் எனில் மோட்ச ராஜ்யம்
அவர்களுடையது.



சகலவித ஜவுளி வகைகளுக்கும்
ரெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்



PACKIAM'S

General Textiles Merchant
36, KOTMALE ROAD — NAWALAPITIYA

புகழ் இகழ் ஆகியவற்றைக் கருதாது என்றும்
உண்மையை மேற்கொண்டு செய்கின்ற தியாகமே
தியாகங்கள் அணைத்திலும் சிறந்தது



உயர்தர உண்ணத பிடவை வகைகளுக்கும்
ரெடிமேட் ஆடைவகைகளுக்கும்
எல்லோரும் விரும்பும் ஸ்தாபனம்



K. Sithamparam Pillai

16, Kotmale Road, Nawalapitiya,

நீதியின் நிறைவே கடவுள்,
சுதந்திரமாகிய அமுதமே கடவுள்.

கால்நடை உணவு – கோழித்தீன் வகைகள்,
அரசாங்க பண்ணைகளுக்கும்,
வியாபாரிகளுக்கும் விநியோகஸ்தர்கள்

SELVAM TRADERS

164, MALIBAN STREET – COLOMBO - 11.

T'phone: 27065

இறைவனே நமக்கு அடைக்கலம். அவரே நமது
விதியைத் திட்டப்படுத்துகிறார்.

ஆத்மஜோதி 30-வது ஆண்டுச்
– சிறப்பு மலருக்கு –
எமது நல்வாழ்த்துக்கள்!

நவ நாகரீக நங்கையரும், ஆடவரும் விஜயம் செய்யும்
சிறந்த ஸ்தாபனம்

சாரதா ஸ்டோர்ஸ்

96 - 98, யோர்க் வீதி – கொழும்பு - 1.

தொலைபேசி: 22075

With the Best Compliments of:

AMBALAVANAR & Sons.

PAPER MERCHANTS, STATIONERS AND
PRINTERS REQUISITES.

78. Maliban Street — COLOMBO-II.

T'Phone: 24821

SUBSIDARY

LUCKSHMI BHAWAN

சுத்தமான — சுவையான சைவ
உணவுகளுக்கு
எல்லோரும் விரும்பும்
இடம்

PEARLITS:

Dealers in: ELECTRICAL GOODS
78. Maliban Street,
COLOMBO–11.

லக்ஷ்மி பவான்
97, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு-11.

With Best Compliments from:





Jayes Trading Company

Importers, Exporters, Dealers in Chemicals & Government Suppliers

Registered: office: 155, BANKSHALL STREET, COLOMBO-11.



Postal Address: P. O. BOX 293, Colombo.

Cables & Grams: **"JAYCHEM" Colombo.** **T'phone: 36366—28694**

எப்பொருளே யார் யாரிடம் கேட்டாலும்
அப்பொருளின் உண்மையை நுணுகி உணர்வதே
அறிவாகும்.

●

சகல விதமான ஜவுளி வகைகளுக்கும்
எல்லோரும் விரும்பும் இடம்

●

'ஆராதனஸ்'
ARADHANA'S

44. A. Bankshall Street, COLOMBO-11

T'Phone: 29638

அன்றும் இன்றும் என்றும்

மக்கள் மத்தியில் கூடர்விட்டுப் பிரகாசிக்கும் நீலம்

ரேயல் நீலம்

எமது ஏனைய தயாரிப்புகள்:

'ரேயல்' ஜெலி கிறிஸ்டல்
'ரேயல்' கஸ்டட் பவுடர்
'ரேயல்' பேக்கிங் பவுடர்
'ரேயல்' கோன் பிளவர்

தயாரித்து விற்பனை செய்பவர்கள்:

சிவா இன்டஸ்ரீஸ்

112-1/3. நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11.

With the Best Compliments of:

Retail & Wholesale Textiles Dealers

SP. PERIANNA PILLAI & CO.,

180, SECOND CROSS STREET,

COLOMBO-11.

T'Phone: 25738.

அழகிய உத்தரவாதமுள்ள தங்க நகைகளுக்கு
அனைவரும் விரும்புவது

லலிதா நகை மாளிகை

99, 105. செட்டியார் தெரு
கொழும்பு — 11.

தொலைபேசி: 23691

விளக்கு வைத்து விழித்திருந்தால்
திருடன் வரமாட்டான், இருட்டிலேதான்
அவன் வருகின்றான். உன் மன இருள் மாற்று
கடவுள் உள்ளத்தில் இருக்கிறார் என்ற
அறிவு விளக்கை ஏற்று. ஜபத்திலும்
தியானத்திலும் விழித்திரு.
மாயக்கள்ளன் வரமாட்டான்.

VAGINI STORES

Dealers in: TEXTILE, FOOTWEAR & FANCYGOODS.

No. 150, Malay Street — COLOMBO-2.

''நீ வேறெனதிருக்க நான் வேறெனதிருக்க
நேராக வாழ்வதற் குன்னருள்கூற
நீடார் சடாதரத்தின் மீதே பராபரத்தை
நீகாண் எனவனைச் சொல்லருளாயே''

என்று பாடும் அருணகிரியாரும் நல்லதோர் சான்றுகளாகத் திகழ்கின்றனர். அடிகளைப் போல், ஆண்டவனைத்தேடி, அல்லும் பகலும் அலைபவர்கள் ஆயிரம் ஆயிரம் பேர். தன்னை யறியும் அறிவு இருந்தால் உலகத்தை மட்டு மன்றி, இறைவனையும் அறியலாம். தன்னை யறியும் அறிவு என்றால், தான்யார்? தன் னிலை என்ன? பிறவிக் கடன் என்றால் என்ன? தானும் சுற்றமும், பற்றும், பாச மும் உண்மையா? மரணத்துக்குப் பின் தன் னிலை என்ன? பிறப்புக்குமுன் தானிருந்தது எப்படி? என்றெல்லாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

விடைகளைத் தேடியறிய முயல வேண் டும். பிரம்ம ஞானிகளுக்குப் பிறப்பில்லை. பிரம்ம ஞானியாக விளங்க வேண்டுமானால் அடக்கம், அன்பு, கருணை, பொறுமை, ஆசை யின்மை, தன்னையுணரும் ஆவல், ஆத்மா–அநாத்மா பற்றிய அறிவு, ஞானிகளுடன் தொடர்பு இவைகளைக் கொள்ளல் வேண்டும். ஆடம்பரமான பூசைகளோ, அனுவசியமான உபவாச விரதங்களோ, கடுமையான யோகப் பயிற்சிகளோதேவையில்லை.இல்லறத்தாருக்கு அது சாத்தியப் படவும் படாது. படிப்படி யாக முன்னேறிவிட்டால் பிறகு தானே அவற்றை எளிதில் கைவரப் பெறலாம். தன்னைத் தேடியலையும் மனிதர்களுக்கென பரஞ்சோதியார்:

உன்னை நீ தேடும் மனிதனே!
கருவால் அறிவால் குருவால் கனலால்
இக்கடத்திலேயே கண்டுபிடி.

என்று கூறி வழி காட்டுகிறார்.

எளிய வழிகளை விடாமல் மேற்கொள் வதன் மூலம் மாயை படிப் படியே அகன்று, நம்முள் இருக்கும் இறைவனை நாம் காணும் வாய்ப்பு ஏற்படுகின்றது. உள்ளொளி பெருகு கின்றது. ஆத்ம தரிசனம் நிகழ்கின்றது.

ஆகவே மக்களாகப் பிறந்த நாமெல் லோரும் மக்களாய் வாழ்ந்தாலும், படிப் படியே உயர முயலவேண்டும். பரம்பொருளை யறிய முயற்சி செய்வது என்பது மலையேறும் செயலை ஒத்ததாகும்.

வான் காண வேண்டின் மலையேறல் ஒக்கும் உன்னை
நான் காணப் பாவனை செய் நாட்டம் பராபரமே.

என்று தாயுமானவர் கூறுகின்றார். உடலை மட்டுமல்ல, உள்ளத்தையும் பேணிக்காத்தல் வேண்டும். மனத்தாமரையில் இறைவனை இருத்தி ஊனுருக, உள்ளமுருக வழிபடல் வேண்டும். பிரம்ம ஞானிகளாக மாற முடி யாவிட்டாலும், அடியார்களாகவாவது இருக் கலாமே. இந்த நிலை முற்றினால் ஞான நிலை தான்.

தன்னையும் தனக்காதாரத்தலைவனையுங் கண்டானேல்
பின்னையத் தலைவன் தானுய்ப் பிரமமாய்ப் பிறப்புத்
-தீர்வன்

உன்னை நீ அறிவாயாகில் உனக்கொரு கேடுமில்லை
என்னை நீ கேட்கையாலே ஈதுபதேசித்தேன்.

என்று கைவல்ய நவநீதம் கூறுகின்றது. பெருமளவு முயல முடியாவிட்டாலும், இயன்றளவு நல்லனவற்றைச் செய்து, இறை வனை மனம், வாக்கு, காயத்தால் உண்மை அன்புடன் வழிபட்டு அவனருளால் ஆத்மதரி சனம் செய்வோமாக.

ஆலய சுத்தம்

ஆலயங்களின் உட்புறமும், சூழ்நிலையும் சுத்தமாக இல்லாத வரையில் ஆஸ்திக காரி யம் எத்தனைநாள் நடந்தாலும், எத்தனை கும்பாபிஷேகங்கள் நடந்தாலும், நாம் திருப் திப்படுவதற்கில்லை. குப்பாபிஷேகத்திற்கு அப்புறம் சாந்நித்தியம் நிலைத்திருக்க வழி பண்ணிவிட்டால் என்ன பிரயோஜனம்? பிர ஜைகள் இவ்விஷயத்தில்தீவிரமானகவனம் செலுத்தினால், அதிகாரிகளுக்கும் சர்க்கா ருக்கும் பொறுப்புணர்ச்சி அதிகரித்து ஆவன செய்வார்கள். பொதுமக்களின் ஏகோபித்த அபிப்பிராயத்திற்கு அந்தச் சக்தி உண்டு. —தெய்வத்தின் குரல்.

மகான்களின் மகிமை

-சுவாமி நிர்மலானந்தா-
ரிஷிகேசம் — ஹிமாலயம்

"அறந்தான் இயற்றும் அவனிலும் கோடி அதிகம் இல்லம்
துறந்தான் அவனிலும் சதகோடி உள்ளத்துறவுடையோன்
மறந்தான் அறக் கற்று அறிவோடு இருந்து இரு வாதனை அற்று
இறந்தான் பெருமையை என் சொல்லுவேன் கச்சி ஏகம்பனே"
— பட்டினத்தார்

பகவானுடன் சர்வசதா கூடி இருக்கும் மகான்களிடம் அருட்சக்தி பூரணமாக நிறைந்து இருக்கிறது. இதை ஆஸ்திகர்கள் நன்கு அறிவார்கள். செல்வம் படைத்தவர்களை நாம் தனவான்கள் என நினைக்கிறோம். உண்மையில் உலகைத் துறந்து கௌபீனதாரிகளாய்த் திரியும் மகான்கள் தான் ராஜாதி ராஜர்கள். இலக்ஷ்மி தேவியே பாத சேவை செய்யும் பரமன் அவர்களுக்குக் கட்டுப்பட்டவன் ஆகின்றான். "பக்தி வலையில் படுவோன் காண்க" என்கிறார் மணிவாசகர். "இறைவனே தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்" என்கிறார் ஔவையார். பகவானின் திருநாமமே பேச்சும் மூச்சுமாக வாழும் மகான்களின் பெருமையை அளவிட யாரால் முடியும்? நீர்க்குமிழி போன்றது இவ்வுலக வாழ்வு என்று நன்கு அறிந்திருந்தாலும், மகான்கள் கருணையால் சாதாரண மக்களின் ஆன்மீகத் தேவைகளை மட்டுமின்றி, இவ்வுலக வாழ்க்கை வசதிகளையும் கவனித்துக் கொள்கிறார்கள்.

வடஇந்தியா குஜராத் மாநிலத்தில், ஒரு கிராமத்தில் ஏழை அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் புதல்விக்குத் திருமண வயது வந்து பல காலம் ஆகியும், பொருள் இல்லாமையால் திருமணம் நிகழவில்லை. கவலையால் வாடிய அந்தணர் வேறு வழியின்றி செல்வர்களிடம் சென்று, அவர்களை முகஸ்துதி செய்து, பொருள் வேண்டி நின்றார். ஒவ்வொருவரும், "நான் அவ்வளவு வசதி படைத்தவன் அல்ல. அவரிடம் போய்க் கேளுங்கள்" என்று வேறு ஒருவருக்கு வழி காட்டி விட்டார்களே தவிர, யாரும் உதவ முன் வரவில்லை. இப்படி ஒவ்வொருவரிடமாகப் போய்க் கொண்டிருந்த பொழுது ஒருவர் சொன்னார்: "நீங்கள் ஏன் எங்களைத் தேடி அலைய வேண்டும்? ஸ்ரீபதியாகிய துவாரகாநாதனைப் போய்ப் பார்த்தால் உங்கள் குறை நீங்குமே?" மகளின் திருமணத்திற்குப் பொருள்பெற வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்த எண்ணமும் இல்லாத அந்தணர் துவாரகா புறப்பட்டுப் போனார்.

அந்தணர் செல்லும் வழியில் ஒரு குப்பை மேட்டில் கௌபீனதாரியாக ஒருவர் அமர்ந்திருப்பதைப் பார்த்தார். பார்வைக்குப் பைத்தியம் போல் தென்பட்டார் அவர். ஆனால் உண்மையில் அவர் சதா உள்ளும் புறமும் உவட்டாத பரமானந்தத் தேனருந்திக் களிப்புற்று இருக்கும் மகான். அவரைப் பொருட்படுத்தாமல் நடந்து கொண்டிருந்தார் அந்தணர். மகானே தாமாகவே அந்தணரை அழைத்து, "என்ன காரியமாக யாரிடம் போய்க்கொண்டிருக்கிறாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார். அந்தணர், 'இவன் பித்தனாக இருக்க வேண்டும். நாம் ஏன் இவனிடம் பேசி வீணாகப் பொழுதைக்கழிக்கவேண்டும்?' என்று எண்ணி நடந்தார்.

அந்தணர் துவாரகையை அடைந்தார். கண்ணனைப் போய்த் தரிசித்தார். இவர் எண்ணம் பூராவும் பொருளில்தானே இருக்கிறது? தான் பல தனவான்களைப் பார்த்து பொருள் வேண்டியதையும், யாரும் தராததையும், அவர்களுள் ஒருவர் கூறியதற்கிணங்க இப்பொழுது பகவானை நாடி வந்திருப்பதையும் தெரிவித்தார். துவாரகாநாதன், "நீங்கள் இவ்வளவு சிரமம் எடுத்து

என்னைப் பார்க்க வந்திருக்க வேண்டியதில்லையே! வரும் வழியில் ஒரு பெரிய வள்ளல் இருக்கிறார். அவரிடம் உங்கள் குறையைச் சொல்லி இருந்தால் சர்வ நலனும் வழங்கி இருப்பாரே?'' என்றார். ''அப்படி வள்ளல் எவரும் நான் வந்த வழியில் குடியிருப்பதாகத் தெரியவில்லையே'' என்றார் அந்தணர்.

''ஏன் குப்பை மேட்டில் குடி இருக்கும் மகானைப் பார்க்கவில்லையா?''

''அது சரியான பைத்தியமல்லவா? தானே பேசுகிறது, சிரிக்கிறது. அதன் கையில் பிச்சைக்குப் பாத்திரம்கூட கிடையாதே? உடுத்த உடை இல்லாது கிழிந்த கௌபீனம் கட்டித் திரியும் பைத்தியக்காரனிடம் என்ன கேட்பது?''

சர்வ அந்தர்யாமியான பகவான் சொன்னார், ''இப்படிப்பட்ட மகான்களால்தான் இந்த ஜகத் இயங்குகிறது. அவர்கள் மண்ணையும் பொன்னையும் சமமாகக் கருதுபவர்கள். துக்கமும் சுகமும் என் பிரசாதமாகக் கருதுபவர்கள். இந்த மகான்களைச் சுற்றி அஷ்டலக்ஷ்மியரும் அலைகின்றனர். அவர்கள் அளிக்கக்கூடிய ஆசியை என்னால் அளிக்க இயலாது. ஆகையால் அவரிடமே போங்கள்.''

பகவான் இப்படிக் கூறி அனுப்பியதும் அந்தணர் மனம் உடைந்து திரும்பி வந்தார். பகவான் கூற்றில் நம்பிக்கை இல்லை. ஆயினும் திரும்பி வரும் அந்தணரைக் கண்ட பரம கருணைமூர்த்தியான மகான் தாமே மீண்டும் அவரை அழைத்து சிரிப்போடு, ''உனக்கு கண்ணன் ஒன்றும் தரவில்லையா? நீ போய் உன் செல்வியின் திருமணத்தைச் சிறப்பாய் நடத்தி, பெரும் தனவானுய் வாழ்க'' என்று ஆசி வழங்கி அனுப்பி வைத்தார். அந்தணருக்கு இன்னும் கவலை விட்டபாடில்லை. சோர்ந்த மனதுடன் வீட்டிற்கு வந்தவருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. குசேலருக்குக் கண்ணபிரான் அனுக்ரகம் செய்தது போல், அவரது குடிசை மாளிகையாகி இருக்கிறது. உள்ளே சென்று மகளைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடித்தார். ''பக்தர்கள் பெருமை தெரியாத மூடனாக இருந்தேனே'' என்று புலம்பினார்.

சில நாட்களில் மகளின் திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார். தமது எஞ்சிய வாழ்நாளை அடியார்களுக்குப் பணி செய்து கழித்தார்.

இன்றும் மகான்கள் அருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ ரமணர், ஸ்ரீ சுவாமி சிவானந்தர், ஸ்ரீ சுவாமி அபேதானந்தர், ஸ்ரீமத் ஆனந்தமாயி இப்படி பலரது ஆசியால் எவ்வளவோ அன்பர்களின் வாழ்வு மலர்ச்சி பெறுகிறது. மகான்களின் மகிமைகளையும், உபதேசங்களையும் பரப்பி வரும் ஆத்மஜோதி மென் மேலும் ஆத்மீகத் தொண்டு புரியுமாக.

''அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே''

—தாயுமானவர்.

பகவத் சேவை

மனிதர்களுக்குச் சேவை செய்வதே பகவானுக்குச் செய்கிற பூஜை. தனியாக பகவத் தியானம், பூஜை எதுவும் வேண்டாம் என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் கோயில்கள் முதலிய வழிபாட்டிடங்கள் வேண்டியதில்லை என்றும், அவற்றை வைத்தியசாலைகளாகவும், பள்ளிக்கூடங்களாகவும் மாற்றிவிட வேண்டும் என்றும் சொல்கிறார்கள். மனிதர்களுக்கு ஆறுதல் தருவது, நோய்ப்பிணி போக்குவது, கல்வி யறிவு தருவதெல்லாம் பரம உத்தம பணிதான். அதில் பகவான் நிச்சயமாகப் பிரீதி அடைகிறான் என்பதும் ரொம்ப உண்மைதான். ஆனால் யோசித்துப் பார்க்கும்போது 'மனித சேவையே பகவத் சேவை' என்பதையே திருப்பிவைத்துச் சொல்வதும் ரொம்ப உண்மை என்று தெரிகிறது. அதாவது பகவத் சேவை செய்வதும் மனிதர்களின் நன்மைக்காகத்தான் என்று தெரிகிறது. அதுவே மற்ற சமூக சேவைகளைவிட மனிதனுக்கு நிரந்தர நலனைத் தருவதுமாகும்.

—தெய்வத்தின் குரல்

இராமக்கிருஷ்ணமிஷனும் அது எழுத்தில் ஆற்றும் பணிகளும்

— சுவாமி பிரேமாத்மானந்தா — கொழும்பு —

"உண்மை ஒன்று, அதை அடையும் வழிகள் பல" என்பது உபநிடதம் கண்ட உண்மை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீ ராமகிருஷ்ணப் பெருந்தகை பல்வேறு சமய சாதனைகள் செய்து அதன் பயனாகக் கண்டறிந்த உண்மையும் இதுவே. இவ்வனுபூதிமான் தந்த அழியாச் செல்வம் மதத்தின் பெயரால் போரும் பூசலும் விளைந்து வந்த மக்கட் குலத்தை உய்த்துணர வைக்கும் அருமருந்தாயமைந்தது. உலகமே ஒரு குடும்பம் என்று எண்ணும் பரந்த விரிந்த மனப்பாங்கை உருவாக்க உதவியது.

விஞ்ஞானத்தின் விளைவுகளினால் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கி, புறச்சுகத்தை அனுபவித்தும் மனஅமைதி காணாது அலைந்து திரியும் மேலை நாடுகளுக்கு ஒப்பற்ற மெய்ஞ்ஞான உண்மைகளைக் கொடுத்துதவ வேண்டும் என்ற எண்ணம் ஸ்ரீ ராமகிருஷ்ணப் பெருந்தகையின் ஞானப்புதல்வராகிய சுவாமி விவேகானந்தரின் உள்ளத்தில் எழுந்தது. பாரதநாடு, இழந்த தனது உயர்நிலையை அடைவதற்கு நாட்டு மக்களுக்கு உடற்சக்தியை ஊட்டி, உள்ள வலிவைப் பெருக்கி, கல்விச் செல்வத்தை வளர்த்து, அவர்களின் ஆத்மீக விழிப்புணர்ச்சியைத் தட்டிவிட வேண்டியதன் அவசியத்தை அவர் உணர்ந்தார்.

இதன் பயனாகக்குருவருளால் தொண்டர் படை ஒன்று திரண்டது. பழைய துறவு வாழ்வில் புதிய திருப்பம் ஒன்று தோன்றியது. 'நாடு துறந்து காடு சென்று கடுந்தவம் புரிந்து கடவுட் காட்சி பெறுதல்' என்ற நிலை மாறி, மக்கள் மத்தியில் வாழ்ந்து அவர்களை இறைவன் சொரூபமாகக் கண்டு, அவர்களது உடல், உள்ள, ஆத்மீக வளர்ச்சிக்கு உதவுவதே பெருந்தவம் புரிதலுக்கு ஒப்பானது என்ற நிலை உருவாயிற்று. 'கைவினை செய்தலே கழலடி போற்றுதல்'. 'சிவனொண்டே சிவவழிபாடு', 'நரசேவையே நாராயண பூசை' என்ற பெருநோக்கு உதயமாயிற்று. கீதாச்சாரியார் பார்த்தன் மூலமாக உலகுக்கு வழங்கிய உத்தம நெறியாகிய கர்மயோகத்தைக் கடைப் பிடித்து இறைமைத்துவம் அடையும் நெறி இல்லறத்தார் துறவறத்தார் ஆகிய அனைவருக்குமே பொருந்துவதொன்று. ஆத்மீக விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, பக்தியை வளர்த்து, ஞானம் பெருக்கி, யோகம் கடைப்பிடித் தொழுகும் ராமகிருஷ்ணமிஷன் துறவியர்சங்கம். கர்மயோகத்தையும் கடைப்பிடிக்கும் பெருநெறியைப் பின்பற்றியது.

'மேலோன் எதைச் செய்கிறானே மற்ற மனிதர் அதையே பின் பற்றுகின்றனர்; அவன் எதைப் பிரமாணமாக்குகிறானே அதையே உலகம் அனுசரிக்கிறது' (பகவத்–கீதை 3ஆம் அதி - 21 ஆம் சுலோகம்) எனவே இத்துறவியர் சங்கம் கடைப்பிடிக்கும் கர்மயோக நெறி நேரடியாக மனுக்குலத்தின் உடல், உள்ள ஆத்மீக வளர்ச்சிக்கு உதவுவதோடு, இல்லற ஒழுக்கத்தில் நிற்போர் அனுசரிப்பதற்கேற்ற சிறந்த வழிகாட்டியாகவும் உதவுகிறது.

ஸ்ரீ ராமக்கிருஷ்ண பரமஹம்ஸர் பூதவுடல் நீத்த பின்னர், அவரது ஞானப்புதல்வர்கள் மண், பொன், பெண்ணாசையை முற்றாக விட்டொழித்து தியாகமும், தூய்மையும், துறவும் கடைப்பிடித்துத் தொண்டு செய்யும் உறுதி உள்ளம் படைத்தவர்களாகி இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் பல

ஆச்சிரமங்களையும், சேவை நிலையங்களையும் தாபித்து சிறப்பாக இந்தியாவுக்கும் பொதுவாக உலகுக்குமே பெருந்தொண்டாற்றி மக்கட்குலத்திற்குப் பெருநெறி காட்டும் சங்கத்தினராயினர். இச்சங்கத்தின் தலைமைப்பீடம் கல்கத்தாவிலுள்ள பேலூர் என்ற இடத்தில் அமைந்துள்ளது. கிளை ஸ்தாபனங்கள் உலக நாடுகள் பலவற்றிலும் தாபிக்கப்பட்டு வாழும் வகையறியாது மயங்கும் மாந்தரை நெறிப்படுத்தும் சிறந்த நிலையங்களாக விளங்குகின்றன. இவ்வகையான மிஷன்நிலையமொன்று 1932 ஆம் ஆண்டு ஸ்ரீ லங்காவின் தலைநகரானகொழும்பிலுள்ளவெள்ளவத்தையில் அமைக்கப்பட்டது. இந்த நிலையத்தில் தெய்வீக நாட்டமுடைய அடியார்களுக்கு இந்து மதத்தின் கருவூலங்களாகிய வேத உபநிடதக்கருத்துக்கள் தெளிவான முறையில் விளக்கப் படுகின்றன. இந்நூல்களைக் கருத்துணர்ந்து படித்தறிவதற்கேற்ற சமஸ்கிருத அறிவும் இங்கு வழங்கப் படுகின்றது. ஞாயிறு தோறும் நடைபெறும் சமய வகுப்புகளில் ஐஞ்ஞூறுக்கும் அதிகமான சிறுவர்கள் கலந்து கொண்டு பயனடைகிறார்கள். இவர்கள் பண்ணோடு இசைபாடப் பயில்கிறார்கள்; சித்தாந்த, வேதாந்த நூல்களின் ஆரம்ப அறிவைத் தெளிவுபடக் கற்கிறார்கள். பஜனை பாட, நாமபாராயணம் பண்ண, தியானம் செய்யப் பழகிறார்கள். இவற்றோடு கூட சமஸ்கிருதமும் கற்கிறார்கள்.

பொது மக்களுக்கென இங்கு ஒரு நூல் நிலையம் இருக்கிறது. இருபதுக்கு மேற்பட்ட மாதாந்த, வாராந்த சஞ்சிகைகளும், தமிழ், ஆங்கில தினசரிப் புதினத்தாள்களும் வாசிப்பதற்கு உதவுகின்றன. இந்த மிஷனில் உள்ள பூங்கா, சூழலிலுள்ள சிறுவர்கள் மாலைப் பொழுதை மகிழ்ச்சியுடன் கழிப்பதற்கேற்ற இடமாக இருக்கிறது. வெளிநாட்டு, உள்நாட்டுப் பிரயாணிகள் தங்குவதற்கேற்ற பல விதவசதிகளோடும் கூடிய விடுதி ஒன்று சிறந்த முறையிற் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு நினைவு மண்டபம் கொழும்பிலுள்ள சிறந்த பெரிய மண்டபங்களுள் ஒன்று. ஆயிரத்து இருநூறு பேரை அடக்கக் கூடியது, பல்வேறு விதகலை, கலாச்சார, சமய விழாக்கள் இங்கு இடம் பெறுகின்றன.

கதிர்காமத்தில் அமைந்திருந்த ராமகிருஷ்ண மிஷனைப் பற்றி அறியாதவர் எவரேனும் நம் மீழத்தில் இருக்க முடியாது. கதிர்காமக் கந்தனை வழிபடச் செல்லும் யாத்திரீகர் உணவைப் பற்றியோ, உறையுளைப் பற்றியோ கவலைகொள்ள வேண்டாத வகையில் இது தொண்டாற்றி வந்தது. எந்த நேரத்தில் எத்தனை பேர் சென்றாலும் இன, மத வேறுபாடின்றி அவர்களுக்கு வேண்டிய வசதிகள் கொடுத்துப் பேணிப் பாதுகாத்து வந்தது. ஆடிமாத உற்சவ காலங்களில் நாளொன்றிற்கு பத்தாயிரம் பேர் வரையில் இங்கு உணவு பெற்றனர். இவ்வாறு தொண்டாற்றி வந்த இந்த நிலையத்தை எமது முன்னைய அரசாங்கம் ''புனிதநகரில் மக்கள் தங்குமிடம் இருத்தலாகாது'' என்ற காரணத்தைக் காட்டிக் கையேற்றது.

''மனிதனில் கரந்துறையும் பூரண நலத்தினை வெளிக் கொணர்ந்து சமுதாயத்திற்குப் பயனுடையதாக்கும் கல்வியே மாணவர்க்குப் புகட்டப்பட வேண்டியது; இக்கல்வி சமய அடிப்படையில், மனிதப் பண்புகளை வளர்க்கின்ற முறையில் கற்பிக்கப்பட வேண்டும். உடல், உள்ளம், ஆத்மா மூன்றும் ஒருங்கியைந்து வளர உதவ வேண்டும்; ஆசிரியர் தம் வாழ்க்கையாலும், போதனையாலும் மாணவரை நல்வழி நடத்த வேண்டும். இதற்காக ஆசிரியர்க்கும் மாணவருக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் ஏற்படும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்'' என்ற இன்னோரன்ன சுவாமி விவேகானந்தருடைய கல்விபற்றிய கருத்துக்களைச் செயற்படுத்து முகமாக ராமகிருஷ்ண மிஷன் பல பாடசாலைகளையும், ஆதரவற்ற சிறுவர்களுக்குப் பல மாணவ இல்லங்களையும் நடத்திவருகின்றது. இவ்வகை இல்லமொன்று 1926 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஒரு சில சிறுவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு, 1929 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கல்லடி-உப்போடைக்கு மாற்றப்பட்டது. படிப்படியாக வளர்ந்து வந்த இவ்வில்லம், கடந்த 50 ஆண்டுகளில்

சாதித்த கருமங்கள் பல, உருவாக்கிய உத்தமர்கள் பலர், ஆதரவற்ற நூற்றுக்கு மேற்பட்ட குழந்தைகள், உண்டியும், உறையுளும், உயர் கல்வியும் பெறுவதோடு குருகுல வாழ்க்கை முறையிற் சாதனை பயின்று விழுப்பம் தரும் ஒழுக்க சீலர்களாக உருவாகின்றனர். விவேகானந்தரின் கல்வித் தத்துவத்தின் அடிப்படையில் தன்னம்பிக்கை, எளிமை தூய்மை, ஆளுமை, எதையும் தாங்களாகவே செய்து முடிக்கும் ஆற்றல் போன்றவற்றில் இவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். சாந்தியும், தூய்மையும், பிரவாகிக்கும் சூழ்நிலையில் இளம் உடல்களும், உள்ளங்களும் உண்மையான பிரம்மச்சரிய வழியில் உயர்ந்த இலட்சிய சேவைப் பாதையில் இட்டுச் செல்லப்படுகின்றார்கள். இக் குருகுல மாணவர்களுட் பலர் இன்று பெருமக்களாக நாட்டிற் திகழ்கிறார்கள். இவர்கள் நூற்கல்வியோடமையாது, தொழிற்கல்வியும் பெறுகிறார்கள். நாட்டின் உணவுற்பத்திப் போரில் ஈடுபட்டு நிலம் திருத்தி பயிர்வளர்த்து உணவுற்பத்திப் பெருக்கத்திற்கு ஆக்கம் தருகிறார்கள். பல பொதுநிலையங்களில் சிரமதான வேலைசெய்து பொதுத் தொண்டாற்றும் பண்பை வளர்க்கிறார்கள்.

இவ்வில்லத்தின் பொன் விழாக்கொண்டாட்டத்தின் பூர்த்தி, நிகழும் வருடம் ஆவணி மாதம் ஏழாம் திகதி கொழும்பு விவேகானந்த நூற்றாண்டு நினைவு மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவை யொட்டி கருத்தாழமுள்ள கட்டுரைகள், மும்மூர்த்திகளின் படங்களுடன் வேறு பல பெரியார்களின் படங்கள், ஆன்றோர் பொன்மொழிகள் அடங்கிய மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. இராமகிருஷ்ண மிஷன் தர்மகர்த்தாக்கள் சபை அங்கத்தவரும், சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவருமாகிய ஸ்ரீமத் சுவாமி தபஸ்யானந்த ஜீ மஹாராஜ் அவர்கள் பொன்விழா மலரினை வெளியிட்டு வைத்தார்கள்.

இவற்றைவிட இந்துக் குழந்தைகள் சொந்த மதக் கல்வியையோ, சொந்தக்கலை கலாச்சாரம், பண்பாட்டையோ தகுந்த முறையிற் பெறுவதற்கேற்ற பாடசாலைகள் குறைவாயிருந்த 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வடக்கிலும் கிழக்கிலும் பல இந்துப் பாடசாலைகளைத் தாபித்து, இந்துச் சிறார்கள் சிறந்த கல்வியைப் பெறுவதற்கு ராமகிருஷ்ண மிஷன் வழிவகுத்தது. இவ்வாறு தோன்றிய பாடசாலைகளுள் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரக் கல்லூரி, கொக்குவில் ராமகிருஷ்ண மிஷன் பாடசாலை, திருகோணமலை இந்துக் கல்லூரி, கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயம் என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றைவிட மட்டக்களப்புப் பகுதியில் கிராமப்புறங்களில் பல பாடசாலைகள் அமைக்கப்பட்டன. அரசினர் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின்னரும் ராமகிருஷ்ண மிஷனின் செல்வாக்கு இப் பாடசாலைகளிலிருந்து நீங்கிவிடவில்லை.

இத்தொண்டுகள் எல்லாம் குருவருளே இயந்திரீயாக நின்று இயக்க, அக்குருபிரானின் அடியார் கூட்டம் இயந்திரங்களாக நின்று இயங்குவதால் நிறைவேறுகின்றன. இத்திருக்கூட்டம் ஆட்டுவித்தால் ஆடுவது, பாட்டுவித்தால் பாடுவது, நான், எனது என்ற அகந்தையை ஒழிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு கர்மம் புரிவது, ஆத்மீக விடுதலை ஒன்றையே இலட்சியமாகக்கொண்டது. கொண்ட குறிக்கோளை நிறைவேற்றும் பாதையில் அவன் அருள் எம்மை எல்லாம் இட்டுச் சென்று நித்திய சாந்தியை அளிப்பதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆலய அதிகாரிகள்

கோயில்களின் சூழ்நிலை அமைதியாக தூய்மையாக இருக்கவேண்டும். பகவத்ஸ்மரணை தவிர மற்ற நினைவுகள் மறந்துவிடும்படியாக இருக்க வேண்டும். ஆனால் இப்போது என்ன பார்க்கிறோம்? பெரும்பாலான க்ஷேத்திரங்களில் கோயிலைச்சுற்றி ஏகப்பட்ட கடைகள் வந்து விட்டன. தேநீர்க்கடை, சிகரட் கடை, எதுவுமே பாக்கியில்லை. கோயில் அதிகாரிகளே கோயிலுக்கு வருமானம் கிடைக்கிறது என்பதால் இந்த இடங்களை வாடகைக்குக் கொடுக்கிறார்கள். அதாவது, அநேகமாக சுவாமியைத் தவிர கோயிலையே வாடகைக்குக் கொடுத்திருப்பதாகச் சொல்லலாம். இம்மாதிரியான சூழ்நிலையில் தெய்வ சாந்நித்தியத்தை நாம் கிரகித்துக் கொள்ளுகிற சக்தி குறைகிறது. நம் பக்தி சுற்றுச் சூழலால் குறைகிறது. — தெய்வத்தின் குரல்



முருகன் மகிமை

சுவாமி பிரணவானந்த சரஸ்வதி
தலைவர்–தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
மலேசியா.

புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியன் ஆக்கி இருவினை நீக்கி யாண்ட
பன்னிருதடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி
–கந்தபுராணம்

ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டு, அருவமாயிருக்கும் பரமசிவன் எடுத்துக் கொண்டஅருள் திருவுருவங்களுள் முருக வடிவமும் ஒன்றாகும். முருகு என்ற அடியொற்றி வந்தது. முருகு என்னும் பதம் அழகு, இளமை, தேன், நறுமணம், கடவுள் தன்மை என்னும் பொருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஆகவே அழியாத அழகு; மாறாத இளமை; திகட்டாத தேன்; மறையாத நறுமணம் போன்ற பரிபூரணக் கடவுள் தன்மை பொருந்தியவன் எனலாம்.

அசுரர்களாகிய சூரபத்மனுதியோர் தேவர்களை இடர்ப்படுத்தினர். அவர்களுடைய கொடுமையைத் தாங்க முடியாது தேவர்கள் எல்லோரும் கருணைக் கடலாகிய சிவபெருமானிடத்து முறையிட்டு நின்றனர்.

அவர்களுடைய துயரைத் தீர்க்கத் திருவுளங்கொண்ட அரனார் தமது நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு அனற்பொறிகளைத் தோற்றுவித்தார். அவை வாயு தேவனிடமும் அக்கினி தேவனிடமும் சென்றன; அவற்றை அவர்கள் தாங்கமுடியாது கங்கையில் விட்டனர். அப்பொறிகள் இறுதியாக சரவணம் என்னும் பொய்கையில் சேர்ந்து செந்தாமரை மலர்களில் ஆறு பச்சிளங் குழந்தைகளாக வீற்றிருந்தன. கார்த்திகைப் பெண்களால் பாலூட்டி வளர்க்கப் பெற்றனர். பின் உமையம்மையார் ஆறு குழந்தைகளையும் அன்புடன் அணைக்க ஆறுதிருமேனிகளும் ஒன்றாகச் சேர்ந்தன. இவ்வாறு மூவிரு முகங்களும் ஆறிரு தோள்களும், மூவாறு நயனங்களும் அமைந்த அருள் திருமேனி கொண்டு தோன்றினர் முருகப்பெருமான்.

அரனார் கண்ணில் தோன்றிய குமரனைக் கங்கை தாங்கிச் சென்று சரவணத்திற் சேர்த்தமையால் காங்கேயன் என்றபெயரைப் பெற்றான்; அழகிய சரவணப் பொய்கையில் குழந்தையாக வளர்ந்தமையால் சரவணபவன் ஆயினான்; கார்த்திகைப் பெண்கள் பாலூட்டிய பான்மையால் கார்த்திகேயன் என்னும் பெயர் பெற்றான்; அவனுடைய ஆறு உருவங்களையும் ஒன்றாகத் திரட்டிச் சேர்த்தமையால் கந்தன் என்னும் பெயர் பெற்றான்.

எமது சமயத்தின் அரிய கடவுட் கொள்கையை திறமையாக விளக்குகிறது முருகப் பெருமானின் வரலாற்று நூலாகிய கந்த புராணம். கடவுளின் சொரூப லட்சணத்தை விளக்கும் பாடல் ஒன்று; அது இறைவன் பேரும் ஊரும், செயலும், குணமும் குறியும், வரவும் போக்கும், முன்னும் பின்னும் இல்லாதவன் என வர்ணிக்கிறது.

ஊரிலான் குணங்குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கோர்
நேரிலான் உயிர்க்கடவுளாய் என்னுளே நின்றான்.

இங்ஙனம் அருவமாக இருக்கும் கருணாகரக் கடவுள் முருகனாகத் தோன்றும் விதத்தைச் சித்தரித்துக் காட்டுகிறார் கச்சியப்ப

சிவாச்சாரியார். அருவும் உருவும் ஆகியும் ஆதியில்லாததும் பலவாவும் ஒன்றுயும் பெரிய பொருளாயும் நின்ற சோதிப்பிழம்பு ஒரு திருமேனியாக கருணை மிகுந்த ஆறுதிரு முகங்களும் பன்னிரு திருக்கரங்களும் கொண்டு ஒப்பற்ற முருகப்பெருமான் உலகம் உய்யும் பொருட்டு திருவவதாரம் செய்தருளினர். இவ்வரிய காட்சியினை விளக்கும் பாடலைப் பார்க்கலாம்.

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய்
ஒன்றுய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

முருகோதயம் இவ்வாறு நிகழின், சிவபிரானுக்கும் முருகப்பெருமானுக்கும் பேதம் உண்டா என்ற வினு இயல்பாகவே எழுகிறது. முருகன் சிவபிரானின் மறு உருவம் என்பதே முடிந்த முடிபாகும்.

உமை வினவ சிவனர் முருகன் பெருமையை இவ்வாறு மொழிகிறார். ''ஆறுமுகன் நமது சத்தியேயாம். அவனுக்கும் எமக்கும் வேறுபாடில்லை. நம்மைப்போல் அவனும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ளான்; குழந்தைபோல் இருப்பினும் யாவையும் உணர்ந்தவன்; தன்னை வழிபடும் அடியார்க்குச் செல்வமும் ஞானமும் சிறப்பும் அருள வல்லவன்'' கச்சியப்ப சிவாச்சாரியார் வர்ணனையை ஈண்டு காண்போம்:

ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதகம் அன்றுல் நம்போல் பிரிவிலன் யாண்டும்.
நின்றுன்
ஏதமில் குழவிபோல்வான் யாவையும் உணர்ந்தான்சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.

* * *

தேவாசுரப்போர் நடந்தது. ஆறு நாட்கள் முடிவில் சூரபன்மனுடைய தம்பிமார் தாரகாசுரன், சிங்கமுகன் ஆகிய இருவரும் மடிந்தனர். இறுதியாக சூரபன்மனுக்கும் கந்தவேளுக்குமிடையே கடும்போர் நிகழ்ந்தது. ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள அசுரசேனைகளை ஆறுமுகப் பெருமான் அழித்தார்; சூரபன்மன் கொணர்ந்த இந்திரஞாலத்தேர் அவனிடம் மீளாது தடுத்தார்; அவன் கொண்ட பல்வேறு மாயாஜாலத் தோற்றங்களையும் முருகப்பெருமான் அழித்தார். மேலாக, சூரபன்மன் மீது கொண்ட எல்லையற்ற கருணையினுல் தமது அழிவில்லாத திருப்பெரு வடிவத்தை அவனுக்குக் காட்டி (விஸ்வரூப தரிசனம்) சிறிது நல்லுணர்ச்சியையும் நல்கினர். எல்லா அண்டங்களும் புவனங்களும் தேவர்களும் பிறவும் ஒடுங்கித்தோன்றும் திருப்பெரு வடிவத்தைப் பார்த்து அதிசயித்து நின்ற சூரபன்மன் நல்லுணர்வு வரவே முருகன் பெருமையைச் சொல்லலுற்றன். ''முருக தூதராகிய வீரவாகுதேவர் நாரத மகரிஷி, தாயாகிய மாயை, இளவலாகிய சிங்கமுகன், மூத்த மகனுகிய பானுகோபன், இளைய மகனுகிய இரணியன் ஆகியோர் முருகப் பெருமானின் பெருமைகளையும் அளவற்ற ஆற்றலையும் கூறினர்; அப்போது உணர்ந்தேனில்லை. கோலமாமயிலிற் குலவிய வேலனைப் பாலன் என்றே இதுகாறும் எண்ணியிருந்தேன். இவன் பெருமையை அறிந்திலேனே! மாயவன், மலரவன் முதலிய வானவர்க்கும் யாவருக்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தியேயன்றே!'' இக்கருத்தினை வடித்துத் தரும் இனிய செய்யுளைக் கண்ணுறுவோம்:

கோலமா மஞ்ஞை தன்னில்
குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அந்நாள்
பரிசிவை உணர்ந்திலேனுல்
மாலயன் தனக்கும் ஏனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூல காரணமாய் நின்ற
மூர்த்தி இம்மூர்த்தி யன்றே?

முருகப் பெருமானுடைய அழகில் திளைக்கிறுன் சூரபன்மன்; வியக்கிறுன். ''ஆயிரங் கோடி காம தேவருடைய அழகெல்லாம் திரண்டு ஒன்றுக வந்தாலும் அறுமுகப் பெருமானுடைய திருவடியின் தூய அழகுக்கு இணையாகாது என்றுல், இவரது எல்லையற்ற அழகிற்கு உவமை கூற வல்லார் யார்?'' என்கிறுன். இப்பேரெழில் தோற்றத்தினைச் சித்தரிக்கும் பாடலை நோக்குவோம்:

சுகம் எது? — உள்ளத்தில் சிரிப்பு.



ஆத்மஜோதி சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!

எல்லாவிதமான பிடவை, மற்றும் சேர்ட் வகைகளும்
பெற்றுக் கொள்வதற்கு எல்லோரும் விரும்பும் இடம்



GEETHA TEX
DEALERS IN TEXTILES.
102, 2/5, 3rd CROSS STREET,
COLOMBO-12.

எங்களிடம்
தற்காலத்திற்கேற்ற புதுவித ரகங்களில் ஆண், பெண், குழந்தைகள் அணியும் பாட்டா, D.S.I. இலஸ்ட்ரோ மற்றும் உள்ளூர் தயாரிப்புக் களான செருப்பு சப்பாத்து வகைகள் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



PRAGAS STORES
31, 33, Kasthuriar Road,
JAFFNA.

—

RATHY WATCH WORKS & STORES
Registered Ceylonese Importers

Sub Agents for:
Releigh Cycles

Dealers in: Cycle Spares Watches Etc.,
Specialists in Watch Repairing.



Rathy Watch Works & Stores
44, 46, Kasthuriar Road,
JAFFNA.

—

T'Phone: 7103 Cable: *RATHY*

கெட்ட நெறிக்கு
சோம்பலே காரணம்.
நன்மையை நாடுகின்றவன்
ஒரு தொழிலைக் கற்று
அதில் புகுந்து
பணியாற்ற வேண்டும்.



வாழ்க ஆத்மஜோதி



ர வி பீ டி
நாவலப்பிட்டி.

—

சத்தியம் எது?—
பரப்பிரம்மம்



ஆத்மஜோதி
30வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது வாழ்த்துக்கள்!



த. பாலரத்தினம் அன் கோ.
தெரணியாகலை.
தொலைபேசி இல: 893

ஏ துர்க்கா! அருட்கடலே! அபாயத்தில் சிக்கி
இருக்கும் நான் உன்னை அழைக்கிறேன்.
என்னைக் கைவிட்டு விடாதே;
உலக அன்னையே என்மீது
நிரம்பிய கருணை புரிவாயாக!



NEW JAYANTHIES TEXTILES
2nd FLOOR
102/7 3rd CROSS STREET
COLOMBO–II

எல்லாக் குணங்களையும்
அழிப்பது எது?—
உலோபம், கருமித்தனம்.



Easwary Hardware Stores.
Prop: K. Ponnuthurai
K. K. S. ROAD,
CHUNNAKAM.

பயன் எவனுக்குக் கிடைக்கும்?—
முயற்சி செய்பவனுக்கு



எலக்ரோலக்ஸ்
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

ஆத்மஜோதி நிலையம் என்றும்
திருவருள் பெற்று நிலைத்து வாழ
சதா விரும்பி வாழ்த்தும்



தாளையன் பிரின்டிங் வேர்க்ஸ்,
115, மெசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.
T'Phone: 33774
24531

குருவின் கமல பாதங்களில் குன்றுப் பக்தி செலுத்தினுல்
இச் சம்சார சிறையினின்று மீழ்வது உறுதி.

எம்மிடம் சிறந்த எவர் சில்வர், அலுமினியம் பித்தளைச்சாமான்கள்
பெற்றுக் கொள்ளலாம்.

SREE RAJAH TRADERS,

226 & 228, GASSWORK STREET,
COLOMBO—11.

அன்னை, அன்னபூரணி, மகேஸ்வரி
நிலைத்த ஆனந்தம் அருளுபவளும்,
வரங்கள் தருபவளும் நீ.
நானுவித இரத்தினுபரணங்கள் அமைத்த
பொன்னுடை தரிப்பதில் மகிழ்பவள் நீ,
எனக்கு எல்லா நன்மைகளையும் தருவாயாக.

ராணி ஆபரண மாளிகை

(ஆர். ஜி. பில்டிங்)
63, கன்னுதிட்டி — யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 7544

ஆசைகள் யாவற்றையும் துறந்து விசுவநாதனை,
காசிநாதனை வழிபடு.

ஆத்மஜோதி பல்லாண்டு வாழ்க!



ஆதித்தன் ஸ்டோர்ஸ்,
115, மத்திய வீதி,
திருக்கோணமலை.

★ இரும்புப் பொருட்கள்
★ கட்டிடப் பொட்ருகள்
★ உதிரிப்பாகங்கள் ஆகியவற்றிற்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்



நியூ கோபால் கம்பெனி,
30, கடல் முக வீதி,
திருக்கோணமலை. தொலைபேசி: 619

யாருடைய சொல் பலிக்கும்?

சத்திய விரதம், மௌன விரதம், பொறுமை
ஆகியவற்றை உடையவனின் சொல்.



எல்லாவித நவநாகரீக நகைகளுக்கும்
— சிறந்த இடம் —



P. AMBALAVANAR

JEWELLER

119, Kasthuriar Road — JAFFNA.

T' phone: 7199

யாருக்குத் துக்கமில்லை?

கோபமற்றவனுக்கு.



ஆத்மஜோதி சிறப்பு மலருக்கு
எமது நல்லாசிகள்!



"ஸ்ரீஸ் கந்தபவனம்" அரிசி ஆலை

சின்னப் புதுக்குளம் — வவுனியா.

உடலெடுத்தவனுக்குப் பெரிய பாக்கியம் எது?

ஆரோக்கியம்

ஆத்மஜோதி சிறப்பு மலருக்கு

எமது நல்வாழ்த்துக்கள்

டாக்டர் எஸ். சின்னத்துரை,

208, ஹொரவப்பத்தானை வீதி,

வவுனியா. தொலைபேசி இல. 343

கிதையைச் சிறிதளவேனும் ஓது
துளியேனும் கங்கை நீர் அருந்து
எப்போதாகிலும் கண்ணனை ஆராதனைசெய்
இதையெல்லாம் செய்தால் யமன் யாதொரு –
தகராறும் செய்யான்

S. ARUMUGAM & CO.,

BAZAAR STREET,

VAVUNIYA.

T. Phone; 525.

ஆயிர கோடி காமர் அழகெலாந் திரண்டொன்றுகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாஞ் சரணந்
-தன்னில்
தூய நல் எழிலுக் காற்று தென்றிடில் இனைய
—தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க
-வல்லார்.

சூரபன்மனது அகந்தை அகன்றது; மெய் யுணர்வு வந்தது; ஆனந்தக் கண்ணீர் பெரு கியது 'இத்தேவ தேவனுடைய திருவுருவம் காணப்பெற்றேன். இது என் தவப் பயன் அன்றே?' என்று பெருமிதம் அடைந்த சூர பன்மன் மீண்டும் சொல்லுவானுயினுன். 'முருகனே வழிபட எனது உறுப்புகள் எல் லாம் விரும்புகின்றன; தீமை எல்லாம் ஒழிந்து அவனுக்கு அடிமையாக வாழ வேண்டும் என்று மனம் உந்துகிறது; ஆனல் மானம் என்ற ஒன்று தான் தடுக்கின்றது' என்று பிரலாபித்தான். பின்வரும் செய்யுள் அவன் கூறும் புகழை நன்கு பிரதிபலிக்கிறது.

சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலும்
ஆழுதல் வேண்டும் தீமை அகன்று நான் இவற்காளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே.

பலவாருகப் போற்றிப் புகழ்ந்து நின்ருன் சூரன். அந்நிலையில் முருகவேள் தமது பெரு வடிவத்தை நீத்தார்; அவனேயும் முன்னி ருந்த வண்ணம் ஆக்கினுர். மெய்யுணர்வு நீங்கியபோது அவனுடைய மனத்தில் மீண்டும் சீற்றமும் பகைமையும் நிறைந்தன. நிறை யவே இருள் வடிவங்கொண்டு தேவர்களே விழுங்க முற்படுகிருன். இதுகண்ட முருக வேள் வேலாயுதத்தை விடுத்தார். சூரன் கடல் நடுவில் மிகப்பெரிய மாமரமாகி நின் ருன். வேற்படை அவனது மார்பை இருகூருகப் பிளந்துநின்றது. இருகூறும் சேவலும் மயி லும் ஆயின. இரண்டும் சினங்கொண்டு முருகவேளே நோக்கிப் போர்புரிய வந்தன. கருணைவாய்ந்த திருக்கண் நோக்கம் செய் தார் முருகன். சூரன் பகைமை நீங்கிப் பண் புற்ருன். இன்றும் என்றும் சேவலும் மயிலு மாக சின்னமும், வாகனமுமாக முருகப் பெருமானேச் சேவித்து நின்ருன். தேவர்கள் சிறை மீட்கப்பெற்றனர். தெய்வேந்திரன் மகள் தெய்வயானேயை கிரியா சக்தியாகவும் வள்ளிநாயகியை இச்சாசக்தி யாகவும்ஏற்றுக் கொண்டார் முருகவேள். ஞானசக்தியாகிய திருக்கைவேலுடன் வள்ளி தெய்வானே சமேதராக, உலகோர் உய்யும் வண்ணம் வீற்றிருந்தருளினுர்.

மனுக்குலத்துக்கெல்லாம் நல்லதொரு பாடத்தைக் கற்பிக்கிறது கந்தபுராணம். 'எத்துணைத் தீமைகளேச் செய்தவரும் முருகப் பெருமான் திருமுன் சரணடையின் தூயவ ராவர்; மேலான சிவகதியும் அடைவர்' என்பதற்கு ஆகமப் பிரமாணம் கொண்டு ஆராய்தல் வேண்டுமோ? வேறு சான்றும் வேண்டுமோ? கேடிழைத்து கொடும்போர் செய்த மாயையின் மகனுகிய சூரனும் வரம் பிலா அருள் பெற்று உய்ந்த கதை ஒன்று போதாதோ? என்று அருட்கவி கச்சியப்ப சிவாச்சாரியார் நயமாகக் கூறுவதை உற்றுக் கவனிப்போம்.

தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றுல்
தூயவராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாள்
—செய்த
மாயையின் மகனும் அன்றே வரம்பிலா அருள்
—பெற்றுய்ந்தான்.

கந்தபுராணத்தைப் போன்று திருமுரு காற்றுப்படை, கந்தரனுபூதி, கந்தரலங்கா ரம், கந்தர் கலி வெண்பா, திருப்புகழ் மூத லிய நூல்களும் முருகனின் மகிமையையும் கீர்த்தியையுமே கூறுகின்றன. முருகதத்துவம் படித்துப் படித்து இன்புறத்தக்கது. விரிக்கில் பெருகும்.

தம்மை வழிபடுவோருக்கு எளிதில் தோன்றி அருள்புரிபவன் முருகப்பெருமான். "நெஞ்சில் ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும் முருகா என்றேதுவார் முன்" கலிகாலத்திலும் இவ்வாறு அருள்புரிதல் பற்றி அப்பெருமான் 'கலியுகவரதன்', 'கண் கண்ட தெய்வம்' என்பர் அடியார்கள். முத் தமிழால் வைதாரையும் வாழவைப்போன் முருகன்; 'தமிழ்த் தெய்வம்' என்றும் 'செந் தமிழ் நூல் விரித்தோன்" எனவும் அறிஞர் கூறுவர். அன்பர் அகத்துறையில் வீற்றிருக் கும் 'குகன்' ஆகவும் திகழ்வன். குன்று தோறுடும் குமரனே மனமுருகி வழிபட்டால் துயரங்கள் தீரும். அவனது திருவடிகளேச் சாந்துணைப்போதும் மறவாத வர்க்கு ஒரு தாழ்வில்லையே" என்பது அருணகிரியார் திருவாக்கமுதம். அங்ஙனம் மறவாதேத்தி இஷ்டசித்திகளேப் பெற்று உய்வோமாக! முருகனின் திருவருள் அனேவர் மீதும் மலர் வதாக!

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

—கந்தரனுபூதி

அத்வைத மகா சமுத்திரத்தில் ஒரு சிறு துளி

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

'ஆணவத்தோடத்து விதமானபடி மெய்ஞ்ஞானத் தாணுவினோடத்து விதஞ்சாரு நாளெந்நாளோ'
என்று ஏங்குகின்றார் தாயுமானவர்.

[அத்துவிதம் அத்வைதம் எனவும் படும். அத்துவிதம் இருமையின் ஒருமை. அஃதாவது இரு பொருள்களின் ஒருமைப்பட்ட தொடர்பு விசேடம். இந்நிலையை,

'ஒன்றுகாமல் இரண்டாகாமல் ஒன்றும் இரண்டும் இன்றுகாமல் இருக்கும் நிலை' என்று விளக்கஞ் செய்கின்றது, இருபா இருபஃது.]

* * * *

மெய்ஞ்ஞானத்தாணு பரமான்மா. சீவான்மாவானது ஆணவ இருளில் அத்துவிதமானவாறு, பேரொளிப் பிழம்பாகிய பரமான்மாவோடும் அத்துவிதமாதல் வேண்டும் என்றவாறு.

[ஆணவ அத்துவிதம் அநாதியாய கேவலம். மெய்ஞ்ஞானத்தாணுவோடத்துவிதம் சுத்தம். இடைப்பட்டது சகலாவஸ்தை.] இது நிற்க;

சீவான்மா ஆணவத்தோடத்துவிதப்பட்டிருக்கும்போது, அச்சீவான்மாவோடு பரமான்மாவின் தொடர்பு எவ்வாறும் என்கின்ற வினா எழலாம்.

அவ்வினாவுக்கு விடைதருவதுபோன்று அமைந்திருக்கின்றது,

'அவனே தானே ஆகிய அந்நெறி'
என்கின்ற சிவஞானபோத சூத்திரம்.

பந்த காலத்தில் பரமான்மா ஆகிய அவன், சீவான்மா ஆகிய தானுயிருக்கின்றான்; அவ்வாறே மற்றொரு காலத்தில் தான் அவனுதல் வேண்டும் என்பது சூத்திரக் கருத்து. தான் சீவான்மா. மற்றொரு காலம் சுத்தாவஸ்தை.

ஆகவே சீவான்மா ஆணவத்தோடத்து விதப்பட்டிருக்கும் கேவலாவஸ்தையில், பரமான்மா சீவான்மாவோடு அத்துவிதப்பட்டு அதுவாயிருக்கும் என்பதும், சீவான்மா அப்போது பரமான்மாவோடு அத்துவிதப்படாமலிருக்கும் என்பதும் தெளிவாம்.

* * * *

பரமான்மா சீவான்மாவோடு அத்துவிதப் பட்டாற்போதாது; சீவான்மாவும் பரமான்மாவோடு அத்துவிதப்படவேண்டும் என்றவாறு.

தலைவன் தலைவி பால் அன்புவைத்தாற் போதாது; தலைவியும் தலைவன் பால் அன்புடையளாதல் வேண்டும் என்க.

* * * *

வேறுபாடு:

1. பரமான்மா உயிர்க்குயிர்; தன்னைச் சார்ந்ததனைத் தன்வண்ணஞ் செய்வது; சார்பில் அடங்காதது; சர்வவியாபி.

2. சீவான்மா உயிர்; சார்ந்ததன் வண்ணமாவது; சார்புள் அடங்குவது; சார்பின்றி வாழாதது இவ்வாற்றால், அத்துவித வேறுபாடு அவஸ்தைகள் தோறும் உயிர்க்குயிரில் வைத்தும், உயிரில் வைத்தும் சிந்திக்கற்பாலதாம்.

* * * *

அத்வைத வேறுபாடுகளைப் பல வேறு நிலைகளில் வைத்து விளக்கஞ் செய்பவைகள் வேதாந்த சித்தாந்த மகா வாக்கியங்கள்.

உள்ளும் புறமும் ஒத்து வாழ்தல்

–பி. மு. ஞானப்பிரகாசம் அவர்கள்–

பேச்சைக் கேட்பது போலவும், செயலைக் காண்பது போலவும் ஒருவர் நினைப்பதை அறிய முடியுமானால் எவருமே தீங்கு நினையார். உலகமே சுவர்க்கமாகிவிடும். ஆனால் இந்த நிலை பூமியில் இல்லை. இல்லாத போதும், உள்ளும் புறமும் ஒன்றுக வாழ்வதால் ஓர் இன்ப உலகைக் காணலாம். ஒருவர் உள்ளத்தை ஒருவர் அறியாதிருத்தலே இன்று அநேக பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது. இன்னுஞ் சொன்னால், நல்ல மனிதரை நம்பாதிருத்தலாலும், தீயவர்களை நம்புவதாலும் சிக்கல்கள் தோன்றுகின்றன. நம்பி நடக்கும் சமுதாயத்தை உருவாக்காதபடியால், ''நம்பி நடவாதே'' என்பது போன்ற முதுமொழிகளும் ஏற்பட்டு விட்டன. நினைவு மாத்திரம் பரிசுத்தமடையுமானால், வாக்கும் செயலும் தாமாகவே தூய்மை பெறும். அப்போது உள்ளும் புறம்பும் ஒன்றுபட்ட நிலை உதயமாகும்.

நாம் ஒவ்வொருவரும் பிறக்கும் போது குறிப்பிட்ட நிலையிற்தான் பிறந்தோம். குழந்தையுள்ளம் எல்லாம் ஒரே தன்மையானவை அல்லவா? இது இறைவனின் சிருஷ்டி அற்புதங்களில் ஒன்று. பாலரில் பிரதிபலிக்கும் தெய்வீகம், வளர்ந்தோர் எவரையும் கவர்ந்து கொள்கிறது. பிறக்குமிடம்-சாகியம்-தந்தைதாயர் - உடன்பிறவிகள் - உற்றூர் உறவினர்-மனமக்களால் குழந்தைகளின் தெய்விகம் மேலும் ஒளி வீசும்; அல்லது மங்கி மறையும்.

பாலரிலமைந்த பல சிறந்த தெய்வீகப் பண்புகளை அபிவிருத்தியாக்கக் கல்வி நிலையமோ, அல்லது பெற்றூரோ முயலக் கூடுமானால் எதிர்காலத்தில் புத்தொளி பெற்ற சமுதாயமொன்று மலராதா? கல்வியென்றால், ஏதோ விஷயங்களைத் திணிப்பதல்ல; குழந்தைகளில் இயல்பாக அமைந்த பண்புகளை வளர்ப்பது. புறத்தில் இருந்து தீமை புகுந்து கொள்ளவிடாமல் காப்பது. – வாழ்வாங்கு வாழ வழிதிறந்து விடுவது– ''நான் எப்படி வாழப்போகிறேன்'' என்ற நடுக்கத்தைத் தீர்ப்பது போன்ற நோக்கங்களைப் பூரணமாக்குவதேயாம். நூல்கள்–ஆசிரியர்–பெற்றூர் குறித்த நோக்கங்களுக்குறுதுணையாக அமைந்தால் உள்ளும் புறம்பும் ஒத்த உள்ளங்கள் மலரத் தடையுண்டா?

உள்ளும் புறம்பும் ஒத்தவர்கள், இன்று உலகில் மிகக் குறைவு. அதனால் உலகம் அவர்களைப் புறக்கணிக்கவுஞ் செய்கிறது. உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவோர், தங்களுக்குத் தாங்களே புள்ளியிட்டுக் கொள்கிறார்கள். உலகத்தில் அந்த நிலைக்கு அங்கீகாரமுங் கிடைக்கிறது. ஆனால், தெய்வ சம்மதம், உள்ளும், புறப்பும் ஒன்றுபட்ட வாழ்வை விட்டு என்றுமே அகல்வதில்லை. கடல் போலுங் கொந்தளித்துவருந் துன்பங்கள் அவன் காலடியில் தணிந்து விடுகின்றன. தீராக் கவலையுற்ற விடத்தும் ஏதோ ஒரு சக்தி கைகொடுத்துக் கவலையை மாற்றிவிடும். நள்ளிருளில் தட்டுத் தடுமாறி நச்சரவில் மிதித்தாலும் அவனை ஒரு தீங்கும் செய்யாது. பேராபத்து நிகழப்போகும் பயணத்தை, ஆரம்பிக்கும் போதே தடை நிகழ்ந்து விடும். துரத்திவருங் கடிநாயும் அவன் காலடியில் வாலை ஆட்டும். மாசற்ற சிறு குழந்தைகளே இலகுவில் இவர்களின் உள்ளத்தைக் கண்டு புன்னகை பூத்துறவாடுவார்கள்.

உள்ளும் புறமும் ஒத்தவர்களிடத்தில் சாத்வீகமே மேலோங்கும். இந்த சாத்வீகம் அவர்களைச் சுற்றி, என்றும் எவ்விடத்தும் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். அந்த வட்டத்தில் எந்த சீவராசிகளின் மூர்க்க குணமும் மாறிவிடும். கொலைத் திட்டத்துடன் காத்து நின்றவர்கள் சிலர், ஆளைக்கண்டதும், திட்டத்தை நிறைவேற்றுமல் ஸ்தம்பித்து நின்ற செய்திகளையும் அறிகிறோம். இந்தச் சாதகனுக்கு எம்மதமுஞ் சம்மதமே. இவனுக்கு ''யாதும் ஊரே யாவரும் கேளிர்.'' இவனுடைய திருக்கூட்டம் உலகெங்கும் ஓங்குக.

சிந்தனை வாக்குச் செயல்களெல் லாமொன்று
சேர்ந்தவனே மனிதன்
அந்த மனிதனை ஆபத்தில் கைதூக்கும்
அற்புத சக்தி ஒன்று.

கற்பனவும் இனியமையும்

—சி. நல்லையா அவர்கள்—

மக்களாகப் பிறந்த நாமனைவரும் இன்பம் ஒன்றையே இலக்காகக் கொண்டு வாணாள் முழுவதும் ஓயாதுழல்கின்றோம். பெற்ற தாய் தந்தையரையே பெரும் பொருளாகக் கருதினோம். உற்றார் உறவினரே உறுதுணையென நம்பினோம். மனை-மக்கள் - செல்வம் - பதவி— பேர்-புகழ் நமக்கு இன்பமளிக்கும் பொருள்களென எண்ணினோம். இவையெல்லாம் இன்பம் போலத் தோன்றி, நம்மை மேலும் துன்பத்தில் ஆழ்த்தியதையும் கண்டோம்.

அறிவுபெற நூல்களைக் கற்றோம். சிறந்த பேச்சுகளையுங் கேட்டோம். பெற்ற அறிவைப் பிறருக்குப் போதித்தோம். நூல்களும் எழுதினோம். இவற்றால் கல்விச்செருக்கும், ஆணவத் துடிப்புங் கண்டதேயல்லால் உண்மையின்பம் அடைந்திலேம். அறியாமையை அகற்றுவதற்கெனக் கற்று, வாய்ஞானம் பேசி ஏனையோரை மருட்டியும், உருட்டியும் புகழுரை- பொருளுதவிக்காளானோமேயன்றி ஆத்மீக வாழ்வு பெற்றிலேம்.

"கற்க கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக" என்பது வள்ளுவன் வாக்கு. ஆனால் நாம் கற்க வேண்டியவற்றைக் கற்றிலேம். கற்றதும் கசடறக் கற்றிலேம். இதிலும் மோசமாகக் கற்ற வண்ணம் ஒரு சிறிதும் நின்றிலேம். இந்த நிலையிற் தான் பெரும்பாலும் வாழ்கின்றோம். கல்வி வாழ்விற் கலக்க வேண்டும். பேசுவதோடும், எழுதுவதோடும் கல்வி நின்றுவிடக்கூடாது. பிறர் கற்றுங் கேட்டுமறியாத பல நுட்பங்களை, நூல்களிலும் உரைகளிலும் பொறுக்கி எடுத்துப் பொழிந்து தள்ளுகின்றோம். அதாவது: "தொண்டு என்றால் என்ன? எப்படிச்செய்ய வேண்டும்? ஏன் செய்ய வேண்டும்? என்றெல்லாம் அடுக்கு மொழியில் அழகாகப் பேசிவிடுகின்றோம். ஆனால், தொண்டு செய்யும் மனப்பான்மையோ, உண்மைத் தொண்டோ நம் வாழ்வில் துளியும் இல்லை. இந்த நிலையில் மிச்சமாகக் கண்டது, பொருள் வருவாயும், புகழீட்டலுமேயாகும். இந்த அளவோடு கல்வியின் நோக்கம் நின்றுவிடக் கூடாது என்பதைத்தான் மேலும் வற்புறுத்துகின்றோம்.

உலகம் வாழ உவப்புடன் செய்யுந் திருப்பணியே சிறந்த தெய்வ வணக்கமாகும். இப்பணிக்குரிய நெறி, காண்பதெல்லாம் கடவுள் மயமாகவும், செய்வதெல்லாம் தெய்வப் பணியாகவும் சிந்தை செய்து வாழ்வதேயாம்.

இந்த நிலையில் முதிர முதிர மனச்சாந்தியை அள்ளியெடுக்கும் எண்ண அலைகள் தணியும். தணியத் தணிய நம் அகத்தில் என்றும் அனுபவிக்காத மன அமைதி படரும். மனக்கோட்டை கட்டும் போக்கு மாறிவிடும்.

கட்டற்ற பேரின்பவானில் நீந்தி விளையாடுவதுபோல் தோன்றும். மனக்குரங்கின் பல வகைச் சேஷ்டைகள் அடக்குவாரின்றி அடங்கிப்போம். ஆணவப் பேயும் அகன்றுவிடும்.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற நிலை வந்தெய்தும். இவனே உண்மையான ஆத்ம சாதகன். இவன் இகத்திலே பரத்தைக் காண்கிறான். பேச்சற்ற இந்த நிலையில், சதா பேரின்பம் பொங்கி வழியும். யாவும் சிவமயமாய்த் தோன்றும். சிவமேயாவான்.

குணசீலன் அதிகம் பேசான். அவனை அகந்தையும் அணுகாது. அவன் தனது உள்ளத்தையே திறந்து திறந்து பார்ப்பான். பார்த்துப் பார்த்து அறியாமைத் திரைப்படலங்களை அகற்றுவான். இதை முழுநேர வேலையாகக் கொண்டு — பேரானந்த வாழ்விற் திளைத்து மௌனியாக வாழ்வான். இவனுக்கே **"கற்பனவும் இனியமையும்!"**

சிவாகமக் கிரியைகள்

சிவாகம ஞானசாகரம் — N. இராமநாதசிவாச்சாரியர் அவர்கள்
சீர்காழி — S. இந்தியா

அகண்டபரிபூர்ண சச்சிதானந்தமூர்த்தியாகிய இறைவன் ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் அருளியது வேதமும் சிவாகமமும். சைவ உலகத்திற்கு வேதம் பொதுநூல் என்றும் ஆகமம் சிறப்பு நூல் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதனை சேக்கிழார் சுவாமிகள்,

'வேதநெறி தழைத் தோங்க மிகு சைவத்துறை விளங்க' என்று பெரிய புராணத்தில் கூறி இருப்பதை அறியலாம்.

பொது நூலாகிய வேதமானது நான்கு பகுதியாகவுள்ளது. அவையாவன. 1. இருக்கு வேதம் 2. யஜுர் வேதம் 3. சாமவேதம். 4. அதர்வண வேதம்., இருக்குவேதத்தில் தெய்வ வழிபாட்டிற்கு உள்ள மந்திரங்களும் யஜுர் வேதத்தில் யாகங்களைப் பற்றிய மந்திரங்களும் முறைகளும் ஸாம வேதத்தில், ஸ்தோத்திரங்களும், சங்கீதத்திற்கு அடிப்படையான முறைகளும் அதர்வ வேதத்தில், தனக்கும்தன்னைச்சார்ந்தவர்களுக்கும் பிறரிடமிருந்தோ பிறநாட்டிலிருந்தோவரும்இன்னல்களைத் தீர்க்கும் மந்திரங்களும் மிகுதியாக உள்ளது என்பார்கள். இந்த நான்கு வேதங்களும் சிவபெருமானுடைய (ரிசாம்ப்ராசீ மஹதீ திகுச்யதே) கிழக்கு முகமான தத்புருஷத்தினின்று இருக்கு வேதமும், (தக்ஷிண மாஹுர் யஜுஷா மபாரா) தெற்குமுகமான அகோரத்தினின்று யஜுர் வேதமும் (ஸாம்ஞ தீசி மஹதி திகுச்யதே) வடக்குமுகமான வாமதேவத்தினின்று ஸாமவேதமும் (அதர்வணு மங்கிரஸாய் ப்ரதீசீ,) மேற்குமுகமான ஸத்யோஜாதத்தினின்று அதர்வ வேதமும் அருளிச் செய்யப்பட்டன என்றும் ஊர்த்வாயைதி சேயாச்ச தேவதாஏதஸ் யாம் ப்ரதிவஸன் தேதாப்யச்ச நமோநம:

ஊர்த்து முகமாக (மேலே உள்ளது) ஈசானத்தினின்று ஆகமங்களும் அருளப்பட்டன. ஆகமம் என்ற சொல்லுக்கு எங்கும் வியாபித்திருக்கும் இறைவனே தன்பால் அழைப்பதற்காக அமைந்தது என்று பொருள். கிருஸ்துவர்களுடைய ஆகமம் பைபிள் என்றும் இஸ்லாமியர்களுடைய ஆகமம் குர்ஆன் என்றும் இந்துக்களாகிய நமக்கு சிவாகமமும் சிறப்பு நூலாகும். சிவாகமம் இருபத்தியெட்டாக உள்ளது. அவைகள்,

1. காரணம் 2. காமிகம் 3. சிந்தியம் 4. அஜிதம் 5. யோகஜம் 6. ஸஹஸ்ரம் 7. சூசர்மம் 8. தீப்தம் 9. சுப்ரபேதம் 10. அம்சுமான் 11. நிஸ்வாசம் 12. விஜயம் 13. ஸ்வாயம் புவம் 14. அநலம் 15. விமலம் 16. மகுடம் 17. வீரம் 18. ரௌரவம் 19. சந்திரசானம் 20. பிம்பம் 21. லலிதம் 22. ப்ரோத்கீதம் 23. சந்தானம் 24. சித்தம் 25. சார்வோக்ரம் 26. பாரமேஸ்வர 27. வாதுளம் 28. கிரணம்.

இவைகளில் முன் பத்தும் சிவபேதம் என்றும், பின் பதினெட்டும் ருத்ர பேதம் என்றும் கூறப்படும். ஆகமம் ஒவ்வொன்றும் நான்கு பாதங்களாக (சரியை, கிரியை, யோகம், ஞானம்) அமைந்துள்ளது. இந்த ஆகமங்களையும் அதன் பொருள்களையும் சிவபெருமான், தேவிக்கு அருளிச்செய்ததாகக் கூறப்படுகிறது.

(ஆகதம் சிவவக்த்ரேப்ய:கதஞ்சகிரிஜாமுகே) முன்னொரு காலத்தில் கைலயங்கிரியில் ஸ்ரீ உமாதேவியார் பேரின்பப் பெருங்கருணையாளரான சிவபெருமானை அணுகி தங்களுக்கு மிக விருப்பம் எதுவோ அதை அறிய ஆசையுள்ளவளாக இருப்பதாக கூற, சிவபெருமான் தம்மை பூஜிப்பதையே விரும்புவதாக கூற ஸ்ரீ தேவியார் பூஜை பொருள்

களுடன் வந்து அண்ணலிடம் அனுமதி கேட்க பூஜைக்கு உகந்த இடம் பூலோகமே தவிர இவ்விடமில்லை என்று கூறி, பூலோகத்திற்குச் சென்று பூலோக கைலாயமான காஞ்சிபுரத்தில் பூஜிக்குமாறு உத்தரவு கொடுத்து உமாதேவியாருக்கு, இருபத்தியெட்டு ஆகமங்களையும் அதன் பொருள்களையும் உபதேசம் செய்ய, ஸ்ரீ தேவியார் சிவபெருமானை லிங்க உருவாக அமைத்து வழிபாடு செய்ததை பின் வந்த சேக்கிழார் சுவாமிகள்:

எண்ணிலா கமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனையென உரைத்தருள
அண்ணலார்தமை அர்ச்சனைபுரிய ஆதரித்தெழுந்தார்
பெண்ணில் நல்லவளாகிய பெருந்தவக்கொழுந்து

என்று திருத்தொண்டர் புராணத்திலும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார், அருளிச்செய்த

சிந்தித் தென்றும்நினைந் தெழுவார்கள் சிந்தையில்
திகழுஞ்சிவன்றன்னை
பந்தித்த வினைபற்றறுப்பானைப் பாலோடானஞ்சும்
ஆட்டுகந்தானை
அந்தமில் புகழாள் உமைநங்கை ஆதரித்து—
வழிபடப்பெற்ற
கந்தவார் சடைக்கம்பன் எம்மானைக்காணக் கண்—
அடியேன் பெற்றவாறே.

என்று காஞ்சீபுர தேவாரத்திலும் அறியப்படுகிறது.

சிவாகமம் இருபத்தெட்டிருக்கும் பத்ததி. (வழிநூல்) எழுதியவர்கள் பதினெண்மர்கள்.

துர்வாஸா: பிங்களச் சைவ உக்ரஜ்யோதிஸ்ஸுபோதக:
ஸ்ரீ கண்டோ விஷ்ணு கண்டச்ச வித்யாகண்டஸ்ததைவச
ராமகண்டோ ஞானசிவோ ஞானசங்கர ஏவச
ஸோமசம்பு பிர்மசம்பு: திருலோசன சிவஸ்ததா
அகோர சிவஏவாத ப்ரஸாத சிவ ஏவச
ராமநாத சிவச்சைவ ஈசான சிவ ஏவச
வருணக்ய சிவச்சைவ அஷ்டாத சாசார்ய புங்கவம்
ஏதைர்திவ்யை சிவாசார்யை: பத்ததி பரிகாஷிதா;

1. ஸ்ரீ துர்வாசர் 2. பிங்களர் 3. உக்ரஜ்யோதி 4. சுபோதர் 5. ஸ்ரீ கண்டர் 6. விஷ்ணு கண்டர் 7. வித்யாகண்டர் 8. ராமகண்டர் 9. ஞானசிவன் 10. ஞான சங்கரர் 11. சோமசம்பு 12. பிர்மசம்பு 13. திருலோசன சிவன் 14. அகோரசிவன் 15. பிரஸாத சிவன் 16. ராமநாதசிவன் 17. ஈசான சிவன் 18. வருண சிவன். என்ற பதினெண்மர்கள் ஆவார்கள்.

ஆகமத்தின் நான்கு பாதங்களான சரியை கிரியை யோகம் ஞானம் இவைகளை விளக்கி அந்த நிலையில் நின்று வழிபட்டு பேறு பெற்றவர்கள்

சரியை நிலையில் ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனரும்
கிரியை நிலையில் ஸ்ரீதிருஞானசம்பந்தமூர்த்தி நாயனரும்
யோக நிலையில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனரும்
ஞான நிலையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளும்
ஆவார்கள்.

மேலும் சிவாகமத்தில் நமது வாழ்க்கை முறைகள் பெரிதும் அமைந்திருப்பதை காணலாம். சிவாகமத்தில் நாடு-நகரம்-கிராமம்-ஆலயம் முதலியவைகளை அமைப்பதற்கு பூமியைத் தேர்ந்தெடுக்கும் முறையை பூபரிக்ஷா படலத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பூமியில் உள்ள கெடுதல்களை நீக்கி நல்லதாகச் செய்ய பிரவேச பலி வாஸ்து சாந்தி முதலிய படலங்களாலும் பூமியை சமமாக்கி ஆலயம்-வீதி—மாளிகைகள் முதலியன அமைக்க பதவின்யாச படலத்திலும் கிராமாதிலக்ஷணபடலத்திலும் நாம் இறைவுணர்வோடுவாழ ஆலயவழிபாடு செய்யவும் ஆலயம் அமைக்கவும் ஆலய நிர்மாண படலத்திலும் தெய்வ உருவான மூகூர்த்தங்களை அமைக்க சிலா பரிட்க்ஷை படலத்திலும் அறிய முடிகிறது. ஆலயங்களில் மூர்த்திகளை ஸ்தாபித்து வழிபாடு செய்வதைப்பற்றி

சிவேனஸ்தாபிதசைவ: சைவேன
[ஸ்தாபிதசிவ:

சிவபெருமான் தன்னை ஸ்தாபித்து வணங்குவதற்காக நம்மை படைத்தார் என்று ஆகம வாக்கியம் கூறும். வழிபாடு செய்யும் முறையை கிரியாபாதத்தில் கர்ஷணாதி ப்ரதிஷ்பந்தம் ப்ரதிஷ்டாதி உத்ஸவாந்தம் நித்தியம் நைமித்திகம் என்ற முறையில் கூறும் நித்திய பூஜை இருவகைப்படும்.

அவையாவன– ஆத்மார்த்த பூஜை. பராரர்த்த பூஜை என இருவகைப்படும். ஆத்மார்த்த பூஜை தீஷை பெற்ற எல்லோரும் தன் சொந்த நலன் கருதி செய்வது.பராரர்த்த பூஜை உலக நன்மைக்காக ஆலயங்களில் தீஷை பெற்ற சிவவேதியர்கள் மட்டும்தான் பூஜிக்கலாம் என்று கூறுகிறது.

நைமித்திகம் உற்சவங்கள் ஒன்பதுவகைப் படும். ஒருதினம், மூன்றுதினங்கள், ஐந்து தினங்கள், ஏழு தினங்கள். ஒன்பதுதினங்கள் பதிஞெரு தினங்கள், பன்னிரெண்டுதினங் கள், பதிஞன்கு தினங்கள், பதினைந்து தினங்கள் என்றும் 15; 14, 12, தினங்கள் உத்தமமாகவும், 11, 9, 7, தினங்கள் மத்யம மாகவும் 5, 3, 1, தினங்கள் கடைசி பக்ஷ மாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

நித்ய நைமித்திக பூஜைகள் சரியாக நடந் தால் நாட்டில் ஸகல ஜீவராசிகளும் இன்ப முடன் வாழவகை செய்யும் என்றும் பூஜை கள் தடைப்பட்டால்,

ஆற்றறும் நோய்மிகும் அவனிமழை குன்றி
போற்றரும் மன்னரும் போர் வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் திருகோயில்கள் ஆனைவ
சாற்றிய பூஜைகள் தப்பிடில்தானே

முன்னவனூர் கோயில் பூஜைகள் முட்டிடின்
மன்னவர்க்குத் திங்குள, வாரி வளங்குன்றும்
கன்னம் களவு மிகுந்திடும் காசினிக்கு
என்னருள் நந்தி எடுத்துரைத்தானே.

என்று தெய்வ திருமூலர் திருமந்திரம் கூறும்.

ஆகையால் தெய்வத்வழிபாட்டினைத்தான் நாடும் நாமும் நலமாக இருக்க முடியுமென் பதை 30வது ஆண்டு நிறைவு பெறுகின்ற ஆத்மஜோதி பத்திரிகையின் மூலமாக பல அரும்பெரும் விஷயங்களை அறிந்து கொள்வ தோடு ஆத்மஜோதி பத்திரிகையின் பணிகள் இலங்கை நாட்டிற்கு மட்டுமல்லாது எல்லா நாட்டினர்க்கும் எல்லா மதத்தினர்களுக்கும் பல்லாண்டுகாலம் கிடைக்க எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிய பிரார்த்திப்போமாக.

ஆலயம்

உதவி பெற்றதற்கு நன்றி செலுத்துவது ஒரு சிறந்த கடமை. ஒரு சிறு புல்லைக் கூட சிருஷ்டிக்கத் திறனற்ற மனிதனுக்கு இத்தனை உணவும், உடையும், மற்ற உபகரணங்களும் வழங்கும் ஆண்டவனுக்கு நன்றி காட்டுவது நமது கடமை. இவ் வாறு நன்றிகூறும் அடையாளமாகவே நாம் உண்பதை அவனுக்கு முன் காட்டி நிவேதனம் செய்ய வேண்டும். அவனுக்குக் காட்டி விட்டுப் பிறகு நாம் தான் உண்ணப்போகிறோம். நாம் பலவிதமான ஆடை ஆபரணங்கள் அணிவதற்கு அருள் செய்யும் ஆண்டவனுக்குத் திரு ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். எல்லாருமே இவ்விதம் வீட்டில் பூஜை செய்து திரவியங்களை ஈசுவரார்ப் பணம் செய்ய இயலாது. எனவே, சமுதாயம் முழுதும் சேர்ந்து இப்படி சமர்ப் பணம் பண்ணும்படியான பொது வழிபாட்டு நிலையங்களாக ஆலயங்கள் எழுந் துள்ளன.

—தெய்வத்தின் குரல்

இதுவுமொரு தேரோட்டம்

மு. கந்தையா அவர்கள்—ஏழாலை

காரவா மாணவக் கறைசிறிது வெளிறிடக்
கருணைமிகு பரம னீந்த
கலையாதி யாம்பஞ்ச கஞ்சுக மணிந்ததோர்
கதிப்புமிக ஆங்கா ரநற்
பேர்குலாஞ் சாரதி பிடித்தகை சேந்தெழில்
பெறவிட்டு விட்டி ழுக்கும்
பிங்கலையொ டிடைகலையு மானகலி னம்பூண்
பிராணனென் குதிரை பீர்க்க
வீரவான் விதிசறுக் குக்கட்டை யிடவான்ம
விகிர்தன்மன மென்ற தேரில்
வினைகாட்டு கதியான வீதிவாய்ப் பவனிவரு
விந்தைவிளை யாட்டொடுங்கத்
தீரசெவ் வேள்பெருந் தேருருளு நல்லையாய்
சிறுதே ருருட்டி யருளே
செந்தமிழ் வளங்குலவ வந்தரு ளிளங்குழவி
சிறுதே ருருட்டி யருளே.

—நாவலர் பிள்ளைத்தமிழ்

உடலுயிர் வாழ்வு:		தேரோட்டம்
1. மனம்	)	தேர்
2. ஆங்காரம்	)	சாரதி
3. பிங்கலை இடைகலை-நாடிகள்.	)	கடிவாளம்
4. பிராணன்	)	குதிரை
5. வினைகாட்டுங்கதி	)	தேரோடும் வீதி
6. உயிர்	)	தேரில்உலாவருவோன்
7. விதி	)	சறுக்குக் கட்டைக் காரன்.

இவ்வகையில் முற்றுருவகமாயுள்ளது இச் செய்யுள். முதலில் இதன் பதப் பொருளை அறிதல் நலம்.

கார் அவாம்—கருமையாகிய இருளின் தன்மையைக் கொள்ளும். ஆணவக்கறை—ஆணவமாகிய மாசின் மறைப்பு. சிறிது வெளிறிட—ஒருசிறிது வெளிக்கும் வண்ணம். கருணைமிகு பரமன் — கருணைவான் ஆகிய இறைவன். ஈந்த—மாயையிலிருந்து படைத்துக் கொடுத்த. கலை ஆதியாம் — காலம் நியதி கலை வித்தை அராகம் என்ற பஞ்சகஞ்சுகம் அணிந்ததோர் கதிப்பு மிக—பஞ்சகஞ்சுகம் என்னும் சட்டையை அணிந்துகொண்டதனால் ஏற்பட்ட ஒருவகை உசார் அதிகரிக்க. ஆங்கார நல்பேர் குலாம் சாரதி—ஆங்காரம் என்ற நல்ல பேர் விளங்குஞ் சாரதி. பிடித்த கை சேர்ந்து எழில்பெற—பற்றியகை சிவந்து அழகுறுமாறு. விட்டு விட்டு இழுக்கும் — நுகைய விட்டுவிட்டு இழுக்கின்ற. பிங்கலையொடு இடைகலையும் ஆனகலினம் பூண் — பிங்கலையும் இடைகலையும் என அமைந்த கடிவாளம் பூண்ட. பிராணன் என் குதிரை ஈர்க்க—பிராணன் என்ற குதிரை இழுக்க. வீரவான் விதி - வீரவானுகிய விதி. சறுக்குக் கட்டையிட-சறுக்குக்கட்டையாகிய தடை கலையிட்டு நெறிப்படுத்த. ஆத்ம விகிர்தன்-உயிர் என்ற விகிர்தன். மனம் என்ற தேரில்-மனமாகிய தேரில் ஏறி. வினை காட்டும் கதியான்—வினைகாட்டுங்கதி எனப்படுகிற வீதி வாய்ப் பவனிவரும் — வீதியின் கண்ணே பவனிவந்துகொண்டிருக்கும். விந்தை விளையாட்டு ஒடுங்க—வியப்புக்குரிய விளையாடல் ஒய்ந்து போகுமாறு. தீரசெவ்வேள்—தீரனுகிய செவ்வேட் பெருமானது. பெருந்தேர் உருளும் நல்லையாய்-பெரியதேர் உருளும் வழக்கமுள்ள நல்லைப் பதிக்குரியவனே. சிறுதேர் உருட்டி யருளே. இங்கு நல்லையாய் என்றது நாவலராகிய குழந்தைப் பிராணை. செந்தமிழ் வளங்குலவ வந்தருள் இளங்குழவியெனப்பின் வருவதும் அவரையே குறிக்கும்.

உருவக ரீதியிற் பொருளை விளக்குதல் வகையால் அமைந்த சிறப்புக்காக ஒருதரமும், சித்தாந்த தத்துவ உண்மை விளக்கக் கண்ணுடியாய் அமைந்த விசேடத்துக்காக மற்றொருதரமும் இச்செய்யுள் நயக்கத் தகும்.

பிராணன் என்ற வாயுவே மனத்தை இயக்க அதன்வழி உயிர் இயங்குகிறது. அப் பிராணனுடைய ஊடாட்டம் வலது நாசி வழியாகப் பிங்கலை என்ற நாடியிலும், இடது நாசி வழியாக இடைகலை என்ற நாடியிலும்

With Best Compliments from:

எங்கு எப்போது ஆண்டவனை எண்ணித் துதித்தாலும் அங்கு அவர் தோன்றுவார். மானிட உருவில் தோன்ற வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அவ்வாறே அவர் தோற்றமளிப்பார். எப்பொழுதும் அவர் தயாராயிருப்பார். நீங்கள்தான் அவரை அழைத்து வரவேற்று இதயத்திற்குள் வைத்துக் கொள்ள ஆயத்தமாயிருப்பதில்லை. பாலுண்ட பிறகு குழந்தை அழத்தொடங்குகின்றது. அவ்வழுகையைக் கண்டு வருந்த வேண்டாம். அது ஜீரணத்திற்கு மிகவும் உதவும். அதே போல நீங்களும் அழுங்கள் அப்போது ஆண்டவனை அடையப் போகும் மகிழ்ச்சியை உங்களால் ஜீரணிக்க முடியும்.

—பகவான் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்யசாயி பாபா

P. T. ARASAN J.P.

BATTICALOA.

நம்பிக்கை, நாணயத்திற்கு அனைவருமே நாடுவது
உறுதிக்கும் உத்தரவாதத்திற்கும் எல்லோருமே தேடுவது

அருணை ஜுவல்லரி தங்க நகைகளே.
நீங்களும் இன்றே விஜயம் செய்யுங்கள்

அருணை ஜுவல்லரி

40, மெயின் வீதி — அட்டன்.

தொலைபேசி:- 353

தயாபரன்

94, பிரதான வீதி — அட்டன்.

அறுசுவையும், அன்பும், ஆதரவும் கொண்ட
உபசரிப்பிற்கும் எல்லோரும் விரும்புவது

தயாபரன்

மேல் மாடியில் சாப்பாடும்
கீழ் கட்டிடத்தில்
வெற்றிலை, புகையிலை பழவகைகளும்
பெற்றுக்கொள்ளலாம்.

தயாபரன்

94, பிரதான வீதி — அட்டன்.

இனிய மொழி பேசுவதால்
எல்லோரும் நம்மிடம் மலர்ச்சியாக
இருக்கிறார்கள். நாமும் மலர்ச்சியாக
இருக்கிறோம்;

ஆத்மஜோதி 30வது ஆண்டு
சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

S. K. Y. Nadaraja Pillai & Co,
66, MAIN STREET,
HATTON. *Phone:* 354

கடவுள் உண்மைப் பக்தன் ஒருவனுடைய
ஒவ்வொரு சிறு காரியத்திலும் புகுந்து
காட்சி தருவான்.

ஆத்மஜோதிக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

JOTHY VILAS
11, MAIN STREET
HATTON

எத்தனை குழப்பம் நேர்ந்தாலும்
பொய்மை மறைந்துவிடும்,
மெய்மை மேலே உயர்ந்து நிற்கும்

ஆத்மஜோதி 30வது ஆண்டுச்
சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

CENTRAL BAKERY
Main Street
HATTON

கல்வியும் அறிவும் நம்மைக்
காப்பாற்ற மாட்டா.
கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்

ஆத்மஜோதி நீடூழி வாழ்க

WIJAYAS
225, MAIN STREET
HATTON

ஆத்மஜோதி 30வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல்லாசிகள்!

நம்பிக்கையும், நாணயமும் உடைய
ஜவுளி வியாபாரிகள்

சரவணஸ் டெக்ஸ்டைல்ஸ்,
நிர். 69. மெயின் வீதி — அட்டன்.

ஏழையின் முகம் மலரும்போது
இறைவனின் உள்ளமும்
மலர்ச்சி கொள்கின்றது.

தேயிலையும் — நல்லெண்ணெயும் மற்றும் சகல
சாமான்களும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்

A. R. SITTAMBALAM & Co.,
144. Maliban Street,
COLOMBO-11.

உங்கள் குடும்பத்திற்கு தேவையான
சகலவித ஜவுளிகளுக்கும்

மறவாதீர்கள்

ராம் பிரதர்ஸ்
140. மெயின் வீதி,
கொழும்பு - 11.

தொலைபேசி: 20127

செல்லமுத்து சிவநாதன் அன் கம்பெனி லிமிட்டெட்
இல. 64, பிரதான வீதி — அட்டன்.

மலையகத்தில் முன்னோடி வர்த்தகர்களும்

★ இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்
★ இலங்கை மாவு ஆலைக் கூட்டுத்தாபனம்
★ தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்
★ இலங்கை தோற்பொருள் கூட்டுத்தாபனம்
★ இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்

★ லக்சபான பட்டரி
★ அன்டன் சன்யோ றேடியோ
★ லங்கா மணிலா என்வலப் ஆகியவற்றின் அனுமதிபெற்ற விற்பனையாளர்களும்
★ யூனிக் ரேடியோ
★ போட் சூட்கேஸ் வகைகள்

செல்லமுத்துசிவநாதன்

அன் கம்பெனி லிமிட்டெட்

இல. 64, பிரதான வீதி - அட்டன்.

தொலைபேசி: 0512-272

தலைமைக்காரியாலயம்:

130, இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11. தொலைபேசி: 24143
24454

தந்தி: 'SIVENDRA'

உங்களுக்குத் தேவையான
சகலவிதமான



கலர்-லென்-ஹாப்டோன்-ஸ்டூரியோ
புளொக்வகைகளும்
சினிமா சிலைட்
சித்திர வேலைப்பாடுகளுக்கும்
புகழ்பெற்றவர்கள்



Sri Lanka Block Makers

131, MESSENGER STREET
COLOMBO–12.

T'Phone: 34775

உங்களை அன்புடன் அழைக்கிறேம்.

உங்கள் முழுக் குடும்பத்திற்கும் ஏற்ற

- சாரி வகைகள்,
- ரெடிமேட் ஆடைகள்
- பெப்ரிக்ஸ் வகை
- சேர்ட்டிங்ஸ்
- சூட்டிங்ஸ்

மற்றும் 'பென்சி' சாமான்களுக்கும்

ஏற்ற—சிறந்த சில்லறை-மொத்த வியாபாரிகள்

ரஞ்ஜனஸ்

RANJANA STORES,

52, BANKSHALL STREET,

COLOMBO-II

T. Phone: 25841

Grams: 'Ranjanas'

அறிவாற்றலால் கடவுளை அறிய இயலாது
ஆத்மீக சக்தியால் அவரை உணரலாம்.

ஆத்மஜோதி 30வது ஆண்டுச் சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!



சகலவிதமான கடதாசி வகைகளுக்கும்
சகலரும் விரும்பிச் செல்லும் இடம்



Y. P. M. MANICKAVASAGA NADAR & Co.,
58, MALIBAN STREET,
COLOMBO-11.

Grams: 'PERINBAM'

T'phone: 24114
27002

இயல்கின்றது. இவற்றின் மூலம் பிராணனைச் செலுத்துவது ஆங்காரம். ஆதலால், பிராணன் குதிரை; மனம் தேர்; இடைகலை பிங்கலை கடிவாளம்; ஆங்காரம் சாரதி என உருவக ஒழுங்கு விசேடம் பெறுகிறது. கடிவாளம் பக்கத்துக்கொன்று இருமடிப்புள்ளதாய் இருத்தலும் நாடிகளும் பக்கமொன்றுய் இரண்டிருத்தலுங் காண்க. கடிவாளம் பற்றுபவர் அதை நுகைய விட்டு இழுப்பதற்கும் நாடிகள் மூலம் மூச்சுவிட்டு விட்டு வாங்கப்படுதற்கும் இடையிலான பொருத்தம் அபாரமானது.

தேரோட்டத்திற் பிரதானமான இடம் பெறுவது சறுக்குக்கட்டையிடல், அதன்நோக்கம் தேர் சரியான பாதையிற் செல்ல உதவுதல். வாழ்க்கையோட்டம் பழவினைப்பலாபலனுக்கு ஏற்றபடியே அமைய வேண்டியது. அந்நிலைமை வழுவுறுமல் நிர்வகிப்பது விதியின் செயல். இது இங்ஙனமிருக்க, உயிர் தன்னூக்கமாகத் தானும் ஒரு செயல்வீரன் என்ற மதிவேகத்தின் மூலம் தன் அபிலாஷைப்படி சில வழிவகைகளை மேற்கொண்டு பலன்காண அவதிப்படும். அப்படியான உயிரின் நோக்கு அது அடைய வேண்டிய பழவினைப்பயனுக்கு ஒத்ததாயிருக்கில் விதி அதற்கு ஒத்தாசையாயிருக்கும். அங்ஙனமன்றி விரோதமாயிருக்கில் விதி விட்டுவிடாது. எப்படியாவது உயிரின் போக்கை மாற்றிப் பழவினைப்பயனையே அது அடையத்தக்கதாகச் செலுத்திவிடும்.

தேர் தான் போக வேண்டிய பாதையிற் சரியாகச் செல்லுமாறுல் சறுக்குக்கட்டைக்காரன் பார்த்துக்கொண்டு சும்மாவிருப்பான். பாதை தவறுங் குறிப்புக் காணில் உடனே சறுக்குக் கட்டையைக் கொடுத்து அதன் போக்கை மாற்றிவிடுவான். விதியின் செயலும் சரிசுத்தமாக இத்தகையதேயாம்.

பலதடவைகளில், விதி கெடுத்துவிட்டது, விதி தறுக்கிட்டு விட்டது, விதி சதி செய்துவிட்டது எனப் பலர் பேசிக்கொள்வதில் இந்த உண்மைப் புலப்படக் காணலாம். வீரவான் விதி சறுக்குக் கட்டையிட என்றதன் மூலம் விளங்கிக் கொள்ள நிற்பது இதுவாகும். "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந் தான்முந்துறும்" என்ற திருக்குறள் பேசும் உண்மையதுவே. பெருவலியுடையது விதி. ஆதலின் அது வீரவான் எனப்பட்டது. விகிர்தன்:— விதவிதமான கிருத்தியங்களை யுடையவன் என்ற கருத்தில் இச்சொல் உயிரைக் குறிக்கும்.

சித்தாந்த விளக்கத்தின் பிரகாரம் அநாதியே உயிர் ஆணவமுந் தானுமாயிருந்தது. அந்த ஆணவமென்ற களங்கம் அதனுடைய அறிவிச்சை செயல்கள் விளங்காமற் பண்ணிக் கொண்டிருந்தது. அத்தகைய வேதனை நிலையிலிருந்து உயிரை மீட்பதற்கு இறைவன் கருணை முந்துகிறது. தன் கருணை மிகுதியால் இறைவன் அதற்குக் கலை முதலிய தத்துவங்களைக் கொடுத்து அந்த ஆணவக் களங்கம் சிறிது விலக உதவுகிறான். இந்த உதவிபெற்றதும் உயிர் தான்றோன்றியாக இயல முயல்கிறது. இந்தப் பொருள் விளக்கம் காரவாமாணவ.....கதிப்பு மிக என்ற பகுதியில் அமைந்துள்ளமைஅறிந்து நயக்கத்தக்கதாகும்.

உயிரின் அறிவிச்சை செயல்களை மூடி வைத்திருந்ததாதலின் ஆணவக்கறை யென்றும் அதன் மறைப்பு நீக்கத்துக்கு முதலுதவியாக இறைவன் மிகக் குறைந்தபட்ச அளவிற் செய்த உபகாரமாதலின் கறை சிறிது வெளிறிட என்றும் அது இறைவனது சுயமான கருணையினால் நிகழ்ந்ததென்பது புலப்படக் கருணைமிகு பரமன் என்றும் அவ்வளவில் உயிர்கொள்ளும் பரபரப்புநிலை தோன்றக் கதிப்புமிக என்றுங் கூறப்பட்டது.

தேர்த்திருவிழா நிகழ்ச்சியின் தத்துவார்த்தம் இன்னதென்பது "ஆன்மவிகிர்தன்.....விளையாட்டொடுங்க" என்றதனால் சூசிப்பிக்கப்பட்டுள்ளது. உயிர் இறைவன் தந்த கலையாதிகளினுதவியால் வினை காட்டுங் கதியிலே விரைவதன் மூலம் மேலும் மேலும் வினைகளையீட்டியீட்டி, ஆகற்பாலதாகிய வினைநீக்கத்திற்கு நேரெதிராக வினை ஆக்கத்தையே பெருக்கிக்கொண்டும், கிடைத்த கருணையை உகந்த முறையில் வளப்படுத்தி முத்திப் பேறடையும் நாட்டமின்றி அதற்குப் பாதகமான பந்தத்துக்கே மீளா ஆளாகும்வகையில் உழன்று கொண்டும் இருத்தல் தோன்ற

சிவசிந்தனை

(திரு. அ. செல்லத்துரை அவர்கள்–சிவதொண்டன் நிலையம்)

"உள்ளென்றும் புறம்பென்றும் ஒதமுடியாதவொன்று
கள்ளமாயிருந்து கொண்டென் கருத்தைக்
கவர்கின்றதே"

உன்னையும் உலகம் யாவையும் இயக்கும் சக்தி ஒன்றுளது அல்லவா? அதுவே ஆதி சக்தி, கடவுள், இறைவன் முதலாய பொதுப் பெயர்களாலும், சிவம், விஷ்ணு, முருகன், விநாயகர் முதலாய சிறப்புப் பெயர்களாலும் அழைக்கப்படும் மெய்ப் பொருள் ஆகும். இம்மெய்ப் பொருளைக் காண்பதே அறிவு எனப்படும் கண்களால் காண்பதல்ல கருத்தினில் காண்பதேயாம்.

நித்தியமானது எது அநித்தியமானது எது என்று இடைவிடாமல் ஆராய்ந்து என்றும் நித்தியப் பொருளில் நிலைத்திருத்தலே உண்மையறிவாகும். அவரவர் வயதுக்கும், அநுபவத்திற்கும் தக நித்தியம் என்றும் மாற்றமடைந்தேவரும். சிறுவர்களுக்கு இன்பமான விளையாட்டுக்களும், வாலிபர்களுக்கு வீரம் செறிந்த செயல்களும், வயோதிபர்களுக்கு ஆன்ம ஈடேற்றமும் நித்தியமாகத் தோன்றும், இன்ப துன்பங்களாகிய இரட்டைகளை விட்டுக் கடந்து இவற்றை அநுபவத்தறியும் அறிவே (ஆன்மா) நீ. உன்னை நீ அறிந்து விட்டால் போதும். அப்பால் நீயும் இறைவனும் பிரிவிலாப் பொருள்களாகிய ஒன்றே யாகிவிடுவீர்கள்.

இந்த உண்மையை உன்னுள்ளே உணர்வாயாக. அவர் தேவர், இவர் தேவர் என்று வீணே அலைவதால் ஆம்பயன் ஏதுமில்லை.

"உள்ளத்தினுள்ளே ஒளிரும் சிவக்கொழுந்தை
கள்ள மனத்தவரும் காண்பரோ பராபரமே.

சிவ சிவ சிவ சிவ சிவ

அதன்செயல் 'விந்தை விளையாட்டு' எனப்பட்டது. இறைவன் செய்த கருணையை ஆதரயப்படுத்தி அவன்வழியிற் செல்லும் முயற்சியில்லாமல் உயிர் தான்தோன்றித் தனமாய் நடத்தலைக் குறித்து, "தனித்துணை நீ நிற்கயான் தருக்கித் தலையால் நடந்த வினைத் துணையேன்" என மாணிக்கவாசகர் தருங் கருத்தும் இதனோடொட்டி உணரத்தக்கதாகும்.

இந்த விந்தை விளையாட்டு எப்போ ஒடுங்குமெனில் இறைவனருளால் இந்தக் கலையாதிகள் அறுதியாக ஒடுக்கப்படும் போதே ஒடுங்கும். அந்த அவசரம் சங்காரம் எனப்படும். தேர்த்திருவிழாவின், தத்துவம் இதுவாதலின், விளையாட்டொடுங்கத் தீர செவ்வேள் பெருந்தேருருளும்" எனப்பட்டது.

அந்தத் தேரோட்டம் ஒடுங்குதற்காக இந்தத் தேரோட்டம் என்றவகையில் தோன்றும் நயங் காண்க. காளியின் ஆட்டம் அடங்க நடராஜாவின் ஆட்டம் நிகழ்ந்தமை பிரசித்தம். அது போல்வது இது என அறிதல் சுவைதரும்.

குழந்தைநாயகன் தேரோடுதல் இடமாக, உயிரின் தேரோட்ட வர்ணனையும், நல்லை முருகன் தேரோட்டம் அதற்கு மாற்று நிகழ்ச்சியாய் அமையும் விசித்திரமுந் தோன்ற நிற்றல் இச்செய்யுட் சிறப்பு என்க.

[நாவலர் பெருமான் நூற்றுண்டு நினைவாகச் சமீபகாலத்தில் நம் நாட்டில் வெளியான ஒரு பிரபந்தம் நாவலர் பிள்ளைத் தமிழ். 101 பாடல்கள் கொண்டது இந்நூல். அதில், சிறு தேர்ப் பருவத்தில் ஒரு பாடல் இங்கே விமர்சிக்கப்பட்டுள்ளது.

– ஆசிரியர்]

ஆத்மஜோதி

('நஜன்' ஆசிரியர்–பிரதிபா பிரசுரம்–மயிலை–சென்னை)

நம் உடலில் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அது உள்ளவரை நாம் எல்லா காரியங்களையும் செய்கிறோம், அது அகன்றுல் சவமாகி விடுகிறோம். அந்த சக்தியே ஜீவன். அது உள்ள இடம் நம் இருதயக் கமலம். அது உள் நாக்கிலிருந்து 12 அங்குலம் கீழே இருக்கிறது. அந்த இருதயத் தாமரையில் சுத்த ஆகாசம் இருக்கிறது. அதில் ஜ்வாலை மயமான ஜோதி இருக்கிறது.

மிகமெல்லிய கம்பிபோல பிரகாசிக்கு மிடத்திலுள்ள சூக்ஷமமான பொறியே ஜீவன் என்று வேதம் கூறுகிறது. இதை உபநிஷத்துகளும் பிரும்ம சூத்திரமும் ஆதரிக்கின்றன.

இந்த ஜீவனை 'ஆத்மா' என்கிறோம் பரமாத்மா என்ற பெரிய ஜோதியிலிருந்து வெளிப்பட்ட ஒரு பொறியே இந்த ஜீவன். இது எப்போது வெளிப்பட்டது என்பதைக் கண்டறிய முடியாது. அதை அறிவதாலும் யாதொரு பயனும் இல்லை.

இந்த ஜீவன் ஒரு யஜமானன் போல் இருக்கிறது. அவனுக்கு இந்த உடல் ஒரு தேர். ஜீவன் கழுத்து புருவ இடை ஆகிய இடங்களில் சஞ்சரிக்கும். இதற்கு பிராணனும் மனதும் முக்ய தோழர்கள். மனம் இல்லாமல் உடம்பில் ஜீவன் இருக்க முடியும். ஆனால் பிராணன் இல்லாமல் ஒரு க்ஷணம் கூட ஜீவன் இவ்வுடலில் தங்காது.

தேரை இழுத்துச் செல்ல குதிரைகள் இருப்பது போல ஜீவனுக்குப் பத்து புலன்கள் உடலை நடத்திச் செல்கின்றன. இது உபநிஷத் கூறும் உண்மை.

உடலே ஆத்மா, மனமே ஆத்மா, பிராணனே ஆத்மா என்று கூறுபவர்கள் உண்டு. 'என் மனம் சரியாக இல்லை' என்கிறோம். இதிலிருந்து நாம் வேறு மனம் வேறு என்று தெரிகிறது. 'என் உயிர் துடிக்கிறது' என்றபோதும் நான் வேறு உயிர் வேறு என்று தெரிகிறது. ஆகவே பஞ்சபூத உடலுக்கும் புலன்களுக்கும் மனத்திற்கும் மேலாக ஒன்றிருக்கிறது. அதுவே இந்த ஜீவன்.

ஜீவராசிகளுக்கு மானிடப்பிறவி முக்தியில் ஆசை மகான்களிடம் தொடர்பு இம்மூன்றும் அடைதற்கரியவை. தெய்வத்தின் அருள்காரணமாகத்தான் இதை அடையலும். சாஸ்திரங்களை படித்தாலும், தேவதைகளை வழிபட்டாலும், பலவிதமான கருமங்களைச் செய்தாலும், ஆத்மாநாத்ம விவேகம் இல்லாமல் முக்தி கிட்டாது.

ஒருவன் கண்கள் இருந்தும் தன் முகத்தை தானே பார்த்துக் கொள்ள முடியாது. அதே மாதிரி அவனுடைய பின்புறத்தையும் பார்க்க முடியாது. ஒரு கண்ணடியிருந்தால் முகம் பார்க்கலாம். இரு கண்ணடிகள் இருந்தால் பின்புறத்தையும் பார்க்கலாம். இந்த இரண்டு கண்ணடிகளில் ஒன்று குருபக்தி. மற்றொன்று தெய்வபக்தி. ஆத்மாவை அறிய இவ்விரண்டும் மிக அவசியம்.

முக்திக்கு முதல் படி நிலையற்ற பொருள்களில் தீவிரமான வைராக்யம். விஷயங்களை விஷம் போல் ஒதுக்கி புறக்காரணங்களையும் அகக்காரணங்களையும் பொறுமையுடன் அடக்கவேண்டும். பிறகு ஆசை வாய்ப்பட்டுச்

செய்யும் கருமங்களை எல்லாம் துறக்க வேண்டும். அதன் பின் தக்க குருவினிடமிருந்து உபதேசம் பெற்று அதை சிந்தித்து இடைவிடாமல் தியானம் செய்து பழகி சமாதி நிலையை அடையவேண்டும். சுருங்கச் சொன்னால் ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் சேர்க்க வேண்டும்.

'நான்' என்ற உணர்வுக்கு ஆதாரமானதும் இயற்கையாக என்றும் உள்ளதுமான பிரும்மம் ஒன்று இருக்கிறது. இது தான் பரமாத்மா. ஜாதி, சேர்க்கை, குலம், கோத்திரம் இவைகளுக்கு அப்பாற்பட்டதும் பெயர் வடிவம், குணம், குற்றம் இவை அற்றதும் இடம், காலம், பொருள் இவற்றைக்கடந்ததும் ஆகிய பிரும்மம் எதுவோ அதுவே நான் என்று புத்தியில் ஒருவன் பாவிக்கவேண்டும்.

பிரும்மம் எது?

இக் கேள்விக்கு சாந்தோக்ய உபநிஷத் கூறும் பதில்:

ஸ்வரத்திற்கு	கதி எது?	— பிராணன்
பிராணனுக்கு	,, ,,	— அன்னம்
அன்னத்திற்கு	,, ,,	— ஜலம்
ஜலத்திற்கு	,, ,,	— சுவர்க்கலோகம்
சுவர்க்க லோகத்திற்கு		— பூலோகம்
பூலோகத்திற்கு	,,	— ஆகாசம்

ஆகாயத்திலேயே உண்டாகி ஆகாயத்திலேயே லயிப்பது – இதை பிரும்மம் என்று உபாசிப்பவன் பிரும்மமாகிறான்.

அஷ்டாவக்ர கீதை சொல்வதாவது: ''கடல் போன்ற என்னிடம் உலகம் என்ற கப்பல் மனம் என்னும் காற்றால் அங்குமிங்கும் அலைகிறது. அதனால் எனக்கொன்றுமில்லை. நான் ஒரு பெருங்கடல். அதில் அலை தோன்றினால் என்ன? அழிந்தால் என்ன? அதனால் எனக்கு குறைவு மில்லை. நிறைவு மில்லை. நான் என்னும் கடலில் உலகம் என்பது ஒரு கற்பனை. ஆத்மா என்பது பாவனை அல்ல. பாவனையில் ஆத்மா இல்லை.''

ஸ்ரீமத் பகவத் கீதையில் கிருஷ்ணபரமாத்மா கூறுகிறார்: ''பிரும்மம் என்பது அழிவற்றது. உயர்ந்தது. பிரும்மம் ஜீவனாக இருப்பது அத்யாத்மம். பிறந்து அழிகின்ற வஸ்துக்கள் அதிபூதம். சரீரத்தில் உள்ளவன் புருஷன். இந்த உடலில் நானே 'அதியக்ஞம்' எனப்படுபவன்.

ஆதிசங்கரர் தன் ''மகாவாக்ய சித்தாந்த ஸ்துதியில்'' என்னிடமிருந்தே எல்லாம் உண்டாயின. என்னிடமே எல்லாம் லயித்திருக்கின்றன. ஆதலால் அத்வயமான பிரும்மமே நான்'' என்கிறார்.

இந்த ஆத்மாவாகிய ஜீவாத்மா அது தோன்றிய பரமாத்மாவுடன் சேர துடிக்கிறது. இதைத்தான் ஆழ்வார்கள் திங்களை நாயகிகளாகப் பாவித்துக் கொண்டு அந்த பரமாத்மாவாகிய புருஷோத்தமனை காதலிப்பதாக பக்தி செலுத்தியிருக்கிறார்கள்.

ஐக்ய யோகம்.

இந்த ஜீவாத்மா பரமாத்மா ஐக்கியத்தை யோகம் என்கிறார்கள். இந்த ஐக்யம் ஏற்படுவதற்கு 6 தடைகள் உள்ளன.
1. காமம் (ஆசை) 2. குரோதம் (வெகுளி) 3. லேசம் (பற்று) 4. மதம் (செருக்கு) 5. மோகம் (மயக்கம்) 6. மாற்சரியம் (பொறுமை). இந்த ஆறையும் அடக்கி வெற்றி காண வேண்டும்.

இந்த யோகம் எட்டு அங்கங்களையுடையது. அவை 1. இயமம் 2. நியமம் 3. ஆசனம் 4. பிராணயாமம் 5. பிரத்தியாகாரம் 6. தாரணை 7. தியானம் 8. சமாதி. இவை யோகத்திற்கு சாதனங்கள்.

ஸம்ருதி பிரம்மாத் புத்தி நாசோ
புத்தி நாசாத் ப்ரணச்யதி.

என்கிறது கீதை.

விஷயங்களை நினைத்தால் போதும் அதில் பற்று உண்டாகும். பற்றினால் ஆசை, ஆசையால் கோபம், கோபத்தால் மோகம், மோகத்தால் நினைவின்மை, நினைவின்மையால் புத்தி அழிவு, இதனால் மனிதன் அழிகிறான்.

மாவைப் பள்ளு

மு. கந்தையா—ஏழாலை

நடேசர் துதி:

செஞ்ச டைப்பகி ரதிகலங்க
நைஞ்ச தன்புடை மதிதுலங்க
ஒப்புறவிணை முப்பிறையென
நிரையு மிலங்க
விரிநுதலில் திரிபுண்டர
கஞ்ச மென்கர தாளமிடும்
அஞ்ச மென்சிவ காமியம்மை
அண்ண லின்கடைக் கண்ணலசலின்
நாணித்தலை சாய்த்துமுகங்
கோணி யொதுங்க
நெஞ்ச திர்ந்திட மஞ்சதிர்ந்தென
டிண்டிடுடோம் டிடிடு டோமென
மர்த்தளத்திற்கை நர்த்தனமிட
பாணன் முழக்கநாரதன்
வீணை யிசைக்க
வஞ்ச முயலகன் எஞ்சுமுயிர்க்குக்
கெஞ்ச அமுக்கி அஞ்சுநமக்குக்
குஞ்சிதபத தஞ்சமருளி
ஆடுமையன் அடியிணையே
கூடிடுவோமே.

* * * *

மூத்தபள்ளி முறையீடு:

ஆண வக்கரும் ஆண்மாரிப் பள்ளியை
அண்டி மாமயல் மண்டிப்போய்ப்
பேணு மருளைப் புறக்கணித் தஉயிர்ப்
பேதைத் துக்குணிப் பள்ளனை
ஆணை யாந்தன் தொழுவினில் மாட்டி
அடக்கித் தண்பணிப் பூட்டிடும்
தாணு வாகிய சண்முகன் மாவையிற்
சார்ந்து வந்திடு தலைவகேள்!

* * * *

நாற்றுநட அழைத்தல்:

சூடுகொண்டை சுருட்கொண்டை
தூக்கணங் குருவி செய்த
கூடுபோலே கொண்டைபூண்ட
கோமளங்காள் வந்திடுவீர்
கொழுஞ் சேற்றில் நாற்றுநடக்
கோமளங்காள் வந்திடுவீர்.

* * *

படியரிசிக் கங்காந்து பலநோக்குச் சங்கத்துப்
படியேறும் பாவையர்காள் பரிசுகே டிதுகாண்மின்!
முடியுதறி நாற்றுநட முன்னேறி வந்திடுவீர்
முனைசெழிக்க நாற்றுநட முன்னேறி வந்திடுவீர்!

* * * *

கவிக்கூற்று:

வட்டிக்கு வட்டியதன் வட்டிக்கு மோர்குட்டி
இட்டுப் பெருக்கிமகிழ்ந் தேதிலார் கைப்பொருளைத்
தட்டிப் பறித்துண்ணுந் தந்திரத்தின் வாயில்மண்
அட்டுமிந்த வேளாண்மை அழகிதன்றே ஆடவர்க்கே.

* * * *

மாட்டுக் கணக்குக் கூறல்:

மாரு தப்புர வல்லி வருவித்த
வடக்க ளொன்று மிடுக்கு மிகுந்தது
ஒரொர் காலற்ற நாம்பன தாயினும்
ஒருவர் கைக்கு மகப்பட வாராது
கோயிற் கடவைக்குள் வீதிசுற்றிச் சுற்றிக்
கோடி சனத்துக்கு வேடிக்கை காட்டுது
நீரொர் பிடிகுசப் புல்லொடு போளுல்
மெல்ல அணையுமோ சொல்லவொண் ணுது

[குறிப்பு:- கால் அரவு (ா) நாம்பனுக்குக் காலற்றுல் நம்பன். குசப்புல்-தருப்பை]

[புராதனமான மாவிட்டபுரத் தலத்தின் மேலெழுந்த பிரபந்தங்களிலொன்று மாவைப்பள்ளு. சமீபகாலத்தது. அச்சேறு நூற்களிலொன்று. அதிலிருந்து ஐந்து பாடல்கள் இங்கே தரப்பட்டுள்ளன. —ஆசிரியர்.

கர்மா, உடல், காமம், லோபம் இவை எல்லாம் வண்டிச் சக்கரம் போல சுழன்று வருகிறது. இதை நிறுத்தினால் தான் சுக முண்டாகும். சகல காரியங்களையும் பகவதர்ப் பணம் செய்வதே இதற்கு வழி என்று நாரத புராணம் கூறுகிறது.

மனதை அடக்குபவன் இந்திரியங்களையும் தன் வசப்படுத்துவான். கண்ணால் ஒரு விஷயத்தைப் பார்த்தாலும் காதால் ஒரு விஷயத்தைக் கேட்டாலும் அதில் விருப்பு வெறுப்பு கொள்ளமாட்டான்.

ஜீவன் ஒரு பொறியாக பரமாத்மாவிடமிருந்து வெளிப்பட்டது என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டோம் இதைத் தான் 'த்ஸ்யமத்யே வஹ்ந சிகா எனியேளத்வா' என்று வேதவாக்யம் கூறுகிறது. அந்த பொறி ஜோதியாக வளர வேண்டும் அப்போது ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைவதில் தடையேதுமிருக்காது. எல்லா அன்பர்களிடமுள்ள ஆத்மா என்ற பொறி ஜோதியாக பிரகாசிக்கட்டும்!

மானிட வாழ்வு

–சுவாமி அபேதானந்தாஜீ அவர்கள்–

"ஐந்தூனும் நர ஜன்ம துர்லபம்"— "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது"- என்பவை மூத்தோர் முதுவாக்கு. ஆகவே மனிதஜன்மம் கிடைப்பது மிகவும்அரிது என்று சத்சாஸ்திரங்கள் நம்மைப் புரிய வைக்கின்றன. "புல்லாகி, பூண்டாகி புழுவாகி..." என்ற மாணிக்கவாசகப் பெருமானின் திருவாக்கிற்கிணங்க எத்தனையோ கோடி ஜன்மங்களுக்குப் பிறகுதான்-எண்ணிறந்த கோடி பிறவிகளுக்குப் பிறகுதான் நமக்கு இந்த புனித வாழ்வு கிடைத்திருக்கிறது. "எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான் யாதினும் அரிது அரிது காண்; இப் பிறவி தப்பினுல் எப் பிறவி வாய்க்குமோ: ஏது வருமோ அறிகிலேன்" என்ற தாயுமானஸ்வாமிகளுடைய வார்த்தைக்கிணங்க இந்த மனித வாழ்க்கையில் நாம் மனிதர்களாக வாழவில்லையென்றுல் எத்தனையோ கீழ்த்தரமான பிறவிகளும் எடுக்க வேண்டிவரும் என்பது புலனுகிறது.

இறைவனடி சேருவதுதான் மனித வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகும். எண்ணங்கள் தான் வாழ்வு. நல்லெண்ணங்கள் நல்வாழ்வையும் அதாவது இறைவனடி சேரும் பாக்கியத்தையும் அதற்கு விபரீதமான சுயநலமுடைய எண்ணங்கள்-அநித்திய உடம்பின்கண் பற்றுதல் வைத்தல் - துன்ப வாழ்வையும் அளிக்கும் என்பது பெரியவர்களுடைய முடிவு. இறைவனடி சேருவதற்கு நாம் பலவிதமான நற்சாதனைகள் புரிய வேண்டும். முக்கிய சாதனை நல்லார் இணக்கமும் நின்(இறைவன்) பூசை நேசமும் ஆகும். மனித வாழ்வில் நம்மை மூன்றுவிதமான தோஷங்கள் பற்றி இருக்கின்றன. அவை மலம், விக்ஷேபம், ஆவரணம் எனப்படும். பொதுவாக இவைகள் 'வாசனை' என்று சொல்லப்படுகின்றன. மனதில் பற்றியிருக்கும் விஷயங்கள்தாம் மலம் என்பதாகும். இந்த வாசனை ஜன்ம ஜன்மாந்திரங்களாக-யுக யுகாந்தரங்களாக - கல்பகல்பாந்தரங்களாக நம்மைச் சார்ந்து வருகின்றன. இரண்டாவது தோஷம் விக்ஷேபம். மனதிற்கு ஏற்படும் படபடப்பு–சபலம். இதுதான் விக்ஷேபம் எனப்படும். மனம் ஒரு விஷயத்தில் ஊன்றி நிற்க முடியாமல் அலைவதுதான் விக்ஷேபம். (சஞ்சலதா) இந்த விக்ஷேபத்தை இல்லாமல் செய்ய ஒரே ஒரு உபாயம்தான் உண்டு. அது 'அன்புநெறி' ஆகும். வடமொழியில் இந்த அன்புநெறி 'பகவத்பக்தி' என்றும், 'பிரேமமார்க்கம்' என்றும் சொல்லப்படுகிறது. மதுசூதன சரஸ்வதி என்ற மகான் இந்த அன்பு நெறியை பதினெருபடிகளாக அமைத்திருக்கிறார். அவை கீழ்வருமாறு:–

1. ப்ரதமம் மஹதாம் ஸேவா – Personal service of Mahapurushas 2. தத்தயா பாத்ரதா தத:– Acquiring of qualifications so as to draw their compassion 3. ச்ரத்தாத தேஷாம் தர்மேஷு– Faith in the Dharma practiced by them 4. ததோ ஹரி குண ச்ருதி:- Hearing the Divine glory with reverence 5. ததோரத்யங்குரோத்பத்தி: From hearing growth of the germ of Divine Love 6. ஸ்வரூபாதிகதிஸ்தத: Divine Love leading to Self-realization 7. பிரேம வ்ருத்தி பரானந்தே – Self realization Leading to increase of Love in the Supreme embodiment Bliss 8. தஸ்யாதஸ்புரணம்தத:– Through increase ofLove germination of Supreme Bliss. 9. பகவத் தர்ம நிஷ்டாத:– Firm adherence to Bhagavatha Dharma 10. ஸ்வஸ்தின்ஸ்தத்குணஸாலிதா - Development of the qualities of a Bhagavatha within the Devotee 11. பிரேம்ணேத பரமாகாஷ்டே (இதி உதிதா பக்தி பூமிகா:) Attainment of the highest stage of Love. இப்படி இந்த அன்பு நெறியைப் பின்பற்றுவதற்கு இந்த11 படிகளைக் கூறியுள்ளார் ஸ்வாமிகள்.

உலக வாழ்க்கையில் மனிதர்கள் பரஸ்பரம் அன்பு செலுத்துகிறார்கள், அந்த அன்பிற்கு ரூபகுணங்கள் மிகவும் முக்கியம் என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆகவே இறைவனிடத்தில் அன்பு ஏற்படுவதற்கும் இறைவனுடைய ஸ்வரூபம் குணம் முதலியவைகள் தெரிந்திருக்க வேண்டும் என்பது மிகவும் அவசியமாகும். இந்த ரூப குணங்களைத் தெரிந்து கொள்ளும் நெறி ''ஞானமார்க்கம்'' எனப்படும். கர்மம், ஞானம், பக்தி என்பவை இறைவனை அடைவதற்கு ஏற்பட்ட நெறிகள் தான்.

ஆயினும் இவை மூன்றும் பிரிக்க முடியாத மிகவும் நெருங்கின நெறிகளாக நமக்குப் புலப்படும். கர்மமும், ஞானமும் இல்லாமல் பக்தியோ; கர்மமும் பக்தியும் இல்லாமல் ஞானமோ; ஞானமும் பக்தியும் இல்லாமல் கர்மமோ இயங்க முடியாது. ஞானமும் கர்மமும் பக்தியில் லயமாகும் போது அது பராபக்தி எனப்படும். இந்த பராபக்தியை கீதை முதலிய சத்சாஸ்திரங்கள் 'சரணாகதி தத்துவம்' என்று பறைசாற்றுகின்றன. ஆக இறைவனை அடைவதற்கு கர்மமார்க்கம் உபாயமில்லை; இறைவனை அடைவதற்கு ஞான மார்க்கம் உபாயமில்லை. இறைவனை அடைவதற்கு பக்தி மார்க்கமும் உபாயமில்லை. இறைவனை அடைவதற்கு உபாயம் இறைவனே ஆகும் என்பது பகவத் கீதை முதலிய உயர்ந்த சாஸ்திரங்களின் முடிவு. ஆகையால் இறைவனடி சேருவதற்கு இறைவனை மனதார, வாயார வழுத்துதல் வேண்டும். 'நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே, ஞான நடத்தரசே' என்று கதற வேண்டும். ''ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவர் இல்லை பாரில் நின்பாத மூலம் பற்றிலேன் பரமமூர்த்தி காரொளி வண்ணனே கண்ணனே'' என்று கதற வேண்டும். இறைவன் அன்பே வடிவானவன். ஆகவே அன்புநெறி தான் இறைவனை அடைய ஒரே மார்க்கம். 'சோஹம்' முதலிய ஜபங்களின் வாயிலாக சாதனை செய்பவர்களைவிட 'தாசோஹம்' ஜப சாதனை செய்பவர்கள் மேலானவர்கள் என்பது எளியனை அடியேனின் கருத்து. 'நீ ஆண்டான்; நான் அடிமை' என்ற புனித உணர்ச்சியில் இருக்கும் இனிமை இறைவனுகிவிடுவதில் நிச்சயமாக இருக்கமுடியாது. நாம் இறைவனுக முயற்சி செய்யாமல் இறைவனுடைய அடிமைகளாக வாழ்வோம். இதுவே அமுத வாழ்வு. இந்த வாழ்விற்கு துணையாக செயல்புரியும் ஆத்மஜோதி பத்திரிகையையும் அதன் ஆசிரியரையும் அடியேன் மனமார வாழ்த்துகிறேன்.

(அபேதன்)

★

அஞ்ஞானம்

கருமத்தால் அஞ்ஞானத்தை அழிக்க முடியாது. ஏனெனில் அது அஞ்ஞானத்திற்கு விரோதி அன்று. எப்படி ஒளியால் மட்டும் இருளைப்போக்க இயலுமோ அப்படி ஞானம் ஒன்றினால்தான் அஞ்ஞானத்தை ஒழிக்க இயலும். ஆத்மா அளவிற்குட்பட்டதாயும் கட்டுப்பட்டதாயும் தோன்றுவதற்குக் காரணம் அஞ்ஞானம். அஞ்ஞானம் அழியும்பொழுது வேற்றுமையைக் கடந்த ஆத்மாவானது, மேகம் நீங்கியதும் சூரியன் பிரகாசிப்பது போல் தன்னுடைய ஸ்வரூபத்தைத் தானே விளக்கிக் காட்டும்.

—சங்கரர்

ஆசை

பகலும் இரவும் மாலையும் காலையும் பனிக்காலமும் இளவேனிற்காலமும் திரும்பித் திரும்பி வந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு காலம் விளையாடுகிறது. வயது கழிகிறது. என்றாலும் காற்றுப்போல் வியாபித்திருக்கும் ஆசை மட்டும் மனிதனை விடுவதில்லை.

—சங்கரர்

தொடர்புக்கு

ஈயாமனிதரை ஏன்படைத்தாய்?

புலவர் ஏ. மாணிக்கம்— ''முருக நிலையம்''—விசூர்—தமிழ்நாடு —

ஆசைவலைப் பாசத்து
அகப்பட்டு மாயாமல்
ஓசைமணி தீபத்தில்
ஒன்றிநிற்ப தெக்காலம்.

என்று ஏங்கினர் பத்திரகிரியார். ஆம். இவர் மட்டுமா ஏங்கினர்? இல்லை. இவரைப் போல இன்னும் எண்ணற்ற சான்றோர்கள் இப்படி ஏங்கினர்கள். 'பேராசை எனும் பிணியிற் பிணிபட்டு ஓராவினையேன் உழலத் தகுமோ' என்றார் அருணகிரியார். 'ஆசைச் சுழற் கடலில் ஆழாமல் ஐயாநின் நேசப் டூணைத்தாள் நிறுத்தினுல் ஆகாதோ' என்றார் தாயுமானர். 'அவல வயிற்றை வளர்ப்பதற் கே அல்லும் பகலும் அதில் நினைவாய்க் கவலைப்படுவதன்றி சிவ கனியைச் சேரக் கருதுகிலேன்' என்றார் வள்ளலார்.

ஆம். அருள்சான்ற நெஞ்சினராய் வாழ்ந்த இவர்களெல்லாம் உண்மையிலேயே ஆசைவலைப் பாசத்தில் அகப்பட்டு வாடினர் களா? பேராசையெனும் பிணியிற் பிணி பட்டு பேதலித்தார்களா? ஆசைச் சுழற் கடலில் ஆழ்ந்து அல்லலுற்றார்களா? அவல வயிற்றை வளர்ப்பதற்கே அல்லும் பகலும் கவலையுற்றார்களா? இல்லையே.

அருட்பெருஞ்ஜோதியாக விளங்கும் எல் லாம் வல்ல இறைவன்பால், ஆத்மஜோதி யின்பால் தன்னையே அர்ப்பணித்துக் கொண் டவர்கள்தானே இவர்கள். பின் ஏன் இப்படி யெல்லாம் அவர்கள் ஏங்கினர்கள்? ஏங்கிய தோடு மட்டுமல்லாமல் அழுது காமுற்று அரற்றி நின்றார்களே. ஏன்?

எண்ணுத எண்ணமெல்லாம்
எண்ணி யெண்ணி ஏழை நெஞ்சம்
புண்ணுகச் செய்ததினிப்
போதும் பராபரமே.

என்றார்களே ஏன்? மெய் வாழ்வை நம்பி விரும்பி மிக வாழாமல் பொய் வாழ்வை நம்பிப் புலம்புகின்ற நம்மைப் பார்த்து அவர் களும் புலம்பினர்கள். மண் பெண் பொன் ஆசை மயக்கத்திலே விழுந்து கண்கெட்ட மாடது போல் கலங்கும் நம்மைப் பார்த்து அவர்களும் கலங்கினர்கள்.

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக்
கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்
பல்பச்சிலையால்
எண்ணுண்டு சாத்த எதிர்நிற்க ஈசன்
இருக்கையிலே
மண்ணுண்டு போகுதையோ! கெடுவீர்
இந்த மானுடமே.

என நமக்காக ஏங்கினர்கள். எச்சரித் தார்கள். ஏதும் பலன் இல்லை. இதனுல் நமக்கென்ன, எக்கேடு கெட்டாவது போகட் டும் என ஒதுங்கிவிட்டார்களா? அதுதான் இல்லை. செவிடன்போல் நாமிருந்தும் சங்கை ஓயாமல் ஊதினர்கள். அரிய பிறவி எடுத்த மக்கள் வறிதே வாழ்நாளைக் கழிக்கின்றனரே என வருந்தினர்கள். இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ? ஏது வருமோ? அறி கிலேன் என அஞ்சினர்கள்.

பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய் கண்டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க—தெரியிழாய்
வண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

என்ற ஔவையின் கூற்றுப்படி நமக்காக வருந்தி அழுவது பெரியோர்களின் இயல்பு தானே. ஆம். அன்னரெல்லாம் நம்மைப் பார்த்து அழும் அளவுக்கு நாம் என்ன தவறு செய்தோம். சற்றே சிந்தித்தோமா? இல்லை யே. சிந்திப்பதற்கு ஏது நேரம்? அப்படியே நாம் செய்வது தவருக இருந்தாலும் அதனைத் தவறு என்று நாம் ஒத்துக்கொள்வோமா?

நீ யார்?
நான் யார்?
எங்கிருந்து வந்தோம்?
என் தாய் யார்?
தந்தை யார்?

இப்படித் தன்னுடைய பிறவித் தளைகளை
நன்முய் விசாரித்து பார்த்து இவை எல்லாம்
கனவுக் கொப்பானவை என்று கண்டுகொள்.

— நம்பிக்கை நாணயத்துடன் அடைவு பிடிப்பவர்கள் —

"Thiru Corporation"

No. 20 A, Main Street — KARAITIVU. E. P.

எந்த ஆனந்தத்தின் ஒரு துளியினுல் மட்டுமே இவ்
வுலகு யாவும் ஆனந்தமயமாகின்றதோ, எது பிர
காசிப்பதனுல் யாவும் பிரகாசம் அடைகின்றனவோ,
எதன் திருஷ்டியினுல் மற்ற யாவும் காணப்படுகின்ற
தோ அதுவே, அந்த நித்திய பிரம்மனே யான்.

—0—
0
0

நகை அடைவு வைக்க எல்லோரும் விரும்புமிடம்

Shanthi Pawn Brokers

10, MAIN STREET KARAITIVU. E.P.

ELECT - TONE

81, Batticoloa Road — KALMUNAI (E.P.)

இலங்கையில் சிறந்து விளங்கும் ஒலிச் சேவையை அளிப்பது

எலக்ற் — ரோன்

- சினிமாப் பாடல்கள்
- ஹிந்திப் பாடல்கள்
- பொப் பாடல்கள்
- சிங்களப் பாடல்கள்
- ஆங்கிலப் பாடல்கள்
- ஆங்கில இசைகள்

ஆகியவற்றின் புத்தம் புது இசைத் தட்டுக்களுடன் நவீன இசைக் கருவிகளுடன்
ஒலிச் சேவையை அளிப்பதற்கு

— கல்முனையில் சிறந்த ஒரே ஸ்தாபனம் —

எலக்ற் ரோன்

81. மட்டுநகர் வீதி — கல்முனை (E.P.)

நன்மை என்றும்—தீமை என்றும்
தனித்தனிப் பொருட்கள் இல்லை
இவைகளை ஆக்குவது
நமது மனமே

வாழ்க ஆத்மஜோதி

CICILIYA STORES
15, MAIN STREET
KALMUNAI

தற்கால நவநாகரீகத்திற்கேற்ற
டிசைன்களில், உங்கள்
நம்பிக்கைக்கு பாத்திரமான
நகை வியாபாரிகள்

VEERAPPA CHETTIAR
145, MAIN STREET,
KALMUNAI T'Phone: 267

உங்களுக்குத் தேவையான உத்தரவாதமுள்ள
தங்க நகைகளுக்கு நம்பிக்கையான இடம்



SORNAM JEWELLERY

No. 214, Main Street — KALMUNAI.

அழகிய கண்கவர் வேலைப்பாடமைந்த
தங்க நகைகள் வாங்குவதற்குச் சிறந்த இடம்



CEYLON HOUSE

Main Street — KALMUNAI.



Branch:

CEYLON JEWELLERS

65, Main Street—KALMUNAI.

உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான
நகை வியாபாரிகள்





ரோகிணி நகைமாளிகை

பிரதான வீதி — கல்முனை.

அன்பு அளவற்ற ஆற்றல் படைத்தது.
அதை எதனிடம் உய்க்கிறேமோ அதுவே ஆகிறேம்.
அன்பைக் கடவுளிடம் உய்ப்பதே உய்வு.



T. S. N. SP. அருணாசலம் செட்டியார்

உரிமையாளர்: ஸ்ரீ முருகன் அன் கோ,
கல்முனை.

உங்களுக்குத் தேவையான
உத்தரவாதமுள்ள
தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்



ஸ்ரீ ரத்னமஹால் நகை மாளிகை
55. பிரதான வீதி,
கல்முனை.

அழகிய வேலைப்பாடுகளுடன்
கூடிய நகைகளுக்கு
அனைவரும் விரும்பிச்
செல்லும் இடம்



Nava Lalitha Jewellery
58. Main Street,
KALMUNAI.

தற்கால நவநாகரீகத்திற்கேற்ற
டிசைன்களில்
தங்க வைர நகைகளைச்
செய்து தருபவர்கள்



ஜெயலெட்சுமி நகைமாளிகை
அன் கோ.
56. பிரதான வீதி,
கல்முனை.

சத்தியம் என்னும் திருக்கோயிலே
அடைய விரும்புவோன்
அஹிம்சை என்னும் நெறியில்
இயங்கவேண்டும்.

சகலவிதமான பலசெலவு சாமான்களும்
தரமாகவும், நியாய விலைக்கும் பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்



கொத்மலை ஸ்டோர்ஸ்
நகை அடவு பிடிப்பாளர்.
(உரிமையாளர்: மு. உண்ணமலை)
நிர். 21. கொத்மலை வீதி – நாவலப்பிட்டி.

கோல்ட் ஹவுஸ் உங்களை அழைக்கின்றது.

● கட்டித் தங்கம் ● கைதேர்ந்த வேலை
கண்கவர் அழகிய தங்க நகைகள் பிடவை வகைகள்

வாங்குவதற்கு சிறந்த இடம்

GOLD HOUSE
Dealers in: Textiles & Jewellers.
7I, Main Street — KALMUNAI.

கமால் தங்க நகைமாளிகை

உத்தரவாதமுள்ள
தங்க வைர நகைகள்
பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

Kamal Jewellery House
58, Main Street — KALMUNAI.

அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகம் இல்லை;
பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை.

ஆத்மஜோதி 30வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல்லாசிகள்!

மாலா அடைவு ஸ்தாபனம்
416, பிரதான வீதி—பாண்டிருப்பு - கல்முனை.

★

MALA PAWN BROKERS
416, MAIN STREET—PANDIRUPPU – KALMUNAI.

இதோ உங்களின் தேவைக்கேற்ப,

- ரேடியோ வகைகள்
- டேப் ரெக்கோடர்கள்
- ரேடியோ உதிரிப்பாகங்கள்
- குக்கர்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- வெளிநாட்டு வாசனைத் திரவியங்கள்
- கைக்கடிகாரங்கள்
- வெளிநாட்டு விளையாட்டுப் பொருட்கள்
- ஆங்கில மருந்து வகைகள்

மற்றும் பல விதமான
சிறந்த பொருட்களை நம்பிக்கையுடன்
பெற்றுக் கொள்ள
— சிறந்த ஸ்தாபனம் —

அஜந்தா ரேடர்ஸ்
23, திருமலை வீதி,
மட்டக்களப்பு — தொலைபேசி: 491.

உங்களுக்குத் தேவையான

- பாடசாலைப் புத்தகங்கள்
- நாவல்கள்
- திருமண பரிசு நூல்கள்
- மாத, வாராந்த பத்திரிகைகள்
- விசேஷ தின வாழ்த்து அட்டைகள்
- கலண்டர், டயறி வகை
- பாடசாலை உபகரணங்கள்
- மற்றும் எவர் சில்வர் பொருட்களும்

— எம்மிடம் கிடைக்கும் —

சக்தி நூல் நிலையம்
53, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

RAJESWARY STORES

No. 11, Trincomalee Road - BATTICALOA. Telephone: 335

Agents for:

THE MAHARAJA ORGANISATION (Distributors) Ltd.,
SHAW WALLACE & HEDGES Ltd.,
UNION CARBIDE (Ceylon Ltd.)

Prop: K. K. SHANMUGAM

ராஜேஸ்வரி ஸ்டோர்ஸ்

இல. 11, திருக்கோணமலை வீதி — மட்டக்களப்பு.

வாழ்க்கையின் தன்மையைக் காலத்தைக் கொண்டு அளவிடமுடியாது
மனிதனின் நாணயத்தைக் கொண்டுதான் அதனை அளவிட முடியும்.



ஆத்மஜோதி 30வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல்லாசிகள்



யாழ்ப்பாணம் திறம் சுருட்டு, புகையிலை மற்றும் சாய்ப்புச் சாமான்களுக்கும்
சிறந்த இடம்



பரமேஸ்வரி ஸ்டோர்ஸ்

மட்டக்களப்பு

தொலைபேசி: 383

கடன் வாங்காதே; கடனும் கொடுக்காதே
கொடுத்தால் கொடுத்ததுதான், திரும்பி வரும் என்று நினைத்துக் கொடுக்காதே.
காலத்தைக் கணித்து கருத்தை உயர்த்து.



சிவ நடராசா ஸ்டோர்ஸ்

22, பஜார் வீதி — மட்டக்களப்பு.

With the Best Compliments of:

A. S. M. Jeganathan & Co.,

159, Ehamparam Road,
TRINCOMALEE.

Tele: 362

KALPANA'S

87, MAIN STREET — HATTON.

வயல் காய்ந்த பிறகு மழை பெய்து என்ன பயன்?
ஒருவருக்குக் கொடுக்க வேண்டிய சமயத்தில் கொடுத்தால்
பயனுண்டு. அல்லாத சமயத்தில் அதற்கு விலை இல்லை.

சகலவிதமான ஜவுளி வகைகளுக்கும்
ரெடிமேட் ஆடைகளுக்கும் எல்லோரும் விரும்பும் இடம்

கல்பனாஸ்

87, பிரதான வீதி — அட்டன்.

அதுதான் நம்மிடம் இல்லையே. நான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று தானே வாதாடுகின்றோம். நாம் பிறர்க்குக் கொன்றன்ன இன்னா செய்தாலும் நன்றென்று தானே நாவன்மையுடன் நவில்கின்றோம்.

ஐயகோ மானிடமே! இந்த நிலையில் ஆறறிவு பெற்றவர் நாம் என்று பாரறிய வேறு பறைசாற்றித் திரிகின்றோம். நம்முடைய அறியாமையை என்னென்பது? வெட்கக்கேடு. ஐயறி வினங்களாகிய மாக்களிடம் இருக்கும் பண்புகள்கூட மக்களாகிய நம்மிடம் இல்லையே. நம்மிடம் நல்ல பண்புகள் இருந்திருந்தால் ஈக்குவிடம் தலையில் என்றும், தேளுக்கு விடம் கொடுக்கில் என்றும், பாம்புக்கு விடம் பல்லில் என்றும் ஒவ்வோர் இடத்தை மட்டுமே அறுதியிட்டுக் கூறி தீயபண்பினருக்கு மட்டும் அங்கம் முழுவதும் விடம் என்று கூறி இருப்பார்களா? மேலும்,

கொம்புள்ள ஆடு மாடுகளைக் கண்டால் ஐந்து முழம் விலகிப்போ என்றும், குதிரையைக் கண்டால் பத்து முழம் விலகிப் போ என்றும், ஆனையைக் கண்டால் ஆயிரம் முழம் விலகிப்போ என்றும் கூறி தீங்கினரைக் கண்டால் மட்டும் அவர்கள் கண்ணில் படாமல் நீங்கிப் போவதே நல்ல நெறி என்று கூறியிருப்பார்களா?

ஐயகோ! விலங்கினும் கொடியரா நாம். நம்மில் நல்லாரில்லையா? இருக்கிறார்கள். தீங்கினரும் நம்மவர்தானே. 'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' என்ற மாந்தரினும் மந்தரா? என்னே இவர்தம் மதியீனம். எப்பிறப்பாயினும் ஏமாப்பு ஒருவர்க்கு மக்கட் பிறப்பிற் பிறிதில்லை என்னும் நம்மனித இனத்தை ஈடேற்றத் தோன்றிய அறநூல்கள் ஒன்றா? இரண்டா? ஐயகோ! விலங்கினங்களுக்கு இது போன்ற நீதி நூல்கள் உண்டா? இல்லையே!

நீதி நூல்கள் இல்லையானாலும் அவைகள் நீதியோடு வாழ்கின்றனவே. பின் மனிதன் மட்டும் ஏன் இழிந்து போகிறான். எண்ணற்ற நீதி நூல்கள் இருந்தும் இவன் மட்டும் ஏன் திருந்தித் தொலைக்க வில்லை. 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்த வற்றுள் எல்லாம் தலை' யென்று கூறியும் பகுத்துண்டு வாழும் பண்பைப் பெற்றோமா? காகம் உறவு கலந்துண்ணக் கண்டும் ஆசை வேகம் அடங்கப் பெற்றோமா?

தலையே நீ வணங்காய் என்றார்களே, வணங்கினோமா? எங்கே இருக்கிறான் இறைவன் என்று தானே எக்காளமிடுகின்றோம். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று தானே கும்மாளம் போடுகின்றோம். 'அவன் அன்றி ஓரணுவும் அசையாது' என்பதை விட்டு எல்லாமே நம்மால் தான் என்றல்லவா இறுமாப்பு அடைகின்றோம். மேலும், நாம்உண்பதுநாழி; உடுப்பதுநான்கு முழம் அப்படியிருக்க எண்பது கோடி நினைந்து என்ன செய்யப்போகின்றோம். இதனை எண்ணிப்பார்த்து நம்மனதைக் கட்டுப் படுத்தினோமா? இல்லையே!

ஆசைக் கோரளவில்லை அகிலமெல்லாம் கட்டி
ஆளினும் கடல் மீதிலே
ஆணைசெலவே நினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினும் காயகற்பந்தேடி
நெஞ்சுபுண் ணவரெல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதுநா ஞனெனக் குளறியே
ஒன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே.

என்றார் தாயுமானவர். உண்மை தானே. நம்மால் அடுத்த வேளை உயிருடன் இருப்போமா என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆனால் அன்றுடம் நம்முடைய கையளவாம் இதயத்தைக் கவர்ந்தெழும் எண்ணஅலைகளோ கோடானு கோடி. இதனை, 'ஒரு பொழுதும் வாழ்வதறியார் கருதுப கோடியும் அல்ல பல' என்று நயமாகச் சாடுகிறார் வள்ளுவர். மேலும்,

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்கு
ஆவிதான் போனபின்பு யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்.

என்று ஔவையும் இடித்துரைக்கின்றார். 'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு' என்று வள்ளுவரும் வாஞ்சையுடன் கூறுகின்றார்.

ஒன்று நமக்குச் சுயபுத்தி வேண்டும். இல்லை சொல்புத்தியாவது வேண்டும். இந்த இரண்டுமே இல்லையென்றால் நாம் என்ன செய்வது? 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற சீரிய தொடரை மறந்து இடரை ஏற்று இழிகின்றோம். தேவைக்கு மேல் சேர்த்துத் திருடனாய் மாறிச் சிதைகின்றோம்.

ஈட்டிய ஒண்பொருளும் இல்லொழியும் சுற்றத்தார்
காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர்—மூட்டும்
எரியின் உடம்பொழியும் ஈர்ங்குன்ற நாட
தெரியின் அறமே துணை.

என்றார்கள், இப்படி நீதியைப் புகட்ட எழுந்த வெண்பாக்கள் எத்தனை! எத்தனை! அப்பப்பா! அவைகளால் இதுவரையில் நாம் அடைந்த நன்மைகள்தான் எத்தனை! எத்தனை! ஐயகோ! தேவைக்குமேல் சேர்ப்பது தீதென்று அறிந்தும் சேர்க்காமல் இருக்கின்றோமா? இல்லை சேர்க்கின்ற சொத்துக்களைத்தான் அறநெறியில் செலவழிக்கின்றோமா? 'கோயில் சொத்து குலநாசம்' என்பார்கள். அதனைக் கண்கூடாகக் காண்கின்ற போதும் கோயில்களில்கொள்ளையிடுவதை மறந்தோமா? ஐயகோ மானிடமே!

இதோ ஒரு பட்டியலே நீளுகின்றது. பாருங்கள். நல்லோர் மனத்தை நடுங்கச் செய்கின்றோம். நட்டாற்றில் கையை நழுவ விடுகின்றோம். தானம் கொடுப்போரைத் தடுத்து நிற்கின்றோம். தருமம் பாராது தண்டம் செய்கின்றோம். ஏழைகள் வயிறு எரியச் செய்கின்றோம். இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்கின்றோம். உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரம் செய்கின்றோம். ஊன் சுவை உண்டு உடலை வளர்க்கின்றோம். பொருளை இச்சித்துப்பொய் சொல்கின்றோம். பொது மண்டபத்தை போய் இடிக்கின்றோம். ஆசைகாட்டி மோசம் செய்கின்றோம். அன்புடையவர்க்குத் துன்பம் செய்கின்றோம். பசித்தோர் முகத்தைப் பாராதிருக்கின்றோம். கோள் சொல்லிக் குடும்பம் கலைக்கின்றோம். கலங்கி ஒளித்தோரைக் காட்டிக் கொடுக்கின்றோம்.

கல்லும் நெல்லுமீ கலந்து விற்கின்றோம். தவம் செய்வோரைத் தாழ்வு செய்கின்றோம். ஆலயக் கதவை அடைத்து வைக்கின்றோம். சிவனடியாரைச் சீறிவைகின்றோம். தந்தை தாய் மொழியைத் தள்ளி நடக்கின்றோம். தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைகின்றோம். ஐயகோ! இவை மட்டுந்தானு? இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம். இருந்தாலும் இத்தகையவைகளை இனியேனும் கைவிட்டு, ஒல்லும் வகையான் அறவினைகளைச் செல்லும் வாய் எல்லாம் செய்து நிற்றல் சீரிய நலம் பயக்கும். மேலும் நம்மிடம் உள்ளது பலருக்கும் பயன்படும் வண்ணம் வாழ வேண்டும்.

எட்டிமரமாய் இருத்தல் கெட்டிக்காரத் தனமன்று. இது ஒருவகையில் வடிகட்டிய முட்டாள் தனமும் ஆகும். இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் தாமே தனித்துண்ண விரும்பாத பண்டைத் தமிழரின் பண்பாட்டைப் போற்றி வளர்த்தல் வேண்டும். ஆம். இத்தகைய பண்பாட்டில் நில்லாதவர்கள் இருப்பதைவிட இறப்பதே நல்லது எனச்சாடுகின்றார் பட்டினத்தார்.

ஓயாமற் பொய் சொல்வர் நல்லோரை நிந்திப்பர்
உற்றுப் பெற்ற
தாயாரை வைவர் சதியாயிரம் செய்வர்
சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்கு உபகாரம் செய்யார் தமை
அண்டினர்க் கொன்று
ஈயார் இருந்தென்ன போயென்ன காண்
இறைவா கச்சி யேகம்பனே,

எனச் சற்றுக் கடிந்தே கூறும் அடிகளார் இன்னும் ஒருபடி மேலே சென்று இறைவா! இவர்களை எல்லாம் ஏன் படைத்தாய்? என்று அவனிடமே கேள்விக்கணை தொடுக்கின்றார்.

நாயாய்ப் பிறந்திடின் நல்வேட்டை யாடி
நயம்புரியும்
தாயார் வயிற்றில் நரராய்ப் பிறந்து பின்
சம்பன்னராய்க்
காயாமரமும் வறளாங் குளமும் கல்
லாவுமன்ன
ஈயாமனிதரை ஏன் படைத்தாய் இறைவா
கச்சி யேகம்பனே.

எனும் அடிகளாரின் சிற்றத்துக்கு இனியேனும் ஆளாகாமல், ஆத்மஜோதி நிலையத்தின் முப்பதாண்டு நிறைவு மலர் வெளிவரும் இந்நாள் தொட்டேனும் நல்லவற்றைத் தொட்டு நலம்பல பெற்று உய்வோமாக.

சரணம் சரணம் முருகா.

பக்தி

ஏ. கோபாலய்யர் அவர்கள்
ஆசிரியர்:
"காமகோடி"
கும்பகோணம்.

'பக்தி, பண்ணிக்கொண்டிருந்தால் முக்தி பெறலாம்' என்று ஓர் வாக்கியம் இருக்கிறது. மனிதப் பிறவியில் ஒவ்வொரு ஆன்மாவிற்கும் பக்தி முக்கியமானது. பகவானுடைய அருளைப் பெறுவதற்கு இதுவே சுலபமான மார்க்கம். பக்தியில்லாதவன் பதருக்கு ஒப்பாவான்.

உதாரணமாக ஒரு வீடு இருக்கின்றது, அதில் சகல சௌகர்யங்களும் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தீபம் மட்டும் இல்லை. அந்த வீட்டிற்கு சோபை ஏற்படுமா? ஏற்படாது. பதர் இருக்கின்றது. வெளிப் பார்வைக்கு அழகாகவிருக்கின்றது. அதனுள் சத்து இல்லாததால் பிரயோசனமற்றதாகின்றது. ஓர் மனிதன் எவ்வளவு சௌக்கியங்களை அனுபவித்த போதினும், பக்தியற்றவனாக இருந்தால் தீபம் இல்லாத வீட்டிற்கும், பதருக்கும் சமானமாவான். தீபம் எவ்விதம் வீட்டை அலங்கரிக்கின்றதோ, நெல்லிற்குள் அரிசி இருந்தால் எவ்விதம் உபயோகப்படுகின்றதோ அவைபோல பக்தியுடன் கூடிய சகல சம்பத்துகளுடன் உள்ளவன் பிரகாசிக்கிறான்.

பக்தி என்பதன் பொருள் பிரேமை அதாவது அன்பு. பணம், சம்சாரம், குழந்தைகள் முதலானவைகளில் நாம் மிகுதியான ஆசை வைக்கின்றோம். உலக நடவடிக்கையில் நமக்கு எதனிடத்தில் பிரேமை அதிகமாகவிருக்கின்றதோ, அதன் பொருட்டு நாம்–அபிமானித்து வரும் பொருள்கள் முழுமையையும் அர்ப்பணம் செய்கின்றோம். ஒருவனுக்கு பணத்தில் அதிகப் பிரேமை இருப்பதாக வைத்துக்கொள்வோம். அது சம்பந்தமாக ஒருவேளை புத்திர களத்திராதிகளை இழக்க நேரிட்டாலும் இழக்கத் துணிகின்றான். பணத்திலுள்ள பக்தி அவ்விதம் செய்யத் தூண்டுகின்றது. அதுபோல் பகவானிடத்தில் நம் முழுப் பிரேமையையும் அர்ப்பணம் செய்ய வேணும்.

நமக்கோ இந்த உடம்பு அனுதிகாலமாக வந்துகொண்டிருக்கிறது. உடம்பே ஓர் உடம்பு. அதாவது ஓர் வியாதி போன்றது. அந்த உடம்பை அகற்றிக் கொள்ள வேண்டியதுதான் நாம் எடுத்திருக்கும் இந்த ஜன்மாவின் காரியமாகும். உடம்புடன் இருப்பது 'நாம்' 'நாம்' என்கிற வஸ்து. அதுதான் ஜீவாத்மா, அதுதான் பரமாத்மாவின் அணு. அது ஹிருதய குகையில் பிரகாசிக்கிறது.

மனித ஜன்மா கிடைப்பது துர்லபம். அதில் நாம் செய்யும் கர்மாக்களுக்குத் தகுந்தபடி புண்ணிய பாபங்கள் ஏற்படுகின்றன. இந்த சரீரம் எப்படி ஏற்பட்டது. அதை எப்படி அகற்றிக்கொள்வது என்பவைகளை சிந்தனை செய்வதற்கும் ஸபலமாக்கிக் கொள்வதற்கும் இந்த மனுஷ்ய ஜன்மாவில் தான் வசதி.

நாம் இந்த ஜன்மாவில் எவ்வளவோ வஸ்துக்களிடம் பிரேமை வைக்கின்றோம். பிரேமை ஒழுங்கானால் புண்ணியம் லயிக்கின்றது. ஒழுங்கு தப்பானால் பாபம் சம்பவிக்கின்றது. செய்யும் கர்மங்களை புண்ணிய பாப பலன்களுக்கு உட்படாதபடி ஈஸ்வரப் பிரீதியாகச் செய்யவேண்டும். புண்ணியம், பாபம் ஏற்படக்கூடிய நிலைமைக்கு நாம் ஸங்கல்பித்து கர்மாக்களை நடத்தினால், அதன் படிக்குச் சரீரங்கள் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். எனவே நம்முடைய சரீரம் எடுக்கும் சம்பந்தமான வராண்டு இருந்துகொண்டேயிருக்கும்.

இதைப் போக்கிக்கொள்ள, கடவுளிடம் பிரேமை காட்டும்படி நம் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம் முடைய வீடு, சொத்துக்கள் யாவும் கடவுளுடையது என்கிற எண்ணம் ஏற்பட வேணும். அந்த எண்ணம் ஏற, ஏற நம் முடைய சொத்துக்களில் உள்ள பந்தங்கள் வர வர அறுபடும். ஹிருதய குகையில் கெட்ட எண்ணங்கள் நெருங்கி அழுக்கடையாதபடி எப்பொழுதும் கவனித்துக்கொண்டு அதில் விளங்கும் ஈஸ்வர ரூபத்தை மனம் சலிக்காதபடி தியானம் செய்துவர வேண்டும். அவரவருக்கு சௌகர்யமாகத் தோன்றுகிற மூர்த்தியின் முழு ரூபத்தையோ, அல்லது அந்த மூர்த்தியின் திருவடிகளையோ தியானத்திற்கு வைத்துக் கொள்ளலாம். ஆரம்பத்தில் இது சிரமந்தான். கொஞ்சம் கொஞ்சமாக அப்யாஸம் செய்து வந்தால் பக்தியில் சித்தி பெறுவது நிச்சயம். இதனால் சம்சார வாழ்க்கையை அறவே ஒழித்துவிட வேண்டுமென்பதில்லை. கிருஹ வேலைகளில் செலவாகும் நேரத்தை நாளடைவில் குறைத்துக்கொண்டே வந்து பகவத் தியான நேரத்தை அதிகப்படுத்திக் கொண்டே வரவேண்டும்.

கடவுளிடம் வைக்கும் பக்தி எந்த சமயத்திலும் எந்த அவஸ்தையிலும்மாறாது இருந்துவர அப்யசிக்க வேண்டும். அப்பய்ய தீக்ஷிதர் என்னும் மஹான் தமக்கு உன்மத்த அவஸ்தையிலும் பகவானிடம் பக்திமாறாமலிருக்குமா என்பதைச் சோதித்துக்கொள்ளும் பொருட்டு ஊமத்தங்காயை உண்டு உன்மத்தனுக்கிக் கொண்டாராம். அந்த நிலையில் 'ஆத்மார்ப்பண ஸ்துதி' என்ற ஓர் உயர்ந்த கிரந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார். உன்மத்த அவஸ்தையினின்றும் தெளிவுற்ற பிறகு, தம்முடைய ஈஸ்வர பக்தி மாறுதலை அறிந்து சந்தோஷப் பட்டுக்கொண்டாராம். அதுபோல் எந்த நேரத்திலும், எந்த அவஸ்தையிலும் நமக்கு பகவானுடைய ஞாபகம் இருந்து வருவதை அப்பியாசித்துக்கொண்டே வந்தால், இந்த ஜன்மத்திலேயே முழுப் பலன் ஏற்படா விட்டாலும், அடுத்தடுத்து ஏற்படும் உத்தம ஜன்மாக்கள் ஏதேனும் ஒன்றில் பலன் ஏற்படுவது நிச்சயம். ஆகவே எவன் ஒருவன் தன் சகல ஐஸ்வர்யங்களையும் ஈஸ்வரார்ப்பணஞ் செய்து ஹிருதய கமல வாசியான ஈஸ்வரனே அனவரதமும் தியானித்துக் கொண்டிருக்கிறானோ அவன் உடம்பற்றவனாகி தானே அந்த ஈஸ்வரனாகி விடுகின்றான். அதுதான் மோக்ஷ நிலை.

இப்பொழுதோ பக்தி மார்க்கத்தில் பிரவர்த்தி குறைவு. விவகாரங்கள் அதிகம். கோர்ட்டுகள் விருத்தியாகின்றன.

பக்தி பண்ணிக்கொண்டு வந்தால் முக்தி பெறுவது நிச்சயம்... இந்த மார்க்கந்தான் சுலபமானது.

பக்தி வளர்ச்சிக்கே பாடுபட்டுவரும் 'ஆத்மஜோதி' பத்திரிகை நீடூழி வாழ்க!

கடவுள்

எப்படியோ ஒரு வழியில் கடவுள் நமக்கு உதவி புரியவருகிறார். நம்பிக்கையை இழந்துவிடவேண்டாம் என்றும், நாம் அழைக்கும் போதெல்லாம் தாம்வரத் தயாராக இருப்பதாகவும், ஆனால் நம் நிபந்தனைகளின்படியின்றி தம் நிபந்தனைகளின்படி வருவதாகவும் அவர் நமக்கு உணர்த்துகிறார். இது நான் கண்ட உண்மை. ஒருதடவைகூட கடைசி நேரத்தில் அவர் என்னை கைவிட்டது கிடையாது.

—காந்தி

கலாயோகி கி. ஆனந்தகுமாரசுவாமி

—ச. அம்பிகைபாகன் அவர்கள்—

உலகப் புகழ் பெற்ற கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி இலங்கைக்கு பல்லாற்றானும் தொண்டாற்றிப் புகழ் பெற்ற ஒரு பெருங்குடியில் 1877–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி கொழும்பில் தோன்றினர். இவருடைய பாட்டனாரே இலங்கைச் சட்டசபையில் முதல் தமிழ்ப் பிரதிநிதியாக விளங்கிய முதலியார் குமாரசுவாமியென்பவர். கலாயோகியின் தந்தையாராகிய சேர். முத்துக்குமாரசுவாமியும் தம் தந்தையாரைப் பின்பற்றித் தமிழ்ப் பிரதிநிதியாக விருந்த தோடுசிறந்த கலா விற்பன்னராகவும் விளங்கினர். இவர் தத்துவம்சம், தம்மபதம், அரிச்சந்திர நாடகம், முதலியவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்குள் முதன் முதலில் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் இவரே.

ஆனந்தகுமார சுவாமியின் தாயார் எலிசபெத் கினே பீ. பி. என்னும் ஆங்கிலமாது ஆவர். இவர் இங்கிலாந்தில் கென்ற் பிரதேசத்தைச் சேர்ந்த வில்லியம் யோன் பீ. பி. என்பவரின் புத்திரி. கலாயோகி ஆனந்த கே குமாரசுவாமி என்னும் பெயரில் ''கே'' எனும் எழுத்து அவரின் தாயாரின் ஞாபகத்திற்காகச் சேர்க்கப்பட்டதாகும்.

ஆனந்தகுமாரசுவாமி ஆறு மாதக் குழந்தையாக விருக்கும் பொழுதே தாயாரின் உடல்நிலை காரணமாக இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டார். தகப்பனார் அரசியல் வேலை காரணமாக இவர்களுடன் போக முடியவில்லை. அரசியல் வேலைகளை முடித்துக்கொண்டு போகவிருந்த தந்தையார் அவருக்கு ஏற்பட்ட நோய் காரணமாக 1879ல் இறந்தார். இதனால் தாயாரும் மகனும் இங்கிலாந்தில் தொடர்ந்து வாழ நேர்ந்தது.

ஆனந்தகுமாரசுவாமியின் இளம் பருவத்தைப் பற்றி அவர் படித்த விக்ளிவ் கல்லூரியின் அறிக்கையிலிருந்து சில விஷயங்களை அறிய முடிகிறது. இவர் அக்கல்லூரியில் பன்னிரண்டாம் வயதில் சேர்க்கப்பட்டு ஆறு வருடம் அங்குக் கல்வி கற்றார். அக்கல்லூரியில் அவர் ''மொனிட்டராகவும்'', ''பிரிவெக்ற்'' ஆகவும் ஈற்றில் இவர்களுக்குத் தலைவராகவும் கடமையாற்றினர். அங்கிருந்த மாணவர் தேர்ச்சிச் சங்கத்தில் ''உணவுக்காக மிருகங்களைக் கொல்லுதல் அவசியமற்ற பிரயோசனமற்ற நீதியற்ற செயல்'' என்னும் பிரேரணையைக் கொண்டு வந்து அதன் சார்பாக வாதாடினர். பூர்வ வாசனையாற்போலும், அகிம்சை போன்ற விஷயங்களைப் பற்றி இளம் வயதிலிருந்தே ஆராயத் தொடங்கி விட்டார்.

விக்ளிவ் கல்லூரியிலிருக்கும்போதே தாம் பின்பு சர்வகலாசாலையில் சிறப்புப் பாடமாக எடுக்கப் போகும் நிலச் சரித்திரவியலில் சிரத்தைகாட்டி தமது கல்லூரிப் பிரதேசத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து கல்லூரிச் சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை எழுதினர்.

விக்ளிவ் கல்லூரியிலிருந்தே ''இன்ரர் ஆட்ஸ்'' பரீட்சையில் சித்தியெய்தி, லண்டன் சர்வகலாசாலையைச் சேர்ந்து தாவரவியல், நிலச் சரித்திரவியல் என்னும் பாடங்களைப் படித்து பி. எஸ். சி. பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தியெய்தினர்.

இப்படிச் சித்தியெய்திய பின்பு 1903ம் ஆண்டில் இலங்கைக்கு வந்து உலக ஆராய்ச்சிப் பகுதித் தலைவராகக் கடமை

யாற்றினார். இவ்வேலையில் 1906ம் ஆண்டு வரை ஈடுபட்டிருந்தார். இம்மூன்று ஆண்டு களிலும் உலோக ஆராய்ச்சி சம்பந்தமாக சிறந்த அறிக்கைகளை வெளியிட்டதோடு, ''தோறியனைற்'' என்னும் புது உலோகத் தையும் கண்டு பிடித்தார். புது உலோகங் களைக் கண்டுபிடிப்பவர்கள், அவற்றுக்குத் தங்கள் தங்கள் பெயர்களைக் கொடுப்பதே வழக்கம். ஆனந்த குமாரசுவாமி அப்படிச் செய்யாது அதற்குரிய விஞ்ஞானப் பெயரைக் கொடுத்தது தம்மை விளம்பரப்படுத்த விருப்பாத அவரது உயர்ந்த பண்பைக் காட்டுகிறது. வாழ்க்கை முழுவதும் விளம் பரத்தை விரும்பாது தமது ஆராய்ச்சிகளைச் செய்து வந்தாரென்பது இங்கு குறிப்பிடத் தக்கது. உலோகத்துறையில் அவர் செய்த ஆராய்ச்சிகளுக்காக லண்டன் சர்வகலாசாலை இவருக்கு டி. எஸ் சி. (D. S. C.) என்னும் உயர்ந்த பட்டத்தை வழங்கியது.

இலங்கையில் உலோக ஆராய்ச்சிப்பகுதி யில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது அவரது வாழ்க்கையில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. உலோக ஆராய்ச்சி சம்பந்த மாக காடுகளுக்கும், குக் கிராமங்களுக்கும் கால் நடையிலும், மாட்டு வண்டியிலும் பிர யாணஞ் செய்தார். இப்படிப் பிரயாணஞ் செய்யும் வேளைகளில் அழிவுற்ற நிலை யிலிருந்த தாது கோபுரங்களையும் சிலைகளையும் ஓவியங்களையும் கண்டனர். குக் கிராமங்க ளில் ஒரு காலத்தில் சிறந்து விளங்கிய கிரா மக் கைத்தொழில்கள் எல்லாம் சிதைந்து வருவதைக் கண்டனர்.

அழிவுற்ற நிலையிலிருந்த தாது கோபுரங் களினதும் சிலைகளினதும் ஓவியங்களினதும் கலைத்திறனில் ஈடுபட்டு அவற்றைப்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். ஈடுபட்டு இலங் கைக் கலைகளுக்கும் இந்தியக் கலைகளுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிச் சிந்திக்கலானார். இந்தியக் கலைகளை அறிவதற்கு இந்திய தத் துவ சாஸ்திரத்தையும் சரித்திரத்தையும் அறியவேண்டிய அவசியத்தை உணர்ந்து அவற்றைத் திறம்படக் கற்றார். மேலும் மேற்றிசைக் கலைகளுக்கும் கீழ்த் திசைக்கலை களுக்குமுள்ள வித்தியாசங்களை ஆராய்ந்தார். அவற்றினால் விஞ்ஞானியாக இலங்கைக்கு வந்த ஆனந்த குமாரசுவாமி கலாயோகியாக மாறினார்.

இலங்கையில் 1903ம் ஆண்டு தொடக் கம் 1906ம் ஆண்டு வரையில் செய்த ஆராய்ச்சியின் பயனாகவே மத்திய கால சிங் களக் கலைகள் என்னும் நூல் வெளிவந்தது.

மேலும் இலங்கையில் இருந்த காலத்தில் இலங்கை மக்கள் மேனாட்டு நாகரிக வலையில் அகப்பட்டு அல்லற் படுவதைக் கண்டார். சமயம், கல்வி, கலை முதலிய சகல துறை களிலும் அந்நியர் ஆதிக்கம் தலைதூக்கி நிற் பதைக் கண்டு இந்நிலைமையை மாற்றி யமைக்க முயற்சி செய்தவர், இம்முயற்சியின் பயனாகவே இலங்கைச் சமூகச் சீர்திருத்தச் சபையை டாக்டர் பொல்பீரிஸ், டாக்டர் அண்டிறியான்றெல், டாக்டர் W. A. சில்வா. முதலியோரின் உதவியைக் கொண்டு தாபித் தார்.

இக்காலத்தில் ஆனந்த குமாரசுவாமி செய்த சேவையைக் குறித்து ஆங்கில இந்து சாதனம் எழுதியதின் ஒரு பகுதியை பின் வருமாறு இலங்கை மக்கள் முன்னேற்றத்துக் காக அவர் செய்து வரும் பணிகளைச் சகலரு மறிவர். அவர் இலங்கைக்கு வந்த காலந் தொடங்கி இலங்கை மக்களின் பொருளா தார சமூக, கலாச்சார வளர்ச்சிக்காக இந் நாட்டிலேயே கல்வி பயின்றும் இந்நாட்டு மக்களுக்குச் சேவை செய்வதற்கு டாக்டர் குமாரசுவாமி அவர்களுக்கில்லாத பலவசதி களிருந்தும் ஒருவிதமான சேவையும் செய் யாத இலங்கை வாசிகள் நாணும்படி தொண் டாற்றியுள்ளார். இது நாம் ஒன்றையும் ஒளிக்காது மறைக்காது கூறும் அபிப்பிராய மாகும். இந்த அபிப்பிராயமே தன்னலமற்ற மக்கள் சகலரினதும் அபிப்பிராயமாகும். மேனாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுதல் தேசாபிமானத்துக்கு பங்கம் விளைவிப்பதோடு இலங்கை மக்களின் பொருளாதார நிலைக் கும் பங்கம் விளைவிப்பதாகும். சிங்களவர், தமிழர் வாழ்க்கைமுறையில்மாற்றமே ஏற்பட வேண்டுமென்று முதன்முதற் பிரசாரம் செய்தவர் இவரே''.

இலங்கை சமூக சீர்திருத்தச் சபையின் கிளையொன்றைத் தாபிக்கும் நோக்கமாக 1906-ம் ஆண்டு யூன் மாதம் யாழ்ப்பாணத்துக்குச் சென்றார். அங்கு அவருக்கும் அவருடைய மனைவியான எதெல் குமாரசுவாமிக்கும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஒருவரவேற்பளித்தது. அவ்வரவேற்புக்கு பதிலுரைக்குமுகமாக ஆனந்தகுமாரசுவாமி நிகழ்த்திய உரையை சகலரும் படிக்கவேண்டியதவசியம். அதில் ஒருபகுதி பின்வருமாறு:

என்னுடைய பெருவிருப்பம் நீங்கள் என்னை உங்களில்ஒருவனாகஏற்கவேண்டுமென்பதே. ஆகையால் நீங்கள் என்னை ஒரு தமிழனாகவும், நண்பனாகவும் ஏற்றிருப்பதற்காக உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். நான்கு வருடங்களுக்கு முன் நான் இலங்கைக்கு மூன்றுவது முறையாக வந்த பொழுது ஆங்கிலேயனாகவே வந்தேன். இப்பொழுது நான் இந்தியத் தாயின்புத்திரனாக மறு பிறப்பெடுத்து, ஒரு குழந்தை தன் பெற்றோரிடம் செல்கிறமாதிரி உங்களிடம் வந்துள்ளேன்.

என் வாழ்நாளிற் பெரும்பாகத்தை இங்கிலாந்திற் கழித்தபோதிலும் இங்கு வந்ததன் பின் எங்கள் பண்பாட்டின் சிறப்பை உணர்ந்துள்ளேன். ஆகையால் எங்களில் அநேகர் மேனாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுவதனால் ஏற்படும் தீமைகளை உணர்ந்து அதைப்போக்க என்னாலான முயற்சிகளை செய்துவருகின்றேன். முப்பதாண்டுகளுக்கு முன் தமிழர் தலைவராக விளங்கிய என் தந்தையாரும் மேனாட்டாரைப்போலவே வாழ்ந்துவந்தார்.

அக்காலத்தில் அது ஒருவேளை தேவையாகஇருந்திருக்கலாம். அவர் நெடுங்காலம் வாழ்ந்திருந்தால் மேனாட்டு நாகரிகத்தைக் கண்மூடித்தனமாக பின்பற்றுவதின் பிழைகளை எனது மைத்துனர் திருவாளர் இராமநாதன் அருணாசலம் போல் உணர்ந்து சீர்திருத்த இயக்கத்தில் இறங்கியிருப்பார். ஆகையால் அவருடைய மகன் இச்சீர்திருத்த வேலையைச் செய்துவருவது பொருத்தமே.

எனது தாயாரைப் பொறுத்தவரையில் தாம் என் தகப்பனாரை மணந்ததன் பயனாக ஆங்கிலேயருக்கும் தமிழருக்குமிடையில் நல்லுறவேற்பட வேண்டுமென்பதே அவருடைய விருப்பம். நான் இப்பொழுது செய்துவரும் வேலைக்கு அவருடைய முழு ஆசியுமுண்டு.

இந்தியாவின் கடந்த மூவாயிரம் ஆண்டுச் சரித்திரத்தை, நமது சமயம், தத்துவ சாத்திரம், கலைகள் முதலியவற்றை விளக்கும் சரித்திரத்தை ஆராயும் பொழுது இதிற் காணப்படுவதிலும் சிறந்த இலட்சியங்களை வேறெங்கும் காண முடியாதென்னும் முடிவுக்கு வந்துள்ளேன்.

யாழ்ப்பாணத்தில் கலாயோகி தங்கியிருந்த காலத்தில் நான்காவது மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு முன்னோடியாக திரு. தகைலாசபிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் முதலியவர்களின் முயற்சியால் தாபிக்கப்பட்ட தமிழ்ச்சங்கம் நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் அவர்களுக்கு ஒரு வரவேற்புபசாரம் நிகழ்த்தியது. அன்று அவர்களுக்கு ''வித்தியா விநோதன்'' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. ஸ்ரீமதி. எதெல் குமாரசுவாமி தமிழ் இலக்கிய வளர்ச்சியில் காட்டிய ஊக்கத்தைப் பாராட்டி சிவஞான போதப் பிரதியொன்று வழங்கப்பட்டது.

1906ம் ஆண்டின் இறுதியில் தாம் இலங்கை அரசாங்கத்தின் கீழ் வகித்த பதவியிலிருந்து விலகி மூன்று மாதம் இந்தியாவில் பிரயாணஞ் செய்தார். இதன் பின்னர் இங்கிலாந்து சென்று அங்கிருந்து நாம் முன்பு குறிப்பிட்ட மத்திய காலச் சிங்களக் கலைகள் என்னும் நூலை விளக்கப்படங்களுடன் வெளியிட்டார்.

1910-ம் ஆண்டில் இந்தியாவுக்குத் திரும்பி அங்குச் சுற்றுப் பிரயாணஞ் செய்தார். சுதேசி, தேசியம், கலைகள் சம்பந்தமாக இந்தியப் பத்திரிகைகளுக்கு அரிய கட்டுரைகள் எழுதி தேசிய இயக்கத்துக்கு பேருதவி புரிந்தனர். இக் கட்டுரைகள்

"கலையும் சுதேசியும்" தேசிய லட்சியங்கள் பற்றிய கட்டுரைகள் நூல்களாக வெளிவந்தன.

அலகபாத் நகரில் 1911ல் நடைபெற்ற பொருட் காட்சியில் கலைப் பகுதிக்கு ஆனந்த குமாரசுவாமி பொறுப்பாளராக இருந்தார். இதற்காக இந்தியா முழுவதும் திரிந்து அரிய கலைப் பொருள்களைச் சேகரித்தார். இக் காலத்தில் தான் இந்திய மேதைகளாக ரவீந்திரநாத் தாகூர், அபிந்திரநாத் தாகூர், சகோதரி நிவேதிதை முதலியவர்களோடு தொடர்பு கொண்டார். இந்தியாவின் விழிப்புக்கு இவர் ஆற்றிய சேவையை இந்திய மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். நவ பாரதத்திற்கு அடிகோலிய தலைவர்கள் என்னும் நூல் வரிசையில் அரவிந்தருக்கும் தாகூருக்குமிடையில் ஆனந்தகுமார சுவாமியைப்பற்றிய கட்டுரை காணப்படுகிறது.

அலகபாத் பொருட்காட்சிக்காகச் சேர்க்கப்பட்ட பொருள்களைக் கொண்டு காசியில் ஒரு கலாபவனத்தை நிறுவ முயன்றார். ஆனால் மக்கள் அவருக்குப் போதிய ஆதரவு கொடுக்கவில்லை. இதனால் அக் கலைப் பொருள்களோடு 1917-ம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள பொஸ்ரன் நகருக்குப் புறப்பட்டார். அக் காலம் தொடக்கம், 1947-ம் ஆண்டில் இறக்கும் வரைக்கும், அங்கிருந்து இந்தியக் கலைகளுக்கு அருந்தொண்டாற்றினர்.

ஆனந்த குமாரசுவாமி இந்தியக் கலைகள் தத்துவ சாஸ்திரம் முதலிய விஷயங்கள் பற்றிச் சிறியனவும் பெரியனவுமாக நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் அதிகப்பிரசித்திபெற்றது. சிவநடனம் என்பதாகும். இதில் இந்திய பண்பாட்டின் பல்வேறு அம்சங்களை விளக்கியிருப்பதோடு நடராசவடிவத்தின் தத்துவத்தையும் விளக்கியுள்ளார். ஆன்ம கோடிகளை ஈடேற்றுவதற்காக இறைவன் பஞ்ச கிருத்தியங்களைப் புரிவதையே நடராஜ வடிவம் பிரதிபலிக்கிறதென்பதைச் செவ்வனே காட்டியுள்ளார்.

1947ம் ஆண்டில் இவருடைய 70வது ஆண்டுவிழா பலவிடங்களிலும் கொண்டாடப்பெற்றது. அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட விழாவொன்றில் பேசும் பொழுது தாம் அடுத்த ஆண்டு இந்தியாவுக்குத் திரும்பி, இமயமலைச் சாரலில் ஓர் ஆச்சிரமம் நிறுவி அங்கிருந்து தாம் அறிவால் அறிந்த உண்மைகளை அனுபூதிமூலம் பெற முயலப் போவதாகக் கூறினர். இவர் வாழவிரும்பிய வாழ்க்கை வானப் பிரஸ்த வாழ்க்கையாகும். ஆனால் இப்படிக் கூறிய சில தினங்களில் இவர் இறைவனடி சேர்ந்து விட்டார்.

கலாயோகியின் நூல்கள் பல பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்க தமிழில் ஒரு நூலேனும் மொழிபெயர்க்கப்படாதிருந்தால் பெரும் குறையாகும். இக்குறையை நீக்க முயலுவோமாக.

கடவுள்

நான் கடவுளை நேருக்கு நேராகக் காண விரும்புகிறேன். உண்மைதான் கடவுள் என்று எனக்குத் தெரியும். என்னைப் பொறுத்தமட்டிலும் கடவுளை அறியப் பயன்படும் ஒரே சாதனம் அஹிம்சை – அன்பு என்பதுதான். நம்புகிறவர்களுக்குக் கடவுள் இருக்கிறார்.

கடவுள் நாமம்

இந்தப் பரந்த உலகத்தில் யாதொரு உதவியும் ஆதரவும் இல்லாமல் திக்குத் திசை தெரியாது தவிக்கும் இருள் மண்டிய நேரத்திலும், அவருடைய திருநாமத்தின் சக்தி நமக்குத் தெம்பு கொடுக்கிறது. நம் சந்தேகங்களையும், நிர்க்கதியான நிலையையும் தூரத் துரத்திவிடுகிறது. —காந்தி



ஸ்ரீமந் நாராயணாய நமः

மனிதனுக்கு எல்லாவற்றிலும் இறைவன் இருந்து இயக்குகிறான் என்ற நம்பிக்கை வேண்டும். இந்த உடல் தர்மரீதியான வாழ்வை வாழ்ந்து, உலகுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து மரணிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்க வேண்டும். இவ்வழியில்

ஆத்மஜோதியின் சேவை தொடர
30–ஆவது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல் வாழ்த்துக்கள்!

பாலக்கிருஷ்ணன் அன் கோ.,
116, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
T'phone: 26776

சாது யார்?—எப்போதும் சந்துஷ்டியாக இருப்பவன்.

ஆத்மஜோதியின் 30-வது ஆண்டு விசேட மலர்
சிறப்புற அமையவும் மேற்படி ஸ்தாபனத்தின்
சமயத் தொண்டு யாவர்க்கும் பயன்பெறவும்

எமது நல்வாழ்த்துக்கள்!



S. சின்னத்துரை அன் சகோதரர்,
யாழ்ப்பாணம் — கொழும்பு-11.
தொலை பேசி: 35821

இரவும் பகலும்
சிந்திக்கத் தக்கது எது?—
ஈஸ்வரனுடைய பாதார
விந்தங்களே



MURUGANANDA MEDICAL HALL
104, Sea Street,
COLOMBO-11

மனிதரால் ஸ்மரிக்கத்
தக்கது எது?—
எப்போதும் ஹரிநாமமே.



WARATHAS
173, Wolfendhal Road,
COLOMBO-13
T. Phone: 32823

உடலெடுத்தவனுக்குப் பெரிய
பாக்கியம் எது?—
ஆரோக்கியம்



ருசியான சைவ சிற்றுண்டி வகைகளுக்கும்
சைவ உணவுக்கும் பெயர் பெற்ற இடம்



கோமதி விலாஸ்
142, செட்டியார் தெரு
கொழும்பு-11
T. Phone: 34144

உலகத்துக்கு உழைப்பதே
மோட்சத்துக்கு வழி.

பிரபஞ்சத்துக்கு பயன் கருதாது
நன்மை செய்.

இதுவே மோட்சத்துக்கு வழி.



ஆத்மஜோதி 30வது ஆண்டு
சிறப்பு மலருக்கு எமது நல்லாசிகள்



இராஜலெட்சுமி ஸ்டோர்ஸ்
நிர். 105, கொத்மலே வீதி,
நாவலப்பிட்டி.

இவ்வுலகமும் உலக வாழ்க்கையும் பொய்;
செல்வமும் சுற்றமும் இளமையும் நிலையற்றன.
இதனை உணர்ந்து யாவற்றையும் துற,
ஞான வாழ்க்கையை மேற்கொள்.

ஆத்மஜோதி 30வது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல் வாழ்த்துக்கள்!

RAMYA TRADING COMPANY LIMITED
122, DAM STREET
COLOMBO–12.

SABA AGENCY

The Name Renowned for

RADIO, RADIO SPARE PARTS AND ELECTRICAL GOODS

OF THE HIGHEST QUALITY.

Stockists of:

- Electrical Accessories
- Electrical Fittings
  - Electrical Cables
  - C. B. E. Bulbs
- C. E. I. Productions
- Elect, Marina, Electrola & Philips Spares for Radios.
- Philips Transistors & Valves

Order promptly Executed

Call early & obtain your requirements

SABA AGENCY

129, Sea Street, – COLOMBO - II.

Telephone: 20345.

வித்வான்களின் மனத்தைக் கவர்வது எது?—

நல்ல கவிதையும்
புத்தி என்னும் பெண்ணும்



எல்லாவிதமான அச்சுவேலைகளுக்கும்

The Kumaran Press

201, Dam Street,
COLOMBO-12

T' Phone: 21388

லக்ஷ்மி யாரை விரும்புவாள்?—

சுறுசுறுப்பான சித்தம் உடையவனை,
நீதி தவருத நடையுடை பாவனை உடையவனை.



WANANES

120, Central Road,
COLOMBO-12

T'Phone: 32675

இறைவன் சந்நிதியில்
எல்லோரும் சமம்



ஆத்மஜோதி சிறப்பு மலருக்கு எமது நல்வாழ்த்துக்கள்!





Saraswathi Stores

48, Old Moor Street,
COLOMBO - 12.

T' Phone: 35331



திரு. கனகரத்தினம் J.P. அவர்கள்
நீர்வேலி.

உன் மனைவி யார்?
உன் மகன் யார்?
நீதான் யார்?
எங்கிருந்து வந்தாய்?
இவ்வுலக வாழ்க்கையே ஒரு விசித்திரம்.

இதை எல்லாம் சிந்தித்துப் பார்த்தால்
உன் மயக்கம் தெளியும்.
அப்போது
இந்த உன் ஜீவாத்மா பரமாத்மாவே
என்பதை உணர்வாய்.

எல்லாவிதமான நவநாகரீக நகைகளுக்கும்
சிறந்த இடம்

HARAN JEWELLERS
Kannathiddy,
JAFFNA.

பவானி தேவியை மும்முறை அழைத்துச்
சரணடைவோர் ஒருபோதும் துயரடையார்,
மயக்கமுறுர் பாவக்குழியில்விழார், அஞ்சார்.

சிவசக்தி ஸ்டோர்ஸ் & புத்தகசாலை

கைதடி.

பராசக்தி! அரி, அரன், அவன் ஆகிய
திருமூர்த்திகளும் உன்னைப் பக்தியுடன்
துதிக்கின்றனர். உன்பாதத் துளிகளை
ஒன்றுகச் சேர்த்தே பிரமன் இப்பாரைப்
படைத்தான்.

லீலாவதி ஸ்டோர்ஸ்

உரிமையாளர்: க. தம்பிப்பிள்ளை

கைதடி.

செம்பொருள் காணும் அறிவு

நா. செல்லப்பா — ''சித்திரச் சுடரொளி ஆசிரியர்'' —

நாம் ஊனக் கண்ணுற் காணும் உலகப் பொருள்கள் யாவும் வியாபகமாக விரிந்து நுண்ணிதாக உள்ள தொரு பேரியக்கச் சக்தியின் தோற்றமாகும். வியாபகமாயுள்ள இந்தச் சக்தியை நாம் கண்ணுற்காண இயலாது. இவ்வுண்மையை இன்றைய விஞ்ஞானம் தெள்ளத் தெளிய நிரூபிக்கிறது. எனவே நமது கண்ணுக்குப் புலப்படும் பொருட்கள் யாவும் ஒரு சக்தி இயக்கத்தின் வெறும் தோற்றமே யன்றி உண்மையானவையல்லவென்பதை நாம் தெளியக் கூடியதாயுள்ளது. கண்ணுற் காணுகின்ற அறிவும் இத்தகையதுதான் என்பதை நாம் சுலபமாகத் தெளிந்து கொள்கிறோமில்லை. உலகப் பொருட்களை சுட்டுப் பொருட்கள் என்றும் அவற்றை அறியும் அறிவைச் சுட்டறிவென்றும் சைவசித்தாந்த சாத்திரம் கூறும். சுட்டுப்பொருட்கள் யாவும் வெறும் தோற்றமாவது போலச் சுட்டெறியும் தோற்றமே யன்றிப் பூரணமாகாது.

எங்கும் செறிவான செம்பொருள்.

நமது புலன்களுக்கோ அல்லது மனதுக்கோ புலப்படாத நுண்ணிதான வியாபகப் பரம் பொருளை வள்ளுவர் பெருமான் செம்பொருள் என வழங்குகிறார். இதன் நுண்பொருளை உணராத பலர் செம்பொருளுக்குச் செந்நிறமுடைய பொருளெனக் கருத்து உரைக்கின்றனர். அதனால் வியாபகமாயுள்ள இறைவனைச் சேயோன் அதாவது செந்நிறமுடையோன் — எனக்கூறுகின்றனர். செந்நிறமுள்ள சிவனின் உருவத்தையோ அல்லது முருகனின் ஓவியத்தையோ காணும்போது இறைவனைப் பூரணமாகக் காண்பதாகப் பலர் கற்பனை செய்கின்றனர். செந்நிறத்தைக் காண்பது சுட்டறிவென்பதையும், சுட்டறிவினால் எங்கும் செறிந்துள்ள நுண்ணிய வியாபகமான சக்தியைக் காண இயலாதென்பதையும் மறந்து விடுகின்றனர். இதனால் அவர்கள் வெறும் மனவாசக விளக்கம் கூறுவதும், புறப் பொருட்காட்சிகளில் ஒரு கிளுகிளுப்பை மக்களிடம் ஊட்டுவதுமாக இருக்க இயலுமே யன்றி, உண்மையில் மெய்யுணர்தலைப்பெறுதல் முடியாது.

செறிவான அறிவு மெய்காணும் அறிவாகும்.

நீக்கமற எங்கும் நிறைந்த பரம் பொருளை வள்ளுவர் செம்பொருள் என்றும் அப்பொருளைக் காணும் அறிவை மெய்யுணர்தல் என்றும் விளக்குகிறார். செம்பொருள் காணும் அறிவானது, உலகப் பொருட்களைக் காணும் சுட்டறிவல்ல என்பதை நாம் நன்கு தெளிதல் அவசியமாகும்.

மெய்யுணர்தலாகிய வியாபக அறிவும் நம்மிடம் இயற்கையாகவே மலர்தல் வேண்டும் எனின் பிறப்பெனும் பேதமை நீங்குதல் வேண்டும் என வள்ளுவர் வழிகாட்டுகிறார். இதிலிருந்து நமது இந்தப்பிறவி நீங்கினாற்றான், அறியாமை நம்மைவிட்டு அகலும் என்னும் பொருளை நாம் வலிந்து பெறுதலாகாது. பிறவி நீங்குவதாயின் நமது வாழ்க்கையே அற்றுவிடும். அங்ஙனம் வாழ்க்கை அற்றபின் நமக்கு மெய்ப்பொருள் காணும் அறிவு கிடைத்துயாது பயனுகும்? இந்தப் பிறவியிலே நாம் சரிவர வாழும்பொழுதே நமக்கு மெய்யுணர்தல் மலருமாயின் அதுவே பெரும் பயனுகும். பேதைமையாகிய அறியாமை நமது வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் பிறப்பதும், அதன் எதிர்மறையான சுட்டறிவினால் அது இறப்பதும் போலத் தோன்றி, மீண்டும் மீண்டும் ஓயாது பிறந்தும் கொண்டேயிருக்கிறது. நாம் இவ்வுலகில் வாழும் பொழுதே இத்தகைய அறியாமைப் பிறப்பு நீங்குதல் வேண்டும் என்பதே வள்ளுவன் கருதும் உண்மைப் பொருளாகும்.

சார்புநிலை நீக்கம் சிவப்பிரகாசமாகும்.

பிறப்பெனும் பேதைமை நீங்குவதற்கு வேண்டிய நன்னெறியையும் வள்ளுவன் வகுத்துக்காட்டுகிறான். அந்நெறியை நாம் சாதனை செய்தாற்றான், செம்பொருள் காணும் அறிவு நம்மிடம் மலரும். அந்நெறி எந்நெறி? என்பதை நாம் ஐயந்திரிபற உணருதல் வேண்டும். அந்நெறியின் நுட்பத்தை தெள்ளத்தெளிய விளங்காது சாதனை புரியத் தொடங்குவதில் பிரயோசனமில்லை. அந்நெறி சார்புகெட ஒழுகுதலாகும். நாம் ஒரு சார்பு நிலையில் உள்ளோம். இந்தச் சார்பு நிலை கெடும்வகையில் சாதனை செய்தால் நம்மிடம் ஓயாது பிறந்து வரும் பேதைமை நீங்கும் என்பது நிச்சயமாகும். சார்புநிலை கெடுவதற்கு முன் நாம் அதைப் பற்றி நன்கு தெளிதல் அவசியம். ஆன்மா மனதைச்சார்கிறது. மனம் இந்திரியங்களைச் சார்கிறது. இந்திரியங்கள் பொறிகளைச் சார்கின்றன. பொறிகள் பஞ்சபூதங்களைச் சார்கின்றன. இவ்விதமான சார்பு நிலையிலுள்ள ஆன்மா சுட்டியறியுமேயன்றி வியாபித்துப் பூரணமான சத்தியத்தையோ அல்லது பரம்பொருளையோ அறியாது. இச்சார்புநிலை நீங்கியவிடத்துத்தான் அது பூரணத்தை உணரும். ஆன்மாவிடம் ஒரே வேளையில் சுட்டறிவும், வியாபக அறிவும் விளங்கித் தோன்றுதெனும் நுட்பத்தை நாம் தெளிந்து கொள்ளுதல் வேண்டும். இவ்வுண்மையைப் பற்றிய மெய்யுணர்தல் மலரப்பெறுதல் வேண்டின் சார்புகெட ஒழுகுதல் வேண்டும்.

சிவனும் சிவனும் அந்நியமின்றியுள்ளன.

உண்மை விளக்கம் பெறுத சிலர் ஆன்மாவானது பாசப்பொருள்களைச் சார்வதை நீங்கி இறைவனைச் சாருதல் வேண்டுமென வாதிக்கின்றனர். இவ்வாதத்தை ஏற்கும் பலர் மெய்யுணர்தலைப் பெறுது, பிறப்பெனும் பேதமையில் மயங்கி அல்லல் உறுகின்றனர். வள்ளுவனே கண்டிப்பாகச் சார்புகெட ஒழுகுதல் வேண்டுமெனக் கூறுகிறான். இறைவனைக் கூட நாடியோ தேடியோ சாரவேண்டியதில்லையெனும் பொருளை மறைமுகமாகக் காட்டுகிறான். பாசப்பொருள்தான் ஆன்மாவுக்கு அந்நியமாகுமேயன்றி பரம்பொருள் அந்நியமாவதில்லை. அந்நியமான பாசப்பொருளை ஆன்மா சார்ந்திருக்க வேண்டியுள்ளதேயன்றி, ஆன்மாவுடன் அந்நியமின்றி அத்துவிதமாக, இரண்டறக் கலந்துள்ள பரம்பொருளை அது சாரவேண்டிய அவசியமில்லை. அவ்விதம் ஆன்மா பரம்பொருளைச் சாருதல் வேண்டும் என வாதிப்போர் பரம் பொருளின் அந்நியமின்மையை உணராதவராவர்.

மனோலயம் மன இறப்பாகும்

சார்புநிலை கெட ஒழுகுவதற்குரியஉத்தம சாதனை யாது? சார்புநிலையைப் பற்றிச் சந்தேகத்துக்கிடமின்றி நன்கு உணர்ந்து தெளிதலே உத்தம சாதனையாகும். இதனை சைவசித்தாந்தம் பாச நீக்கம் எனத் தெளிவுறுத்துகின்றது. பாசஞானத்தைப்பற்றியஉண்மை உணர்வை பெறுதல் இதற்கு வேண்டிய முதற் சாதனையாகும். இச்சாதனைக்கு ஆதாரமாக நாம் இதன் ஆரம்பத்திலேயே திருவருட்சக்தியை உபாய மார்க்கமாகப் பெறுதல் வேண்டும். உபாயமார்க்கம் என்பது ஒரு தற்காலிக சாதனை முறையாகும். இச்சாதனை முறையில் "நானில்லை; நீயுண்டு" எனும்படி இறைவனிடம் புனிதமான பக்தி மீதூரப் பூரண சரணாகதி அடைதலாகும். இவ்விதம் சரணாகதியடையும்போது நம்மிடம் திருவருட்சக்தி சுரக்கும். திருவருட்சக்தியை நான் அறிவேன். அதை நான் பெறுவேன் என நினைந்து நினைந்து மன விருத்தி செய்து கற்பனை உலகில் சஞ்சரித்தல் சரணாகதியாகாது. தன்னை மறந்து, தன்னுமம் கெட்டு மனோலயம் அடைதலே பூரண சரணாகதியாகும். மனோலயம் என்பது பக்தர்களுக்கு இன்றியமையாதது. "லயம்" என்னும் வடசொல் இறப்பைக் குறிப்பதாகும். எனவே, மனத்தின் இறப்பிலே தான் பேதைமையின் பிறப்பு நீங்கும் என நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். திருவருளிலே தன்னை மறந்து நிலைக்கும் போது மனோலயம் தற்காலிகமாக உண்டாகிறது. பூரணமௌனம் நிலவுகிறது. இது ஒரு மின்வெட்டுப்போல் இயற்கையாகவும், சடுதியாகவும், சுயமாகவும்

நம்மிடம் திருவருளால் தோன்றி மறைவ தாகும். இத்தகைய ஒரு மனோலயத்தினுல் நம்மிடம் ஆன்மீக உள்ளொளி மலர்கிறது.

ஆன்ம விசாரணை ஒரு தியானநெறியாகும்.

திருவருளினுல் மலரப் பெற்ற ஆன்மீக உள்ளொளியைக் கொண்டு ஆன்ம விசாரணை செய்யும் தியான சாதனையில் மிளிர்வதே உண்மையான—சாசுவதமான செம்பொருள் காணும் அறிவாகும். இது மனிதப்பிரயத் தனத்தினுல் மூளையிற் திணிக்கப் படும் ஒரு அறிவுச்சம்பாத்தியமன்று. பூவினில் நறு மணம் பொருந்தியவாறு போல மெய்யுணர் தல் உள்ளிருந்து பரவும் தன்மையுடையதா கும். ஆன்ம விசாரணைன்பது ஆன்மாவைப் பற்றி நேரடியாக மனவாக்குமூலம் விசாரணை செய்து சிந்தனை விருத்தி பெறுவதன்று.

ஆன்மா அல்லாத மனமே தன்னை ஆன்மா வாக முடிவு செய்து கொண்டு நான் எனது என்னும் செருக்குடன் சதா செயல்பட்டு ஆன்மீக ஒளியைத் தடை செய்யும் தன்மை யை உணர்தல் சார்புணர்தலாகும். மனமே போலியாக ஆன்மாவைப் போல காட்டிக் கொண்டு ஓயாது விருத்தியடைகின்ற பொய் மையை ஒவ்வொரு கணமும் நாம் விசாரணை மூலம் உணர்வோமாயின், அந்த விசாரணை யின் முடிவிலே மெய்யுணர்தல் சுயமாகவே மலரும். மனத்தை அடக்கலாம் எனச்செயற் கைமுறையில் சாதனை எதுவும் செய்வதனுல் மனம் ஒரு போதும் அடங்கமாட்டாது. மனவிசாரணையில் ஏற்படும் தெளிவு ஆன்ம ஞானத்தை சுயமாகக் கொடுக்கும்.

பொய்யைப் பொய்யாகக் காணுதல் மெய்யாகும்.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகிய மூன்று சாதனை முறைகள் தியான சாதர் களுக்குரியனவாகும். மனவாசகமூலம் கேட் டல், சிந்தித்தல், தெளிதல் ஆகியவற்றை விசாரணை செய்து அறிதல் தியான சாதனை யாகாது. வாழ்க்கைப் பிரச்சினைகளிலிருந்து விலகி ஓடுதலே மனத்தின் இயல்பாகும். உள்ளதை உள்ளவாறே பாரபட்சமின்றியும் அபிமானம் இன்றியும், இருமையாகிய மனப் பிரிவினை இன்றியும் விழிப்புணர்வுடன் எந்த ஒரு விடயத்தைக் கற்கும் போதும், கேட் கும் போதும், சிந்திக்கும் போதும், தெளியும் போதும் சதா அவதானித்தல் சிறந்த தியான சாதனையாகும். இவ் விதம் விழிப்புணர்வு டன் அவதானிக்கும் போது சிவஞான போதம் கூறுவது போல் பொய்ப்புலனை, வேறுணர்ந்து, பொய்யைப் பொய்யாகக் கண்டு முடிவில் மெய் காண்போம். செம் பிலுள்ள ஒளியை அதனிடம் உள்ள களிம்பே மறைக்கிறது. களிம்பை நாம்நீக்குவோமாயின் அது சுயமாகவே சுடர்விடும். அதற்கு நாம் ஒளி ஊட்டவேண்டியதில்லை. இருமையின் பாற்பட்டு இயங்கும் மனவிருத்தியே நமது அத்துவித ஆன்மீக ஒளியைத் தடைசெய் கிறது. மன விருத்தியை நிவிர்த்தி செய்யும் தியான சாதனையால் மெய்யுணர்தல் சுடர் விட்டுச் சுயமாக மிளிரும்.

அதுவே செம்பொருள் காணும் ஆன்ம ஜோதி அறிவாகும். சமயக்கல்விப் பாட திட் டத்தில் உயர் வகுப்புகளில் இத்தகைய சாதனைமுறை பாடசாலைகளில் நடைமுறைக் குக் கொண்டு வரப்படுமாயின் இளைஞர் களிடையே மெய்யுணர்தல் மிளிர்ந்து பூசல் பிணக்குப் பிரிவினைகள் அருகுதல் நிச்சய மாகும்.

ஓம் சக்தி!

வாழ்க ஆன்மஜோதி!

கடவுள் ஒருவரே

கடவுள் ஒருவரே என்று நான் நம்புகிறேன். அதனுல் மனித சமூகம் முழுவதுமே ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன். கடவுள் நம்முடைய கற் பனைசிருஷ்டி என்று சிலர் கருதுகிறார்கள். அவர்களுடைய கருத்து உண்மை என்றுல், அப்புறம் உலகத்தில் எதுவுமே உண்மையன்று. —காந்தி

யாவரும் ஆராய்ந்து தெளிய வேண்டிய உண்மைகள்

மதுரை ஆதின கர்த்தர் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளியது

உலகத்திலே இப்பொழுது நடைமுறையிலே இருக்கின்ற சமயங்கள், இந்து சமயம், புத்த சமயம், கிறிஸ்தவ சமயம், முகமதிய சமயம் என நான்கும், அவற்றின் உட்பிரிவுகளும் ஆகும். இந்நான்கு சமயத்தாரும் முறையே இந்துக்கள், கோயில்களுக்கும், பௌத்தர்கள்-விகாரைகளுக்கும், கிறிஸ்தவர் தங்கள் வேதக் கோயில்களுக்கும், முகமதியர் மசூதிகளுக்கும் சென்று அவரவர்களுக்குறிய முறைகளில் வழிபாடு செய்து வருகிறார்கள்.

இந்துக்கள் பல விக்ரகங்களை வைத்து, பலவிதமான ஆச்சாரங்களைக் கைக்கொண்டு பதினாறு விதமான உபசாரங்கள் செய்து, அர்ச்சித்து வழிபட்டு வருகிறார்கள். பௌத்த சமயத்தினர் புத்த பெருமானது சிலையை வைத்து, பூக்கள் சமர்ப்பித்து வழிபட்டு வருகிறார்கள். கிறிஸ்தவர்கள் கத்தோலிக்கராயிருந்தால், இயேசுநாதர் சிலையையும், சூசை அருளப்பர் சிலையையும், தூய கன்னிமரியாளது சிலையையும் வைத்தும், மற்ற புராட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்களாயிருந்தால், சிலுவையை மட்டும் வைத்தும், வழிபட்டு வருகிறார்கள். முகமதியர்கள் விக்ரகம் யாதொன்றும் இன்றி, மசூதிகளில் மெக்கா இருக்கும் திசையை நோக்கித் தொழுது வருகிறார்கள்.

இன்றைய விஞ்ஞான உலகில், எல்லா சமயத்தவர்களிலும், பலருக்கு, இவ்விதவழிபாடுகள், பயனுடையவைதானா? என்ற சந்தேகம் இருந்துவருகிறதையும், அதனால் அவர்கள் அது சம்பந்தமாக, பலவிதக் கேள்விகள் கேட்பதையும், அவையெல்லாம் அர்த்தமற்றவை என்று எள்ளி நகையாடுவதையும், யாவரும் அறிவர். அப்படிப்பட்டவர்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களைத் தெளிவித்து, அவர்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய முறையில், சமயாசாரியர்களும், ஆகம சிற்ப விற்பன்னர்களும், கீழே குறிப்பிட்டிருக்கிற முக்கிய கேள்விகளுக்குப் போதிய அளவு நிருபணங்கள் கொடுத்து இறைவழிபாடு சிறந்த பயனைத் தரத்தக்கது என்று அவர்களை ஒப்புக் கொள்ளுமாறு செய்தல் வேண்டும்.

அந்தக் கேள்விகளும், அவை சம்பந்தமாக நாம் தெளிவுபடுத்திவரும் பதில்களும் அவற்றிற்குரிய சான்றுகளும் கீழே தருகிறோம்:-

1. ஆகமங்களிலும் சிற்ப சாஸ்திரங்களிலும் விவரித்திருக்கின்ற மூர்த்திகள் மேலுலகங்களில் அன்றும் இன்றும், என்றும் இருக்கின்ற மூர்த்திகளா? அல்லது மனிதன் கற்பித்த உருவங்களா?

சிற்ப சாஸ்திர முறைப்படி தயாரித்து ஆகமமுறைப்படி பிரதிஷ்டை செய்ப்பெற்று இப்பூவுலகில் இந்துக்கள் வழிபடும் மூர்த்திகளெல்லாம், மேலுலகங்களில் நிரந்தரமாக இருந்து ஆட்சி செலுத்தி வரும் மூர்த்திகளேயாகும். அம்மூர்த்திகளின் வடிவங்களின் விபரத்தை விளக்குவது சிற்ப சாஸ்திரங்கள். அம்மூர்த்திகளை பிரதிஷ்டை செய்யும் முறைகளை விளக்குவது ஆகம சாஸ்திரங்கள். ஆகவே அம்மூர்த்திகளெல்லாம், மனிதன் தனது கற்பனையினால் உண்டாக்கிய உருவங்கள் அல்ல. இதற்கு இந்து புராணங்களும், இதிகாசங்களும், இறந்தவர்களும் சான்றுகள் தருகின்றனர். அச்சான்றுகளாவன:—

(அ) பெரிய புராணத்தில், காரைக்கால் அம்மையார், ஊனுடம்பைக் களைந்துவிட்டு

பேய் உடம்பாகிய, சொப்பனம் காணும் சூக்குமசரீரத்தோடு, சிவலோகம் சென்றதாகவும், அங்கு உமா மகேஸ்வரராகிய சிவபெருமான் "வரும் இவள், நம்மைப்பேணும் அம்மைகாண் உமையே" என்று உமாதேவியாருக்கு அறிவித்ததாகவும் காண்கிறோம். மேலும் பேயுடம்போடு இருந்தபொழுது பாடியவைதான் அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் என்றும் அறிகிறோம்.

(ஆ) சுந்தரமூர்த்தி நாயனார் ஊனுடம்பைக் களைந்துவிட்டு, உள்ளுடம்பாகிய சூக்கும சரீரத்தோடு, விண்ணுலகத்திலிருந்து வந்த வெள்ளை யானையின் மேல் ஏறிக்கொண்டு, சிவலோகம் சென்றதும், அங்கு உமையொருபாகனுகிய சிவபெருமான் அவரை நோக்கி "ஊரனே வந்தனையோ" என்று கேட்டதும் அங்கு அவர் பாடிய "நொடித்தான்மலை" திருப்பதிகம், இப்பூலோகத்துக்கு வந்த வரலாறும் காண்கிறோம்.

(இ) மகாபாரதத்தில் இந்திரன், தருமபுத்ரரை பரவாசுதேவர் எழுந்தருளியுள்ள நகரத்திற்கு அழைத்துப்போய், அங்கு வைகுண்ட நாதரையும் கிருஷ்ண பகவான், அஷ்டலெக்ஷ்மியுடன் விளங்குவதையும், இறந்துபோன கர்ணன், பீமன் முதலிய தம்பிமார், திரௌபதி, இளம்பாண்டவர், ஆகியோரையும் காட்டினன் என்றும், அச்சுதப்பேர் அண்ணலாகிய பச்சைமால் மகாவிஷ்ணுதர்மரைத் தம் அருகில் அமரும்படி அனுக்கிரகம் செய்தருளினார் என்றும், அந்தக்காக்ஷியைக்கண்டு யாவரும் மகிழ்ந்தனர். புண்ணியத்தின் மகிமையை எண்ணிப்பூரித்தனர் என்றும் இருக்கிறது.

இவற்றிலிருந்து சிவலோகத்தில், சிவபெருமானும் வைகுண்டத்தில் மகாவிஷ்ணுவும், புண்ணியம் செய்த, அருளாளர்கள் காணுமாறும், அவர்களோடு உரையாடுமாறும் இருந்து அருள் பாலிக்கிறார்கள் என்பது தெளிவாகும்.

அல்லாமலும், பக்தியுடையவர்களும், புண்ணியசீலர்களும் இப்பூலோகத்தில் இறந்தபின் மேலுலகத்தில் கனவில் தொழில் படுகின்ற பாரமில்லாத அவயவங்களோடு கூடியஉள்ளுடம்போடும், அவர்அவர்களுக்குரிய முந்திய பெயரோடும் தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் தெளிவாகும். அந்த உள்உடம்பையே தமிழில், ஆவியுடல் என்றும், சமஸ்கிருதத்தில் சூக்ஷ்ம சரீரம், யாதனை சரீரம், பிராணமய கோசம்என்றும் (Ghost) என்றும் (Astral body, Etherial body, spirit body) என்றும் கூறப்பெறுகின்றது.

அவ்வாறு இறந்து மேலுலகம் சென்ற இந்துக்களும், ஆங்கிலேயர்களும் பூவுலகில் உள்ளவர்களோடு பேசி, இந்துக்கள் இங்கு வழிபடுகின்ற மூர்த்திகள் எல்லாம், மேலுலகங்களிலிருந்து மக்களை ஆட்சிபுரிந்து வருகிறார்கள் என்ற பேருண்மையை ஆங்கிலேயர்களும் ஊர்ஜிதம் செய்கிறார்கள் என்று, நாம் எழுதியிருக்கிற இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்" என்ற நூலில் விளக்கியிருக்கிறோம். இதற்கு ஆதாரம் கிறிஸ்தவ வேதப் புத்தகத்திலிருந்தும், திருக்குரானிலிருந்தும், கொடுத்திருக்கிறோம். விபூதியின் தொன்மையையும், மகிமையையும் பைபிளிலிருந்து விளக்கியிருக்கிறோம்.

2. கல்லாலோ, செம்பாலோ, பிறவற்றாலோ செய்த உருவச் சிலைகள் அந்தந்த மூர்த்தியை அதில் பிரதிஷ்டை செய்வதற்கு முன்னர் சாதாரண சிலைகளாக இருக்க பிரதிஷ்டை செய்த பின்னர், அந்தந்த மூர்த்தியாகவே ஆகிவிடுகிறார் என்பதற்கு ஆகமங்கள் என்னென்ன பிரமாணங்கள் கூறுகின்றன?

எந்த உண்மையையும் நிலைநாட்டுவதற்கு, காணக்கூடிய உபமானம் ஒன்று சொல்லி காணமுடியாத உபமேயத்தை அனுமானிக்க அல்லது யூகித்து உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

சாதாரண மனிதராக இருந்த ஒருவர், சம்பிரதாய முறைப்படி, பலவித மந்திர தீக்ஷைகள், ஆச்சார்ய அபிஷேகங்கள் முதலியவற்றால். பலபேர் வணங்கத்தக்க முறையில் மடாதிபதியாக ஆகிறார்: அதேபோல சாதாரண கற்களாலும், உலோகங்களாலும் செய்த உருவங்களை வேதாகம முறைப்படி

சில மந்திர அபிஷேகங்கள், விசேஷ சக்தியுள்ளனவாக மாற்றி விடுகின்றன. அதே போலத்தான் சட்டப்படி ஜனாதிபதிப் பதவியும், மந்திரிப்பதவியும், பிற அரசாங்கப் பதவிகளும் ஆகும்.

3. இங்குள்ள பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற விசேஷ தினங்களெல்லாம் அந்தந்த நாட்களில் மேலுலகங்களில் கொண்டாடுகிற வைபவங்களா? அல்லது பூலோகத்தில் மட்டும் கொண்டாடுகிற வைபவங்களா?

மேலுலகங்களில் கொண்டாடப்படும் எல்லா வைபவங்களும், அங்கு செய்வதைப் பார்த்தவர்கள், இங்குள்ளவர்களுக்குச் சொல்ல, இவர்கள் இங்கு கொண்டாடுகிறார்கள். அந்தந்த நாட்களில் குறிப்பிட்டபடி, அந்தந்த மூர்த்திகள், அந்தந்த வைபவங்களில், மேலுலகங்களில் சாந்நித்தியமாக இருந்து, வழிபடுகின்றவர்களுக்கு நேரில் அருள் புரிகின்றார்கள். இப்பூவுலகில் ஒரு படத்தை வைத்தோ, பிரதிஷ்டை செய்த மூர்த்தியை வைத்தோ, வழிபடுகின்றவர்களுக்கும், தகுதிக்குத் தக்கவாறு நேரிலோ, மற்றவர் மூலமாகவோ, அம்மூர்த்தி அருள்பாலிக்கின்றார். இவ்வாறு சரஸ்வதி பூஜை, சதுர்த்தி கிருத்திகை, பிரதோஷம், ஆருத்திரா தரிசனம், வைகுண்ட ஏகாதசி, சிவராத்திரி, முதலிய வைபவங்கள் அந்தந்த லோகங்களில், நடைபெற்றுவருவதாக, இறந்தவர்களில் அருளாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள் என்று, நாம் பலப்பல விளக்கங்கள் கொடுத்து வருகின்றோம்.

4. இங்கு நாம், எந்த மூர்த்தியை வணங்கிப் பிரார்த்திக்கின்றோமோ, அந்த மூர்த்தி, நாம் நினைப்பதையும், சொல்வதையும் செய்வதையும், தெரியக்கூடியவராக இருக்கிறார் என்பதை எவ்வாறு நிரூபிப்பது?

இராமாயணத்தில் ஸ்ரீ ராம பிரான் சீதாப்பிராட்டியாரை மீட்ட பின், அவ்வம்மையாரைத் தீக்குழி பாய்ந்து, தனது கற்பை உலகறியச் செய்யுமாறுசொன்னபொழுது அவர்கள் இருவரும் அழையாமலிருக்க, சீதாப் பிராட்டியாரது மனோ நிலையையும், அங்கு நடக்கின்ற நிகழ்ச்சிகளையும், 14 வருஷங்களுக்கு முன்பு விண்ணுலகிற்குச் சென்ற தசரதர் அறிந்து தானே வந்து, சீதாப் பிராட்டியாருக்குத் தேறுதல் மொழிகள் சொல்லி, தன் மைந்தனது பராக்கிரமத்தைப் போற்றி அவரை இரண்டு வரங்கள் கேட்கச் சொல்லி, அவற்றைக் கொடுத்துச் சென்றதாகப் பார்க்கின்றோம். இதிலிருந்து, இறந்தவர்களில் புண்ணியசீலர்கள் இங்கு நாம் எண்ணுவதையும், பேசுவதையும், செய்வதையும், நாம் அறிவிக்காமலே அறியக்கூடிய ஆற்றலும், தாராளமாக இப்பூவுலகிற்கு வந்து போகக்கூடிய ஆற்றலும் உடையவர்கள் என்பது புலனாகின்றதல்லவா? இறந்த மனிதர்களுக்கே இந்த ஆற்றல் இருக்குமானால் நம்மையும், இறந்தவர்களையும் ஆண்டு வருகின்ற அதிகார மூர்த்திகளுக்கு, நாம் எண்ணுவதையும், பிரார்த்திப்பதையும், செய்வதையும், அலங்கரிப்பதையும், நிவேதிப்பதையும், அர்ச்சிப்பதையும், அறிந்து கொள்ளத் தாராளமாக முடியும் என்பதை யூகித்து உணர்ந்து கொள்ளலாம் அல்லவா?

5. நாம் நினைப்பதையும், சொல்லுவதையும் செய்கின்ற அத்தனையையும், அவர் அறிந்துகொள்ளக்கூடியவர் என்பதை நிரூபித்துவிட்டாலும், நாம் பிரார்த்தித்த காரியங்களை அடையுமாறு செய்து, நமது கஷ்ட நஷ்டங்களை எவ்வாறு நீக்குகிறார்? தானே வந்து நீக்குகிறாரா? அல்லது ''தேவா மனுஷ்ய ரூபேணும்'' என்ற முறையில் அவரது திருநாமத்தைப் பூண்ட மனிதர்களை அதிட்டித்து அனுக்கிரகிக்கிறாரா? இவற்றை எவ்வாறு நிரூபிப்பது?

உண்மையில் நம்மை, இவ்வுலகத்தில் பிறக்கும்படி செய்வதும், வாழ்ந்து பின் இறக்கும்படி செய்வதும், அவரவர்கள் கன்மத்திற்கேற்ப இன்பம், துன்பம் அனுபவிக்கச் செய்வதும், இறுதியில், நமக்கு நான்குபேர் தூக்க வேண்டிய பாரமுள்ள சரீரத்தை கீழே கிடத்திவிட்டு விடுதலை கொடுத்து, பாரமில்லாத சொப்பன உடலோடு விண்ணுலகில்

சென்று வாழும்படி செய்வதும், மேலுலகத்தில் உள்ள அரசாங்கமே தவிர, இம்மண்ணுலகில் உள்ள அரசாங்கமல்ல என்பதை யாவரும் அறிவர்.

எந்த அரசாங்கமும் இரண்டுவித உபகாரங்கள் செய்யும். ஒன்று: எல்லோருக்கும் செய்கின்ற பொது உபகாரங்கள். மற்றது: மனு கொடுத்தவர்களுக்கு மட்டும்செய்கின்ற சிறப்பு உபகாரம். மனுக் கொடுக்காதவர்களுக்கு அவ்விதச் சிறப்பு உபகாரம் கிடைக்காது. உதாரணமாக நாம், போலீஸ்இலாகாவிலுள்ள பெரிய அதிகாரிக்கு ஒரு மனுப் போட்டால், அவரே வரக்கூடிய தகுதியுள்ளவற்றிற்கு, அவரே வருவார். அல்லது விண்ணப்பத்தின் தகுதிக்கேற்ப, தனக்குக் கீழே உள்ள ஒரு அதிகாரியை அனுப்பி, விசாரிக்கச்செய்து உதவி புரிவார்.

அதுபோலவே நாம், எந்த அதிகார மூர்த்தியிடம் விண்ணப்பம் செய்தோமோ, அந்த மூர்த்திதானே, தகுதியுடையவர்களுக்குக் கனவில் உத்தரம் கொடுப்பதும், மற்றவர்களுக்குத் தகுதிக்குத் தக்க, மனிதர்களைக்கொண்டு,அதிலும் அந்தமூர்த்தியின்பெயர் தாங்கினவர்களை அதிட்டித்துநின்று,அவர்கள் மூலம் உதவி செய்து வருவதும், பிரத்தியக்ஷமாக யாரும், அவரவரது அனுபவத்தில் கண்டு ஆனந்திக்க வேண்டிய விஷயம் என்றும், இதிலிருந்து தேவா, மனுஷ்ய ரூபேணம்'''என்பது உறுதியாகின்றது என்றும், நாம் மேலே சொன்ன நூலில் பலசான்று கொடுத்து விளக்கியிருக்கிறோம். மேலும் பெயரிட்டு அழைப்பது ஆவி உடலுக்கே என்றும், அந்த உடலைத் தந்தது எல்லோருக்கும் அம்மையப்பனாகிய ஆண்டவனே என்றும், அதற்குப் பெயரிட்டதும் ஆண்டவனே என்றும், ஆண்டவன் தந்த அந்த உடல் இவ்வுலகத்தில் எதனாலும் அழிக்க முடியாதென்றும், அது மேலுலகத்தில் அழிக்கப் பெறக்கூடியது என்றும், இவற்றிற்கு நிருபணங்கள் நாடி சாஸ்திரமும், சோதிட சாஸ்திரமும் கொடுக்கின்றன என்றும் விளக்கம் தந்திருக்கிறோம்.

6. இவ்வுலகம் நமக்கு சொந்த இடமா? அல்லது மேலுலகம் நமக்குச் சொந்தஇடமா? நாம் எங்கிருந்து வந்திருக்கிறோமோ, எந்த இடத்திற்கு, நாம் வந்த இடத்திலிருந்து திரும்பவும் சென்று சேருகிறோமோ, அது தானே நமது சொந்த இடமாக இருக்க வேண்டும்.

இப்பூவுலகம் நமது சொந்த இடமல்ல; மேலுலகமே நமது சொந்த இடமாகும். அவரவர் செய்த கன்மத்திற்கு ஈடாகக் கருணையுள்ள கடவுள் கொடுத்த தீர்ப்பின் படியே நாம் இவ்வுலகில் வந்து பிறந்திருக்கிறோம். என்பதை நாடி சாஸ்திரம் சந்தேகத்திற்கு இடமின்றி ஊர்ஜிதப் படுத்திவிடுகின்றது. எப்பொழுதும், தீர்ப்புக் கொடுக்கின்ற இடம், தீர்ப்புக் கொடுக்கப்பட்டவர்கள் வாழ்கின்ற சிறைச்சாலைக்கு வெளியில் தானே இருக்கும். தீர்ப்புக்கொடுக்கிற அதிகாரிகளும், அந்த சிறைச்சாலைக்கு வெளியில் தானே இருப்பார்கள்.

சிறைத்தண்டனைக்கு உட்பட்ட அத்தனை பேர்களும், சிறைச்சாலைக்கு வெளியே, யாதொரு தடையுமின்றி, சுதந்திரமாகத்தானே வாழ்ந்தவர்கள் ஆவார்கள். சிறைச்சாலைக்கு உள்ளே இருக்கிற வேற்றுமைக்குக் காரணம், அதிகாரிகள் கொடுத்த தீர்ப்பே ஆகும். அவ்விதத் தீர்ப்புக்குக் காரணம், அவரவர் அதற்கு முன் சட்டவிரோதமாகச் செய்த செய்கைகளால் தானே ஏற்பட்டதாகும். ஆகவே இவ்வுலகில் வாழுகின்ற சகலருக்கும் சொந்த இடம், மேலுலகங்களே யாகும். இப்பூவுலகம் வந்த இடமேதான். எங்கிருந்து நாம் இங்கு வந்தோமோ, எங்கு நாம் திரும்பவும் சென்று வாழப்போகிறோமோ, அதுவே நமது சொந்த இடமாகும். இம்மை வாழ்வு என்பது இவ்வுலக வாழ்வும், அம்மை வாழ்வு என்பது, தொடர்ந்து வாழ்கின்ற மேலுலக வாழ்வும், அது முடிந்தபின் கொடுக்கப்படும் புதிய உடம்போடும் புதிய பெயரோடும் கூடிய வாழ்வு, மறுமை வாழ்வு ஆகும். அம்மை மறுமை வாழ்வுகளை அடியோடு மறந்ததே உலகத்தில் இன்று நடக்கின்ற பலவித அட்டூழியங்களுக்கு மூலகாரணமாகும்.

இப்பூவுலகில் வாழ்ந்து வரும் மக்களில் பெரும்பாலோர், அவரவர் மனதால் வாக்கால், உடலால், உடைமையால், (பொருளால்) செய்துவரும் நல்வினைகளும், தீவினைகளும் உண்மையாகவே மேலுலகங்களில் பதிவாகின்றன என்பதைச் சிறிதும் உணராது இருக்கின்றனர். யார் யாருக்கு அவ்வினைகள் செய்யப்பட்டனவோ, அவரவரது தகுதியைப் பொறுத்து, புண்ணிய பாவங்களுக்குத் தகுந்தபடி பிறவிகளும், இன்ப துன்பங்களும், ஆண்டவனால் கொடுக்கப்பெறுகின்றன என்பதையும் உணராதிருக்கின்றனர்.

இப்பூவுலகில் நனவில் தூல உடலைச் சுமந்துகொண்டிருக்கிற சொப்பன உடலே இறந்தபின், மேலுலகங்களில் தொடர்ந்து அவரவர் செய்த புண்ணிய பாவங்களுக்குத் தக்க அருள்உலகத்திலோ,இருள்உலகத்திலோ தொடர்ந்து வாழும்படி ஆண்டவன் செய்கிறார் என்பதையும் உணராதிருக்கின்றனர்.

அவ்வுலக வாழ்வு முடிந்ததும், அவரவரது சொப்பன- உடல் அழிக்கப் பெற்று அவரவர்கள் இவ்வுலகிலும், அவ்வுலகிலும், செய்த புண்ணிய பாவங்களின் தன்மைக்குத் தகுந்தபடியே, நீதியுள்ள ஆண்டவன் நன்மையாகவோ, தீமையாகவோ, தீர்ப்புக்கொடுக்க வேண்டியதிருக்கிறது என்பதையும், அத்தீர்ப்பைப் பொறுத்தே, மறுபிறவிகளில் உயர்ந்த பதவிகளும், தாழ்ந்த பதவிகளும், இன்பங்களும், துன்பங்களும் ஏற்படுகின்றன என்பதையும், உணராதிருக்கின்றனர். அவரவர் இன்றுள்ள நிலைகளுக்கு அவரவர் முன்பு செய்த புண்ணிய பாவங்களே மூலகாரணமாகும். அதனாலேயே, "இன்பமும், துன்பமும் தான் தர வருமே" என்றும், 'பெருமைக்கும் ஏனைய சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்' என்றும் பதப் பூர்வ புண்ணியனும் என்றும் ஆன்றோர் கூறியிருக்கின்றனர் என்று விளக்கங்கள் கொடுத்து வருகிறோம். இவற்றின் உண்மைகளை எந்த அளவில் மக்கள் உணர்ந்து கொள்வார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்கு மேன்மையான நல் வாழ்வு வாழ்வார்கள் என்பது திண்ணம்.

மேலும், ஆலய வழிபாடு, கூட்டு வழிபாடு, வீட்டு வழிபாடு, சிரார்த்தம், சுமங்கலப்பிரார்த்தனை, நந்தி வழிபாடு, இறுதிச் சடங்கு, ஆகியவற்றின் அவசியத்தையும், அதற்குரிய பலனையும், வலியுறுத்தி நிரூபிக்கவே, ''இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்'' ''விக்ரக ஆராதனையின் விளக்கம்'' போன்ற ஆராய்ச்சிக்குரிய பிற நூல்களையும், நாம் வெளியிட்டிருக்கிறோம்.

இவ்விதமான விளக்கங்களையும், நிரூபணங்களையும், தவிர, வேறு எந்தெந்த வகையில் மேலே உள்ள கேள்விகளுக்குச் சமாதானம் சொல்லலாம் என்று யாராவது தெரிவித்தால், அது சிறப்பாக இந்து மதத்திற்குச் செய்யும் பெரியதோர் பயனுடையசேவையாகும். அதனால் மக்கள் கடவுள் பால் இன்னும் அதிகமான பயபக்தியுடையவர்களாக ஆவார்கள். உலகத்தில் ஒழுக்கமும், சமாதானமும், நின்று நிலவும்.

"சத்யமேவ ஜயதே"

மன அடக்கம்

மனத்தை அடக்கி ஒரு நியமத்தோடு செலுத்தினால் பெரும் நன்மைகள் பெறுவோம். அவற்றைவிட மேலான நன்மைகளைத் தாயோ தந்தையோ அல்லது மற்ற உறவினரோ கொடுக்கமுடியாது.

— புத்தபெருமான்

எங்கள் மனமுவந்த அன்பளிப்பு

என். எம். டி.

பேனிவ்ஷர்

19-21, பள்ளிவாசல் கட்டடம்
சாவகச்சேரி.

உத்தரவாதமுள்ள அழகிய தங்க பவுண்
நகைகள் கிடைக்குமிடம்



சிவா ஜுவல்லர்ஸ்

செல்வத்துரை பத்தர் தங்கராஜா
கண்டி வீதி — சாவகச்சேரி.

★ மோட்டார் லொறி ★ கார் உழவு இயந்திரம் ★ தண்ணீர் பம்புகள்
பிழை திருத்துவதற்கும் உப உறுப்புகள் உற்பத்தி செய்வதற்கும்

சிறந்த ஸ்தாபனம்

மயூரன் ஓட்டோ மோபைல் என்ஜினீயர்ஸ்

(உரிமையாளர்: S. திரவியம்)

கண்டி வீதி — சாவகச்சேரி.

Mayooran Automobile Engineers,

KANDY ROAD — CHAVAKACHCHERI.

"ஆத்மஜோதி"

கடந்த 30 ஆண்டுகளாக ஆற்றிவரும் அரும்பணிக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!



தங்களது புகைப்படங்களை வேண்டிய அளவுகளில் சிறந்த முறையில்
குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்,



ஜீவஜ ஸ்ரூடியோ

கண்டி வீதி — சாவகச்சேரி.

ஆத்மஜோதியின் பணிக்கு
எமது
நல்வாழ்த்துக்கள்!

★ தையல் நூல்வகைகள்
★ மங்கையர் அலங்காரப் பொருட்கள்
★ அழகு சாதனங்கள்
★ பரிசிற் பொருட்கள்

பெற்றுக்கொள்ள
சிறந்த
ஸ்தாபனம்



இந்திரன்ஸ்

31. தனங்கிளப்பு ரோட்,
சாவகச்சேரி.

★ அனுபமிக்க தொழிலாளர்கள்
★ நவீன அச்சியந்திரங்கள்
★ விதவிதமான அச்செழுத்துக்கள்
★ குறைந்த செலவு
★ குறிப்பிட்ட நேரம்
★ கவர்ச்சிகரம்

ஆகியவற்றுடன் உங்கள்
அச்சு வேலைகளை மும்மொழிகளிலும்
செய்துகொள்ள மலைநாட்டில்
சிறந்த இடம்



ஸ்ரீ

ஆத்மஜோதி

அச்சகம், நாவலப்பிட்டி.

தொண்டு சிறக்க எமது
அன்பளிப்பு

அழகிய தங்கப் பவுண்
நகைகளுக்கும், வைரங்களுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

வீ. எம். கே. தங்கமாளிகை
நகை வைர வியாபாரம்

போன் 288

கண்டி வீதி — சாவகச்சேரி

ஆத்மஜோதியின் 30வது ஆண்டு
விழாவினை யொட்டி
எமது உளம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

த. துரைஸ்வாமி
முகாமையாளர்

உஷா தையல் மெஷின் கம்பெனி
சாவகச்சேரி.

ஆத்மஜோதியின் சமயப்பணி மேலும் சிறக்க
எமது நல்வாழ்த்துக்கள்

தரமான அச்சு வேலைகளுக்கு

திருக்கணித அச்சகம்

கச்சாய் வீதி, — சாவகச்சேரி

பட்டு, பருத்தி, நைலோன் சேலைகள்
சித்தை வகைகள் அச்சிட
சிறந்த ஸ்தாபனம்

பொபி

டிஸ்பென்சறி வீதி, மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

BOBBY

Dispensary Road,
MADDUVIL NORTH
CHAVAKACHCHERI.

குறிப்பு: தபால் பார்சல்களில் வரும் ஓடர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

ஆத்மஜோதியின் ஆன்மீக பணிக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!

ஆரோக்கிய வாச வைத்தியசாலை

அரசினர் அங்கீகாரம் பெற்ற ஆயுர்வேத வைத்தியர்கள்.

வைத்தியமணி:
பே. பிலிப்ஸ்

வைத்தியாச்சாரி:
லி .புஸ்பராணி

மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

உயர்ந்த ரகம்! நிதான விலை!!

* பிரிண்டட் பெப்ரிக்
* சேட்டிங்
* சூட்டிங்

பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும்
ஏற்ற
றெடிமேட் உடைகள்
குறைந்த விலையில் வாங்குவதற்கு
சிறந்த ஸ்தாபனம்

குறைஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

E. B. 2, மார்க்கட் — சாவகச்சேரி.

ரேடியோ பாவனையாளர்கட்கு!

உங்கள் வானெலிக் கருவிகள் அதிருப்திகரமாக இயங்கினால் (தற்போது புதிதாக அமைக்கும் முறையைக்கொண்டு) சீராக கேட்க முடியுமென்பதை அறியத் தருகிறோம்.

அத்துடன்

எவ்விதமான ஸ்பீக்கர்களும் சீராக்க எம்முடன் ஒரு முறை விஜயம் செய்யுங்கள்!

மொடேன் ரேடியோ சேர்விஸ்

கண்டி வீதி — சாவகச்சேரி.

பழமொழி உணர்த்தும் சமய உண்மைகள்

(பேராசிரியர்: வ. பெருமாள் — எம். ஏ, பி.டி.எம்.ஆர்.ஏ. எஸ்., தலைமைத் தமிழ்ப்பேராசிரியர் தமிழ்த்துறைத் தலைவர்—முன்னிலைக் கல்லூரி, உரிகம், கோலார் தங்கவயல் கருநாடக மாநிலம்—இந்தியா.)

தமிழ் மொழியில் பல்வேறு இலக்கியங்கள் அரும்பி மலர்ந்திருக்கின்றன. அவற்றுள் பழமொழியும் ஒன்று. ஏனைய இலக்கியங்கள் கற்றோர்க்கு மட்டும் உரியவை. ஆனால் பழமொழி மக்கள் அனைவருக்கும் உரிய பொது இலக்கியமாகும். இது பழமொழிக்கு உரிய தனிப் பெருஞ் சிறப்பு. காலத்தால் தொன்மையான பழமொழி உண்மையையும், அநுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டெழுந்தது. தமிழ்ப் பழமொழியில் எல்லாக் கருத்துக்களும் செம்மையாகப் பொதிந்திருக்கின்றன. அவற்றுள் சமயக் கருத்துக்களை மட்டும் இங்கு நோக்குவோம்.

மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள ஆன்மீக உறவை விளக்குவது சமயம். அரிசியையும், பச்சைக்காய்கறிகளையும் உண்பதற்கு ஏற்ற முறையில் பக்குவப் படுத்தும் கலையை சமையல் எனக்குறிப்பிடுகிறோம். 'சமை' என்னும் சொல் பக்குவப் படுத்து என்னும் பொருளைக் குறிக்கும். 'சமை' அடிப்படையாகப் பிறந்த 'சமைதல்' என்னும் சொல் அமைதல், ஆயத்தமாதல், பூப்படைதல், பக்குவமடைதல் முதலிய பொருளைக் குறிக்கும். 'சமை' என்னும் அடிச் சொல்லிலிருந்து தோன்றியதுதான் 'சமயம்'. அரிசியையும், பச்சைக் காய்கறிகளையும் பக்குவப் படுத்தும் கலைக்குச் சமையல் என்று பெயர். அது போலவே விலங்குணர்ச்சியுள்ள கொடி மனிதனைத் தெய்வீகப் பண்புள்ள சான்றோனைப் பக்குவப் படுத்தும் ஆன்மீகக் கலைக்குச் சமயம் என்று பெயர். சுருங்கக் கூறுமிடத்துப் பொல்லாதவனை நல்லவனை மாற்றுவது சமயம். மருள் நெஞ்சத்தை அருள் நெஞ்சமாக ஆக்குவது சமயம். கல் உள்ளத்தைக் கனி உள்ளம் ஆக்குவது சமயம். பகைமையைப் போக்கி ஒற்றுமையை உண்டாக்குவது சமயம். கடவுளுக்கும், மனிதனுக்கும் உள்ள ஆன்மீக உறவாகிய பக்தியை மனிதனின் உள்ளத்தில் ஊட்டுவது சமயம். எம்மதமும் சம்மதம் என்பதே சமயத்தின் தலையாய குறிக்கோள்.

இறைவன் ஒருவனே என்னும் அடிப்படைக் கொள்கை கடவுள் மீது நம்பிக்கை உள்ளவர்கள் எல்லோர்க்கும் உடன்பாடானது. இறைவனைப்பற்றிக் குறிப்பிடுகிற பழமொழிகள் யாவும் இறைவனை ஒருமையில் குறிப்பிடுகின்றன. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் பழமொழி இந்த உண்மையைத் தெளிவாக மெய்ப்பிக்கிறது. இறைவன் ஒருவனே; ஆனால் பெயர்கள் பல. குறிக்கோள் ஒன்றே; ஆனால் நெறிகள் பல. வீட்டிலுள்ள மின்சாரம் ஒன்றே; ஆனால் வெளிப்படும் முறைகள் பல. விளக்கின் வழியாக மின்சாரம் வெளிப்படும்போது ஒளியாகக்காட்சியளிக்கிறது. வானொலிப் பெட்டி வாயிலாக வெளிப்படும்போது இசையாகக் காட்சியளிக்கிறது. விசிறியின் மூலமாக வெளிப்படும் போது இனிய காற்றாக வீசுகிறது. வெப்பக்கருவி (Electric Heater) மூலமாக வெளிப்படும் போது வெம்மையாகத் தென்படுகிறது. மின்சாரத்தின் வெளிப்பாடுகள் பல வடிவங்களில் இருந்தாலும் மின்சாரம் ஒன்றே என்பதை நாம் மறக்கவோ மறைக்கவோ முடியாது. அதுபோல அருள், ஆற்றல், அறிவு முதலிய பல வேறு வடிவங்களில் கடவுள் வெளிப்பட்டாலும் கடவுள் ஒருவனே என்னும் பேருண்மையை நாம் உள்ளத்தில் நன்கு பதியவைத்தல் வேண்டும். 'அரியும் சிவனும் ஒன்று, அதை அறியாதவன் வாயிலே மண்ணு' என்பது பழமொழி.

உலகம் தோன்றுவதற்கு மூலகாரணமானவன் இறைவன். இறைவனுக்கு 'ஆதி' என்னும் பெயரும் உண்டு. ஆதி என்னும் சொல் தொடக்கத்தைக் குறிக்கும். சாகப்போகிறகாலத்திலே சங்கரா, சங்கரா என்பதைவிட, வெள்ளம் தலைக்குமேல் ஓடும் போது அணை போட முயல்வதை விட, ஏற்ற காலத்தில்

ஆண்டவனைத் தொழுதல் வேண்டும் என்னும் சமய நீதியை நம்பழமொழி உணர்த்துகிறது. 'ஐந்து வயதில் ஆதியை ஓது' என்பதே அந்தப் பழமொழி. ஒரு கருத்தை அறிவதற்கும், உணர்வதற்கும் உரியகாலமும் ஏற்ற பருவமும் அதுவேயாகும். அதாவது ஐந்து வயது. ஐந்தில் அறியாதவன் ஐம்பதில் அறிவானு? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? இந்தப் பழமொழிகள் இந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

சமயம் என்பது கல்வியின் ஒரு பகுதியன்று. அது வாழ்க்கையின் அடிப்படையான நெறி. வழக்கறிஞர் வழக்குகளையும் சட்டத்தையும் அறிந்திருந்தால் போதும். அவர் வழக்கறிஞராகத் தொழில் புரிந்து வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியமில்லை. அதைப் போலவே ஏனைய துறைகளில் உள்ளவர்கள் தத்தம் துறைகளைப் பற்றிய அறிவைப் பெற்றிருந்தால் போதும். அவற்றைச் செயற்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் சமயம் அவ்வாறன்று. சமயம் என்பது வெறும் ஏட்டு நெறியோ, அறிவு நெறியோ அன்று. அது வாழ்க்கை நெறி. சமயமும் வாழ்க்கையும் இணைந்தே செல்ல வேண்டும். இல்லாவிட்டால் 'படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்' என்னும் பழமொழிக்கேற்ப வாழ்க்கை அமைந்துவிடும்.

தமிழகத்தில் சமயப்பெரியார்கள் பலர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். அப்பர். திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர். இவர்களைச் சமயகுரவர்கள் என்று சிறப்பாகக் குறிப்பிடுவதுண்டு. இறைவனை ஆண்டையாகவும், தம்மை அடிமையாகவும் கருதி உழவாரப்படை கொண்டு உள்ளன்புடன் தொண்டு புரிந்தார் அப்பர். 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற உயர்ந்த கருத்தைக் குறிக்கோளாகக் கொண்டவர் அப்பர். அவர் பின்பற்றிய நெறி அடிமை நெறி அல்லது தாசமார்க்கம். இளம் வயதில் இறைவன் அருள் பெற்றவர் ஞானசம்பந்தர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய பெருமை ஞானசம்பந்தரைச்சாரும். அவர் இறைவனைத் தந்தையாகவும், தம்மை மகனாகவும் கொண்டொழுகினர். அவர் கடைப்பிடித்த நெறி தந்தை மகன்மை நெறி அல்லது சற்புத்திரமார்க்கம்.

சுந்தரர் இறைவனைத் தம் தோழராக மதித்து ஒழுகினர். 'ஏழிசையாய் இசைப்பயனுய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்' என்று சுந்தரர் உரிமையுடன் பாடுவது இங்கு நோக்கத் தக்கது. அவர் பின்பற்றிய நெறி தோழமை நெறி அல்லது சகமார்க்கம். அறிவின் வடிவமாக விளங்கும் இறைவனை அறிவு நெறியில் வழிபட்டவர் மாணிக்கவாசகர். அவர் இயற்றிய திருவாசகத்தின் இனிமையை இராமலிங்க அடிகள் உளம் உருகிப் பாடுகின்றார்.

'வான் கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப் பஞ்சா ற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித் தீம்சுவை
கலந்து என்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.'

'திருவாசகத்துக்கு உருகார் ஒருவாசகத்துக்கும் உருகார்! என்பது பழமொழி. மாணிக்கவாசகர் பின்பற்றிய நெறி அறிவு நெறி அல்லது ஞான மார்க்கம். அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் முதலிய நால்வரும் முறையே அடிமை நெறி, தந்தை மகன்மை நெறி, தோழமை நெறி, அறிவு நெறி ஆகிய நெறிகளைப் பின்பற்றினர். 'நார்லுபோர்போன வழியில் நாம் போகவேண்டும் என்பது பழமொழி. 'நாலுபோர்' என்பது சமய குரவரைக் குறிக்கும். அந்நால்வரும் போன வழி நல்லவழி.

பற்று இருவகைப்படும். ஒன்று அகப்பற்று மற்றொன்று புறப்பற்று. 'நான்' என்பது அகப்பற்று. 'நான் உயர்ந்தவன்,' 'நானே உயர்ந்தவன் என்பவை அகப்பற்றிலிருந்து 'எழுந்த ஆணவ மொழிகள். 'என்பொருள்,' என் வீடு, 'என் சொத்து முதலிய புறப்பற்றுக் காரணமாக எழுந்த ஆசை மொழிகளாகும். இவ்விருவகைப் பற்றையும், செருக்கையும் அறவே ஒழித்தவன் உயர் நிலையை அடைவான்.

'யான் எனது என்னும் செருக்கறுப்பான்
வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்'
என்று குறள் பாடுகிறது.

இருவகைப் பற்றையும், மூவகை ஆசையையும் அறவே துறந்தவனே துறவி. மனத்தை அடக்கிய துறவியுடன் வென்ற வேந்தனை ஒப்பிட்டுப் பார்த்தால் வேந்தன் தாழ்ந்தே காட்சியளிப்பான். 'துறவிக்கு வேந்தன் தும்பு' என்பது பழமொழி.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் நம் முன்னோர் உறுதிப்பொருளாகக் கருதினர். ஒருவன் வீடு பேற்றை அடையத் தவம்புரிய வேண்டியதில்லை. காவியுடை யணிந்து கானகத்திற்குச் செல்லவேண்டியதில்லை. தலையில் மொட்டையும், நெற்றியில் பட்டையும், கழுத்தில் கொட்டையும், காலில் கட்டையும் அணிந்துகொண்டு காட்சியளிக்க வேண்டியதில்லை. பற்றை அறவே நீக்கி விட்டால் வீடுபேறு தானாகவே கிட்டும். இந்தப் பேருண்மையை 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்னும் பழமொழி நன்கு தெளிவாக்குகிறது.

'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்பது அனைவரும் நன்கறிந்த பழமொழி. காற்றடிக்கும் போதே நெல் முதலிய தானியங்களை நன்முகத் தூற்றிக் கொள்ளவேண்டும் என்பது இந்தப் பழமொழியின் சொற்பொருளாகும். வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்பது இதன் உட்பொருள். ஆன்மீகக் கண்கொண்டு இந்தப் பழமொழியை ஆராய்ந்தால் இதன் சொற்பொருள், உட்பொருள் ஆகியவற்றைக் கடந்த நிலையில் நுண்பொருள் புலனாகும். காற்றுள்ளபோது நெல்லைத் தூற்றினால் தூய நெல்மட்டும் நிலத்தில் தங்கிவிடும்.

அதைப் போலவே தன் மூச்சு உள்ளபோதே காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூக்குற்றங்களையும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் போக்கிக் கொள்ளவேண்டும். நெல்லைத்தூற்றும்போது நெல் மட்டும் தங்கிப் பதர் மட்டும் நீங்குவதைப் போல தூய அறிவு மட்டும் பெற்று நின்று அறியாமை முதலியவை நீங்கி விடும். மனிதனின் மூச்சுக் காற்று நின்றுவிட்டால் அவன் தன்னிடமுள்ள குற்றங்களைப்போக்கிக் கொள்ள இயலாது.

'இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான், என்பது பழமொழி. ஒருவனுக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தால் பிறகு அவன் எல்லாவற்றையும் கேட்பான் என்று நாம் இந்தப் பழமொழிக்குப் பொருள் காணுகிறோம். இந்தப் பழமொழியை 'இருக்கஇடங்கொடுத்தால் படுக்க பாய் கேட்பான்' ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியது. ஆகிய பழமொழிகளுக்கு இணையாகக் கருதுகிறோம். இந்தப் பழமொழியை ஆழ்ந்து நோக்கினால் இதன் ஆன்மீக நுண்பொருள் தெளிவாகும். இறைவனுக்கு நம் உள்ளத்தில் இருக்க இடம் கொடுத்தால் அவன் நம் அறியாமையைப் பிடுங்குவான் என்பது இப் பழமொழியின் மெய்ப்பொருள். இத்தகைய பழமொழிகள் இன்னும் பல இருக்கின்றன. இவற்றைத் தத்துவக் கண் கொண்டு ஆராய்ந்தால் இவற்றின் சொற் பொருள், உட்பொருள் ஆகியவற்றைக் கடந்த நிலையில் மெய்ப் பொருள் புலனாகும்.

ஆற்றல் இருந்தால் செய், இல்லாவிட்டால் சும்மா இரு என்று சொல்வதற்குப் பதிலாக 'சக்தி இருந்தால் செய், இல்லாவிட்டால் சிவனே என்று இரு' என்னும் பழமொழியைப் பயன் படுத்துகிறோம். பெண்ணின் வடிவமாக விளங்கும் சக்தி இயக்குகிறாள். ஆணின் வடிவத்தில் இருக்கும் சிவன் இயங்குகிறான். பெண்மையும் தாய்மையும் போற்றும் வகையில் அமைந்துள்ள இந்தப் பழமொழி சிலேடை நயத்துடன் சிறந்து விளங்குகிறது. பாரதியார்

நல்லதோர் வீணை செய்தே — அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி — எனைச்
சூழ்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்.

என்று சிவனையும் சக்தியையும் இணைத்துப் பாடுகிறார்.

தமிழில் சமயத்தைப் பற்றிய பழமொழிகள் மிகுதியாக இருக்கின்றன. இவை யாவும் சிந்தனையின் சாரமாகவும் அறிவின் பிழிவாகவும் அமைந்து கற்போருக்குப் பெரு விருந்து அளித்த வண்ணம் இருக்கின்றன. இந்தப் பழமொழிகளை நன்கு ஆராய்ந்து தெளிந்து பயன் அடைதல் தமிழரின் தலையாய கடமையாகும்.

பதினெண் சித்தர்கள்

— கீதாவாசஸ்பதி, சுவாமி அத்வயானந்த ஸரஸ்வதி — ஈங்கோய்மலை —

தமிழ் நாட்டிலே, மதுரை மாநகருக்கு அடுத்துள்ள அழகர் கோவில் என்று வழங்கும் பழைய பழமுதிர்சோலை ஷேத்திரத்திலே, பதினெட்டாம் படிக் கருப்பர் இருக்கின்றார். அங்கு 18 படிகள் மட்டும் மிகப் பெரியனவாக இருக்கின்றன. வேறு படிகள் கிடையாது. கேரளத்தில் தற்காலத்தில் மிகப் பிரசித்தமாக விளங்கும் ஐயப்பர் கோவிலில் தனியாக 18 படிகள் இருக்கின்றன. விரதமிருப்பவர்கள் அந்தப் 18 படியில் ஏறிச் சென்றுதான் பின்னர் சுவாமியைத் தரிசிக்க வேண்டும்.

பழங்காலத்தில், மலை முதலிய உயர்ந்த இடங்களிலுள்ள கோவில்களிலெல்லாம் தனியாகத் தெரியும்படியாக கருப்புக் கருங்கற்களினுலே 18 படிகள் கட்டப்பட்டிருக்கின்றன. தத்துவங்களை அறியாத இக்காலத்தில், அவை இன்னது என்று அறியாத—கோவில் அறங்காவலர்களால், படிகள் புதுப்பிக்கப்படும் பொழுது, அவைகள் அழிக்கப் பெற்றுவிடுகின்றன. ஆதலால், இப்போது சில கோவில்களில் மட்டுமே அந்தப் பதினெட்டுக் கருப்புப் படிகள் காணப்படுகின்றன.

ஆடி மாதம்18ம் நாளன்று காவேரிதேவி 18 படிகள் மூழ்கும்படி வெள்ளம் பெருகி வருகின்றுள். அதனுல், காவேரி நதிக் கரையில் உள்ள ஊர்களிலெல்லாம் அன்று 18ஆம் படிப் பெருக்கு விழா கொண்டாடப்பெற்று வருகின்றது.

வேதங்கள், புராணங்கள், இதிகாசம் பிரம்ம சூத்திரம் ஆகியவற்றை நமக்கு வகுத்துக் கொடுத்துள்ள வேத வியாச முனிவர் 18 மகா புராணங்களைச் செய்திருக்கின்றார். உப புராணங்களும் 18 ஆக இருக்கின்றன. பஞ்சமோ வேதம் என்று சொல்லப்பெறும் மகா பாரதம் என்னும் இதிகாசம் 18 பருவங்களை உடையதாக இருக்கின்றது. மகா பாரதப் போரும் 18நாட்கள் நடந்ததாகவும், 18 அக்குரோணி சேனைகளை உடையதாக இருந்தது என்றும், போர் தொடங்கும் பொழுது முதன் முதலில் பாண்டவர் பக்ஷத்தில் கிருஷ்ணர், அருச்சுனன், பீமசேனன் முதலிய 18 வீரர்கள், பிரசித்தமான சங்குகளை ஒருவர் பின் ஒருவராகத் தனித்தனியே முழக்கினர்கள் என்றும் சொல்லப்பெற்றுள்ளது.

பதினெண் சித்தர்கள் ஞானக் கோவை என்னும் தமிழ் நூலில் பதினெண் சித்தர்கள் பலர் பேசப்படுகின்றார்கள். இவற்றைப் போல எத்தனையோ விதத்தில் நமது முன்னோர்களால் நமக்கு 18 படிகள் அவசியமானதாகக் காட்டப்பெற்றுள்ளன.

இந்தப் 18 படிகள் எவை என்பதை மகா பாரதத்திலுள்ள "ஸ்ரீமத் பகவத் கீதை" என்னும் நூல் நாம் கஷ்டமில்லாமல் சுருக்கமாகத் தெரிந்து கொள்ளும்படி விளக்கமாகவும், சுருக்கமாகவும் ஆனல், எல்லோரும் அறிந்து கொள்ளும்படி விளக்கமாகவும் கூறுகின்றது.

பகவத் கீதையில் 18 அத்தியாயங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு அத்தியாயமும் ஒவ்வொரு படியைக் கூறுகின்றது. இவைகளெல்லாம் எதைக் காட்டுகின்றன? மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் இந்தப் பதினெட்டுப் படிகளில் ஏறிக் கடவுள் நிலையை அடைந்து விட வேண்டும் என்பதைக் காட்டுகின்றன. இந்த 18 படிகளிலும் ஏறிக் கடவுள் நிலையை அடைந்து விட்டவர் தான் மனிதப்பிறவியின் பயனைப்பெற்றவர் ஆவார் என்பது கருத்து. இந்த 18 படிகளையும் கூறுகின்ற கீதைக்கு, அதன் மாகாத்மியத்தில் 18 பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன.

பகவத் கீதையிலுள்ள ஒவ்வொரு அத்தியாயமும் ஒவ்வொரு படியாகும். அந்த

அத்யாயத்தில் சொல்லியுள்ளபடி செய்து பழகுவதற்கு யோகம் என்று பெயர். அந்த யோகத்தை நன்முகச் செய்து பழகி, முதலில் கடினமாகத் தோன்றினாலும் விடாமல் செய்து, அந்த யோகத்தைச் செய்வதே தனது இயற்கை குணமாக ஆகும்படி செய்து விட்டால், அவர் அந்த யோக சித்தியை அடைந்து விட்டவர் ஆவர். இப்படி 18 யோக சித்தியையும் அடைந்து கடவுள் நிலையை அடைந்துவிட்டால், அவர் பதினெண் சித்தர் என்று சொல்லப் பெறுவார். இத்தகைய பகவத் கீதையின் பெருமையைப் பல நூல்கள் கூறுகின்றன. ''இவ்வாறு ஸ்ரீமத் பகவத் கீதையில் சொல்லியுள்ளபடி 18 யோகப் படிகளிலும் ஏறியவர் பரப்பிரமமாகிய கடவுளை அடைந்து விடுகின்றார்.'' என்று வராக புராணத்திலுள்ள பகவத் கீதா மஹாத்மியம் கூறுகின்றது.

தமிழ் முனிவராகிய அகஸ்தியர் முதலாக எத்தனையோ பதினெண் சித்தர்கள் இருக்கிறார்கள். (இது தெரியாமல் தமிழ் நாட்டில் 18 சித்தர்கள் தான் இருந்திருக்கின்றார்கள் என்று சொல்லுகின்றவர்களும் உண்டு.) இத்தகைய கடவுள் நிலையை நாம் அடைவதற்குரிய 18 படிகளாகிய சித்திகளைக் கொடுக்கக்கூடிய 18 யோகங்கள் எவை என்பதைச்சுருக்கமாகத்தெரிந்துகொள்ளுவோம்:

உலகில் 84 லக்ஷம் வகைப் பிராணிகள் இருப்பதாகச் சொல்லப்பட்படுகின்றன. அத்தனை வகைப் பிராணிகளாகவும் பிறக்கின்ற நாம் எப்பொழுதோ ஒரு சமயம் இந்த அருமையான மனிதப் பிறவியை எடுக்கின்றோம். இத்தகைய அருமையான மனிதராகப் பிறந்தவர் அடைய வேண்டியது கடவுள் நிலையாகிய பேரின்பமே யாகும். உலக இன்பங்கள் அல்ல. உலக இன்பங்களை நம்மைவிட அதிகமாக மற்றப் பிராணிகளே அடைய முடியும். குட்டிகள் குஞ்சுகள் முதலிய குழந்தைகளை வேறு பிராணிகளே அதிகமாகப் பெறுகின்றன. மனிதர் பேரின்பத்தைப்பெறுவதற்காக 18 யோக சித்திப் படிகளில் ஏற வேண்டும்.

1. மனிதராகப் பிறந்தும்கூட, ஒரு யோக சித்தியைக்கூட அறியாமல் இது வரை காலத்தை வீணாகக் கழித்துவிட்டோமே! மனிதராக இன்னும் எத்தனை நாள் வாழப் போகின்றோமோ! இப் பிறவி தப்பினால் இனி எப்பிறவி வாய்க்குமோ! யாது வருமோ! என்று போன நாட்களைக் குறித்து மிகவும் வருந்த வேண்டும். இவ்வாறு வருந்துவது முதற்படியாகிய யோகம் ஆகும். இனி உலக இன்பங்களையே தேடி உழலமாட்டேன். யோகப் படிகளாகிய சித்திகளைப்பெற்று கடவுளை அடையவே முயலுவேன் என்று நிச்சயமாகத் தீர்மானம் செய்துகொள்ள வேண்டும். இதுவே முதல் யோகசித்தி. இந்த யோகம் கைவந்து விட்டால், அப்போதுதான் மனிதராகப் பிறந்தவர் ஆவர். இந்த முதற்படிக்கு ''பச்சாத்தாப விஷாத யோகம்'' என்று பெயர். பின்னர்—

2. ஞான குருவை அடைந்து சேவைகள் செய்து, வணங்கி, அவரிடம் கடவுளை அடைவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? நான் என்பது யார்? எனக்கு எப்படி இந்த உடல் வந்தது? எனக்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம்? என்பது முதலான கேள்விகளைக் கேட்டு, அவர்பால் ஆத்ம உபதேசம் பெற வேண்டும். ''இது ஆத்ம உபதேச சிரவண யோகம்'' என்னும் இரண்டாவது படியாம். கேள்வியால் ஐயங்கள் அகன்றுவிடுவது சித்தி.

3. நாம்செய்யவேண்டிய கடமைகள் என்ன? மனிதர் என்ன கர்மங்களைச் செய்ய வேண்டுமென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன? எல்லோருக்கும், எல்லா ஜீவர்களுக்கும் நன்மை யுண்டாகும் படியான கர்மங்கள் யாவை? என்று தெரிந்து தீய கர்மங்களையெல்லாம் விட்டு விட்டு, மனிதருக்கென்று சாஸ்திரங்கள்நியமனம் செய்திருக்கின்ற நியத கர்மங்களையே செய்து பழகவேண்டும். மறந்தும் நியத கருமங்களை செய்துகொண்டிருக்கும் படியான இயற்கை உண்டாகும்படி பழகிவிட வேண்டும். இப்படி இயற்கை குணம் உண்டாவது மூன்றுவது சித்தியாகும். இது ''நியத கர்ம யோகம்'' என்னும் மூன்றுவது படி.

4. தனக்கு என்று கருதுவதைவிட்டு, கடவுளுக்குப் பிரியம் உண்டாகும் பொருட்டே இந்த நல்ல தர்மங்களை எல்லாம் செய்கின்றேன். அல்லது எல்லோருக்கும் நன்மை

உண்டாகும் பொருட்டே இந்தத் தர்மங்களை யெல்லாம் செய்கின்றேன் என்னும் கருத்தோடு செய்யும் கர்மங்களுக்கு யஜ்ஞ கருமங்கள் என்று பெயர். இந்தப் புண்ணியமாகிய யஜ்ஞ கருமங்களால் தனக்கு வேறு பலன்கள் உண்டாக வேண்டும் என்னும் விருப்பமும், இந்தப் புண்ணிய யஜ்ஞங்களை யெல்லாம் செய்வது மிகவும் கஷ்டமாக இருக்கின்றது என்று அதைச் செய்வதில் வெறுப்பும் கொள்ளாமல் நியத யஜ்ஞ கர்மங்களையே செய்து பழகவேண்டும். இவ்வாறு விருப்பு-வெறுப்பு இல்லாமல் நியதமான யஜ்ஞ கர்மங்களையே செய்து கொண்டிருப்பது தனது இயற்கையாக ஆகிவிடுவது நான்காவது சித்தி. இது ''நிஷ்காம யஜ்ஞ கர்மயோகம்'' என்னும் நான்காவது படி.

5. நாம் செய்கின்ற வேலைகள் எல்லாம் சரீரத்தினாலேயே செய்யப்படுகின்றன. தோல் போர்த்த எலும்பு-தசைகளையுடைய இந்த ஸ்தூல சரீரமும், கண் முதலியவற்றிலுள்ள ஞானேந்திரியங்கள், கை கால் முதலியவற்றிலுள்ள கர்மேந்திரியங்கள், பிராணன், மனது ஆகிய இவையெல்லாம் சேர்ந்த சூக்கும சரீரமும் அஞ்ஞானமாகிய காரண சரீரமும் நான் அல்ல. இந்த சரீரங்களை இயங்கச் செய்வதும் நான் அல்ல. தேவதைகளே இயக்குகின்றன. ஆத்மாவாகிய நான் ஒன்றும் செய்வதில்லை. நான் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு சாக்ஷியாகமாத்திரம் இருக்கின்றேன் என்று அறிந்து; சரீரத்தை நான் என்று கருதும் அகங்காரமும், காரியங்களை என்னுடையன என்று கருதும் மமகாரமும் இல்லாமல், யஜ்ஞ கர்மங்களைச் செய்து கொண்டிருப்பது ''அஹந்தா மமதா ரஹித கர்மயோகம்'' என்னும் ஐந்தாவது படியாகும்.

6. யோகசாஸ்திரங்களில் சொல்லியுள்ளபடி யம-நியம-ஆசன-பிராணயாம-பிரத்யாகார-தாரணை-தியான-சமாதி என்னும் அஷ்டாங்க யோகத்தைச் செய்து பழகி, மனத்தை ஆத்மாவில் அடக்கி நிஷ்டையில் இருப்பது ''ஆத்ம சம்யம யோகம்'' என்னும் ஆறுவது படி.

இந்த ஆறு படிகளும் பொதுவாக கர்ம யோகம்'' என்று சொல்லப்பெறும்.

7. ஈசுவரர் ஒருவரே எல்லாத் தேவதைகளாகவும் இருந்து எல்லாவற்றையும் செய்கின்றார். அவரை பக்தியினால் அடைய வேண்டும் என்றறிந்து கடவுளிடம் பக்தி கொள்வது ஏழாவது படியாகிய ''ஞான விஞ்ஞான பக்தி யோகம்'' ஆகும்.

8. ஈசுவர பூஜை, மந்திர ஜபம், கீர்த்தனம் முதலானவைகளைச் செய்து கடவுளிடம் மிகுந்த பக்தி யுண்டாகும்படி பழகுவது ''அப்பியாச பக்தி யோகம்'' என்னும் எட்டாவது படியாகும்.

9. பக்தியோடு செய்யப்படுகின்ற பூஜை, ஜபம், தவம் முதலிய எல்லாவற்றையும் ஈசுவரருக்கே அர்ப்பணம் செய்து விடுவது ''சர்வார்ப்பண பக்தி யோகம்'' என்னும் ஒன்பதாவது படியாகும்.

10. கோவிலிலிருக்கின்ற சுவாமியை மட்டும் ஈசுவரர் என்று கருதாமல், உலகில் சிறப்பாகக்காணப்படுகின்ற பொருள்கள், பிராணிகள், மனிதர்கள் முதலான சிறந்தவை எல்லாவற்றையும் ஈசுவரர் என்று கருதிப் பக்தி செய்வது ''விபூதி தர்சன பக்தியோகம்'' என்னும் 10-வது படியாகும்.

11. சிறந்தவைகளை மட்டும் ஈசுவர சொரூபம் என்று பார்ப்பதை விட்டு, உலகமாகக் காணப்படுகின்ற ஸ்தாவர-ஜங்கமப் பொருள்கள், ஜீவர்கள், எல்லாமுமே ஈசுவர சொரூபமாகும் என்று கருதி பக்தி செய்வது ''விசுவரூப தர்சன பக்தி யோகம்'' என்னும் பதினொன்றுவது படியாகும்.

12. எல்லோருடைய ஆத்மாவாகவும், தன்னுடைய ஆத்மாவாகவும் இருப்பது ஈசுவரரே என்று கருதி அத்தியந்த பக்தியுடையவராய் எல்லா ஜீவருக்கும் இதமானவற்றைச் செய்வதிலே மகிழ்ச்சியுடையவராய் இருப்பது ''ஈசுவராத்மக பக்தி யோகம்'' என்னும் பன்னிரண்டாவது படியாகும்.

7 முதல் 12 வரையுள்ள 6யோகத்திற்கும் பொதுவாக ''பக்தி யோகம்'' என்னும் பொதுப் பெயர் உண்டு.

13. எல்லோருடைய சரீரமும் இறைவன் இருக்கின்ற க்ஷேத்திரங்கள். இந்த சரீரங்களை யெல்லாம் நன்கு அறிகின்றவர் க்ஷேத்திரஞ்ஞராகிய கடவுளே என்றுஅறிந்து கொள்வது ''க்ஷேத்திர க்ஷேத்திரஞ்ஞ ஞான யோகம்'' என்னும் பதின்மூன்றுவது படி.

14. சத்துவம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்றும் மாயையின் குணங்கள். இவை என்னுடையகுணங்கள் அல்ல என்று தெரிந்து இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்ற நான் இவற்றைக்கடந்தவன் என்று அறிந்து மாயா குணங்களைக் கடந்து நிற்பது ''குணத்திரயாதீத ஞான யோகம்'' என்னும் பதினான்காவது படி.

15. பதினான்காம் படியாகிய யோகத்திற்கு மேலான பதினைந்து, பதினாறு,பதினேழு, பதினெட்டாவதுபடிகளில் ஏறுவதற்கு அருள் புரியும்படி உத்தம புருஷராகிய கடவுளை சரணாகதியாகப் பிரபத்தி செய்தல் ''புருஷோர்த்தம பிரபத்தி ஞான யோகம்'' என்னும் பதினைந்தாவது படி.

16. தன்னிடமுள்ள அரக்க குணங்களாகிய அசுர சம்பத்தை ஒழித்து, தேவ குணங்களாகிய தெய்வ சம்பத்தை வளர்த்துக் கொள்வது ''தெய்வாசுரசம்பத் விபாகஞான யோகம்'' என்னும் பதினாறுவது படியாகும்.

17. மற்றவரெல்லோரும் தன்னைப்பார்த்து தன்னைப்போலவேசெய்யும்படி, சாத்விக சிரத்தையோடு, சாத்விகமான தேவாராதனை உணவு, தானம், யஜ்ஞம், தவம் முதலியவைகளைச் செய்வது''சிரத்தாத்திரய விபாகஞான யோகம்'' என்னும் பதினேழாவதுபடியாகும்.

18. எல்லாத் தர்மங்களையும் பரித்தியாகம் செய்து, கடவுள் ஒருவரையே சரணாகதியாக அடைந்து, சகல பாபங்களையும் ஒழித்து, கடவுளின் சொரூபமாகிய மோக்ஷ நிலையில் நிற்பது மோக்ஷ ஸந்நியாச ஞான யோகம்.'' என்னும் பதினெட்டாவது படியாகும்.

13 முதல் 18 வரையுள்ள 6 யோகங்களுக்கும் பொதுவாக ''ஞானயோகம்'' என்று பெயர் சொல்லப் பெறும்.

இந்த 18 யோகசித்திப் படிகளிலும் ஏறியுள்ளவர் ''பதினெண் சித்தர்'' எனப்பெறுவர். இவர்கள் கடவுளோடு ஒன்று சேர்ந்து கடவுளாகவே ஆகிவிடுவார்கள். ஆதலால் இவர்கள் இதற்குமேல் செய்யவேண்டியது ஒன்றுமே இல்லை.

ஸ்ரீமத் பகவத் கீதையானது இந்த பதினெட்டு யோக சித்திப் படிகளையும் சில சுலோகங்களாலேயே கூறுகின்றது. ஆயினும், ஒவ்வொரு படியாகிய ஒவ்வொருயோகத்தையும் சொல்லும்போது, அப்பொழுது ஏற்படுகின்ற ஐயங்களை யெல்லாம் அகற்றுவதற்காகப் பல சுலோகங்கள் சொல்ல வேண்டியிருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு படியைச் சொல்லும் ஒவ்வொரு அத்தியாயமும் பல சுலோகங்களையுடையனவாக இருக்கின்றன. 20 சுலோகங்களையுடைய அத்தியாயங்களே மிகச் சிறிய அத்தியாயங்களாகும். மிகப் பெரிய அத்தியாயங்களில் 72, 78 சுலோகங்கள் இருக்கின்றன. இங்ஙனம் பகவத்கீதையானது 700 சுலோகங்களையுடையதாக இருக்கின்றது.

ஆயினும் வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள், ஸ்மிருதிகள் முதலிய எல்லா சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டுள்ளவைகளின் சாரமெல்லாம்இந்த நூலிலேயே அடங்கி யிருக்கின்றதென்பது:— இந்த நூல்களை யெல்லாம் நன்கு அறிந்துள்ள நமது முன்னோர்களின் சித்தாந்தமாகும்.

இத்தகைய சித்திகளை யெல்லாம் அடைவதற்கு மனித சரீரம் காரணமாக இருக்கின்றது. ஆதலால் மேல்நிலைகளை அடையவேண்டும் என்று கருதுகின்றவர்கள் ஆரோக்கியத்தையும், ஆயுளையும் வளர்த்துக்கொள்வதற்காக சித்தர்கள், மருந்துகள், மணி, மந்திரங்கள், தவம், யோகமுறைகள், ஆசாரங்கள், ஹோமங்கள் முதலியவற்றைச் சொல்லியிருக்கின்றார்கள்.

நாமும் இவைகளை யெல்லாம் அடைந்துய்ய ஸ்ரீ லலிதாம்பிகை அருள் புரிவாராக!

கண்ணன் அவதாரம்.

நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும், அறத்தை நிலைநிறுத்தவும், நான் யுகந்தோறும் பிறக்கிறேன்.

—பகவத்கீதை.

இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கை

—சுவாமி சிவானந்த சச்சிதானந்த மாதாஜி-சிவானந்த தபோவனம்-திருக்கோணமலை—

தமிழாக்கம்-: ம. சி. சிதம்பரப்பிள்ளை

இந்து சமயக் கோட்பாட்டின் அதிமுக்கிய மான அம்சம் யாதெனில், உலக மக்களின் இதயக் குகையில், இறைவன் மூலாதாரமாகக் கொண்டு இயங்கும் ஒரு ஜீவாதாரமாக உள்ளான்.

''உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்.
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோவில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்தோம்புகின்றேனே''

என்று தன்நிகரில்லாத சைவ சமய குருவாகிய திருமூலர் கூறுகின்றார்.

ஒரு இந்துவுக்கு, இறை எண்ணம்— தெய்வீக அனுபவம். உலக அமைப்பின் அத்திவாரமாகவுடையது. இந்த ஜீவாதார மான இறை எண்ணம் இவனை முற்றுக அதனோடு ஐக்கியப்படுத்தியுள்ளது. இப்பிரபஞ் சத்தையும் கடந்த நிலையில் இத்தெய்வீக எண்ணம் நிரம்பியுள்ளது.

இந்து வேதாந்த நூல்கள் இன்னும் ஒரு படி சென்று கூறுவது என்ன? ''பரமம், சத் யம், ஜகத்மித்ய, ஜீவ ப்ரமம், வ.ந. அபரக'' ப்ரமம்: இதுவே மெய். பிரபஞ்சம் பொய். ஜீவா என்பது ப்ரமம். வேறுனதன்று. ஆத் மாவினுடைய உள்ளார்ந்த அனுபவம், இன் றும் என்றும் ஞானிகளால் அனுபவ வாயிலா கக் கண்டதும் — இந்தப் பரமாத்மா — பலரா லும் பேசப்படும் பொருள் — கடவுள் — அதி உயர்ந்த கோட்பாடு, பிரபஞ்சத்தின் ஊற்று நீர் நிலை எனலாம். ஆதிகால ஞானிகள் யா வரும் ஒருங்கிணைந்து தங்கள் அனுபவத்தை உலக மக்களுக்கு—மறுக்கமுடியாத உண்மை யை எடுத்துரைத்துள்ளார்கள். ஒரு இந்துவும் இதனை ஏற்க மறுக்கான். வேதம் நான்கும் இந்த உண்மையை ஒன்று சேரக் காண்கின் றது. முடிந்த முடிபாகவும் வாதத்துக்கு அப் பாலானதாகவும் எனக் கண்டுள்ளது.

இருக்கு வேதம் யாது கூறுகின்றது. பிரக் ஞானம் ப்ரமம் அதாவது ப்ரமம் என்றது ஒன்று உண்டு என்பதின் நினைவுத்தன்மை என்பதாகும்.

யயுர் வேதம் கூறுவது யாது? ''அகம் ப்ர மம் அஸ்மி'' அதாவது ''நானே ப்ரமம்'' என் பதாகும்.

சாம வேதம் பகர்வது யாது? ''தத்துவம் அசி நீயே அது'' என்பதாகும்.

அதர் வேதம் அறைவது யாது? ''அயம் ஆத்மா ப்ரமம்! அதாவது எனது ஆத்மா ப்ரமம். இதுவே அதர்வ வேதத்தின் மத்தியக் கருப்பொருள்.

இருக் வேதம் மேலும் கூறுகின்றது: பிரயாபதிவாய ''நான் அசித் அதாவது ப்ரமம் ஒன்றே ஆதியில் உள்ளது. ''தாசிய வாக்கு-திவித்ய அசித்.'' எவனிடம் 'வாக்கு' உண்டோ அதுவும் 'சொல்' என ப்படும். வாக்கு வாய், பரமம், பிரமம். வாக்கு, சொல், சக்தி இவையாவும் பிரிக்க முடியாத சக்தியாகவுள்ள ப்ரமம் என்றதின் காட்சியே. பிரயாபதி - விரும்பினால் பல காட்சிகளாக மாறும், அதுவும் தமக்கு அடுத்த நிலை யாக வே. வேதக் கோட்பாட்டின் பிரகாரம் சொல் லும் செயலும் ஒன்றிணைந்தால் பிரபஞ்சம் உற்பத்திசாலையாகும். பிரபஞ்யத்தில் இச் சக்திமயமாக மாறும்.

பிரபஞ்ச மாற்றம் அதாவது இந்து வேதப்படி—மகா பிரளயம் (பெரு வெள்ளம்) ஆரம்பமாகும் போது வாக்கு மீண்டும் பிர யாபதியிடம் செல்கின்றது. இப்போது அவ ளின் பெயர் சித்ரூபினி. இந்து வேதத்தில் பரிணமத்தையும் இதற்கு மாறுனதையும் சிலந்திக்கும் அதனுடைய வலைக்கும் ஒப்பிடு வார்கள். சிலந்தி வலையைப் பின்னுகின்றது. பின்பு அவ்வலையைத் தனக்குள் இழுக் கின்றது. பிரஜாபதி. பரம் ஆகும்-அதி உயர்ந்த பிரக்ஞை, மாறுந்தன்மையுடைய யாவற்றுக்கும் மாற்றமடையாத ஒரு கொள் கை இதுவே.

தலவாக்கொல்லை நகரில் பவுண் தங்க நகை வியாபாரத்தில்
பல்லாண்டுகளாக மக்கள் மத்தியில்

மங்காப் புகழ் பெற்ற ஸ்தாபனம்



தனலெச்சுமிஸ்

பவுண் தங்க ஆபரணங்களுக்கு
உத்தரவாதமும் உறுதியும் நம்பிக்கையும் நாணயமுமிக்க
ஒரே ஸ்தாபனம்



தனலெச்சுமிஸ்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான நவீன நாகரீக டிசைன்களிலான
தங்க நகைகளுக்கும் பழைய தங்க நகைகளை கொடுத்து புதிய நகைகளாக
மாற்றிக்கொள்ளவும், பழைய தங்க நகைகளை மிக நல்ல விலைக்கு
விற்றுக்கொள்ளவும் மிகச் சிறந்த ஸ்தாபனம்
எங்களிடம் எவர்சில்வர் பாத்திரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.



தனலெச்சுமிஸ்

தங்க நகை வியாபாரம்
19, மெயின் வீதி — தலவாக்கொல்லை.

காலத்திற்கேற்ற அழகிய தங்கநகைகள்
உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்வதற்கு

விஜயம் செய்யுங்கள்

VIJAYA'S

(விஜயா ஜுவல்லர்ஸ்)

16, Main Street - Talawakelle.

எங்களிடம் சகலவிதமான
பாடசாலை புத்தகங்கள் உபகரணங்கள் மற்றும்

உங்கள் வீட்டுச் சுவர்களை அழகுபடுத்தும்
வண்ணத் திந்தை (பெயின்ட்) வகைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

மஹாலக்ஷ்மி புத்தகசாலை

கண்டி வீதி - சாவகச்சேரி.



ஆத்மீகத்

துறையில்

ஒளிவிளக்கென

மிளிரும்



"ஆத்மஜோதி"யின்

30வது ஆண்டுச் சிறப்பு மலருக்கு

எமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

அனைத்திலங்கை பீடிப் பிரியர்களால்
போற்றிப் புகழப்படுவது

சபா பீடி!

சோம்பலைப் போக்கி சுறுசுறுப்பை
உண்டுபண்ணுவது

சபா பீடி!

கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு
தயார் செய்யப்படுவது

சபா பீடி!

தயாரிப்பாளர்கள்:

கே. எஸ். சுப்பிரமணியம்

அன் சன்.

கம்பளை. போன்: 325.

உ

உலகத்துக்கு உழைப்பதே
மோட்சத்திற்கு வழி.
பயன் கருதாது பிரபஞ்சத்துக்கு நன்மை செய்.
இதுவே மோட்சத்திற்கு வழி.
உலகத்தின் வழியாகத்தான்
மோட்சம் அடைய வேண்டும்.



ஆத்மஜோதி 30வது ஆண்டுச்
சிறப்பு மலருக்கு

எமது நல்வாழ்த்துக்கள்!



நூர்ஜஹான் அன் கோ.,

கம்பளை.

போன்: 543.

எமது நல் வாழ்த்துக்கள்



காலத்திற்கும் – கருத்திற்கும் ஏற்ற சகலவித
ஜவுளி வகைகள், ரெடிமேட் ஆடைகள் பெற்றுக்கொள்வதற்கும்



உங்களுக்குத் தேவையான கட்டிட, மற்றும் வீட்டுத் தேவை
களுக்கான சகலவித இரும்புச் சாமான்களுக்கும்
சிறந்த ஸ்தாபனம்



R. வைத்திலிங்கம் லிமிற்றெட்

38, 40, 42, பஜார் வீதி,
பதுளை.

தங்க நகை அணிந்து ஜொலிக்க ஜோதி ஜுவல்லரிக்கு விரையுங்கள்
நவ நாகரீக நங்கையர்கள் விரும்பும் நவீன வகை நகைகள் தயாரிப்பில்
கை தேர்ந்தவர்கள் உறுதி—உத்தரவாதம் நாணயமும் நம்பிக்கைக்கும்



நீங்களும் இன்றே விஜயம் செய்யுங்கள்.

ஜோதி ஜுவலர்ஸ்

149, லோவர் வீதி,
பதுளை.

53, பஜார் வீதி,
பதுளை.

ஆத்மஜோதி 30வது ஆண்டுச் சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!




எல்லாவித தமிழ், ஆங்கில, சிங்கள பாடசாலைப் புத்தகங்கள்
உபகரணங்கள் பெறுவதற்கு மிகச் சிறந்த
ஸ்தாபனம்



அம்பிகா ஸ்டோர்ஸ்

விநியோகஸ்தர்கள்:

- தேசிய காகித கூட்டுத்தாபனம்
- களனி டயர் கூட்டுத்தாபனம்

அம்பிகா ஸ்டோர்ஸ்

இல. 1 பஜார் வீதி,
பதுளை.

தொலைபேசி: 369

ருசியான உணவு, மகிழ்ச்சியான வரவேற்பு
வகை வகையான சைவ உணவுகளுக்கு

மணி'ஸ் கபே

333, பிரதான வீதி — திருக்கோணமலை.

★ ★ ★ ★

சிறந்த உயர்ந்த சுத்தமான பலசரக்குச் சாமான்களை
மொத்தமாகவும் சில்லரையாகவும் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்!

ஸ்ரீ ராஜலெட்சுமி ஸ்டோர்ஸ்

333, பிரதான வீதி — திருக்கோணமலை.

OUR NAME SIGNIFIES OUR BUSINESS
EVERY HOME NEEDS THE SERVICES OF THE

HOME NEED INDUSTRIES

FOR YOUR REQUIREMENTS:

- FROZEN FOODS
- DRUGS
- GROCERIES
- CONDIMENTS

Any thing for the Kitchen, Pantry and the Dining Hall

HOME NEED INDUSTRIES

General Merchants - Millers - Grinders
Manufacture & Distributors

35, Lower Street — BADULLA.

Tele: 444

FELLOW COMMERCIAL INSTITUTE
(Birmingham)

ASSOCIATE MEMBER INSTITUTE ENGINEERING TECHNOLOGY - (London)



MEMBER INDIA SCHOOL OF ACCOUNTANCY - (Calcutta)
ADVANCE MANAGEMENT OF UNIVERSITY OF California and TECHNION ISRAEL INSTITUTE OF TECHNOLOGY.

S. ARUMUGANATHAN

SEXAGENARIAN

IN RETROSPECT

Managing Director:		Trincomalee Wharfage Co. Ltd.,
Director		Trincomalee Tally Contractor's Association
Proprietor	:	V. M. Vadivelu & Bros — Arambamoorthy Bros., Trinco Transporters, Trinco - Mutur Launch Service
Dealer	:	Shell Station, Linganagar, Trincomalee. Lanka Petrol Station, Mutur.
Contractor	:	Registered Government Contractor
Agent	:	Custom House Agent, Steamer Agent.
Valuer	:	Ceylon Transport Board Housing Loan Committee, Dept. of National Housing, Agricultural & Industrial - Credit Corporation.
Commissioner	:	Court Sales District Commissioner Boy Scouts Trincomalee.
Vice Patron	:	Ceylon Referees' Association, Trincomalee Hockey Association, St. Anthony's Sports Club.
Patron	:	Josephian's Sports Club, Star Sports Club, Tricomalee Cycling Club, Trincomalee Clatons Sports Club, Ganeshan Community Centre, Ilaingar Arulneri Mandram, Thiruvalluvar Kalagam.
Vice President	:	Trincomalee Cricket & Athletic Association Tamil University Movement.
President	:	Trincomalee Football Association, Trincomalee Economic Development and Welfare Association.
Vice Chairman	:	Trincomalee District Boys Scouts Association.
Chairman	:	Executive & Finance Committee of Trincomalee District Boys Scouts Local Association.
Member	:	Ceylon National Chamber Industries, Productivity Association of Ceylon.
Life Member	:	Ceylon National Association for the Prevention of Tuberculosis, St. John's College, Jaffna O. B. A. Vadamarachi Girls School Point-Pedro. Automobile Association of Ceylon.
Council Member	:	National Federation of Old Scouts, Ceylon Scouts.
Trustee	:	Sri Konesar Temple, Trincomalee. Land for School at Linga Nagar, Trincomalee.
Benefector	:	Konesar Madam with Bathroom and Toilets Trincomalee. Building at Sivananda Thapovanam Trincomalee. Building at Sivayoga Samajam Trincomalee. Building at St. Thomas College, Mount Lavinia. Building at Hindu College Trincomalee. Building at Tamil University Movement, Trincomalee.
Manager	:	Amman Temple, Point-Pedro. Mavidapura Madam Thellipalai.
Treasurer	:	Sri Konesar Temple, Trincomalee. Hindu College, Trincomalee O. B. A.
District Representative	:	Automobile Association of Ceylon.

ஆத்மஜோதிக்கு

எமது நல்வாழ்த்துக்கள்

இலங்கை முழுவதுமுள்ள
சிறுவர் முதல் பெரியோர் வரை
விரும்பி உண்ணும் பிஸ்கட்

லக்கி லேண்ட் பிஸ்கட்

சுத்தமாக சுகாதார முறைப்படி சத்துப்பொருட்கள்
சேர்த்து தயாரிக்கப்படும் லக்கி லேண்ட் பிஸ்கட்கள்
மொறு மொறுப்பானவை - சுவை மிக்கவை.

இன்றே வாங்கி சுவையுங்கள்

லக்கி லேண்ட் பிஸ்கட்

தயாரிப்பாளர்கள்

படிவத்தை — குண்டசாலே

LUCKY LAND BISCUIT MANUFACTURERS

PADIWATTE — KUNDASALE

Phone: 4217 Kandy

இதுதான் சுழலும் - மாறும் பிரபஞ்சத் தின் மாற்றமில்லாத தளம். நகரும் தன்மை யுள்ள யாவுக்கும் நகர இயலாத தளம் அவசி யம். பரமத்தில் இருவேறு தோற்றம் இல்லை. இந்த உணர்வைத்தான் சச்சிதானந்த சிவரூப என்று அழைக்கப்படுகின்றது. இந்து சமய அடிப்படைத் தத்துவத்தில் இந்நிலை மிகவும் உயர்ந்தது. இதனுடைய சுபாவ நிலை எது வெனில் சாந்தம் அல்லது அமைதி என்பதா கும்.

பூர்வீக இந்து வேதாகம கோட்பாட்டின் படி பிரபஞ்சம் உற்பத்தியாவதற்கு மூலகார ணம் இறைவனின் இச்சையேயாகும். யாவும் பரிசுத்தமான இச்சை அல்லது காமியமே ஒன்றுக்கு மேற்பட்ட உலக படைப்புக்குக் காரணமாக இருந்துள்ளது. காமியத்தின் ஏக புத்திரி வாக்கு. வாக்குத்தான் பிரபஞ்சம். ''ஜகத்வன்கமய'' ஜகத் என்பது சப்தப்ரமம். சர்வம் ஜகத் சக்திமயம் என்பது இந்துக்களி டையே சர்வசாதாரணமாக வழங்கும் ஒரு ஜீவ வாக்காகும். ஆயிரம் வருடங்களுக்குப் பின் இந்தக் கருத்தை நாலாவது புதிய ஏற் பாட்டில் மேல் வருமாறு கூறப்பட்டுள்ளது.

''ஆரம்பத்தில் சொல் இருந்தது. இச் சொல் கடவுளிடம் இருந்தது. சொல்லே கட வுள்'' என்பதாகும்.

பரசப்தமே பிரபஞ்சத்தைஉற்பவித்தது. அதுவே வாயுமண்டலத்தையும், சீதோஷ்ண நிலையையும் சிருஷ்டித்தது. பிரபஞ்சம் முற் றும் படிப் படியாக வெளிச்சம் பரவியது. எல்லா விதமான திடப்பொருட்கள், திரவப் பொருட்கள், வாயு ரூபமானவைகள் யாவும் ஒன்றுடன் ஒன்று சேர்வதால் உண்டாகும் ஒலி: சப்தமாகும். பரசப்த அல்லது வாக்கு நான்கு வகைப்படும். அவையாவன. ''பர'', ''பசாயந்தி'' ''மத்தியம'', ''வைகறை'' என் பனவாகும். தற்செயலான அசைவினால் சிருஷ்டி என்ற நினைப்பு உருவாயிற்று. இது வே சப்தம் என்பதாயிற்று. சப்தம் பரசப்தத் தின் புத்திரி. சப்தமின்மையின் நிலை. இத் தெளிவின்மையான நிலையிலிருந்து பிர ஆசம் வெளிப்பட்டது. அனுபவத்துக்குப் பாஷை இல்லை. எல்லா அனுபவங்களும் சப்தமே.

சாத்திரங்கள் கூறுவது யாது? பரசப்தம் என்பது (ஒரு விசாலமான சப்தத்தினாலான கருவி எனலாம்). ஒரு பொருள் பசாயந்தி என்பது ஒரு கற்பனை நிறைந்த சப்தம். மத்தி யம என்பது ஒரு சப்தத்திலான கருவி என லாம். பிரபஞ்சம் யாவும் ஒரு பரவாக்கியம். மகாபிரளய காலத்தில் அது பரப்ரமமாக மாறுகின்றது. இந்து சாஸ்திரங்கள் யாவும் பிரம்மேவசத்யம் என்னும் தோற்றத்தினுல் ஊடுருவியுள்ளது என்பது விளங்கும்.

(அ) புருஷசுகத் என்பது ஐந்து சாஸ்திரங் களுள் ஒன்று. தினமும் பிராணயம் செய்வ தற்காக இந்துக்களுக்கென அதிகாரப்பட் டுள்ளது. அதில் முதலாவது சூத்திரம் இவ் வாறு கூறுகின்றது.

''சகசார சீரஸ்ய புருஷக சகரஷக சக சாரபாது–'' சா பூமிம் விஸ்வத. விருத்வ. அதியற் கிஷடற் தசன் குளம்''

(ஆ) 'புருஷமேவ இடம். சர்வம்யத் பூதவம் யஷபவாயம். உதாமறி தறவசி சேனு யத் அனென்த் திரோகதி'

(அ) புருஷக: ஆயிரம் தலைகளும் ஆயிரம் கண்களும் ஆயிரம் கால்களும் கொண்ட தும், பத்து அங்குல பரப்புக்கு பிரபஞ்சத்தை ஊடுருவி உள்ளது.

(ஆ) உள்ளவை யாவும் புருஷக. இறந்தவை, இருக்கின்றவை. இருக்கப் போகின்றவை யாவும் புருஷக. இந்தப் பிரம புருஷகதான் அழிவற்ற பரமாத்மா,

ஒரு இந்து ஸ்ரீ ருத்ரம், அல்லது சடாட் சரீயம் அல்லது ருத்ரூப நிஷட் தினமும் ஓத வேண்டிய நூலாக உள்ளது. இந்த ஒன்றை மாத்திரம் ஓதிவந்தால் பரமாத்மாவை உணரக் கூடிய நிலையை எய்துவான் என்று இந்து தர்ம சாஸ்திரம் வற்புறுத்திக் கூறு கின்றது. ருத்ரம் என்னும் நூல் இவ்விடத் தில் பரமாத்மாவை ஒரு நூறு விவரணத் தால் பிரபஞ்சத்தின் ஒரு தோற்றம் அல்லது ஒரு பொருள் என்று கூறுகின்றது. அவரே பரமேஸ்வரனுகவும், படைப்பில் மிகவும்

குறைந்த இயற்கைப் பொருளாகவும் இருக்கின்றார். அவரே அம்பாகவும், வில்லாகவும் நாண் கயிறுகவும், வேடனுகவும், வேடனுக்குரிய அகங்காரமாகவுமுள்ளான். அவரே யக்ஞமாகவும், அக்கினியாகவும், சமித்தாகவும், யக்ஞத்துக்குரியவராகவும் உள்ளார். அவரே பிராமணனுகவும், சண்டாளனுகவும் உள்ளார்.

சமானனுகவும் ஏவலாளியாகவும், புருஷனுகவும் மனைவியாகவும், மக்களாகவும் நேர்மையாளனுகவும், பொய்யனுகவும் இன்னும் எத்தனையோ வகையில் காட்சி தருகின்றார். உண்மையாக அவர் எல்லாமாகவே காட்சி தருகின்றார். ஒருவன் இந்த விதமான மன எண்ணமுள்ளவனுகப் பழகி வந்தானுகில் நாளடைவில் நாமரூபமற்ற ஒரு சக்தியாக மாறுவான். இந்த எண்ணத்தை நிலை நிறுத்தப் பழகினுல், எல்லா இடத்திலும், எதிலும் எவரிலும் இறைவனைக் காண்பான்.

மனிதனுக்கு மனிதன் செய்யும் சச்சரவுகள் நின்று விடும். பூமியில் சமாதானம் மக்களுக்கிடையில் சமரசம் இவை இரண்டும் உலகத்தை நடத்தும் அதி உன்னத சக்திகளாக விளங்கும். இப்போது உபநிஷத்துக்கு வருவோம். பரக் ஞானம். ப்ரம்மா. அறிவே என்றும் உள்ள பிரம்மன் (அயித் தேசிய உபநிடதம் 3:3) இருக் வேதம்.

''தத்துவம் அசி.'' நீ அதுவாக இரு (சாந்தோகிய உபநிடதம் 6' 8. 7) சாம வேதம் ''அகம் பிரம் மஸ் மி'' நானே பிரம்மம், யயுன் வேதம், ''அயம் ஆத்மா ப்ரமா'' இந்த ஆன்மாவே பிரமன் (மாண்டுக்கிய உப அத்வைத வேத).

''இச வசயம. இடம் சர்வம யற்கிஞ்ச யகாதுயம் யகது தியாக் தென புஞ்சிதகக்றிதா கசியாவித்தனம்.

இவ்வுலகில் என்ன வஸ்து நகருகின்றதோ அவற்றுள் ஈசன் உறைகின்றார். யாவையும் துறந்து பேரின்ப நிலையில் இருப்பார். மற்றவரின் இன்பச் செல்வத்தை கவர்வதற்கு நோக்கம் இராது.

''கோட்டயம்'' என்ற இடத்தில் தாம் ஆற்றிய உரையில் மகாத்மா காந்தி இந்த சூத்திரத்தைப் பின் வருமாறு வியாக்கியானம் தந்துள்ளார்:

''எல்லா வற்றிலும் ஆண்டவன் நீக்கமற நிறைந்துள்ளானுகையினுல் இவ்வுலகில் ஒன்றும் உனக்குச் சொந்தமானதில்லை. உனது சொந்த உடம்பும் உன்னுடையதன்று. நீ வைத்திருக்கின்றது என்று எதனை எல்லாம் சொல்லுகின்றாயோ அத்தனையும், தர்க்கத்திற்கிடமில்லாமல், வேறொருவர் இடை நின்று வாதிட முடியாதமாதிரி, அவை இறைவனுக்கே சொந்தமானவை. சர்வ வியாபகமான சகோதரத்துவம், அதாவது மனிதத் தன்மை வாய்ந்தவர்கள் மட்டுமன்று—எல்லா ஜீவராசிகளும் ஒரு சகோதரர்களே என்ற விளக்கம் இம்மந்திரத்தில் நான் காண்கின்றேன். இறைவனிடம் முற்றுக அசையாத நம்பிக்கை கொண்டுவிட்டால் ஆண்டவனை விளக்குவதற்காக எத்தனை அலங்கார வசனங்களை நீங்கள் சொன்னுலும் இந்த மந்திர சுலோகத்தில் அவையாவற்றையும் காண்கின்றேன்.

இறைவனையே முற்றுக நம்பி அவரே யாவற்றையும் தருவார் என்று எண்ணினுல், அதனையும் யான் இந்த மந்திர சுலோகத்தில் காண்கின்றேன். இறைவன் எனது உடலில் ஒவ்வொரு அணுவிலும் நிரம்பி உள்ளார். என்ற திடநம்பிக்கை இருக்கின்றபடியினுல் அதுகாரணமாக ஒரு சக்தி எனக்குள் தோன்றியுள்ளது. அதுவே உலகில் காணப்படும் சகல ஜீவராசிகளையும் சமமாக நோக்குதல் என்பதாகும். இவ்வெண்ணம் தத்துவார்த்தமாகப் பார்க்கும் வகுப்பினருக்கும் சமாதானத்தைத் தரும். இந்த மந்திரம் கூறுவது என்னவெனில் ஆண்டவனது சொத்துக்களை எனது என்று வைத்திருக்க முடியாது. இந்த மந்திர சூத்திரத்தில் நம்பிக்கை கொண்டுள்ள யாவரும்—யானும்—வாழ்க்கையை அர்ப்பணம் செய்து சர—அசர ஜீவராசிகள் யாவற்றுக்கும் மாறுதலில்லாத — தொடர்ந்த சேவை செய்தல் வேண்டும்—ஏனுகில் இறைவன் உலகத்தில் இரண்டறக் கலந்துள்ளார்.

புராண இதிகாச காலத்துக்கு இனிவரு வோம். ஒப்பு உவமை இல்லாத மகாபாரதக் கதைக்கு அத்திவாரக் கல்லாக அமைந்தது பகவத் கீதையும் விஷ்ணு சகஸ்ர நாமமும் எனலாம். பகவத் கீதை உபநிஷத்தின்சாரம் எனலாம். ''சர்வே உபநிஷத்த காவோ தொக்க-கோபலா ஆனந்த னா பரதாவ தஸ்தா. சுதிர்போக் தாதுக்தும் கீதாம்றிதம் மகாது''- (தியான சுலோகம்) பத்தாவதும் பதினேராவதுமாகவுள்ள அத்தியாயங்களி லுள்ள சுலோகங்கள் முற்றிலும் பிரமம் ஒன்றுதான் சகலவற்றிலும் ஊடுருவி உள்ளது என்னுங் கருத்துச் செறிந்துள்ளது.

இரண்டாவது சூத்திரம் கூறுவது: கடவுளுக்கும் அல்லது உயர்ந்த ஞானிக்கும் எனது பிறப்பின் இரகசியம் தெரியாது. ஏனெனில் யானே அவர்களது உற்பத்திக்கு மூல காரணி என்பதால்.

சூத்திரம் 8 கூறுவது:- பிரபஞ்சத்தில் தோன்றும் அத்தனையும் என்னிடமாகவே வந்தன. இதனை அறிந்த ஞானிகள் மிகவும் பக்தி சிரத்தையுடன் வழிபடுகின்றனர்.

சூத்திரம் 20: கூறுவது:- ''ஓ குடகேசா பிரபஞ்சத்திலுள்ள சிருஷ்டிப் பொருட்களின் மனத்தில் இருப்பவனும் யானே! உயிர்க்கூட்டங்களினது முதலும் இடையும் ஈறும் யானே! அதிகாரம் 11ல் கிருஷ்ணபரமாத்மாவைப் பார்த்து அவருடைய உண்மையான சுவரூபத்தைத் தனக்குக் காட்டும்படி அர்ச்சுனன் கேட்கிறான். அவ்வாறு அர்ச்சுனனுக்குக் காட்சி அளித்ததும் அவன் பேச்சிழந்து பீதியுற்று மாயவனே மன்றாட்டமாகக் கேட்டுப் பழையபடி இருக்கும் வண்ணம் செய்கின்றான். இந்தத் தரிசனத்துக்கு அர்ச்சுனன் பக்குவம் அடையவில்லை. ''இந்த அண்டத்துக்கும் முகட்டுக்குமிடையில் உள்ள வெளி முற்றும் பரந்துள்ளீர்கள். மூவுலகும் தங்கள் பெருவடிவத்தினுல் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன''. என்று முறையிட்டான்.

சைவ குரவர்களுள் ஒருவரான மாணிக்க வாசகப் பெருமான் தமது உயர்ந்த அரிய அனுபவ வாயிலாக-திருவண்டப் பகுதியில் முதல் பன்னிரண்டடியில்:-

''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மைவளப் பெருங்காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்றிருரு கோடியின் மேற்பட விரித்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன் தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியுந்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப் பேருழியும் நிக்கமும் நிலையுஞ்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்(து)
எறியது வளியிற்—
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போன் படைக்கும் பழையோன் படைத்தவை''
(மூலம் - போப்பையர்)

என்று விளக்குகின்றார்.

மேலும் திருச்சதகத்தில்: 15-வது திருப்பதிகம்.

'வானுகி மண்ணுகி - வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி - உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகி யானென தென் - றவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்றுயை-என் சொல்லி வாழ்த்துவனே.'

என்று வெளியிடுகின்றார்.

மீண்டும் கோயிற்பத்தில்-பதிகம்: 8ல்,

''பார் பதம் அண்டம் அனைத்துமாய் முனைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின் மலர் நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப் பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரயல் உள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதி—

என்று கூறுகின்றார்.

சைவ சமயத்தின் அபூர்வமான ஒற்றுமைக் காட்சியாதெனில் அறுபத்து நான்கு நாயன்மார்களும் ஆண்டவனைச் சிவன் சக்தியாகவே கண்டு தரிசித்துள்ளனர். ஒரு ஒற்றுமைத் தோற்றத்தில் உறுதியான எதிர் மறையான தோற்றங்கள் இரண்டும் உண்டு. இவ்வுலகின் கண்ணே இவ்விரு தோற்றங்களையும் மனக் கண் முன் இவை ஒன்றுக் கொன்று பிரிக்க முடியாதவை எனக் கண்டு ஆணும் பெண்ணும் சிவமாயும் சக்தியுமாயும் தோற்றம் அளிக்குமென்பர்.

இதுவரை கண்ட காட்சிகளின் பிரகாரம் இந்த முறைகளைத் தன்னுணர்வுடன் அப்பியசித்து வந்தால் தெய்வீக அனுபவத்துடன் நேர் தொடர்பு வந்துவிடும். இந்து தர்ம கோட்பாடு கூறும் பிரகாரம் ஜீவாத்மா ஈற்றில் பரமாத்மாவுடன் ஒன்றிவிடுவதே வாழ்வின் குறிக்கோள். உலக சம்சாரத்தை ஒழித்து, உடலை நீத்து, இறைவனுடன் தனது சாதனைக் கேற்றவில் சம்பந்தப் பட்டு வாழ்வதே ஒரு இந்துவினது குறிக்கோளாகும். இதுவே ''பிரமசட்பவ அல்லது பிரம சத்திதி: அதாவது ஆன்மீகத்தில் ஒரு கட்டுப் பாடான நிலையை எய்துதல். இது எய்தினுல் முழுச் சமாதானம் எல்லை இல்லாத ஆனந்தம் மன அடக்கம் தனித்துவம் இவையாவும்-நான் அல்ல என்ற நிலைக்குக் கொண்டுவரும்.

ஸூபியாக்கள் வகுத்த வாழ்க்கை நெறி

— Dr. K, M. P. முஹம்மது காசிம் Ph.D., —

இன்றைய மனிதர்களோ நோக்கிலுல் இன்பத்தை நுகர ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். அல்லல்கள் நிறைந்த வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து மீட்சிபெற மின்னல்வேகத்திலே பறந்து சென்று பல நாடுகளுக்குப் பயணம் செய்யும் எத்தனையோ மக்களோ இன்று பார்க்க முடிகிறது. ஆனுல், கண்டம் விட்டுக் கண்டம் கடந்தாலும் பலதரப்பட்ட எழில் நிறைந்த இயற்கைக் காட்சிகளைக் கண்ணுற்ருலும் பார்த்திடும் மனம் அமைதியற்றிருந்தால் எப்படி இன்பத்தைப் பெற முடியும்?

துன்பமயமாகத் தோற்றமளிக்கும் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெறுவதற்குச் சிறந்த மார்க்கம் யாதெனில் நம்மையே நாம் முற்றிலும் அல்லாஹ்விடம் ஒப்படைப்பதேயாகும். இவ்விதம் மனிதன் இறைவனிடம் சம்பூர்ணமாகச் சரணுகதி அடையும் பக்தி நிலையையே இஸ்லாம் வற்புறுத்துகிறது. தொழுகையின் அடிப்படை நோக்கம் இறைவனிடம் நேரடியாகத் தொடர்பு கொள்வதாகும். நமது மனம் அமைதியாக இருக்கும் வேளையிலே வாழ்க்கையை தூய்மையாகவும் புனிதமாகவும் அமைக்க முடிகிறது. அவ்விதம் காணுகின்ற பொருள்கள் யாவற்றிலும் ஆண்டவனின் தெய்வீக அமைப்பின் அழகை ரசிக்க முடியும். மேலும் இறைவனின் இணையற்ற சக்தியின் மகிமையை உணர முடியும். ஆகவே, வணங்குவது வெறும் மதம் சம்பந்தமான சடங்குமட்டுமல்ல; மனிதன் ஆத்மீகத் துறையிலே வளர்ச்சி பெற, வாழ்வில் மறுமலர்ச்சி பெற மிகவும் இன்றியமையாததோர் பயிற்சியுமாகும்.

ஆண்டவன் இல்லாத இடமே இல்லை என்று வேதங்கள் முழங்குகின்றன. அப்படிக் காணுகின்ற உலகமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனைக் காணுது மனிதன் துன்பத்தில் துயரமடைவதேன்? தேகத்தை நான் என்று அபிமானிக்கும் அகந்தை உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் வரையில் இறைவனைக் காணமுடியாது. எங்கும் நிறைந்து ஏகமயமாகிய யதார்த்த வஸ்துவைக் காண வேண்டுமானுல் எண்ணற்ற பிரேமைகளைத் தோற்றுவிக்கும் மனதை தன்வசப்படுத்தி நாமரூபமற்ற அகண்ட வெளியில் நிறுத்தல் வேண்டும். அத்தகைய நிலையை ஸூபியாக்கள் 'பனு' என்று அழைக்கிறார்கள்.

நினைவு நாமரூபத்தில் கவ்விக்கொண்டு குழப்பத்தால் கொந்தளிக்கும் நேரத்தில் இதயத்திலே இறை உணர்வையோ அல்லது அமைதியின் பரவசத்தையோ காணமுடியாது. நாம் ஆழ்ந்த தியானத்தில் ஓய்ந்திருக்கும் வேளையில் உடலின் பிடியிலிருந்தும், மனதின் தாக்குதலில் இருந்தும் விடுதலையடைந்து அகண்ட உணர்வெளியில் அறிவு மயமாக வாழ்கிறோம். அத்தகைய நிலையே என்றும் அழியாத பரநிலை. நினைப்பின் தடிப்பிலே உருவாகும் இவ்வுலகமும் அதனது வேகத்திலே கிளர்ந்தெழும் சரீர வேட்கைகள் யாவும் நாம் மனமற்ற 'பனு' வென்னும் மகத்தான நிலையில் ஸ்திரமடையும்பொழுது இல்லாது ஒழிந்து விடும்.

மரணமென்பது ஸ்தூல சரீரத்திலிருந்து 'ரூஹ்' ஆன்மா பிறக்கப்படும் ஓர் நிகழ்ச்சியேயாகும். உடலில் இருக்கும் பொழுதே உள்ளக் கிளர்ச்சிகளுக்கு அகப்படாது மனுதீத நிலையில் அறிவுடன் நிற்கும் நிலையே 'பகா' என்னும் அத்வைத நிலையாகும். இந்த உயர்வான உன்னத நிலையை மனிதன் எய்த வேண்டுமென்ற பெரும் நோக்கால் தான் நபிகள் நாயகம் அவர்கள் "சாவதற்கு முன் செத்துக் கொள்ளுங்கள்" என்று தன் உத்தம அடியார்களுக்கு உபதேசம் செய்தார்கள். ஆகவே, தியானம் என்பது மரணத்தை வெல்வதற்கு நாம் நடைமுறையிலே இவ்வுலகிலேயே, இப்பொழுதே பழகவேண்டிய ஓர் ஒப்பற்ற ஆத்மீகப் பயிற்சியாகும். மனதிற்குத்தான் மரண பயம் உண்டாகிறது.

எண்ணற்ற ஆசாபாசங்கள் எண்ணங்களின் வேட்கையிலே தான் வளர்கிறது. மனமற்ற நிலையில் வாழ்வதானது வெறும் சூன்யத்திலே புகுவது அல்ல. எதைப் பரிபூர்ண வஸ்து என்றும் அல்லாஹ் என்றும் துதிக்கின்றோமோ அதை நிதர்சனமாக அனுபூதியின் மூலம் உணர்ந்து அதில் அடங்கி அந்நிலையில் ஒடுங்குவதாகும்.

மகத்தான மௌனத்தில் மனதைக் கரைத்து வாழ்வதே ஆத்மீக சாதகர்களுக்கு விமோசனமும் விடுதலையுமாகும். ஏங்கித் தவிக்கவோ அல்லது ஏமாறுவதற்கோ இவ்வுலகில் ஒன்றுமில்லை. ஏனெனில் நன்கு ஆராய்ந்து பார்த்தால் இன்ப துன்பத்திற்கு நம் மனமே மூலகாரணமாக இருக்கிறது.

ஆகவே, விருப்பு வெறுப்பு எனும் வியாதிக்கு அகப்படாது ஆசை என்னும் சிறைச்சாலையில் கைதியாகாது துன்பக்கடலிலே தத்தளிக்காது சதாகாலமும் உண்மையையே விளங்கி "முராக்கபா" என்னும் தியான நிலையிலே சாந்தி பெறுவதே சாதகர்களின் கடமையாகும். எத்தனை நெருக்கடிகள் அல்லது பிரச்சினைகள் நமது வாழ்வில் குறுக்கிட்டாலும் அவைகளுக்கு அடிபணியாது, அடிமைப்படாது அகத்தினிலேதெளிவு பெற்று தியானத்திலே வழுவாது வைராக்கியத்தையும், விவேகத்தையும் துணையாகக் கொண்டு அல்லாஹ்வையடையும் புனிதயாத்திரையை உற்சாகமாகத் தொடர்வதே சாதகர்களின் கடமையாகும்.

ஆனல், சமுதாயத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும்பொழுது நம் கடமைகளை நிறைவேற்றித் தூய அன்புடன் பற்றற்று பயன் கருதாது செயலாற்றிடும் பண்பினை நாம் அவசியம் வளர்க்க வேண்டும்.

சில தவிர்க்க முடியாத சூழலினல் இறை நேசர்களுக்கு சில சந்தர்ப்பங்களில் இன்னல்கள் ஏற்படுவதுண்டு. எவ்வித இடர்கள் ஏற்படினும் எல்லா நிலைகளிலும் இதயம் தடுமாறுது இறை அன்பிலேயே இணைந்து நிகழ்வது யாவும் நமது நன்மைக்கே என்று துணிந்து அமைதி பெறுவதே 'சபூர்' என்னும் பொறுமையாகும். தியானம் எனும் ஞானப் பாதையிலே வழி நடந்து செல்லும் ஆத்மீக சாதகர்களுக்கு சிற்சில வேளைகளில் விரக்தியின் காரணமாக நாம் வாழ்ந்து செல்லும் ஆத்மீக லட்சியத்தில் உண்மையில் முன்னேறுகிறோமா அல்லது பின் தங்கி விட்டோமா என்ற சந்தேகமும் சலனமும் ஏற்படுவதுண்டு. உடலும் உள்ளமும் சோர்ந்து போனலென்ன, அல்லது வயது முதிர்ச்சியால் தளர்ச்சியேற்பட்டாலென்ன 'ரூஹ்' என்னும் ஆன்மா என்றும் எதனலும் பாதிக்கப்படாதது, வியாபகமானது, அழியாதது, நிரந்தரமானது, என்று திடமுடன் வாழ்வதே உண்மையான ஈமான் என்னும் நன்னம்பிக்கையாகும்.

சதா மாறிக்கொண்டிருக்கும் சடசம்பந்தமான உணர்ச்சிகளைக் கடந்து அகண்டதியான நிலையிலே பரவசமெய்தி ஸ்திரமடைந்து விட்டால் வாழ்க்கையில் சலிப்பு ஏற்படாது. சலனமும் சஞ்சலமும் நம்மைத் தாக்காது. புனிதம் நிறைந்த தெய்வீக வாழ்விலே முன்னேறிக்கொண்டிருக்கும் நமக்கு அச்சமடைவதற்கோ நம்மை அஞ்ஞான இருள் கவ்விப்பிடித்து விடும் என்று அதை ரியப் படுவதற்கோ இடமில்லை. பேரின்பம் என்பது துன்பம் கலவாத தூய பரிசுத்த ஆத்மீக வாழ்வில்தான் காணமுடியும் என்று அனுபவரீதியில் உணரமுடிகிறது. மனம் மாசற்று ஆசைகள் யாவும் நீங்கப்பெற்ற நிர்மலமான நிஷ்டையில் இருக்கும் பொழுதுதான் பூரண ஆனந்தத்தை அனுபவிக்க முடிகிறது. பொறி புலன்கள் யாவும் ஒடுங்கிய உன்னத உயர்வான தியான நிலையிலேதான் நிரந்தரமான சாந்தி மட்டுமல்ல அதோடு பந்தங்கள் யாவும் முற்றுக நீங்கப்பெற்ற பரவச நிலையும் கைகூடுகிறது.

எண்ணத்தின் குவியல்கள் எண்ணற்ற ஆசைகளின் கதம்பங்களாக மாறுகின்றன. ஆகவே எண்ணங்கள் யாவும் எங்கு உற்பத்தியாகிறதோ அந்த மூலஸ்தானமாகிய 'ரூஹ்' என்னும் ஆன்மாவிடம் நம் எண்ணங்கள் ஒய்ந்திடவேண்டும். தன்னை ஆன்மாவாக அறிந்திடும் நிலையே 'கவ்வத்' என்னும் தவநிலை. இதுவே மஃரிபாவின் நுழைவாயில். இந்த மெய்ஞான நிலையை மனிதன் தனது சொந்த நிலையாக மாற்றிக் கொண்டால் மரண பயம் ஏற்படாது என்று ஸூபியாக்கள் கூறுகிறார்கள். குழப்பங்கள் நிறைந்த இவ்வுலக வாழ்விலே கலக்கமற்று வாழ்வதற்கு ஸூபியாக்கள் வகுத்த வாழ்க்கை நெறி என்னவென்றால் மனவிருத்தியினல் துன்பமுறும் நாம் இறைவனிடம் சம்பூர்ணமாகச் சரணாகதி அடைந்து மேலும் தாக்கற்ற பரிபூரண நிலையில் தங்குவதாகும். அதுவே, 'தௌஹீத்' என்னும் ஐக்கிய நிலையாகும்.

வேலன் கை வேல்



நயினை—நா. கதிர் சண்முகநாதபிள்ளை B. Sc.

வேலன் கையில் இருக்கும் வேல், அது வீரவேல் தாரைவேல், விண்ணோர் சிறை மீட்டவேல், தீரவேல் தீவினையை அகற்றும் வேல். அது வாரி குளித்தவேல், கொற்ற வேல், சூர் மார்பும் குன்றும் தொளைத்த வேல், அந்த வேலை வணங்குவதே எமக்கு வேலை. 'வேலும் திருக்கையும் எமக்கு முன்னே தோன்றினால் ''நாளென் செய்யும் வினைதான் என் செய்யும் எமை நாடி வந்த கோளென் செய்யும், கொடுங் கூற்று என் செய்யும்'' என்றார் ஒரு மெய்யடியார். ''வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும், நெஞ்சில் ஒரு கால் நினைக்கின் இருகாலும் தோன்றும்'' என்றார் மற்றொரு மெய்யடியார். தஞ்சம் என வந்தவர்க்கு அஞ்சேல் என அபயம் கொடுப்பது வேல். நெஞ்சம் புண்ணுக நெடுந்தூரம் அலைவோர்க்கெல்லாம் துஞ்சாது துணை நிற்பதுவேல். கந்தன் கருணையைக் காட்டி நிற்பது வேல். பந்தம், பாசம், பற்று எல்லாம் கடந்து எந்த வேளையும் எமக்கு அபயமளிப்பது வேல்.

''வெற்றிவடிவேலன் அவன் வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ பகையே துள்ளி வருகுதுவேல்''

என்று பகைமையை, ஓட ஓடத்துரத்தினான் பாட்டுக்கொரு புலவன் பாரதி. பகைமையும் காழ்ப்பும், உடைய இவ்வுலகிலே வாழ்க்கைப் பாதையில் முன்னேறிச் செல்லவிருக்கும் ஒவ்வொருவனையும் தடுத்து நிறுத்தி அவனை வலியிழக்கச் செய்யும் மாயப்பசாசுகள் அனேகம் உண்டு. முருக பக்தி என்ற ஞானவேலை ஏவி இந்தமாயப் பசாசுகள் எல்லாம், அந்த ஞானத்தியிலே பொசிந்து எரிந்து சாம்பராகுவதைக் கண்டு நாம் கைகொட்டி ஆர்ப்பரிக்க வேண்டும். அதற்காகவே கலியுகத்தில் வேலன், கைவேலோடு வந்திருக்கின்றான். அந்த வேலைப் பிடித்தவன் காலைப் பிடித்தால் வேதனை எல்லாம் தீரும், வாழ்க்கைச் சோதனையிலே சாதனைகளெல்லாம் ஓங்கும்.

தெய்வங்களின் திருக்கரங்களிலிருக்கும் படைக் கலங்களெல்லாம் உய்யும் உயிர்களின் ஊன் வந்த பெரு நோய்களுக்கு அடைக்கலம் கொடுக்கவல்லன. யான் என்ற அகங்காரம் அடங்கி ஞானங்கள் பல பேசவும் துணை நிற்கின்றன. இந்தப்படைக்கலங்களைத் தொழுவார்க்கு ஒரு தீங்குமில்லை. எனவே இப் படைக் கலங்கள் அடியார்க்கு அருள் பாலிப்பவை. அன்னரின் பகைவரை அழிக்கும் சக்தி வாய்ந்தவை என்று கூறலாம். இதையே திருமூலர் தம் திருமந்திரத்தில் பின் வருமாறு:

'கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்
வரத்தின் உலகத்துயிர்களை எல்லாம்
வருத்தம் செய் தான் என்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டு கொன்றனே.'

என்று பாடுகிறார். உலகத்தில் அற நெறி குன்றித் தீ நெறி ஓங்கிப் பரவிய காலங்களிலெல்லாம் தெய்வம் மண்ணுற்றுப்படைக் கலங்களோடு மக்களினதும், தேவர்களினதும் மன மையலைத் தீர்க்க எண்ணி, வந்த வரலாறுகளை வேத, புராண காலங்களில் நாம் காண்கிறோம்.

நலிவுகள் பல உள்ள கலியுகத்திலே, அழிவுகளை உண்டாக்கும் அசுரத் தன்மையுடையோரின் ஆக்கிரமிப்பை அழிக்கவும், அடக்கவும் முருகக் கடவுள் வேற்படையோடு தோன்றினார் என்பது மெய்யன்பர்களின் முடிபு. இதையே—

'ஒரு திரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகமுய்ய'

என்று கச்சியப்ப சிவாசாரியார் கூறினார். ''பெம்மான் முருகன் பிறவான் இறவான்'' ஆதலின் உதித்தனன் என்றார். ''தன்னேரிலாப் பரம் பொருள்'' தான் இங்கு தனி உருக்கொண்டது. அருணந்தி சிவாச்சாரியார், அந்தப் பரம் பொருள் திருமேனி

பெற்று வந்தது "நந்தம் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு" என்றூர் நக்கீரரும், குமரகுருபரரும். குமரன் வரவு குவலயத்தை வாழ்விக்க வந்த வரவு என்று கூறுவர்.

முருகன் சூரனுடைய உருவத்தை மாற்றி சேவலாகவும் மயிலாகவும் கொண்டான். இந்த இரண்டும், எதிர்த்தவர்களுக்கே கருணை காட்டும் கருவிகளாக அமைந்தன. வேலோ நடு நாயகமாக அமைந்தது. அருணகிரி நாதர் அந்த வேல் மூன்று காரியங்களைச் செய்ததாகக் கூறுவார். அதைப் பின் வரும் பாட்டால் அறியலாம்.

"..... செங்கையில் வேற்
கூர் அணியிட்டு அணுவாகிக் கிரௌஞ்சம் குலைந்தரக்கர்
நேரணியிட்டு வலைந்த கடகம் நெளிந்தது; சூர்ப்
பேரணி கெட்டது; தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே"

அதாவது முதலில் கிரௌஞ்சம் குலைந்தது. இரண்டாவதாக அரக்கர்படை குலைந்தது. மூன்றுவதாக சூரன் நடத்திய பெரும் படை சிதைந்தது. இந்த மூன்று செயல்களையும் வேல் செய்ததினாலே 'தேவேந்திர லோகம் பிழைத்ததுவே' என்று முடிக்கின்றார். சூரன் தேவர்களைத் துன்புறுத்தி, அவர்கள் உரிமைகளை மறுத்து, உடமைகளை அழித்து, தொழிலையே செய்ய விடாமற் தடுத்தான். தேவர்களின் இன்பம் குலைந்தது, சுதந்திரம் பறி போயிற்று. இந்த நிலையில் வேல், அவர்கள் வேண்டியதைச் செய்தது. அதனால் தேவர்களின் உரிமை கிடைத்தது, உள்ளம் மகிழ்ந்தது, உவகை பெருகிற்று, சுதந்திரம் பெற்றனர். தேவேந்திர லோகமும் பிழைத்தது.

இன்றுள்ள இந்த நிலையில் "வையகம் வாராதே வடிவேலன் எங்கள் மன மையலைத் தீராதே" என்று பாடத் தோன்றுகின்றது. உண்மையிலே நாம் உருகிப்பாடினால் அவன் உடனே தோன்றுவான்.

"ஆடும்பரி வேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாக"க் கொண்ட அருணகிரியாருக்கு அவன் தோன்றி அருள் செய்தான். அருணகிரியார் கந்தர் அநுபூதியிலே இருபத்து நான்குமுறை வேலைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

வேல், முருகப் பெருமானுடைய ஞான சக்தியாகும். வெல், என்ற முதல்நிலை நீண்ட தொழிற் பெயர் வேல். எல்லாவற்றையும் வெல்வது ஞானம். அதுவே மெய்ப்பொருள். எனவே வேல் ஞானமுதல். ஞானமுதல்வனாகிய முருகனுக்குத் தனிச் சிறப்பளிக்கும் படைக்கலமாக வேல் அமைந்ததில் வியப்பொன்றுமில்லை. மெய்ப்பொருள் காணும் அறிவாகிய ஞானத்திற்கு மூன்று இயல்புகளுண்டு. அவையாவன ஆழம், அகலம், கூர்மை. இதனாலேயே ஞான வடிவமாகிய வேலின் நுனி கூர்மையாகவும், நடுப்பகுதி அகலமாகவும், அடிப்பகுதி ஆழமாகவும் இருக்கிறது.

"ஆழ்ந் தகன்ற நுண்ணியனே" என்று மணிவாசகரும் கூறுவார். வேலின் மாண்பு மிகச் சிறந்தது. இது பற்றியே கச்சியப்ப சிவாசாரியார்

"சேவலும் மயிலும் போற்றி; திருக்கை வேல் போற்றி போற்றி"

என்று வேலுக்கு இரண்டு முறை போற்றி கூறுகிறார். அருணகிரியாரும் வேலைக் குறிப்பிடும் போதெல்லாம், வடிவேல், தனிவேல், கதிர்வேல், அயில்வேல், கூர்வேல், சுடர்வேல், என்றே குறிப்பிடுவார். ஒப்பற்ற மெய்ஞான மே வேலாயுதம் என்பதை எடுத்துக்காட்டவே இச்சொற்கள் பயன்படுத்தப்பட்டன.

வேலைக் குறிப்பதற்கு, எஃகம், ஞாங்கர், உடம்பிடி, சத்தி என்ற சொற்களும் உண்டு. இவற்றுள் சத்தி யென்னும் கருத்தைச் சற்றுச் சிந்திக்கவேண்டும். படைகளுக்கெல்லாம் இப்படை அரசாக இருத்தலின், இது சக்தி என்றும், படை அரசு என்றும் கூறப்படும் பெருமை மிக்கது. இந்த வேற்படை எப் படைக்கும் நாயகமாதலைக் கந்தபுராணம்

"ஆயதற் பின்னர் ஏவின் முதண்டத்தையும்,
பெரும் பூதமும் அடுவது
ஏய பல்லுயிரும் ஒருதலை முடிப்ப தேவர்மேல்
விடுக்கினும் அவர்தம்
மாயிரும் திறனும் வரங்களும் சிந்தி மன்னுயிர்
உண்ப தெப்படைக்கும்
நாயக மாவ தொரு தனிச் சுடர்வேல் நல்கியே
மதலை கை கொடுத்தான்"

—எனவும்

"தேயுவின் எடுத்த அண்டத்திறங்களும் பிறங்கு ஞாலத்து ஆயிரம் கோடி அண்டத்து அங்கியும் ஒன்றிற்று அன்ன மீயுயர்ந்து ஒழுகி ஆன்றார் வெருவரும் தோற்றம்கொண்டு நாயகன் தனது தெய்வப் படைக்கலம் நடந்த தன்றே" —என்றும் இயம்புகின்றது.

எனவே வேலாயுதத்திற்கு மேலாயுதமில்லையென்று கூறலாம். மெய்ஞ்ஞானமாகிய சக்திவேல் அஞ்ஞான இருளைப் போக்கும் பருவை நீக்கி அருளை நல்கும். சூரனைக் கொன்றது என்பதால் வேல் கொடுமையானது என்று எண்ணுதல் கூடாது. அது மறக் கருணை உடையது. அது அருள் உருவானது என்பதை அறிவுறுத்தவே

'புங்கவர் வழுத்திச் சிந்தும் பூமழை இடையின் ஏசி
அங்கியின் வடிவம் நீங்கி அருள் உருக்கொண்டு வான்தோய்
கங்கையில் படிந்து மீண்டு கடவுளர் இடுக்கண் தீர்த்த
எங்கள் தம் பெருமான் செங்கை எய்தி வீற்றி ருந்ததவ்வேல்.'

—என்கிறார் கச்சியப்பர்.

எனவே வேல், உணர்ச்சி தருவது, உற்சாக மூட்டுவது; ஊக்கம் தருவது, ஆக்கம் அளிப்பது; ஆண்மை தருவது, ஆற்றலைப் பெருக்குவது; நக்கீரர் திருமுருகாற்றுப்படையிலே—

'குன்றம் எறிந்ததுவும் குன்றப் போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்— இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற் பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன் கை வேல்.'

என்று முருகன் கை வேலை வியந்து பாடியுள்ளார். அருணகிரியாரும் தமது திருப்புகழிலே—

"பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கு ஒரு
கவிப்புலவன் இசைக்குறுகி வரைக்குகையை
—இடித்து வழிகாணும்."

என்றும்

துதிக்கு அடியவர்க் கொருவர் கெடுக்க இடர்
நினைக்கின் அவர்குலத்தை முதல் அறக்களையும்
—எனக்கோர் துணையாகும்

என்றும்

தனித்து வழி நடக்கும் எனதிடத்தும் ஒரு
வலத்தும் இருபுறத்தும் அருகடுத்து இரவு
—பகல் துணையாகும்.

என்றும் வேலைப் புகழ்ந்துள்ளார்.

'சூலாயுதம் கொண்டு யமதூதர் என்னைச் சூழ்ந்து கொண்டால் வெற்றி வேலாயுதா என்று கூப்பிடுவேன்' என்றார் ஒரு மெய்யடியார். ஆம், சூலாயுதத்தை விட வேலாயுதம் மேலான தன்மையுடையதுதான். எந்தாயுமாய் எமக்கருள் தந்தையுமாய் நின்று சிந்தா குலமானவை தீர்த்து அருளும் கந்தன், தஞ்சத்தருள் சண்முகனுய் நின்று வன் நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகும்படி வழிக்குத்துணையாய் வடிவேலுடன் வருவான். எனவே

'வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி
அயிலெடுத்து வரும் செவ்வேளே'

சிந்தித்து, நம் வினைகள் தீர்த்து, திருவும் பொலிவும் சேரச் சிறந்து வாழ்வோமாக.

மகாத்மா

மகாத்மா என்னும் பட்டத்தை நான் மதிக்கவில்லை. பலமுறைகளில் எனக்கு அப்பட்டம் பெரிதும் மனத்துன்பத்தைத் தான் தந்திருக்கிறது. எக்காலத்திலும் ஒரு கணப்பொழுதாவது அப்பட்டத்தினுல் நான் பெருமைப் பட்டுக்கொண்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. என்னை மகாத்மா என்று கூறி பனிப்பாங்கான இமயமலையில் சிகரம் வரை ஏற்றி வைத்து விட்டு, இவ்வளவு மாபெரும் மகாத்மாவின் போதனைகளைப் பின்பற்றுவது என்பது முடிகிற காரியமா என்று கூறி என் காலை வாரிவிடப் பார்க்கிறீர்களா?

—காந்தி

பூபாலசிங்கம் புத்தகசாலை

இல. 4, பஸ் நிலையம் — யாழ்ப்பாணம்.

★

உங்களுக்குத் தேவையான

- ★ பாடசாலைப் புத்தகங்கள்
- ★ திருமண பரிசு நூல்கள்
- ★ விசேஷ தின வாழ்த்து அட்டைகள்
- ★ கலண்டர், டயறி வகைகள்
- ★ நாவல்கள்
- ★ மாத வாராந்த பத்திரிகைகள்
- ★ பாடசாலை உபகரணங்கள்
- ★ சினிமா பத்திரிகைகள்

மற்றும் தினசரி பத்திரிகைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். ஆர். பூபாலசிங்கம் ஜே. பி.,
இல. 4, பஸ் நிலைய முகப்பு
ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7631.

கிளைகள்: இல. 199, முதலாம் குறுக்குத் தெரு-யாழ்ப்பாணம்
புகையிரத நிலைய புத்தகசாலை -யாழ்ப்பாணம்

ஐசுவரியம் யாருக்கு உண்டாகும்?—

ஆண்டவனை பக்தியுடன் ஆராதிப்பவனுக்கு



ஆத்மஜோதி 30வது ஆண்டு சிறப்பு மலருக்கு

எமது நல்வாழ்த்துக்கள்

பரஞ்சோதி மருந்துசாலை

திருக்கோணமலை

மனிதனுக்கு ஏற்பட்ட நியதிப்படி
உங்களை நீங்கள் உயர்த்திக் கொள்ள வேண்டும்.
நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும்
இதுவே முதற் கடமை.



சுவேந்திரன் ஸ்டோர்ஸ்

(உரிமையாளர்: பூ. சிவஞானசுந்தரம்)

124, மத்திய வீதி,

திருக்கோணமலை

தற்கால நவநாகரீகத்திற்கேற்ற டிசைன்களில்
உத்தரவாதமுள்ள தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்



செல்லம்ஸ் ஆபரண மாளிகை

129, மத்திய வீதி,

திருக்கோணமலை.

எல்லோரும் விரும்புவது

ஹோட்டல் எவரெஸ்ட்
380, கோர்ட் ரோட்
திருமலை

பல்லோரும் விரும்பும்
பலசரக்கு மாளிகை

ஜெயசந்திரன் ஸ்டோர்ஸ்
333, கோர்ட் ரோட்
திருமலை.

தன்னுடைய சிருஷ்டியில் இறைவன்
ஒரு பொழுதும் இறக்கமற்றவனுகவும்
நீதி வழுவியவனுகவும் இருப்பதில்லை.

KAVITHAS
Dealers in Textiles
102 9/2, 3rd Cross Street,
COLOMBO - 11

ஸ்ரீ லங்கா அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தினுல்
இறக்குமதி செய்யப்படும் சகல மருந்துவகைகளும்
எம்மிடம் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,
420, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 438 - 537 - 370. யாழ்ப்பாணம்.

ஸ்ரீ தாமோதர விலாஸ்

சிறந்த சைவ உணவு வகைகளை யாவரும் விரும்பும்
வகையில் தயாரித்து சகலமக்களின் நல்லாசியையும்
ஆதரவையும் பெற்று முன்னணியில் நிற்பவர்கள்:

ஸ்ரீ தாமோதர விலாஸ்

239, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7065

கிளை ஸ்தாபனம்:

ஸ்ரீ இராமக்கிருஷ்ணா

9, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7497

எங்களிடம்

பலசரக்கு-காய்ப்புச் சாமான்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
சகாயமான விலைக்கு கிடைக்கும்

ஏக விநியோகஸ்தர்கள்:
காங்கேசன் சிமெந்து

நியூ யோகம் ஸ்ரோர்ஸ்
35, 39, மத்திய வீதி,
திருக்கோணமலை
தொலைபேசி: 286

BRITISH COFFEE BAR
23: N. C. ROAD,
TRINCOMALEE

Pay us a visit once
you will be convinced.

Delicious Drinks, 'ARASCO' Products
With Short Eats. Etc.
Also available Elephant House Products.

23, N. C. ROAD,
Trincomalee
SPECIAL ICE CREAM AVAILABLE

எங்களிடம் வீட்டுத் தளபாடச் சாமான்கள், பெயின்ட் வகைகள் கல்வனைஸ்ட் கூரைத் தகடுகள், ஒடு (நூறுணி) சிமேந்து முதலியன சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

நியூ அசோகா ஹார்ட் வெயார்
அன்ட் ஜெனரல் மேச்சன்ட்
42, மத்திய வீதி,
திருக்கோணமலை.

தமக்கென வாழாது
பிறருக்காக வாழ்கிறவர்
மனிதரில் தலையானவர்

ராஜன் மின்சாரப் பொருள் நிலையம்
66, ஏகாம்பரம் வீதி,
திருக்கோணமலை.

மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கம்

★ சைவசமயம் ★ புராணம் ★ பண்ணிசை ★ தமிழ்
வகுப்புகளை ஞாயிறுதோறும் நடாத்துகிறது.

★ நீட்சை வழங்குதல் ★ சமயப்பிரச்சாரம்
★ நாயன்மார் குருபூசைகள்
ஆகிய பணிகளையும் ஆற்றுகிறது.

ஆத்மஜோதி 30–ஆவது ஆண்டு விழா
சிறப்பு மலருக்கு

எமது நல் வாழ்த்துக்கள்!

13, கோவிந்தன் வீதி – மட்டக்களப்பு.

ஆத்மஜோதி 30ஆவது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல் வாழ்த்துக்கள்!

சகலவித புத்தகங்கள் சஞ்சிகைகள்
பெற்றுக்கொள்வதற்கு சிறந்த இடம்

வே. ஆ. சிதம்பரப்பிள்ளை சன்ஸ்
புத்தகசாலை
43, பெருந்தெரு–திருக்கோணமலை.

ஆத்மஜோதி 30ஆவது ஆண்டு சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!

சகலவித பத்திரிகைகளும்
பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
நியூஸ் ஏஜன்ட்ஸ்
கல்முனை.

வரப்பிரகாசம் சன்ஸ்,

195, ஏகாம்பரம் வீதி,

திருக்கோணமலை.



தற்கால நவநாகரீகத்திற்கு ஏற்ற திறமான
சிந்தடிக் கைத்தறி ஜவுளிகளையும்
சிறுவர் சிறுமியர்களுக்கேற்ற
றெடிமெட் ஆடைகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்





Varapragasam Sons

195, Ehamparam Road — TRINCOMALEE.

Ganesh Tex

பிரபல பிடவை
சாப்புச் சாமான்களுக்கு



சிறந்த ஸ்தாபனம்

கணேஷ் டெக்ஸ

199, வடகரை வீதி,
திருக்கோணமலை.

PHOTO FINISHES WITH

STYLE
and
SMILE
at

For: DEVELOPING PRINTING
ENLARGINC



Studio Vinns

174, Ehamparam Road,
TRINCOMALEE.

சகலவிதமான இரும்புச்சாமான் வகைகளும்
நியாயமான விலைக்கு
பெற்றுக்கொள்வதற்கு
சிறந்த ஸ்தாபனம்



JEGANATHAN HARDWARE STORES

196, Ehambaram Road,
TRINCOMALEE.

With Best Compliments of:



Midway Tourist Centre

FOR COMPORT & HOMELY STAY.
250. Inner Harbour Road,
TRINCOMALEE.

Tele: **287**

அமைதியும், ஆற்றலும் பெறக்கூடுமா?

— ஆன்மநேயர். திரு. நா. சின்னையா செட்டியார் —

காணும் இவ்வுலகம் மண், நீர், நெருப்பு காற்று, வெளியாகிய ஐந்து பெரும் பொருள் களையே சிறப்பாகக் கொண்டுள்ளது. இவற் றின் கலவையால் இயக்க முறையில் ஏற் படும் தாவர சங்கமங்களில் தலைசிறந்து விளங் குவது மனிதப் பிறவியாகும்.

இப்பிறவியில் மனிதர்கள் தன் பிறவிப் பண்பான எண்ணிச் செயல்படும் திறத்தைப் பெற்றிருக்க வேண்டும். மனிதன் என்னும் பெயருக்கே இதுவே தக்கதாம்.

அப்படி எண்ணும்போது நாம் காணுவது முதலில், மண், நீர், நெருப்பு, காற்று, வெளி ஆகிய ஐம்பெரும் பொருள்களாகும். இவற் றின் இயக்க முறையில் ஏற்படுவதுதான் இவ் வுலகில் காணும் அத்துணைப் பொருள்களா கும். தாவரம் முதலிய பற்பல இயற்கைப் பொருள்களின் சத்துக்களை உணவாகக் கொண்டு மனிதப் பிறவி வளம் பெறுவது மன்றிச் சிறப்புடன் வாழவும் செய்கின்றது.

மனிதர்கள் ஏற்கும் நரை, திரை, மூப்பு, மரணங்களும் இவ்வைம்பெரும் பொருள் களின் குறைபாடுகளாலேயே அமைகின்றன. மணி, மந்திர மருந்துகள் யாவும் இக்குறை பாடுகளை அகற்றவே ஏற்பட்டதாகும். வாழ்க் கை விஞ்ஞானிகளான சித்தர் பெருமக்களும் இக் குறைபாடுகளை அகற்றப் பலவித சித்தி களைப் பெற்றுள்ளனர். நீண்ட ஆயுளுடன் திகழ்ந்ததும் இதன் பொருட்டேயாகும்.

இறைவனின் அருள், ஒளி—ஆற்றல்மிக்க அறிவு, எங்கும் எப்பொழுதும் இயங்கி வரு வதனால் மனிதனும் மற்ற உயிர்களும் ஆக்க மும், ஊக்கமும் பெற்று தம் நலவளத்திற் கான எதனையும் பெற முடிகின்றது. இந்த இறையாற்றலைப் பெறுவதற்கான முறைகளே உலகில் தோற்றுவிக்கப்பட்டுள்ள அத்துணை அறமுறைகளும் ஆகும். இதனை யொட்டியே அரசியல், அறிவியல் இயக்கங்களும் தோற் றப்படுவனவாகும். இந்த இயக்கங்கள் யாவும் மக்கள் மாட்சிமைக்கு நல்ல வளத்திற்கு உதவு வதாக இருக்க வேண்டும். இன்றேல், மனித வாழ்வு பாழ்படுவதாக அமையும்.

மனிதனின் வாழ்விற்கான உணவாதி களும் பிற இன்றியமையாத பொருள்களும் இயற்கையை யொட்டி எல்லா மனிதர்களும் இயல்பாக பெற்றிருக்க வேண்டும். அப்போது தான் வாழ்வு வளம் பெற்றுச் சிறக்கும். வாழ்வின் தேவைக்கு உதவியாகப் பலவித சாதனங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன.

அரசியல், அறிவியல் இயக்கத்தவர்களால் கற்பிக்கப்பட்டுள்ள முறைகளில் இன்று சிறப் பிடம் கொண்டுள்ளது 'பணம்' என்னும் நாணயமாகும். நாணயம் எல்லாப் பொரு ளுக்கும் மதிப்புத்தரும் சாதனமாக அமைந் திருக்கின்றது.

இப்போது பணம் இன்றேல் பலரும் வள முடன் வாழ இயலாது. இப்பணமே இன் றைய வாழ்வில் மனிதர்களின் வாழ்க்கைக் குறிக்கோளை வேருடன் களைக்கின்றதெனக் கூறலாம்; ஏனெனில் பணம் பத்தும் செய்யும் என்பதற்கொப்ப பணத்தைச் சேகரிப்பதே மனிதனின் முதற்பணியாக இருக்கின்றது.

இப்பணம் பெருக்கும் முறையால் நீதி நியாயங்களும், சட்டதிட்டங்களும் புறக் கணிக்கப்படுகின்றன; காம குரோதாதி இழி குணங்கள் பெருகுகின்றன. மக்களைத் தம் போன்ற மனிதர்களென்று எண்ணும் எண் ணமே அற்றுப்போகின்றது. இதன் அடிப் படையில் தோன்றுவனவே அத்துணை அநீதி, அக்கிரமச் செயலாதிகளாகும்.

இறைவன் படையில் ஏற்பட்ட ஐந்து பொருட்களும் இவற்றின் கலவைப் பொருட் களும் அனைத்துலக மக்களுக்கும் பொதுவான வையாகும். இதில் எதுவும் ஒருவருக்கும் தனதென உரிமை கொண்டாட தகுதி இல்லை.

இவற்றில் எதனையும் யாரும் உண்டாக்க முடியாது. அப்படிக் கொண்டாட நினைப்பதும் அடாத செயலாகும். இன்றைய உலகம் இவ்வடாச் செயலில் ஈடுபட்டுள்ள அமைதியும் ஆற்றலும் அற்றுகிடக்கின்றது.

இவற்றை உணராமல் உலகப் பொருள்களில் சிறப்பாக உணவாதிகளை உரிமையும், உடமையுமாக கொண்டாடுவது இறைவனின் பொதுத் தன்மையையும், பொதுவாக எல்லோருக்கும் விளக்கமாக இருக்கும் நிலையினையும் அவமதிப்பதாகும். அறிவு விளக்கம் என்பது இந்த இறைவனின் பொதுத் தன்மையை அறிந்து அத்துடன் ஒன்றுவதாகும். அத்தகையோர்கள் அறிஞர்கள் எனப் போற்றப்படுவர். அவர்களே பொதுவாக இயங்கும் இறையருள் திறத்தினைப் பெற்றவராவர் இதனையொட்டியே வள்ளல் இராமலிங்க அடிகளார் கீழ் வரும் பாவினை அருளியுள்ளனர். அதனை ஆழ்ந்து கவனியுங்கள்:

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்
—போல் எண்ணியுள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார், யாவரவர்
—உளந்தான்
கூத்த பித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இட
—மென நான் தேர்ந்தேன்
அந்த வித்தகர் தம் திருத்தாளுக்கேவல் செய
—என் சிந்தை மிக விழைந்ததாலோ."

என்பதாம்.

இந்தக் கருத்தே எல்லா ஆன்றோருக்கும் உரித்தானதாகும். இதனை செயல்படுத்த ஒவ்வொருவரும் முயலுதல் கடமையும், கட்டாயமும் ஆகும். அப்போதன்றே உலகில் அமைதியும் ஆற்றலும் பெற்று விளங்கும். இந்த முறையில் நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு முயன்று தொழிற்படுகின்றோமென்பதை எண்ணிப்பார்த்துச் செயல்படுமாறு விரும்பி வேண்டுகின்றோம்.

வாழ்க மக்களினம்!

பஜ கோவிந்தம்

மதிமயங்கியவனே! மரண சமயம் நெருங்கிய பொழுது இலக்கணச் சூத்திரம் உன்னை ஒரு பொழுதும் காப்பாற்றாது. ஆகையால் கோவிந்தனைச் சேவி. கோவிந்தனைச் சேவி. எது வரை பொருள் தேடுவதில் ஒருவன் பற்றுள்ளவனாயிருக்கிறானே அதுவரை அவனுடைய சுற்றம் அவனிடம் ஆசை வைத்திருக்கும். நோயினால் உடல் தளர்ந்து போன பின்பு அவன் உயிருடனிருந்தால் ஒருவரும் அவனுடைய சமாசாரத்தை விசாரிப்பதில்லை.

—சங்கரர்

மனப் பரிசுத்தம்

கண்ணாடி போன்ற மனதானது பரிசுத்தம் ஆனால் அதில் ஞானம் தானே விளங்கும். ஆகையால் மனதைப் பரிசுத்தமாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

—சங்கரர்.

என் உபதேசம்

என் சொந்த வாழ்வில் பலதரம் அனுஷ்டித்துப் பார்க்காத ஒன்றை மற்றவர்கள் செய்யும்படி நான் சொன்னதே கிடையாது. இதுதான் எனது பலமாகும்.

—காந்தி

பேரானந்தம் பெற வழி

— சுவாமி நிர்மலானந்தா —

''உள்ளத்தின் உள்ளே தான் ஊறும் சிவானந்த
வெள்ளம் நுகர்ந்து விடாய் தீர்வது எந்நாளோ''
—தாயுமானவர்.

உலகில் அனைவரும் ஆனந்தத்தைத் தேடி அலைகிறோம். ஆனால் நிலைத்த ஆனந்தம் கிடைத்தபாடில்லை. ஏன்? நாம் சதா உடலில் பற்று வைத்து, உடல் மூலமே ஆனந்தம்பெற முயலுகிறோம். உடல்மூலம் பெறுவது ஆனந்தம் போன்று தென்படுகிறது. ஆனால் பின்னர் அது துன்பமாக வடிவெடுக்கிறது. இதை நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஆனந்தம் புறத்தில் இல்லை; அது நம் முள்ளேதான் இருக்கிறது என்பதை மகான்கள் உபதேசிக்கிறார்கள். அவர்கள் காட்டித் தரும் பாதையை நாம் பயன்படுத்த முயலுவதில்லை.

எங்கு மனதை வைக்கவேண்டுமோ அங்கு வைக்காது வேறு எங்கோ வைத்திருப்பதால் தான் நமக்கு ஆனந்தம் இல்லை. நிலையற்ற உடல் நிலைத்த இன்பத்தை எப்படித் தர முடியும்? நிலைத்த இன்பம் நிலைபேறுடைய பகவானிடமிருந்தே கிடைக்கும். ஆகவே மனதை நிலையற்ற உடலின் மீது பற்று வைக்க விடாது. நிலைத்த பொருளாகிய பரமனிடம் பற்று வைக்கப் பழக்க வேண்டும்.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''
என்கிறார் திருவள்ளுவர்.

மனதை சதா பகவத் சிந்தனையிலும், அவனைப் புகழ்ந்து பாடுவதிலும் அவனது திவ்ய நாம ஜபத்திலும் ஈடுபடுத்த வேண்டும்.

திருவனந்தபுரம் ஸ்ரீமத் அபேதானந்த சுவாமிஜி மஹராஜ் அவர்களது திருமேனி சமீபத்தில் பிருந்தாவனத்தில் விழுந்து இடது கை எலும்பு முறிந்து விட்டது. ஆபரேஷன் செய்து கட்டுப் போட்ட கையுடன் ஆஸ்பத்திரியில் இருக்கும் போது சுவாமிஜியிடம் ஒரு பக்தர் கேட்டார், ''சுவாமிஜி! சதா பகவத் பஜனை செய்யும் உங்களுக்கு இப்படி ஏற்படலாமா? பகவான் கல் நெஞ்சன் போலும். உங்களுக்கு வேதனை இல்லையா? இந்த நிலையில் எப்படி சதா சிரித்துக் கொண்டே இருக்க உங்களால் முடிகிறது?'' சுவாமிஜியோ, சர்வேஸ்வரி ஸ்ரீ ராதா ராணியின் மகாபிரசாதம் என்று கைக்கட்டை காட்டுகிறார்.

புனித பிருந்தாவனத்தில் சுகமோ துக்கமோ, லாபமோ நஷ்டமோ, மானமோ அவமானமோ எது வந்தாலும் எல்லாம் மாதா ஸ்ரீ ராதா ராணியின் பிரசாதம் என்று சொல்லிச் சிரித்து மகிழ்கிறார். இந்தச் சமயம் தான் தேவியின் கருணையை நினைத்து மகிழ வேண்டும் என்கிறார். பிருந்தாவனத்தில் சில நாட்கள் வாசம் செய்ய வேண்டியே ஸ்ரீ ராதா ராணி இந்தப் பிரசாதம் தந்துள்ளாள் என்கிறார். தம்மிடம் கேள்வி கேட்ட பக்தருக்கு சுவாமிஜி அவர்கள் ஸ்ரீ ஏகநாத சுவாமிகளின் வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்றைக் கூறுகிறார்.

ஒரு சமயம் ஸ்ரீ ஏகநாத சுவாமிகளிடம் அன்பர் ஒருவர், 'சுவாமிஜி! நீங்கள் சதா மகிழ்வோடு இருக்கிறீர்களே? இது எப்படி முடிகிறது? எங்களால் ஒரு க்ஷணம் கூட மகிழ்வோடு இருக்க முடியவில்லையே?' என்று கேட்டார். சுவாமிகளோ சர்வத்திலும் இறைவனைக் காண்பவர். சதா இறைவனைக் காண்பவரிடம் மகிழ்ச்சியைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? சுவாமிகள் இமயத்திலிருந்து கங்கா தீர்த்தம் எடுத்துக் கொண்டு இராமேஸ்வரம் தரிசனத்துக்காகப் பாதயாத்திரையாக வந்து கொண்டிருக்கிறார். இராமேஸ்வரத்தை நெருங்கிய சமயம் கழுதை ஒன்று தாகத்தால் தவிப்பதைப் பார்க்கிறார்.

சர்வத்திலும் பகவானைக் காண்பவருக்குக் கழுதையும் பகவான் தானே? இராமநாத சுவாமிக்கு அபிஷேகம் செய்ய ஆயிரக்கணக்கான மைல்கள் சுமந்து கொண்டு வந்த புனித கங்கா தீர்த்தத்தால் கழுதைக்குத் தாக சாந்தி செய்து, அவ்வடிவில் இராமநாதனே கங்கா அபிஷேகம் பெற்று மகிழ்வதைக் கண்டு ஆனந்தம் அடைகிறார். இப்படிப்பட்ட உன்னத மனநிலை கொண்ட சுவாமிகள் தம்மிடம் கேள்வி கேட்ட அன்பருக்கு நேரே பதில் சொல்லாமல், 'அப்பா! உனக்கு ஒரு வாரத்தில் மரணம் உண்டு' என்றார். வந்தவர் தாம் கேட்டதை மறந்து விட்டு, 'சுவாமிகள் உண்மை தான் சொல்லுவார். நான் இன்னும் ஒரு வாரத்தில் இறந்து விடுவேன்'' என்ற துக்கத்துடன் வீடு சென்றார். மனைவி, மக்கள், உற்றார், உறவினர்களிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு, கவலையில் மூழ்கியவராய் படுத்து விட்டார். மரணத்தை எதிர் நோக்கி நாட்களை எண்ணிக் கொண்டிருந்தார். மனதில் எவ்வித உலக ஆசா பாசங்களும் எழவில்லை. ஆறுவது நாளில், ''இன்னும் ஒரு நாளில் வாழ்வு முடிந்து விடும்'' என்று வேதனை அதிகமாகிறது. ஏழாவது நாளில், ''இன்று எந்த வேளையும் மரணம் வரலாம்'' என்று சொல்ல முடியாத வேதனையுடன் படுத்திருந்தார். மனைவி, மக்கள், உற்றார், உறவினர் எல்லாம் கவலையுடன் அவரைச் சுற்றி நிற்கிறார்கள்.

சதா ஆனந்தமயமாய்த் திகழும் ஸ்ரீ ஏக நாத சுவாமிகள் மந்தகாச வதனத்துடன் இச் சமயம் அங்கு வருகிறார். அன்பர் வாடிவதங்கிப் போய்ப் படுத்திருக்கும் படுக்கையில் அமர்கிறார். ''இந்த ஏழு நாட்களும் என்ன செய்தாய்?'' என்று கேட்கிறார். அன்பர், சுவாமிஜி? தாங்கள் கூறியதைக் கேட்டபின் மரண பயத்தால் வேறு ஆசைகளோ எண்ணங்களோ இல்லை. சதா மரணத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்'' என்றார்.

சுவாமிகள் சிரித்துக்கொண்டே கூறினார்; ''அப்பா! ஒரு வாரத்தில் மரணம் என்றதும் உனக்கு ஆசைகளும் எண்ணங்களும் போய் விட்டன. உண்மையில் நமக்கு எந்தக்ஷணமும் மரணம் வரலாம். இதை நான் நன்கு உணர்ந்துள்ளதால் மரணத்தை வரவேற்கத் தயாராக, ஆசைகளற்று, சதா பகவானை எண்ணிக் கொண்டு இருக்கிறேன். ஆகவே என்னால் எப்பொழுதும் மகிழ்வோடு இருக்க முடிகிறது. நீ அன்று கேட்ட கேள்விக்கு இது தான் விளக்கம். இதை விளக்குவதற்குத் தான் அன்று உன்னிடம் உனக்கு ஒரு வாரத்தில் மரணம் என்றேன். உண்மையில் இன்று உனக்கு மரணம் இல்லை, எழுந்திரு. சதா பகவத் பக்தியில் ஈடுபடு. ஆனந்தம் தானே உள்ளத்தில் பொங்கி வரும்.''

இன்றும் நம்மிடையே பல மகான்கள் சதானந்த சொரூபிகளாய் வாழ்ந்து வருகிறார்கள். தங்களது ஆனந்தத்தின் மூலம் நமது துக்கத்தை மாற்றி வருகிறார்கள். நாமும் அவர்களைப் போல் சதா பகவத் பக்தியில் ஈடுபட்டுப் பேரானந்தம்பெற இறைவன் அருள்புரிவாராக.

''இன்பமே எந்நாளும் துன்பமில்லை''

—அப்பர் சுவாமிகள்

அகப்பை அறுசுவை அறியாது

வாழ்நாழ் முழுவதும் ஞானியை அடுத்திருந்து உபாசித்தாலும், மூடன் தர்மத்தை உணரான். எதுபோல என்றால், சட்டுவம் கறிச்சுவை அறியாதது போல. சில நாள் மட்டும் ஞானியை அடுத்திருந்து உபாசித்தாலும் மதி நுட்பம் உள்ளவன். அதி விரைவில் தர்மத்தை உணர்வான். கறிச்சுவையை நாக்கு உடனே உணர்ந்து கொள்ளுதல் போல.

—புத்தபெருமான்

மதமும், அதன் சாராம்சமும் அனுபவமும்

— P. பாலகிருஷ்ணன் —

இவ்வுலகப் பொருட்களை மட்டும் நம்பியவர்களாய், இந்திரியங்களால் பெறும் சுகத்தைத் தவிர நாம் அடையத் தக்கது வேறில்லை என்னும் கருத்துடையவர்களாய் தங்கள் வாழ்நாட்களை கழிப்பவர்களெல்லோரும் மதத்தை லக்ஷியஞ் செய்கிறதில்லை. அவர்கள் தங்களின் அறியாமையால் மதத்தை எதிர்க்கவும் துணிகின்றனர். இவ்வுலகப் பொருட்களின் மாறுதல்களையும் நிலையாமையையும் கவனிப்பவர்கள் மதத்தை ஒப்புக் கொண்டு அதை அனுஷ்டிக்கவும் விருப்பமடைவார்கள்.

இவ்வுலகில் நாம் அடைந்துள்ள பந்தத்தால் நமக்குண்டாகும் கஷ்ட நஷ்டங்களையும் துன்ப துயரங்களையும் போக்கி, நம்மை கட்டவிழ்த்து, நம் மூல ஸ்தானமாகிய கடவுள் சன்னிதானம் வரையில் கொண்டு சேர்க்கும் பாதையைத்தான் நாம் மதம் என்கிறோம். கடவுளையும் ஜீவர்களையும் இணைத்து நிற்கும் பாலமே மதம். கடவுளோடு இணைப்பு இல்லாத ஜீவன் யாருமே இல்லை. இருக்கவும் முடியாது. மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்தோமானால் கடவுளுடன் தொடர்பில்லாத வஸ்து எதுவுமே இல்லை என்ற முடிவுக்குத்தான் நிச்சயமாய் நாம் வரவேண்டி இருக்கும்.

நமக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை சந்தேகத்திற்கு சிறிதும் இடமின்றி நாம் அறிவதற்கு உதவியாயிருக்கிற ஒரே வழி தான் மதம் எனப்படுகிறது. அந்த ஒரே வழியை ஒரே மதம் என்றாலும் பொருந்தும். இப்பொழுது உலகில் பல்வேறு மதங்கள் நிலவிய போதிலும், அவைகளெல்லாம் பெயரிலும் பகிர்முக அனுஷ்டானங்களிலும், சிற் சில பழக்க வழக்கங்களிலுமே தவறு பட்டதாக இருக்கின்றன. ஆயினும் யோகத்தின்மூலம் சித்தவிருத்தியை ஒடுக்கி, தினம் ஏகாக்கிரகத்துடன் அந்தர் முகமாய் மேல் நோக்கிச் சென்று தனது உண்மை நிலையாகிய சச்சிதானந்த இறைவனை அடைதல் என்ற லட்சிய பாதையானது எல்லா மதங்களிலும் ஒன்றுகவேயுள்ளது. ஆகையால் பல் வேறு மதங்களும் ஒரே உண்மையை நோக்கிச் செல்வதற்காக ஆரம்பத்தில் வெவ்வேறு முறைகளைப் பின்பற்றிய போதிலும், ஒரு குறிப்பிட்ட ஸ்தானத்திலிருந்து முடிவு வரை எல்லா மதஸ்தர்களும் ஒரே முறையைத்தான் பின் பற்றுகின்றனர் என்பதை அனுபவத்தின் மூலமாய் அறியலாகும். இதிலிருந்து எல்லா மதங்களிலும் இரண்டு அம்சங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஒன்று வெளி முக அனுஷ்டானம் மற்றொன்று உள்முக அனுஷ்டானம். வெளி முக அனுஷ்டானத்தில் மாத்திரமே எல்லா மதங்களும் வெவ்வேறு விதமான சாதனங்கள் அமைந்துள்ளன.

ஆனால் உள் முக அனுஷ்டானமானது எல்லா மதங்களுக்கும் ஒன்று போலத்தான் உள்ளது. ஆதலால் மதத்தின் சாரமாகிய உள்முக அனுஷ்டானத்துக்கே நாம் முக்கியத்துவம் கொடுத்தோமானால், உலகில் தோன்றியுள்ள சகல மதங்களையும் ஒரே மதமாகவே நாம் காண்போம்.

அநேகர் வெளிமுக அனுஷ்டானத்தை மாத்திரம் கருத்தில் வைத்துக்கொண்டு உள்முக அனுஷ்டானத்தை மறந்தவர்களாய் மத பேதத்தை வளர்த்து மதவெறி என்ற கொடிய நோய்க்கு ஆளாகின்றனர். வெளி முக அனுஷ்டானம் மட்டுமே மதம் ஆகிவிடாது என்பதை ஆத்மானுபூதி அடைந்தவர்களெல்லோரும் சான்று பகர்வர். உள்முக அனுஷ்டானத்துக்கு வெளி முக அனுஷ்டானம் தூண்டுகோல் போன்று அமைந்திருக்க வேண்டும். வேற்றுமைகளையுடையதும் ஒன்றுக்கொன்று முரண்பாடுகள் உடையதும் முக்கியமில்லாததுமான வெளிமுக அனுஷ்டானத்தை சற்று நிறுத்தி வைத்துவிட்டு, ஒற்றுமையுடையதும் ஒரேவழியில் செல்வதும் ஒரே முடிவையடைவதுமாயுள்ள உள் முக அனுஷ்டானத்தை ஆராய்வோம்.

இதோ நம் ஸ்தூல சரீரம் இருக்கிறது. நம் சரீரத்துக்குள் சூக்குமமான மனது இருக்கிறது. நம்மனதின் எண்ணத்துக்கும் அது அடைந்துள்ள குணத்துக்கும் தக்கபடியே நம் சரீரமானது தொழில் புரியும்படி மனம் தூண்டுகிறது.

அந்தமனது தான் அதன் ஆசாபாசங்களால் தடிப்படைந்து நம்மை இவ்வுலகில் கட்டுப்படுத்தி வைத்து போலி சுகத்தையும் அளவற்ற துக்கங்களையும் அடைந்து கொண்டு உழன்று வருகிறது. இப்படி உழலுவதிலிருந்து விடுபட்டு, சாசுவதமான ஆனந்த த்தையும் இளைப்பாறுதலையும் (சாந்தியையும்) மீண்டும் இவ்வுலகத் துன்பங்களுக்கு உட்படாமையுமே முக்தி, மோக்ஷம் அல்லது வீடுபேறு எனப்படுகிறது.

இவ்வுலகத் துன்பங்களிலிருந்து விடுபடுவது எங்ஙனம்? மனமானது ஆசை, கோபம், அகங்காரம் ஆகியவற்றால் மலினமடைந்துள்ளதால், துக்கங்கள் நிறைந்த இவ்வுலக விஷயங்களையே சுகமென நாம் நினைத்து வாழும்படி செய்கிறது. காலப்போக்கில் நம்மை மிகுந்த கஷ்டங்களுக்குள் கொண்டு வந்து விடுகிறது. மனம் ஆசை, கோபம், அகங்காரம் ஆகிய மலங்களினின்று சுத்தமுடையதாக மாறினால் துன்ப துயரங்கள் ஒழிந்து சாந்தியும் சந்தோஷமும் ஏற்படுகிறது. மனதை ஆசை முதலாகிய அழுக்குகள் பற்றியிருக்கும் வரை, துன்பங்களிலிருந்து நமக்கு விடுதலை இல்லை.

ஆகையால் நாம் நம் மனதிலுள்ள அழுக்கை முற்றிலும் நீக்கினால்தான் நாம் எவ்வித துன்ப துயரத்துக்கும் உட்படாத நிலையை அடையலாம். மனதை அது அடைந்துள்ள அழுக்குகளிலிருந்து சுத்தப்படுத்தி அந்த மனது என்பது என்ன? அது ஏன் ஆசாபாசங்களை எண்ணுகிறது? அப்படி எண்ணுவதிலிருக்கச் செய்வதற்குரிய உபாயம் என்ன? என்பனவெல்லாம் மதத்தின் சாரமாகிய உள்முக அனுஷ்டானத்தில் அடங்கியுள்ளது.

மனமானது எப்பொழுதும் ஏதாவதொரு எண்ணத்தை எண்ணிக் கொண்டேதானிருக்கும். நாம் நல்ல ஒழுக்கங்களையும் நல்ல நினைப்புகளையுமே கைக்கொண்டு ஒழுகினால் தீய ஒழுக்கங்களும் தீய நினைப்புகளும் நம்மை விட்டு ஒழிந்துவிடும். இப்பொழுது மனம் சிறிது பக்குவமடைந்ததாகிறது. பண்படுத்தப்பட்ட நிலத்தில் விதைத்த விதை விளைந்து நன்கு பலன் கொடுப்பது போல, பக்குவமடைந்த மனதில் மனதைப்பற்றிய ஆராய்ச்சியை துவக்கி மனதின் மலினங்கள் அனைத்தையும் நாசம் செய்து தூய்மைப்படுத்துவதான தியானத்தை வளர்த்துத் துன்ப நீக்கமாகிய நித்திய ஆனந்த பலனை அடையலாம்

நல்லொழுக்கம், ஜீவகாருண்யம், ஈகை, சேவை, துல்லியமான பக்தி ஆகியவற்றால் போதிய பக்குவமடைந்துள்ள மனமானது தியானம் புரிவதற்கு தகுதியுடையதாய் விடுகிறது. மனதை ஒருமுகப்படுத்துவதற்கு உள்முகமாய் செய்யும் பயிற்சியே தியானம். இதை மனத்தின் கேந்திர ஸ்தானமாகிய புருவ மத்திய ஸ்தானத்திலாவது இருதயத்திலாவது செய்யலாம்.

எப்பொழுதும் பற்பல விதமான எண்ணங்களை எண்ணிக் கொண்டேயிருக்கும் மனதை எதையும் எண்ணுதபடி தடுப்பதற்காக தெய்வீகம் நிறைந்த ஒரு பொருளை புருவ மத்திய ஸ்தானத்தில் உள்முகமாய் நிலைநிறுத்தி தியானிப்பதுடன் தெய்வீகம் பொருந்திய தோர் நாமத்தையும் ஜபித்து வரல் வேண்டும்.

இப்படி தியானத்தையும் ஜபத்தையும் சேர்த்து அப்பியாசித்தால் மனமானது மலினம் நீங்கப் பெற்றதாய் சுத்தமடைந்து கொண்டே வரும். தகுந்த ஆகார நியமங்களுடன் குறிப்பிட்ட நேரத்தில் அநுதினமும் சிரத்தையோடு ஒழுங்காக தியானமும் ஜபமும் செய்து வந்தால் மனதில் படிந்துள்ள அஞ்ஞான இருளானது, சூரியனைக் கண்ட பனிபோல் கொஞ்சங் கொஞ்சமாக விலகி உள்முகமாய் சிறிது வெண்மையான மேகம் போன்ற அலைகள் கீழிருந்து மேல் நோக்கிச் செல்வது தெரியவரும். தியானிப்பவன் கீழே நோக்காது மேல் நோக்கிக் கவனித்த வண்ணமே தியானிக்க வேண்டும். ஏனென்றால் கீழே நோக்குங்கால் உலக விஷயங்கள் சுலபமாக மனதை வசப்படுத்தி, தியானத்தின்

ஒழுங்கை கெடுத்து விடும். தியானமும் ஜபமும் அதிகரிக்க அதிகரிக்க மனம் ஒடுங்கும். அப்பொழுது உள்முகமாக பொன் நிறமுள்ள பிரகாசம் பொருந்திய சிறியதோர் ஜோதி தென்படும். ஆரம்பத்தில் அதை உற்றுக் கவனிக்க தியானிப்பவனுக்கு சக்தி இல்லாமற் போனாலும், அடுத்தடுத்து சக்திபெற்று அதையே நன்கு கவனித்து நோக்க இயலும்.

இன்னும் சரிவரத் தியானித்தால் யாதொன்றின் சேர்க்கையுமில்லாமல் தனக்குத் தானாகவே ஒலித்துக் கொண்டிருக்கும் இனிமையான நாதங்களை உள்ளுக்குள் கேட்டு உணரலாம் நாதசப்தங்களை கேட்கக் கேட்க மனது நன்முக வசப்படும். அப்பொழுது தலைதாரை போன்ற இடைவிடாத் தியானம் சித்திக்கின்றது. மனமும் பூரண பரிசுத்தம் அடைகிறது.

சுலபமாக சுவாச பந்தனம் ஏற்படுகிறது. நமக்கும் கடவுளுக்கும் இடையேயுள்ள திரையானது கழன்று கீழே விழுவது போன்று அகங்காரம் நம்மை விட்டு அகலுகிறது நாம் சரீரத்தை கடந்து சென்று எங்கும் ஆனந்தகரமாய் நிறைந்து விளங்கும் பரம் பொருளாகிய பரமானந்த சாகரத்தில் இரண்டற கலந்து விடுவதை உணரலாம். மனமே தூய்மை பெற்று ஆத்மாவாகி பரமாத்மாவுடன் ஒன்றுகிறது. இதுவே மதத்தின் முடிந்த முடிபு. மனித வாழ்வின் அதியுயர்ந்த லக்ஷியம். இந்நிலையை அடைந்தவர்களே தங்கள் ஜீவனுக்கு முக்தியை சம்பாதித்த ஜீவன் முக்தர்கள், மகான்கள்.

இப்படி உண்மையான முக்தியைச் சம்பாதித்தவர்கள் பரமானந்த நிலையிலேயே இருப்பினும் இருக்கலாம் அல்லது உலக உபகாரமான காரியங்களின் பொருட்டு சரீர ஞாபகத்துடன் மீண்டும் சரீரத்தில் இறங்கி இவ்வுலகத்தவர்களோடு கூடி வாழ்ந்து கொண்டே ஞான வாழ்வு வாழலாம். இந்த அனுபவத்தை அடைந்தவர்களே உண்மையான ஞானிகள். இதுவே உண்மையான மத அனுஷ்டானம்.

இந்த நிலையை அடையாத வரையில் துன்ப நீக்கம் என்பது யாருக்கும் கிடையாது. மனதைப் பரிசுத்தம் செய்து தன்னைத் தானறிந்து தலைவனையும் கண்டறிந்த ஞானியினிடத்தில்தான் உண்மையான திருப்தியும், அமைதியும், ஆனந்தமும் நிலவக்கூடும். ஆகையால் யாவரும் ஜீவன் முக்தர்களாக வேண்டி மத அனுஷ்டானம் செய்ய முயற்சிப் பார்களாக!

★

இறைவன்

பரம தத்துவத்தின் திருவாக்கு 'ஓம்' எனும் பிரணவ மந்திரம். அது ஒன்றே. அது சத்தியம், நித்தியம், அது இறைவனின் சொரூபம். அது படைப்பின் சிற்பி: படைப்பிலே பரந்துள்ளது. அது பயமற்றது. எவரிடமும் பகைமை அற்றது. அதன் நிலை காலத்தின் செல்வாக்கிலிருந்து விடுபட்டது. அதற்குப் பிறவி கிடையாது. அது சுயம் பிரகாசம். அதுவே இறைவன். இறைவனைக் குருவின் அருளால் பெறமுடியும்.

—குருநானக்

முற்கால மக்கள்

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு வந்த மெகஸ்தனிஸ் அப்போது நம் ஜனங்கள் எவ்வளவு சத்துக்களாக வாழ்ந்தார்கள் என்பதைக் கூறியிருக்கின்றார். இந்திய மக்களுக்குப் பொய்யே சொல்லத் தெரியாது. தெருவில் போட்டுக்கிடக்கிற பணத்தைக்கூட எடுத்துச் செல்லமாட்டார்கள் என்றெல்லாம் மெகஸ்தனிஸ் சொல்லியிருக்கிறார். அந்தக் காலத்து ஜனங்களின் மனசு மாதிரியே இப்போதும் இருக்கக் கூடாதா என்று ஆசையாக இருக்கிறது.

—தெய்வத்தின் குரல்

கேட்டாரைப் பிணைக்கும் கீதம்

— ஸ்ரீமதி சிவானந்த விஜயலக்ஷ்மி —

சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன், மார்கழி மாதம், நல்ல பனிக்காலம். ஓர் யாத்திரை கோஷ்டியினர் மேற்குக் கடற்கரை ஓரமாக, மலையாள தேசத்திலும், தென் கானரா (கன்னடம்) பிரதேசத்திலும் உள்ள புண்ணிய ஷேத்திரங்களைத் தரிசிக்கச் சென்றனர். பாண்டிய நாட்டிலிருந்து புறப்பட்ட அக் கூட்டத்தில் ஓர் பத்து வயதுச் சிறுமியும் இருந்தாள். வழியெல்லாம். மோட்டாரிலும் புகைவண்டியிலும், இறைவன் திருநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டு போன அக் கோஷ்டி ஒரு ரயில் நிலயத்தில் சற்று தாமதித்தது. அக்கூட்டத்தைச் சேர்ந்த சிறுமியின் சிறிய தந்தை அங்குள்ள 'ஹிக்கின் பாதம்ஸ்' புத்தகச்சாலையிலிருந்து ஒரு ஆங்கில நூலை வாங்கி வந்து, அப் பெண்ணிடம் படிக்குமாறு கொடுத்தார். அப்புத்தகத்தின் பின் பகுதியில் இருந்த ''கீர்த்தன தவனி' களிலிருந்து 'மோஹன பன்ஸி வாலே' என்ற நாமாவளியை அச்சிறுமிபாட, ஏனைய அனைவரும் அதைத் திருப்பிச் சொல்லத் துவங்கினர். சில நிமிடங்களில் அங்கிருந்த அனைவருக்கும் நாம சங்கீர்த்தனச் சூடு ஏறியது.

எல்லோரும் தம்மை மறந்தனர். கரங்கள் தாளமிட, கண்கள் மூடிட, மனம் உள்முகமாகக் குவிய, நாவு நாமம்பாட, உடல் ஆட, எல்லோரும் உரத்த குரலில் நாமாவளிகள் பாடி நர்த்தனம் செய்தனர். அப்பாடலைக் கேட்டவாறு வெளியே சென்றுகொண்டிருந்தவர்களும்கூட தம் தொழிலை மறந்து, செயலற்று நின்றனர்.

இப்படி கேட்டோரை கிறுகிறுக்கச்செய்யும் திருப்பாடல்களைக் கொண்ட அந்நூல் எது தெரியுமா? அகில உலகப் புகழ்பெற்ற, மாசற்ற மாயோகி, ஞானசூரியன், பக்திப் பிழம்பு, சன்யாச சக்கரவர்த்தி, ஸ்ரீலஸ்ரீ சிவானந்த மஹராஜ் அவர்களால் எழுதப் பட்ட ''உணர்ச்சியூட்டும் பாடல்களும் கீர்த்தனங்களும்'' (Inspiring Songs and Kirtans) என்பதே அவ்வரிய புத்தகம் ஆகும். அதைப் பாடிய பாலகி இதை எழுதும் பெண்ணே தான்! அன்று என் தந்தையார் தெய்வத்தின் திருவுள்ளம் தூண்ட, அவ்வரிய நூலை எனக்கு அளித்து, அதைப் படிக்கவும், பாடவும் எடுத்து விளக்கவும் ஊக்கமளித்து, ஆதரித்து என் உள்ளத்தில் இருந்த பக்திக் கனல் பெருக சாதகமான கூற்றுக உதவினர். அவ்வரிய கருத்துக் கருவூலமே பின் என்னை ஸ்ரீ சுவாமிகளைச் சந்திக்கவும், அவர்களது அருள் வாசகங்களில் அன்புறவும் அவர் கமலப் பதத்தில் பக்தி கொள்ளவும் செய்தது.

ஸ்ரீ குருதேவ் எண்ணற்ற பல நூல்களை இவ்வுலகிற்கு வழங்கியிருப்பினும் அவரது ஆங்கிலப் பாடல்களுக்கு இணையாகவேறேதும் இல்லை என்பது எனது முடிவான துணிபு. ஆழ்வாராதிகளும், நாயன்மார்களும், நீதி நூல் புலவர்களும் அநுபூதி நிறை கவிஞர்களும், பதினெண் சித்தர்களும் பாடிய பல்வேறு சருத்துக்களை ஒன்றுசேர்த்துத் திரட்டி, தமிழர்கள் அல்லாத பிற இந்தியர்களும், வெளி நாட்டினரும், அவ்வினிய கருத்துக்களைப் பருகி இன்புறும் வகையில், எளிய நடையில் இனிய முறையில், சிக்கலற்ற சங்கீதப் பண்ணுடன் உலக மொழியாகிய ஆங்கிலத்தில் பாடி உலக மக்களுக்கு மிகச் சிறந்த தொரு உதவி புரிந்துள்ளவர் ஸ்ரீ குருதேவர் ஒருவரே. அவர்களால் இயற்றப் பட்டுள்ள பலநூல்களும் ''உணர்ச்சி யூட்டும் பாடல்களும் கீர்த்தனங்களும்'' (Inspiring Songs and Kirtans) 'ஞானப் பொறிகள்' (Wisdom Sparks) ''ஆனந்த அலைகள்'' (Waves of Bliss) ''புஷ்பாஞ்சலி'' (Pushpanjali) என்ற நான்கு (கவிதைகளால் ஆன) நூல்களை மாத்திரம் படித்தாலே போதும். முதல் நூல் இறை நாட்ட உணர்ச்சியை ஊட்ட, மறுநூல் அருள் ஞான விளக்கினை ஏற்ற, மூன்றும் நூல் அழியாத

சிவ சிவ சிவ

ஓம் திருவாசகம் - திருவெம்பாவை சர்வபூத தமனி பெலப்பிரமதனியை எழுப்புகிருள் பாடல 2

பாசம் பரஞ்சோதிக் கெனபாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையீர்!
சீசி இவையும் சிலவோ? வினையாடி
ஏசு மிடம்ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் திருச்சிற் றம்பலத்துள்
ஈசனுர்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்?

ஓம திருவாசகம் - திருவெம்பாவை பெலப்பிரமதனி பெலவிகரணியை எழுப்புகிருள் பாடல 3

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றுள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர்! ஈசன் பழ அடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோதின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்!

ஓம் திருவாசகம் - திருவெம்பாவை பெலவிகரணி காளியை எழுப்புகிருள் பாடல் 4

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றே?
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கொரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்!

ஓம் திருவாசகம் - திருவெம்பாவை காளி இரவுத்திரியை எழுப்புகிறாள் பாடல் -5

மாலறியா நான்முகனும் காண மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்தமையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
எலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்!

ஓம் திருவாசகம் - திருவெம்பாவை இரவுத்திரி சேட்டையை எழுபபுகிறாள் பாடல 6

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றே?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானெவந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோர் எம்பாவாய்!

ஓம் திருவாசகம் - திருவெம்பாவை சேட்டை வாமையை எழுப்புகிறாள் பாடல் -7

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னவன் முன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னனே என் அரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னேம்கேள் வெவ்வேரூய் இன்னம் துயிலுதியோ?
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்!

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினேம் கேட்டிலையோ
வாழி சதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்!

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே!
உன்னைப் பிரானுகப் பெற்றஉன சீர்டியோம்
உன் அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறைபும் இலோமேலோர் எம்பாவாய்!

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணேரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில் பிணைப்பிள்ளைகாள்
ஏதவனூர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்!

மொய்யார் நடம்பொய்கை புக்கு முகேர்என்னைக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்கான் ஆரழல்போல்
செய்யாவெண் நீறுடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்!

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வாகுலிகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்!

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

காதார் குழை ஆடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல் ஆடச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்!

ஒருகால் எம்பெருமான் என்றென்றேநம் பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணைரைத்தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம்ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

முன்னைக் கடலைச் சுறுக்கி எழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடை யின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கும் முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனே
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றூற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்பரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம் கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்!

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்!

சிந்தித்தவர்க்கருள் கணபதி ஜெய ஜெய

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன் உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு விழுமிய தனித்ததோர் அன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னேச் சிக்கெனப் பிடித்ததேன் எங்கெழுந் தருளுவ தினியே
துப்புடையாரை அடைவதெல்லாம் சோர்விடத்து துணையாவரென்றே
ஒப்புகிலேன் ஆயினும் நினனடைந்தேன் ஆனைக்கு நீ அருள் செய்தமையால்
எய்ப்பு என்னே வந்து நலியும்போது அங்கு ஏதும் நான் உன்னே நினைக்கமாடடேன
அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்து அரவணைப் பள்ளியானே
இன்னிசை வீணையரியாழின ரொருபால் இருக்கொடு தோத்திர மியம்பினரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையினரொருபால் தொழுகைய ரழுகையர் துவழ்கையரொருபால
சென்னியி லஞ்சலி கூபினரொருபால் திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டின் னருள்புரியும் எம்பெருமான் பள்ளி எழுந்தருள்வாயே
முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்ருன் பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் தென்னன
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன் வருந்துயரந் தீர்க்கு மருந்து.

ஓம்
திருச்சிற்றம்பலம்

அன்புக் காணிக்கை

விண்ணுளுந் தேவர்க்கு மேலானவேதியனே மண்ணுளும் மன்னவர்க்குமாண்
பாகினின்ருனேத் தண்ணுர் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானேப்
பெண்ணுளும் பாகனேப் பேணு பெருந்துறையில் கண்ணுர் கழல்காட்டி
நாயேனேஆட் கொண்ட அண்ணுமலையானேப் பாடு துங்காண் அம்மானுய்.

எனது எழுபத்திரண்டாம் ஆண்டு நிறைவு நினைவாக இத்திருவெம்பாவைத் திருமாமறையை ஐந்தாம் முறையாக அச்சிட்டு இலங்கை ஆத்மஜோதி நிலையத்திற்கு சமர்ப்பணஞ் செய்து வெளியிடுகிறேன். சைவப் பெருமக்கள் இந்நூலை வாங்கிப் படித்து இறையருள் பெற்று இன்புற்று வாழப் பிரார்த்திக்கிறேன்.

மு. கி. முத்துராமலிங்கம் பிள்ளை,
M. K. MUTHURAMALINGAM PILLAI,
BOJANA KORADA FACTORY,
Phone: 822579 P. O. Box. 79
No. 10-12, & 283A, Convent Road,
Taiping, MALAYSIA.

இலவசத் தொடர் வெளியீடு–20
15-3-1905 — 15-12-1977.
ஐந்தாம் பதிப்பு.



அரஸ்கோ
FRUIT (JUICE) COCKTAIL
"புறூட் (ஜூஸ்) கொக்ரெயில்
(பஞ்சாமிர்தம்)
உடனே அருந்தக் கூடியது

அரஸ்கோ ஸ்தாபனத்தாரின் புதிய தயாரிப்பு

* மாம்பழம், பப்பாளிப்பழம், அன்னாசிப் பழம், முந்திரிகைப்பழம் பலாப்பழம், ஆகிய ஐந்து வகைப் பழங்களின் சாறெடுத்து சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட உணவுச் சத்துக்கள் நிறைந்த குளிர்பானம் இது ஒன்றே.

* ஒருமுறை அருந்திஞல் என்றும் இதையே விரும்பி அருந்துவீர்கள்

* தாகத்தை மாத்திரமன்றிப் பசியையும் தீர்க்க வல்லது. களைத்தோருக்குக் களைப்பை போக்கி அதிக சக்தியையும் புத்துணர்ச்சியையும் கொடுக்கும். இன்றே வாங்கிப் பருகிப்பாருங்கள்.

* உடனே பருகக் கூடியதாய் 6 அவுன்ஸ் போத்தல்களில் விற்பனைக்குண்டு.

* எங்களிடம் Mango Nector மாங்கோ நெக்ரார் (மாம்பழ அமிர்தம்) உடனே பருகக் கூடியதாய் 6 அவுன்ஸ் போத்தல்களிலும், கரைத்துப் பருகக் கூடியதாய் 26 அவுன்ஸ் போத்தல்களிலும் உண்டு.

* தகரத்தில் அடைக்கப்பட்ட அரஸ்கோ மாம்பழத் துண்டுகள், பலாப்பழச் சுளைகள், மாம்பழக் கிறீம் முதலியவையும்(GrapeJuice) முந்திரிகைப்பழ ரசம், ஸ்ரோபெறி ஜாம், மாம்பழ ஜாம், தக்காளி சோஸ், மிளகாய் சோஸ், பப்பாளிப்பழக் கிறீம், பலாப்பழக் கிறீம் முதலியவையும் விற்பனைக்குண்டு.

அரஸ்கோ மாங்கோ நெக்ரார் எங்கள் சிறந்த தயாரிப்பு.

உற்பத்தியாளர்கள்:—

★

அரஸ்கோ இன்டஸ்றியல் எக்ஸ்போர்ட்ஸ் லிமிட்ட்

163, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7537.

சூரன் யார்? –

துன்மார்க்கத்தில் மனம் போகாமல் அடக்கு
கிறவன்; பெண்களின் பார்வைகளான
பாணங்களால் அடிபடாதவன்.

K. K. SUBRAMANIAM & Co.,
146, Main Street,
Point Pedro.

மதிப்புக்கு மூலம் எது?–

எவனையும், எதையும்
கேட்காதிருத்தல்.

யாழ்ப்பாணம் சீப் சைட்
மெயின் வீதி — பருத்தித்துறை.

சம்சாரத்தில் சாரமாக இருப்பது எது?-

அடிக்கடி இதை நினைத்துக் கொண்டிருப்பதேயாகும். சம்சாரத்தில் சாரம் ஏது என்று நினைத்துக்கொண்டே இருந்தால் பற்று விட்டுப் பிறப்பு அறுக்கலாம்.



பிரகாச ஆபரணமாளிகை
83, கன்னதிட்டி
யாழ்ப்பாணம்.

T'phone: 7515;

பிரகாச அச்சகம்
16, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

பண்டிதன் எவன்? — விவேகி.

யாழ்ப்பாணத்தில் உங்கள் கடிகாரங்களைப்
பழுது பார்ப்பதற்கு
நம்பிக்கையும் நாணயமும் வாய்ந்த இடம்

இன்றே விஜயம் செய்யுங்கள்:

ராணி வாட்ச் வேர்க்ஸ்

21, பஸ் நிலையம் — யாழ்ப்பாணம்.

நங்கடம்பனே
பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத்
திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே



N. SAMBASIVAM & Co.,
34, 36, Kasthuriar Road,
JAFFNA.

மதுவைப்போல்
மயக்கத்தை உண்டுபண்ணுவது எது?—
— — — பற்றுதல் — — —



குமார் அச்சகம்
பருத்தித்துறை

திருடர் எவர்?—
இந்திரியங்களே இழுத்துச்
செல்லும் விஷயங்களே



ராஜன் எலெக்றிக்கல்
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.

குருடனைக் காட்டிலும் குருடன் எவன்?—
ஆசையுள்ளவன்



KALAVATHY JEWEL HOUSE
POINT—PEDRO.

அதிக ஆரோக்கியத்தையும், புதுவித சக்தியையும்
வலிமையையும் பெற்றுக்கொள்ள தொடர்ந்து
பாவியுங்கள்.

சோயாற்றின்

கோப்பி போன்று பாவிக்க கூடியது.

★

ஊக்கத்திற்கும் உற்சாகத்திற்கும்

அண்ணை கோப்பி

★

நாளெல்லாம் உங்கள் இல்லங்களில்
நறுமணம் கமழ

அண்ணை பத்தி

ஜெயந்தி ஜவ்வாது பத்தி

பாவியுங்கள்

அண்ணை தொழிலகம்

இணுவில். தொ. பே. இல. 7412

கிளை:
நிர். 4 நவீன சந்தை
யாழ்ப்பாணம்
தொ.பே.இல. 7413

கிளை:
நிர். 1, மத்திய சந்தை
சுன்னாகம்

பொருளின் மீதுள்ள பேராசையை விடு.
உழைப்பால் அடைந்ததை வைத்துக்கொண்டு
திருப்தியடைவாயாக!



எங்களிடம் எல்லாவித மின்சார உபகரணங்களும்
விற்பனைக்குண்டு.

SUNDARAM TRADING Co.,

163, Main Street – POINT PEDRO.

நோயற்ற வாழ்வு பெற

காயகற்பம்

இதனால் தீரும் நோய்கள்

இரத்தக் குறைவு, தலைவலி, உஷ்ணம், பெலவீனம், உடல் வலி, தூக்கக் குறைவு, கை கால் விறைப்பு, உணர்ச்சிக் குறைவு, வெள்ளை, இருமல், மார்பு வலி, தேகக்கடுப்பு, தேகத்தில் உண்டான நரம்புகளின் தேகதுர்ப்பலம், மார்புத் துடிப்பு, கூய ரோகங்கள், தேக எரிவு, உட்காங்கை, சுவாசகாசம், மேகரோகம், கர்ப்பத்திலுள்ள வியாதிகள், தேகமெலிவு, தோல்புரை நோய், பாண்டு, சோகை இவை தீரும்.
இழந்த வாலிபத்தை மீண்டும் பெறலாம்.

- சிறுவர் முதல் வயோதிபர் வரை பாவிக்கலாம்.
- குடும்ப வாழ்க்கையில் நிம்மதியைக் கொடுக்கும்.

20 நாள் காயகற்பம் 60 ரூபா.

நடைமருந்தாகச் சாப்பிட்டு வரவேண்டியது — பத்தியம் இல்லை.

நடராஜா வீதி
குளப்பிட்டிச் சந்தி
கொக்குவில்,

டாக்டர் ந. சண்முகராஜா
(டீ: ஏ. எம். இலங்கை–சமாதான நீதவான்)

சமர்த்தன் யார்?

பெண்களின் நடையினுல்
வஞ்சிக்கப்படாதவன்.



கண்ணகா வள்ளி மில்,

இடைக்காடு,

அச்சுவேலி.

அனர்த்தத்தைத்தருவது எது?

அகம்பாவம்.



— க. தவராசா —

லக்ஷ்மி அரிசி ஆலை,

LUCKSHMY RICE MILLS & MOTORS,

NELLIADY — KARAVEDDY.

செவிடன் யார்?

இதத்தைக் கேட்காதவன்.



எம்மிடம் சகலவிதமான

ஆங்கில — தமிழ் மருந்து வகைகளும்

பெற்றுக்கொள்ளலாம்.

நாதன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்

மெயின் வீதி,

நெல்லியடி - கரவெட்டி.

குருடன் யார்?

படித்திருந்தும் கெட்ட
காரியம் செய்பவன்.



சாந்தி ஜுவலர்ஸ்

(உரிமையாளர்: ஆர். தர்மலிங்கம்.)

நெல்லியடி — கரவெட்டி.

காலன் நெருங்குகின்றான். நீ பயின்ற கலைகளும் ஓயாமல் செய்துவரும் வியாகரண சாத்திர ஆராய்ச்சிகளும் உன்னைப் பாதுகாக்குமென நினைத்தால் நீ மூடனே யாவாய். கோவிந்தனிடம் அன்பு செலுத்தி அவனை வழிபடு. பாசக் கயிற்றினின்று தப்ப இதுவே வழி.

S. K. COMPANY

93, Colombo Street,
KANDY.

ஆனந்தக் கடலுள் நம்மை ஆழ்த்த, இறுதி நூல் அனைத்துக்கும் இறுதியாகத் தன்னை அர்ச்சிக்கும் அர்ப்பணிக்கும் தனிப் பண்பை நல்கும்.

இந்நூல்களைப் படிக்கும் எவரும் நமது மதத்தின் தத்துவங்களை, ஞானத்தின் மாண்பை, பக்தியின் பெருமையை, நாமத்தின் மஹிமையை, இறைவனின் கருணையை, உலகத்தின் மாயையை, வாழ்க்கையின் அநித்யத்தை, வாழும் வழி முறையை உணருவார். இது காறும் பொன்னான ஜீவனத்தை மண்ணாக்கி விட்டோமே என மனம் நோவர். இனி எந்நாளும் இறைவன் பொன்னார் மலரடியில் இல்வாழ்வேன் என்று உறுதி பூண்பர். இது திண்ணம். முக்காலும் சத்தியம்.

இப்படி இரும்பாக இருக்கும் மனத்தைப் பொன்னாக மாற்றும் சக்தி ஸ்ரீ குருதேவரின் பாடல்களில் உள்ள தனிச் சிறப்பு. அச்சிறப்பு எங்குள்ளது? ஸ்ரீ சுவாமிஜீயின் அருட் பாடல்களில் நம் மனத்தைக் கவருவதுதான் என்ன? அவர் பாடல்களில் நம்மைக் கவருவது சொல்லின் அலங்காரமோ, இசையின் இனிமையோ, இலக்கியச் சுவையோ அல்ல. அவரது வாசகங்கள் நமது செவியின் வழிச் சென்று மறையக் கூடிய தற்காலிகக் குதூகலத்தைக் கொடுப்பதில்லை. கேட்கும் பொழுது தலையை ஆட்டி தாளமிட்டு, கேட்டபின் மறக்கக்கூடிய இசை இன்பம் அல்ல அது.

செவி வழி நுழைந்து, உள்ளத்தைத் துளைத்து, உறங்கிக் கிடக்கும் நமது உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் சங்க நாத ஓசை அது. நெடு நாளாய் உறங்கும் ஞான உணர்வை எழுப்பும் கண்டாமணியின் கணீர் என்ற நாதம். தன் வயம் இழந்த ஜீவர்களின் ஆத்ம சிந்தனையைக் கவர இசைந்த வேய்ங்குழல் கீதம் அது. சங்க நாதமும், கண்டாமணி ஓசையும், வேய்ங்குழல் கீதமும் ஒன்று சேர்ந்து அப்பாடல்களில் ஒலிப்பதை ஒவ்வொருவரும் உணரலாம். "With in you is hidden God"— உன்னுள்ளே மறைந்து இறைவனும் உள்ளான் — "Why do you search invain for pleasure outside?"-இன்பத்தைத் தேடி நீ ஏன் புறத்தே அலைகின்றாய்? "Go to the fontain source in the subjective Atma" ஆதாரமாம் ஆத்ம ஊற்றினை அடையச் செல்— "O, Children of Light! will you drink not, would you drink not the Nectar of Immortality"— ஏ! ஒளியின் புதல்வ, அருளார் அமுதம் பருக மாட்டாயோ என்பன போன்ற சொற்களில் தோய்ந்துள்ள கனிவும், இரக்கமும் நம்மை கசிந்து, கண்ணீர் மல்கி உருகச் செய்யக் கூடியவை! ஒவ்வொரு வாக்கியமும் சிந்திக்கச் செய்யும் சீரிய கருத்துக்கள் நிரம்பியவை. ஒவ்வொரு சொல்லும் காலமெல்லாம் — வாழ்வு முழுவதும், எண்ணி, எண்ணி பன் முறை சிந்தித்து, வாழ்க்கையைத் திருத்தி அமைக்கும் பெரும் பயன் கொடுப்பவை. ஹாஸ்யமும் கேலியும்; அதிகாரமும் அன்பும், வைராக்கியமும் பக்தியும்; கலந்து ஸ்ரீ குருதேவரின் பாடல்கள் முழுவதிலும் பின்னிப் பரிந்து, ஊடுருவிச் செல்வதைக் காணலாம்.

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு நூலும் ஒரு ஆத்மீகக்கருவூலமாகும். அவற்றில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லும் பொன்னேடுகளில் பொறித்துப் போற்றத்தக்கவை. இல்லை! இல்லை! ஒவ்வொரு மனம் என்ற ஏட்டிலே பொறித்துக் காக்க வேண்டியவை. ஒவ்வொரு நாவும் அன்புடன்பாடி, தன்னைமறந்து ஆடி, ஆனந்தமடைய வேண்டியவை. அறிவு என்ற பெட்டகத்தில் போட்டு மூடிவைத்து, அன்புடம் சிந்தனை என்ற தூரிகை கொண்டு துடைத்துப் போற்றிக் காக்க வேண்டிய மாணிக்கங்கள். மகுடியின் இசைக்கு பாம்பு பணிவது போல, குழலின் கீதத்திற்கு கறவையின் கணங்கள் கட்டுப்படுவது போல இப்பாடலைக் கேட்கும் அன்பர்கள், உலகை மறந்து, ஒரு இனம் தெரியாத மனோலயம் பெற்று, ஆடாது அசையாது, எழுதிய சித்திரம் போல அமர்வதைப் பலமுறை பொதுக் கூட்டங்களில் கண்டு அனுபவித்துள்ளேன்.

ஸ்ரீ குருதேவரின் பாடல்கள் கேட்பவரை மாத்திரம் பரவசப்படுத்துவதில்லை. பாடுபவர்களையும் உலகை மறக்கச் செய்கிறது. இப்பாடல்களை ஸ்ரீ சுவாமிஜீயே பாடக் கேட்டிருப்பவர்கள் இக்கூற்றிலுள்ள உண்மையை உணர்வார்கள்.

கொழும்பு தமிழ்ச் சங்க

ஸ்ரீ குருமஹாராஜின் பாடல்களை மனம் கலந்து பாடினால் அதனால் ஏற்படும் இன்பம் எத்தகையதென்று சொல்வது இயலாது. மாணிக்கவாசகரின் திருவாசகம் எனும் தேனில் தினைத்து சுகித்த அருட்பிரகாச ராமலிங்க வள்ளலார் அப்பாடல்களின் இனிமையை விளக்கும் வகையாகப் பாடிய பாடலையே சற்று மாற்றி அமைத்து ஸ்ரீ குருதேவரின் பாடல்களின் தனிச்சிறப்பைக் கூறலாம். அவ்வாறுயினும் அவ்வின்பத்தைப் பரிபூரணமாக வர்ணித்ததாகாது. ஓரளவே கூறியதாகும்.

வான்கலந்த சிவானந்த வள்ளலேநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்திற்
சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

திகட்டாத தித்திப்பு. தேனினும், பாலினும் பழரசத்தினும் இனியது அச்சுவை. அது நமதுஉடலைப்புளகிதமடையச்செய்து,ஊனுள் புகுந்து, உயிருள் கலந்து, உவட்டாமல் தித்துக்கும் தன்மையது. அவ்வருட் பாடல்களைக் கேட்பவர்கள் ஆத்மீக நிலையில் எவ்வளவு கீழ்த்தரமாக இருப்பினும் அவர்களது கல், போன்ற மனமும் கணத்தில் கசிந்துருகி, அற்பமாம் அவகுணங்கள் அடியோடு நீங்கி, தற்பரனின் தாளடியில் தடையின்றித்தங்கி, அற்புதமாம் ஆனந்தம் அளவின்றி அடையும்.

வாட்டமிலா சிவானந்த வாரியே நின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே!

பெரும் அருட்கடலாகிய ஞான ஆழ்கடலில் மூழ்கி மேற் கூறிய நூல்கள் போன்ற பல அரிய முத்துக்களை நமக்கு ஸ்ரீ சுவாமிகள் கொணர்ந்துள்ளார்.

நன்கு தீட்டப்பட்ட உயர்ந்த ஜாதி வைரத்தை எந்தப் பக்கம் திருப்பினாலும் அங்கு கண்ணைப் பறிக்கும் ஒளி வீசுவதுபோல ஸ்ரீ சுவாமிகளின் ஞான நூல்களில் எதை எடுத்து, எந்தப் பாகத்தைப் படித்தாலும் அங்கு அறிவைக் கவரும் அருள் ஒளி வீசுவதைக் காணலாம். அவரது நூல்களின் தனிச்சிறப்பு அவற்றில் காணும் எளிமையே. முதல் படிவம் படிக்கும் பையன் முதல் முற்றும் கற்றுணர்ந்த கலைஞர்கள் முடிய எல்லோராலும் ஒருங்கே அறியப்பட்டும், போற்றப்பட்டும், பாராட்டப்பட்டும், மீண்டும், மீண்டும் படிக்கப்பட்டும் இன்பம் தருபவையாக அவரது அருள் வாசகங்கள் அமைந்துள்ளன. சுருங்கக் கூறி மிகுந்த பொருளை தன்னகத்தே கொண்டு விளங்கும் தனித்தன்மை அவர்களது வாக்குகளுக்கே உண்டு. இதற்குக் காரணம் அந்நூல்களை அவரது கைதான் எழுதுகின்றது. ஆணவமும், அகந்தையும் அழிந்த அன்னாரது அறிவின் வாயிலாக உலகுக்கெல்லாம் ஆதாரமானதும், சகல ஞானங்களுக்கும் உறைவிடமானதும், சித்சக்தியுமாகிய பரம்பொருள் தான் எழுதுகின்றது. அப்பர் அறிவு உணர்த்த அதை அவர் உலகுக்கு வெளியிடுகிறார். இதை குருதேவரே சில சமயங்களில் கூறியதுண்டு. அச்சம்பவங்களை எல்லாம் கூற முற்பட்டால் இக்கட்டுரை விரியும் என்று அஞ்சி கூறாது ஒதுக்குகின்றேன்.

எந்த ஒண் பொருளை வேதமும் அருகில் சென்று இயலாது எட்ட இருந்தபடி 'ஐயா!' என ஓங்கி அழைக்கின்றதோ, எந்த வஸ்து அடிகாண இயலாத ஆழமும் எல்லை காண இயலாத பரந்த தன்மையும், எதிலும் சிக்காத நுண்ணியத் தன்மையும் பொருந்தியுள்ளதோ, எப்பரம் பொருளைப் பற்றிய அறிவு நமக்கு உண்டாவதற்காக உவமையற்ற உபநிஷதங்களையும், எண்ணற்ற சாஸ்திரங்களையும், கணக்கற்ற புராணங்களையும் நமது முன்னோர்கள் தோற்றுவித்துள்ளனரோ, அந்தப் பரம்பொருளையும் அதை அடையும் மார்க்கத்தையும் இத்தனை எளிதாக, இத்தனை சுருக்கமாக கூறக்கூடியவர் யாருமேயில்லை என்றுல் அது மிகையே ஆகாது. பரம்பொருளைப் பற்றிய விளக்கத்தை மூன்றே வார்த்தைகள் கொண்ட ஆறே வரிகளில் கூறுகிறார் ஸ்ரீ குரு பகவான்.

பள்ளியில் படிக்கும் ஏதும் அறியாத பச்சைப் பாலகனுக்கும் அது மனதில் எளிதில் பதிந்து விடும். "God is Truth"–சத்யமே கடவுள், "God is Bliss"-ஆனந்தம் கடவுள், "God is Peace" அமைதி கடவுள், "God is Love" – அன்பே

கடவுள், ''God is Knowledge''-அறிவே கடவுள் ''God is Light''–ஒளியே கடவுள், இந்தப்பகுதியை ''Song of Govinda'' – (கோவிந்தா பாடல்) லில் பார்க்கலாம். பாலர்கள் பலர் ஒன்று சேர்ந்து இப்பாடலை கைதட்டிக் கொண்டு பாடுவதைக் கேட்டால் மெய் சிலிர்க்கும். பரம்பொருளைப் பற்றிய எத்தனை அழகிய விளக்கம்! எவ்வளவு குறைந்த சொல்! குறைந்த சொல்லின் நிறைந்த பொருள்!

எங்கும் நிறைந்த ஏக வஸ்துவின் குறை வற்ற நிறைவை விளக்கும் மந்திரமே ஈஸா வாஸ்ய உபநிஷதத்தின் சாந்தி பாடம் ஆகும். 'பூர்ண மத, பூர்ணமிதம், பூர்ணத் பூர்ண முதச்யதே, பூர்ணஸ்ய, பூர்ண மாதாய, பூர்ண மேவாசிஷ்யதே' எனும் இந்த மந்திரம் தினந்தோறும் ஸ்ரீ சிவானந்தாச்சிரமத்தில் சத்சங்க இறுதியில் கூறப்படுகிறது. இதன் சாரத்தை ஒரு பாடலில் ஸ்ரீ குருதேவர் விளக்குகிறார்.

''By Thee! O Great Conciousness–Bliss-Ocean Full! From Thou that art Full, Come out Worlds that are Full, But lo! There remains yet Thy Glory in Full'' — பூரணமாயுள்ள ஆனந்தப் பெருங்கடலே! உம்மிடத்திருந்து அண்டசராசரங்கள் என்ற துளிகள் சிதறின. அவையும் பூரணமாயுள்ளன. பூரணரான உம்மிடத்திருந்து உதித்த பல உலகங்களும் பூரணமாயுள்ளன. ஆனால் என்னே! (இத்தனையும் பிரிந்த பின்னரும்) இனியும் தங்கள் இணையிலாச் சக்தியின் மகிமை பூரணமாகவே உள்ளதே! விஞ்ஞானிகள் உலகில் எதுவும் அழிவதில்லை எனக் கூறி எப்போதும் ஒரே நிலைதான் இருப்பதாகக் கூறுகின்றனர். உபநிஷதங்களும் எப்போதும் குறையாத நிறைவே என்று உணர்த்த, அதைநாம் அறிந்து கொள்ளும் பாங்கில் ஸ்ரீ சுவாமிகள் எடுத்துக்கூறும் அழகை என்னவென்பது!

பரம்பொருளின் காட்சியை உலகெங்கும் காண்கிறார் ஸ்ரீ குருதேவ். "உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்''என்கிறார் நம்மாழ்வார். இதையே இன்னும் சற்று விளக்கமாக நகைச் சுவையோடு சேர்த்துக் கூறுகிறார் ஸ்ரீ சிவா.

''மாதா பிதா பிரம்மன் லட்கா (பையன்) லட்கி (பெண்) பிரமன் - துத் (பால்) தஹி (தயிர்) பிரம்மான்-- சந்தன் (சந்தனம்) புஷ்பம் (மலர்) பிரம்மன்–கரமாகரம் சா (சுடச்சுட டீ) பிரம்மன் – டண்டாலெமனேட் (குளிர்ந்த எலிமிச்சை ரசம்) பிரம்மன். (Fashion Style)(நாகரீகம்,நவஅலங்காரம்)பிரம்மன்– Just and unjust (நீதி, அநீதி) பிரம்மன்–கானே வாலா (பாடகரும்) பிரம்மன் - ஸுன்னேவாலா கேட்பவரும் பிரம்மன் – ஹார்மோனியம்வாலா (இசைக்கருவியாளரும்) பிரம்மன்-தபேலாவாலா (மிருதங்ககாரரும்) பிரம்மன்'' என ஒரு பாடலை ஸ்ரீ குருதேவ் பாடியுள்ளார்.

பல பாஷைகளை ஒன்று சேர்த்துப் பாடும் அருங்குணம் ஸ்ரீ குருதேவரிடம் காணப்படும் மற்றொரு அதிசயமாகும். பாஷைகளெல்லாம் ''ஓம்'' என்ற பிரணவ அக்ஷரத்திலிருந்து உதித்தவை என்பதை உணர்ந்து எந்த ஒரு பாஷையிடமும் விருப்பு, வெறுப்பு அற்று எல்லா மொழிகளிலும் பாடும் ஆர்வமும், ஆசையும் மிகுந்தவரே நமது ஆசானியர்.

தம்மிடம் வரும் சீடர்களிடமிருந்து அவர்களது தாய்மொழியில் சில வார்த்தைகள் கற்றுக்கொண்டு அந்த ஒரு சில வார்த்தைகளைக் கொண்டே தத்துவார்த்தப் பொருளுடைய பாடல்களை அவர் அமைத்துள்ளார்.

ஆங்கிலக் கணித சூத்திரமாகிய A+B (ஏ+பி) B+C (பி+ஸி) என்பதை வைத்து ''ஸாவரபன்ஸிவாலா'' எனும் நாமாவளிக்கு ஸ்ரீ குருதேவ் 'கல்பனா ஸ்வரம்' போலப் பாடுவதை இன்றெல்லாம் கேட்டாலும் சலிப்பு ஏற்படாது. ஸரி, க,ம,ப,த,நி,ஸ–ஏக்,தோ, தீன் என்று அதற்கு விதவிதமாகச் ஸ்வரம் பாடுவார். அந்தனைக்கும் ஆத்மார்த்த அர்த்தமும் உண்டு. அதுவே இதிலுள்ள தனி விந்தை!

முன்னால் கூறப்பட்டுள்ள ''பிரம்மமயம்'' எனும் பாடலில் ஆங்கிலம், ஹிந்தி, தமிழ், வடமொழி எனப் பல மொழிகள் கலந்து ஒரு நூதன மணிப்பிரவாள நடையை தோற்றுவித்துள்ளார் ஸ்ரீ சிவா. இது கேட்பவர்களை நன்கு சிந்திக்கச் செய்கிறது. ஆனால் அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை சிரிப்போடு போகாது சிந்திக்கவும் வைக்கிறது.

'எல்லாம் இறைவடிவம். அனைத்தும் அவனே' எனக் காண்பதே உண்மையான ஞானக் காட்சியாகும். பகவான் இதுவே ஞானிகளின் லக்ஷணம் எனக் கூறுகிறார். 'யோ மாம் பர்யதி ஸர்வத்ர ஸர்வம் சமயி பர்யதி! தஸ்யாஹம் நப்ரணச்யாமி!! (கீதை 6ம் அத்-30வது ஸ்லோகம்) ஒரே வஸ்துவான சர்க்கரையால் பல்வேறு வடிவங்கள் உண்டாக்கிய போதிலும் அனைத்தும் ஒரே சர்க்கரையின் விதவிதமான வடிவம்தான் என்பதை அதை அறிந்தவன் மறப்பதில்லை.

அதுபோல எல்லாம் இறைவனின் திருவடிவம் என்று உணர்ந்தவர்கள் ஞானியர்கள். இக்காக்ஷியைப்பெற்றவர்கள் நமது பண்டைய பெருமக்கள். ''வானுகி, மண்ணுகி, வளியாகி, ஒளியாகி, ஊனுகி, உயிராகி, உண்மையுமாய், இன்மையுமாய்'' என மாணிக்க வாசகப் பெருமானும், ''வித்தாகி, மூலமாகி, விளைவதாகி, விளைவிக்கும் பொருளாகி மேலுமாகி கொத்தாகிப் பயனுகிக் கொள்வோனுகிக், குறைவாகி, நிறைவாகிக், குறைவிலாத சத்தாகி, சித்தாகி இன்பமாகி'' என வள்ளலாரும், ''அப்பன் நீ அம்மை நீ, ஐயனும் நீ, ஒருறவும் சுற்றமும் ஓர் குலமும் நீ, என அப்பர் சுவாமிகளும், ''விஸ்வஸ்ய ஸ்ருஷ்டி விலய ஸ்திதி ஹேது பூதா'' என ஆதிசங்கரரும் ''இந்தே விட்டலா, முகுந்தே விட்டலா, இடகே விட்டலா, பலகே விட்டலா, மேலே விட்டலா, உலகே விட்டலா, ஹொரகே விட்டலா, தந்தே விட்டலா, நாயீ விட்டலா, பந்தூ விட்டலா, பலகா விட்டலா, பந்தூ பலகா புரந்தா விட்டலா என புரந்தரதாஸ் சுவாமிகளும் ''தாத, மாத, ப்ராத, பந்து ஆபணே நகோயி'' என் பக்த மீராபாயும் பாடிப் பரவசம் அடைந்துள்ளனர்.

இக்கருத்துக்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட மிக அழகிய பாடல் ''Song of Immanence of Ram'' என்பதாகும். இது கேட்டவர் மனதைக் கிறக்கும் சக்தி வாய்ந்தது. ஆத்ம போதத்தை தரும் மதுவை ஒத்தது. கண்களை மூடியவாறு இப்பாடலைச் செவி மடுத்து, உள்ளத் திரையில் இதில் கூறப்படும் சாக்ஷிகளை ஒவ்வொன்றுக கண்டால்..... ஆஹா!..... அவ்வின்பத்தை என்னென்று இயம்புவது!

அன்பே உருவான குருதேவர் சிலசமயங்களில் அதிகாரம் நிறைந்த எஜமானராகவும் காக்ஷியளிப்பார். சீடர்களை, இல்லை, உலக மக்களைத் திருத்த, அவர்கள் உள்ளத்தை இறைவன் பால் திருப்ப, பல வகையில் தமது சொல்லின் வன்மையைத் தீவிரமாக உபயோகிக்க அவர் தயங்கவே மாட்டார். மனித ஜன்மம் எடுத்தும் அதனைப் பயன் படுத்தாது உண்டு, உடுத்தி, உலக சுகம் தேடி, பொழுதையும் பொருளையும், முறையற்ற வகையில் செலவிட்டால் அமைதி எவ்வாறு கிட்டும்? உனக்கு யார் அந்தியகாலத்தில் உதவப் போகிறார்கள். அவன்கழுத்தில் சுருக்கிட்டு இழுக்கத் தயங்கவேமாட்டான்.

தர்மவான் என்றே, அதர்மவான் என்றே, பண்டிதர் என்றே, பாமரர்என்றே, அரசன் என்றே ஆண்டி என்றே அவன் பார்க்க மாட்டான். எங்கே நெப்போலியன்? எங்கே சிவாஜி? எங்கே யுதிஷ்டிரர்? எங்கே அசோகர்? எங்கே ஷேக்ஸ்பியர்? எங்கே தாகூர்? என்று கேட்டு இடித்துரைத்து இதமொழி கூறும் (Song of Admonision) பாடலும் ''எவ்வாறு ஆற்றில் கட்டைகள் கூடிப் பிரிகின்றனவோ அவ்வாறு ஸம்சாரம் எனும் ஆற்றில் இக்கட்டைகள் (தேகங்கள்) கணவன் மனைவி என்றும் தகப்பன் தனயன் என்றும் சகோதரன் சகோதரி என்றும் கூடிப்பிரிகின்றன.

எனவே புத்திர மோகத்தை, செல்வ மோகத்தை, பத்தினி மோகத்தை, விடு மனிதா–உலகம் ஓர் சந்தை–இரு நாள் திருவிழா–இவ்வாழ்க்கை சில நிமிட விளையாட்டு-எனவே ஆத்மாவை அறிய முயலு-உனக்கு அனனிய பக்தி இருக்குமானுல், நீயே கதியென இறைவனை சரணுகதி அடைவாயானுல், ஒருமுறையாகிலும் மனதுருகி, உள்ளக்கிடக்கையிலிருந்து ''நான் உன்னவன் இறைவா! உன் சித்தமே நடக்கட்டும்'' என உணர்ந்து கூறுவாயானுல் உடனே உனக்கு அவன் தரிசனம் கிட்டும்'' என்று கூறும் பக்தி வைராக்கியப் பாடலும் (Song of Bhakti and Vairagya) கேட்பவரைக் கண்ணீர் சிந்தி இதுவரை வாழ்நாளை வீணுள் ஆக்கியதற்காகப் பச்சாதாபப் படச் செய்பவை.

''வாய் வார்த்தைகளுக்கோ, உதட்டுச் சிரிப்புக்கோ இறைவன் கட்டுப்படமாட்டான். அவனை எண்ணி எண்ணிக் கசிந்துருகி அழுது அரற்றி வேண்டினால்தான் வருவான். சகோர பக்ஷி சுவாதி நக்ஷத்திர மழை நீரன்றி வேறெந்த நீர்த்தடத்திலிருந்தும் நீர் பருகி தாகம் தணியாததுபோல, உண்மைப் பக்தன் ஸ்ரீ ராமன் சரண சுகமின்றி புலன்களின் சுகத்தைத் தேடக்கூடாது. கண்ணீரினால் உள்ளக் கண்ணாடியைக் கழுவு. ராமநாம சவுக்காரத்தைத் (சோப்) தடவி பிரம்மசரியம் என்ற பிரஷ்கொண்டு, தெய்வீகக் காதல் என்ற நீரினால் மனக்கோயிலை சுத்தம் செய்து அங்கு இறைவன் திருவடியை எழுந்தருளப் பண்ணி வழிபடு'' என்பது போன்ற பலபல அறிவுரைகளைப் பல பாடல்களில் வற்புறுத்தியுள்ளார் ஸ்ரீசுவாமிஜீ.

கண்ணனின் கீதையில் கூறப்படும் சிறந்த நற்குணங்களை மிகச் சிறந்த வகையில், ஒவ்வொரு சொல்லும் இ–டி (Ity) என்று முடியும் சந்தத்துடன் அழகிய இசையில் ஸ்ரீ சுவாமிகள் அமைத்துள்ளார். நற்குணங்களும் - தீயகுணங்களுமாக 'Song of Eighteen Ities' என்ற அவ்விரு பாடலைக்கேட்ட பல பண்டிதர்கள் கூட வியப்பு மேலீட்டால் இத்தனை 'Ity' க்களை எப்படி யோசித்து அமைத்தாரோ என்று ஆச்சரியப்படுகிறார்கள். இவ்வரிய நற்குணங்களையே நல்மலராக்கி இறைவனை வழிபடுகிறார் மற்றோரிடத்தில். இந்நூதன வழிபாட்டை ஒவ்வொரு நாட்டு மக்களும் ஆற்றினால் ஆண்டவனுக்கு எத்தகைய ஆனந்தம் ஏற்படும்! உலகம் எத்தனை அமைதியுடன் வாழும் !ஒவ்வொரு வரும் இத்தகைய அன்புவழிபாடு ஆற்ற வேண்டும் என்பதே ஸ்ரீ குருதேவரின் பேரவா ஆகும். ''தெய்வ மலர்கள்'' (Divine Flowers) எனும் அப்பாடல் புஷ்பாஞ்சலி எனும் சிறு நூலில் உள்ளது. அதன் தமிழ் ஆக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

''இன்பமே நல்கிடும் ஈசா என் இறைவா!
என் மலர்க் கூடையில் மலரேதும் இலையே!
எனினும் நான் உந்தனுக் களிப்பேனே எந்தாய்!
இங்கெங்கு மில்லாத இனிய நல் மலரே!
வருந்தியிங் கவற்றை நான் வளர்த்திட்டேன் நாதா!
வாராதவை விலைக்கு வீதிக் கடைதனிலே!
இவ்வுலகில் எங்கு மவை எய்துதல் அரிதாம்
முவ்வுலக நந்த வனங்களிலுமவை இலையாம்.
சாந்தமே என்றதொரு சண்ணக மலராம்.
சமதிருஷ்டி என்னுமுயர் ரோஜாமென் மலராம்
சந்தோஷம் என்னும் பெரும் மல்லிகையும் உளது
சத்ஞானம் எனும் தெய்வ பாரிஜாதமும் தந்தேன்
இனமுணரும் விவேகமாம் மந்தார மலராம்
மனவடக்கம் எனுமரிய மணமிகும் மலராம்
அரிய இம்மலருனக்கு ஆனந்தம் தருமே
அன்புடனிவை ஏற்று அருளும் என் ஐயா!
எனவிங்ஙன் இயம்புகின்றார் சிவானந்தர்.

எத்தனை அழகிய பாடல்! எவ்வளவு உயர்ந்த கருத்து! எத்தகைய சீரிய பாவம்! இத்தகைய பக்தி வேகம் எல்லோருக்கும் வருவதாக.

குணங்களைப் பண்படுத்த இந சொல்லிலே இனிய பாடல்கள் பல பாடியுள்ளார். ''கோவிந்தா'' பாடலில் அவரின் இந சொல் வாக்கிய அலங்காரத்தைக் கண்டு இன்புறலாம். வாழும் வகைதான் என்ன என மருளும் மக்களுக்கு எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சம் செய்து இனிது வாழ்வர் என்றுணர்த்தும் (Song of little) நகைச்சுவையோடு நலமிகும் தெய்வீக வாழ்க்கை வழியைக் காட்டும் சமநிலைக்கருத்தும் கொண்டது.

இப்பாடலுக்கு உடனுக்குடன் ஸ்ரீ சுவாமி தமிழிலும் ஹிந்தியிலும் மொழி பெயர்த்து பாடுவதைக் கேட்டால் எத்தனை இன்பமாய் இருக்கும்! உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அவரது இனிய குரலோசை இப்போது கூட செவிகளில் ரீங்காரமிடுகிறது.

ஸ்ரீ குருதேவரால் இயற்றப்பட்டுள்ள நகைச்சுவை மிகுந்த பாடல்கள் எண்ணிறந்தவை. கோடை காலத்தில் I.C.S (Ice Cream Seller ஐஸ் கிரீம் விற்பவன்) ஆகவும், குளிர்காலத்தில் P. C. S. Potatoe Chop Seller (உருளைக்கிழங்கு வறுவல் விற்பவன்) ஆகவும் மாறும் உலக மக்களின் பட்டத்தின் ஏமாற்றைக் கூறும் பாடலும் F.F.S.-F.T.D. என்று தனது பட்டங்களை வைத்துக்கொண்டு தலைமை ஆசிரியராக வேலை பார்த்த ஓர் 'பெருங்குடும்பி'யின் கதையைக் கூறும் பாடலும், உங்கள் பிரம்மன் எங்கள் உப்புமா, சாம்பார், காபியைப்போல் அத்தனை ருசியுள்ளதல்ல என மதராஸியும்

எங்கள் பரோடா, பால் ஸாக் போல சுவை மிகுந்ததல்ல என பஞ் சாபியும், ரஸகுல்லா சந்தேஷ் போல இனியது அல்ல என வங்காளியும் இவ்வாறு பல மாகாணத்தினர் பல வகையில் கூறுவதாகக் கூறி மக்களுக்கு உண்டியிடத்தும் உணவிடத்தும் உள்ள தவிர்க்க முடியாத ஆசையை உணர்த்தும் பாடலும், மேலை நாட்டு நாகரீகத்தைக் குறை கூறும் 'அமெரிக்க நாகரீகம்' என்ற பாடலும், 'தொத்து வியாதி' என்ற தலைப்பில் ஒருவர் செய்வதை எல்லோரும் செய்யும் கண்மூடிப் பழக்கத்தைக் கண்டு நகைக்கும் பாடலும் ஸ்ரீ குருதேவரின் அறிவூட்டும் நகைச்சுவைத் திறனுக்கு ஒரு சில உதாரணங்களாகும். ஒவ் வொன்றுக எடுத்துக்கூற இடம் இல்லையே என்ற வருத்தம் ஏற்படத்தான் செய்கிறது! என் செய்ய!

ஞானநூல்களாய உபநிஷதங்களாயும் சதாசாரத்தை (நன்னெறி) வலியுறுத்தும் இதிகாசங்களாகிய இராமாயணம், பாகவதம் முதலியவற்றையும், கீதையின் சாரத்தை பக்தியோகம், நாம சங்கீர்த்தன யோகம் ஜபயோகம், கர்ம யோகம், ராஜயோகம், ஞானயோகம் எனத் தனித்தனியாகவும் பல பாங்கில் பாடி, பாலர்கள் உள்ளத்திலும் எளிதில் பதியுமாறு, என்றும் மறக்க இயலாதவாறு, நாமாவளிகளுடன் இசைத்துத்தந்துள்ளார் ஸ்ரீ சுவாமிஜீ. பொதுவாகக் கூறினால் ஸ்ரீகுருதேவர் போன்று ஆங்கிலத்தில் இந்திய தத்துவங்களை இத்தனை எளிதாக இனிமையாகப் பாடியவர் இதுவரை யாருமே இல்லையெனத் திண்ணமாகக் கூறலாம்.

சோகமும், மோகமும், தாபமும், தளர்வும், ஏக்கமும், இளைப்பும் மிகுந்த காலத்தில் அவ்வுணர்ச்சியைப் போக்கி, புத்துணர்ச்சியும் புது ஊக்கமும், புது வேகமும் புதிய இன்பமும் கொடுக்க இதோ ஒரு அருமருந்துள்ளது! ஆம் தலைவலிக்கு மாத்திரை போல மனவலிக்கு மருந்து—பாடுங்கள். "சிதானந்தப் பாடலைப் (Song of Sidanand) பாடுங்கள்! "எல்லா நிலைகளிலும் நான் சச்சிதானந்த ஆத்மாவே—பசி, பிணி, மூப்பு, மரணதி அணுகாத சச்சிதானந்தமே நான். ஹர் ஹாலுமே அல்மஸ்த் சச்சிதானந்த ஹூம்" என்று ஸ்ரீ சுவாமிஜீ பாடுவது போல அத்தகைய உணர்ச்சியோடும் வேகத்தோடும் பாடினால் கவலையும் கலக்கமும், துயரமும் துன்பமும் நம்மை அண்டவும் இயலுமோ!

உலகம் என்ற பாலை வானத்தில், செல்லும் எல்லையை மறந்து, பொருள், புகழ் என்ற கானல் நீர் பின் சென்று ஓடிக்களைப் படைந்து, தணியாத தாகம் கொண்டு தபிக்கும் மானிடர்க்கு ஸ்ரீ குருதேவரின் அருட் பாடல்கள் அமிர்தம் போன்ற தண்ணீரளவும், எத்தனை அனுபவித்தாலும் அடங்காத ஆசை என்ற பசிக்கு இரைதேடி அயரும் நம் அறிவுக்கு அமுதமாகவும்; ஓயாது மாறி வரும் பிறப்பு, இறப்பு, பிணி, பசி, மூப்பு என்ற உயிருடன் ஓடிய நோய்க்கு மருந்தாகவும்; விஷய, விசார, விகார விஷங்களால் தீண்டப்பட்டு, பற்பல நாசகரமான குணங்கள், எண்ணங்கள் என்ற ரணங்களால் உபாதைப்படும் சிந்தனைக்கு ரணசிகிச்சையாகவும், முன் செய்வினைகள் என்ற கொடிகள் செடியாய வல்வினைகள் எனும் கொடிகள் நிறைந்ததும், பாவம் எனும் புதர் மண்டிக் கிடப்பதுமாகிய 'பவம் என்ற குழிக்குள் விழுந்து, அஞ்ஞானம் என்ற இருள் கண்ணை மறைக்க கரை ஏறும் வகை அறியாது அலறும் மனத்திற்கு அருள் ஞான ஜோதியாகவும் பல்வேறு பிறவிகள் எனும் பெரும் அலைகள் மோதி அலைக்கழிக்க, துணை ஏதும் இன்றி காமம் என்ற சூறாவளிக் காற்றால் அலைப்புண்டு, குரோதம் எனும் திமிங்கிலம் விழுங்கப் பாய, லோபம், மோஹம் போன்ற சுறாமீனினங்கள் சுற்றிலும் சூழ, தனியனாய் தத்தளிக்கும் ஜீவனை அக்கரை சேர்க்கும் படகாக ஸ்ரீ குருதேவரின் அருட் பாடல்கள் அமைந்துள்ளன.

அறிவின் ஆற்றலும், அன்பின் கனிவும், பண்பின் பரிவும் நிறைந்த அப்பாடல்களைப் பார்த்தாலும், நினைத்தாலும், படித்தாலும் படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும், பாடினாலும் பாடக் கேட்டாலும் எவ்வகையாயினும், அவற்றிலிருந்து பெருகும் இன்பத் தேன் நமது ஜீவனைச் சூழ்ந்துள்ள மும்மலங்களையும் நீக்கி அருளும் சக்தி படைத்திருக்கிறது. பல்வேறு பிறவிகளில் துருவேறிய

நமது மனம் எனும் இரும்பைப் பரிசுத்தமாக்கி! அருட்கருணை எனும் காந்தமாக நம்மை தன்பால் இழுத்து, இறவாத இன்ப வடிவான இறைவனிடம் நம்மை இட்டுச் சென்று, நிலையான சுகத்தைத் தரும் சக்தி வாய்ந்தவை ஸ்ரீ குருதேவரின் பாடல்கள். மருள் நாட்டம் கொண்ட நமது மனத்தை அருள் நாட்டத்தில் சேர்ப்பிக்கும் அக்கீதங்களைக் "கேட்டாரைப் பிணைக்கும் கீதம்" எனக் கூறினால் மிகையாகுமோ!

ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்தரின் இலக்கியங்களைப்பற்றி சிந்தித்து இன்புறும் இப்புனித தினத்தில் அவர்கள் இன்னும் பலகாலம் இந்நிலவுலகில் நம்மிடையே வாழ்ந்து, ஆண்டவனின் அருட்குரலாக நமக்கு அருள் உபதேசங்கள் நவின்று, பன்னூலும், நல்வழிகாட்டியாக அமைந்து அனுக்ரஹிக்க வேண்டுமாறு எல்லாம்வல்ல இறைவன் திருக்கருணையை இறைஞ்சி ஏத்துவோம். ஸ்ரீ சுவாமிஜீயின் எழுத்துக்களில் காணப்படும் தனிப்பெருமையை ஆத்மசக்தியை மேலும்மேலும் உணர்ந்து பாராட்டி, பணிந்து, பன்முறை படித்துப் பயனுறுவோம்!

வாழ்க சிவானந்தர்! வாழ்க அவர் இலக்கியம்!
வாழ்க அவர் பாடல்! வாழ்க அவர் எழுதுகோல்!!

ஆனந்தம் பெறவழி

கட்டுக் கடங்காமல் இச்சித்த பொருள் மீதெல்லாம் தாவி அலையும் மனத்தை அடக்கி ஆளுவது நல்லது. அவ்வாறு மனத்தை அடக்கி ஆளுவது ஆனந்தம் பெறச் சாதகமாகும். இந்த மனம் எளிதில் ஆய்ந்தறியக் கூடாதது. அதி சூட்சுமமானது. விரும்பிய பொருள்மேலெல்லாம் தாவி அலைவது, ஆகவே அறிவுடையோன் தன் சிந்தைக்கு நல்லகாவலிட வேண்டும். அவ்வாறு காவலிடுவது ஆனந்தம் பெறச் சாதகமாகும்.

தமக்குத்தாமே பகைவன்

பாவசிந்தையும் அறியாமையும் கொண்டவர்களுக்கு வாழ்க்கையில் வேறு மாற்றார் தேவை இல்லை. நிஜனை செய்து அதன் மூலம் பாவச்சுமையைக் கட்டிக் கொள்வதால் அவர்கள் தமக்குத்தாமே பகைவராவார்கள்.

–புத்தபெருமான்

அகத்தூய்மை

அகத் தூய்மை உடையோர்க்கு எல்லாமே தூய்மை. கெட்டழிந்தவர்களுக்கும் நம்பாதவர்களுக்குமோ எதுவுமே தூய்மை இல்லை. அவர்களுடைய அறிவும் மனச்சாட்சியும் கறைபடிந்திருக்கின்றன.

நாக்கு

நாக்கு ஒரு சிறிய உறுப்பாய் இருந்தாலும் எவ்வளவு பெரிய விஷயங்களையும் பிரமாதப் படுத்தும், ஒரு சிறு நெருப்புப் பொறியே பெரிதாகக் கிளர்ந்து எரிவதைப் பார்.

— இயேசுநாதர்

குடி கெடுக்கும் குடி

மாத்தளை – அருணேசர்

குடி என்பது ஒரு பொதுப் பெயர். மயக்கத்தை உண்டுபண்ணும்குடி மதுக்குடி எனப்படும். மயக்கத்தை உண்டுபண்ணக் கூடிய பொருள்களுக்கு பொதுவாகக் குடி என்றழைத்தாலும், அவை மூன்றுவகைப் படும். நீர்ப்பதார்த்தம், கடினபதார்த்தம், வாயுபதார்த்தம் என்பன அவை.

நீர்ப்பதார்த்தமாகக் காணப்படும் குடியாவது:–

கள், சாராயம், பீர் முதலியன. கள் என்பது தென்னை, பனை, ஈஞ்சு போன்ற மரங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுவது. பீர் என்பதும் இவ்வினத்தைச் சேர்ந்ததே. தண்ணீரும் ஒருவித பூவும் புளிக்கவைத்து எடுப்பது இது.

சாராயம் என்பது கள்ளிலிருந்தும் ஒருவித பழச்சாற்றிலிருந்தும், மரப்பட்டையிலிருந்தும் புளிப்பேற்றி, பின்னர் ஆலையில் இட்டுக் காய்ச்சி அதில் எழும் ஆவியைக் குளிரவைத்து நீர் ரூபமாக மாற்றுவது. விஸ்கி, பிராந்தி, ஒயின், ஜின் போன்றவையும் இவ்வகையைச் சேர்ந்தனவே.

கடினபதார்த்தம் என்பது:–

மயக்கத்தைத் தரக்கூடிய கஞ்சாவைப் போன்ற பொருள்களை, சில உணவுபதார்த்தங்களோடு சேர்த்து அரைத்து மெழுகு போல இளகியதாகச் செய்யப்படுவது. இலேகியம் என்றும் கூறப்படும்.

அபினையும் இதுபோன்றே மயக்கத்தைத் தரக்கூடிய கடினபதார்த்தமாகக் காணலாம். அபின் என்பது கசகசாவின் பாலிலிருந்து உற்பத்தியாவது எனச் சொல்லப்படுகிறது. எட்டிக்காயும் உபயோகிப்பதுண்டு.

வாயுபதார்த்த மயக்கப் பொருள்கள்:—

கஞ்சாவைச் சிமிழில் அடக்கி நெருப்பிட்டு அதில் வரும் புகையைக் குடிப்பது. இது போன்றவை 'மதன சென்டு' எனப்படும். இன்னும் எத்தனையோ வகையான மயக்கத்தைத் தருவதற்குரியவைகளை புகையாக்கி அப் புகையைக் குடிப்பதும் இவ்வகையைச் சேர்ந்ததே.

முற்காலத்தில் சோமபானம் என்ற ஒரு வகை மதுபானம் உபயோகிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இதை வைத்துக்கொண்டு சிலர், "முற்காலத்தில் சோம பானம் என்ற மதுவை அருந்தினர்களே, இப்பொழுது ஏன் மதுவை அருந்தலாகாது எனப் பெரிய பெரிய காவியங்களில் கூறுகிறார்கள்?" என்று கேட்கிறார்கள்.

கெடுதியான பொருளாக இருந்தாலும் நல்ல பொருளாக இருந்தாலும், உலக நடவடிக்கைகளை எழுத வந்தவர்கள் உள்ளதை உள்ளபடிதான் எழுதுவார்கள். பெரிய பெரிய புராணங்களில் கவிகள் காமிகளான சாதாரண மக்களின் நடவடிக்கைகளை எடுத்துரைத்துப் பரிகசித்தனரேயன்றி, கள் குடிக்க வேண்டும் என்றெழுதினர்களா? இல்லை.

காமிகளான ஆடவர் பெண்டிரின் காமக் கிரீடையை வர்ணிக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் அவர்கள் செய்யும் துர்ச் செய்கைகளை விளக்கினர்கள் என்று உணருதல் வேண்டும்.

மகான்கள், ரிஷிகள் எனப்படுபவரெல்லாம் கஞ்சா முதலிய இவ்விதப் பொருள்களை உபயோகப்படுத்தினர்களே, இவர்கள் போலி வேஷதாரிகளா? இவர்களுடைய சக்தி சாதாரண மக்களாகிய நமக்கு உண்டா? அவர்கள் நஞ்சை உண்டாலும் சாகாத சக்தி படைத்தவர்கள். அவர்களுக்கும் நமக்கும் சமமா!

கடவுளை நாடிச் செல்பவருக்கு மாத்திரமல்ல, வேறு உடல் பாதுகாப்பு முதலியவற்றைச் செய்து கொண்டு உலகில் வாழும் சாதாரண மனிதர்களுக்குங்கூட மதுபானம்

நங்கையர் விரும்பும்:

நவீன டிசைன்கள்,

உத்தரவாதமுள்ள வேலைப்பாடுகள்

அமைந்த நகைகளை வாங்குவதற்கு

தலைசிறந்த ஸ்தாபனம்

பாமா ஜுவலர்ஸ்

காலமெல்லாம் கண்டு பெருமை கொள்ளும்

உறுதியும் பிரகாசமும் கொண்ட

பாமா நகைகளை

இன்றே வாங்கி திருப்தி அடையுங்கள்.

பாமா ஜுவலர்ஸ்

41, கிறீன்ஸ் ரோட் - நீர்கொழும்பு.

BAMA JEWELLERS For...

MOD DESIGN—GUARENTEED—CRAFTMANSHIP—22 CARAT GOLD

'BAMA the popular place to shop'

BAMA JEWELLERS

41, GREEN'S ROAD – NEGOMBO. T'phone: 2060

WHEN IN NEGOMBO

Please visit:

MURUGAN NILAYAM

221, MAIN STREET,
NEGOMBO.

FOR

PURE, CLEAN & FINE

- CHILLY POWDER
- SAFFRON POWDER
- CORRIANDOR POWDER
- CURRY POWDER
- PEPPER (WHITE)
- KEDAMOOMA
- NELLIKA
- KANEEL
- MUSKOT
- PEPPER (BLACK)

ONEESE

AND ALSO FOR YOUR

PAWN BROKING BUSINESS

ஆத்மஜோதி 30வது ஆண்டு
சிறப்பு மலருக்கு
எமது
நல்வாழ்த்துக்கள்.
நகை ஈடுபிடிப்பவர்கள்.

CITY PAWN BROKERS
LICENSED PAWN BROKERS
257. Main Street — NEGOMBO.

சுவையான உணவுக்கு
தரமான — சுத்தமான
பலசெலவு சாமான்கள்
பெற்றுக்கொள்ள
சிறந்த இடம்

MANIAM'S
174. Main Street,
NEGOMBO.

அழகிய தங்க நகைகளை
குறித்த நேரத்தில் சிறப்பாக
செய்து கொள்வதற்கும் உத்தரவாதமுள்ள
அசல் தங்க நகைகளுக்கும் இன்றே
விஜயம் செய்யுங்கள்

RIO JEWELLERY
165 B. Main Street — NEGOMBO.

உங்கள் சகலவித வைபவங்களையும்
ஞாபகத்திலிருத்த
அழகிய சிறந்த
புகைப்படங்களை எடுப்பதற்கு
சிறந்த இடம்

அரசு ஸ்டுடியோ
183, ஏகாம்பரம் வீதி,
திருக்கோணமலை.

For All Your Photographics
ARASU STUDIO
183, Ehambaram Road,
TRINCOMALEE

சிறந்த – சுத்தமான பலசரக்கு வகை
உங்கள் உணவை
மேலும் ருசிப்படுத்தும்

சிறந்த பொருட்களை வாங்க
சிறந்த ஸ்தாபனம்

மகேந்திரா ஸ்ரோர்ஸ்
189, மத்திய வீதி
திருக்கோணமலை.

உங்களுக்கு தேவையான சகலவிதமான ஆங்கில ஆயுர்வேத
மருந்து வகைகள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

பரஞ்சோதி மருந்துச்சாலை
194, ஏகாம்பரம் வீதி – திருக்கோணமலை

PARAMJOTHY MEDICAL STORES
194, EHAMBARAM ROAD
TRINCOMALEE

T'Phone: 419
T'Gram's: Paramjothy

வேத புத்தகங்களைப் படித்தால் மட்டும் போதாது
அதன்படி ஒட்டி ஒழுகுவதன் மூலமே
வேதாந்தம் காட்டிய பாதையை அடையலாம்

↓

எங்களிடம்

மலிவான விலையில் பலசரக்குச் சாமான்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:

★ யானை மார்க் குளிர் பானங்கள்
★ லிவர் பிரதர்ஸ் சவர்க்காரங்கள் ஆகியன

↓

செல்வச்சந்நிதி ஸ்ரோர்ஸ்

11, 18, 3ம் குறுக்குத் தெரு — திருக்கோணமலை.

நன்மை நேரினும் சரி அல்லது கெடுதல் நேரினும் சரி
உனது செயலின் பயனை நீ அடைந்தே ஆகவேண்டும்

●

சகலவிதமான ஜவுளி வகைகளுக்கும்
பாத அணிகளுக்கும்

↓

கொரனேஷன்ஸ்

(டெக்ஸ்டைல்ஸ் ஸ்டோர்ஸ் அன் சூ பெலஸ்)

176, 166, 127, ஏகாம்பரம் வீதி,
திருக்கோணமலை

தொலைபேசி: 445

நம்பிக்கைக்கும்
உத்தரவாதத்திற்கும்

தற்காலத்திற்கேற்ற நவீன மோஸ்தரில்
தரமான—அழகான தங்க ஆபரணங்களை
தெரிவு செய்ய சிறந்த இடம்



எஸ். கே. எஸ். அன் சன்ஸ்

10, மூன்றும் குறுக்குத் தெரு,
திருக்கோணமலை.

FOR FASHIONABLE JEWELLERS

S. K. S. & SONS

10, 3rd CROSS STREET — TRINCOMALEE.

மணிக்கணக்கில் போதனை செய்வதிலும்
ஒரு கணப்பொழுது உதவி செய்தாலே நலம்.

ஆத்மஜோதி நீடுழி வாழ்க!

THE IMPERIAL TEXTILES,

WHOLESALE DEALERS
103, Bankshall Street — COLOMBO - 11.

— சகல விதமான உள் நாட்டு — வெளி நாட்டு துணி வகைகளுக்கும் —
ரெடிமேட் சேர்ட், சேர்ட்டிங்ஸ் — மற்றும் ஆடைகளுக்கும்
— சிறந்த ஸ்தாபனம் —

தி இம்பீரியல் டெக்ஸ்டைல்ஸ்,

103, பேங்ஷால் வீதி—கொழும்பு — 11. T'phone: 24721

அவசர பாஸ்போர்ட்
அடையாள அட்டை
மிக விரைவில் செய்து-
கொள்வதற்கு

ஸ்டுடியோ விஜயா
55, பிரதான வீதி,
திருக்கோணமலை.

FOR ALL PHOTOGRAPHICS—
- **Devoloping**
- **Printing**
- **Enlarging.**

Visit:

VIJAYA STUDIO,
55, Main Street,
TRINCOMALEE.

எங்களிடம்,
யாழ்ப்பாணம் திறம் சுருட்டு
புகையிலை, நல்லெண்ணை, பெட்டி,
பாய், பூரணுதி லேகியம்
சாய்ப்புச் சாமான்கள்,
பாலுணவுகள், கணக்குப்
புத்தகங்கள் முதலியன
சகாய விலைக்குப்
பெற்றுக் கொள்
ளலாம்.

ஸ்ரீ ராசா ஸ்டோர்ஸ்,
127, மத்திய வீதி,
திருக்கோணமலை.

ஆண்டவன் இரண்டு கண், இரண்டு காது தந்தான்;
ஒரே நாக்கைத் தந்தான். ஏன்?
இரு புறமும் பார்த்து, கேட்டு, நிதானித்து
ஒரே முடிவைச் சொல்லுவதற்கே.

ஆத்மஜோதி 30வது ஆண்டுச்
சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!

முருகன் ஸ்டோர்ஸ்

மட்டக்களப்பு.

உலகை அறி,
உன்னை அறி,
உன் கடமையை அறி,
அதைப் புரி,
கட்டற்றிரு.

சகலவிதமான ஜவுளிகளுக்கும்
ஆயுள்வேத மருந்து வகைகளுக்கும்

SARJOON'S

No. 42. Bazaar Street,

BATTICALOA.

T' Phone: 407

எமது அன்பளிப்பு!



பவானி ஸ்ரோர்ஸ்

6, 3ம் குறுக்குத்தெரு,

திருக்கோணமலை.

கெடுதியை விளைவிக்குமேயன்றி, அவர்களின் அந்தஸ்துக்கேற்ற நன்மையை அதுகொடாது. ஆயினும் மகான்கள், ரிஷிகளைப் போன்றோரை இதற்குச் சான்றாக எடுத்தல் தகாது.

குடியானது எப்பேர்ப்பட்ட மனிதரையும் தாழ்த்திவிடுகிறது. குடியால் கெட்ட குடிகள் கோடிக்கணக்கில் அடங்குவர். குடியே விபசாரம், கொலை, களவு, பொய், சூது ஆகிய தீமைகளைப் பெற்று வளர்க்கிறது.

குடியானது தீய்க்கு ஒப்பானது. அது உடலில் நோயைஉண்டுபண்ணுகிறது.சீரணத்தைக் கெடுக்கிறது.இரத்தத்தையும் கெடுத்து விடுகிறது. போதை ஏற ஏற நச்சுத்தன்மை உடம்பில் ஏறி ஆயுளைக் குறைத்து விடுகிறது.

குடியால் தரித்திரம் உண்டாகும். அதனால் மனைவியின் மாங்கல்யம் மறையும்.குபேரனையுள்ளோனைக் கோவணாண்டியாக்கும். அவனை நம்பியுள்ள மனைவி, மக்கள், பெற்றோர் உற்றோர் முதலியவர்களெல்லாம் உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாது வாடுவர்.

கலகத்திற்கெல்லாம் காரணம் இந்தக் குடிபோதையே. குடிகாரர்கள் மையல் மிகுதியாகி காமத்தில் ஆழ்வார்கள். பெண்களின் மானத்தைக் கெடுக்கப் பயப்படமாட்டார்கள். குடிக்கப் பணம் இல்லாதபோது களவு செய்யத் தூண்டும். எல்லோரிடமும் பகைத்துக்கொள்ளச் செய்யும். அதனால் கொலை செய்யவும் துணிவார்கள்.

இப்படி பாபத்தைச் சம்பாதித்து தீயவன் என்றும், குடிகாரனென்றும், கள்வன் என்றும், காமுகன் என்றும், கொலைகாரன் என்றும், கொடியவன் என்றும் இகழ்ச்சிப் பெயர் வாங்குவதுதான் குடியர்கள் கண்ட பலன்.

குடிக்குக் கொடுக்கும் பணத்தால் எத்தனையோ குடும்பங்கள் பிழைக்கலாம். அதனை விட்டு, பாடுபட்டுத் தேடிய பணத்தை இந்தப் பாழும் மதுப்பேய்க்கா கொடுப்பது?

"அறிவை யழிக்கும் செயலழிக்கும்
அழியா மானந்தனையழிக்கும்
செறியு மறிஞர் மதியாத
செருக்கை விளைக்கு மீன்றருளும்
முறியும் வெறுப்பு மிகவிளக்கும்
முனிவு விளைக்கும் பகையஞ்சா
குறிகள் விளைக்கும் நகை விளைக்கும்
கொள்ளேல்கள் ளுண்டலை மைந்தா"

(விநாயக புராணம்)

என்பதற்கிணங்க, குடி மூளையைக் கெடுத்து அறிவை மறைக்கிறது. குடிகாரன் கண்டதையெல்லாம் குடித்து வந்ததையெல்லாம் பேசி உளறுவான். அதனால்தான் "சாராயத்தை ஊற்றிப் பூராயத்தைக் கேள்" என்பார்கள்.

காக்கைகளிற் சில நல்ல பழவர்க்கங்களையும், நல்லுணவையும் விரும்புவதுபோல, மனிதருள்ளும் பால் பழங்களை உண்பவரிருக்கிறார்கள். காக்கைகள் புழு, பிணம், மலம் அருந்துவதுபோல மனிதரில் சிலர் மதுவையும் மாமிசத்தையும் விரும்பி அருந்துகின்றனர்.

தன்னை மகா யோக்கியன் எனப் பிறர் எண்ணிக் கொள்ளட்டுமென்று சிலர் இராக்காலங்களில் திருடரைப் போலப் பதுங்கியிருந்து, யாரையர்வது வாங்கி வரச் செய்து குடிக்கிறார்கள். பெரிய மனிதப் போர்வையில் ஒளித்துக் கொண்டு ஏனை இந்தக்கீழ்த்தர நடவடிக்கை!

இவர்கள் இப்படிச் சாப்பிட்டுவிட்டு, வர வர சிறிது நாளில் வெளிப்படையாகவே குடிக்கத் தொடங்கி விடுகின்றனர். இந்த நாற்றக் கள்ளுக்கு ஏனை இத்தனை பாடு? இப்படிச் செய்வதனாலன்றோ குடியன், கொடியன், தடியன், மடையன் என்று இகழ்ச்சிப் பெயர் வாங்குகிறார்கள்.

மதுபானம் அருந்துபவர்களில் சிலர் பிற்காலத்தில் தமக்கு ஒத்தாசையாக இருக்கும் என்று கருதி, குடியாதிருக்கும் பெரிய வீட்டுப் பிள்ளைகளுக்கு இப்பழக்கத்தைப் பழக்கி விடுகின்றனர். இக்காலத்தில் பல வாலிபர்கள் கெடுவது இத்தகையினராலேயே. இவ் வாலிபர்கள் எவ்வளவு தனவந்தராயிருந்தாலும் மது பானம் அருந்தக் கற்றுக்கொண்ட

பின் தமக்குள்ள பணம், நிலம், சொத்துக்கள் யாவற்றையும் அழித்து இழந்து விடுகிறார்கள்.

மது பானத்தை ஒரு உணவுப் பொருளாகக் கடவுள் படைத்திருக்கிறார் என்று மனிதர்களில் சிலர் மூட நம்பிக்கை கொள்கிறார்கள். சிலர் உடல் அசதியைப் போக்கும் மருந்தாகவும், சீரண சக்தியை உண்டாக்கும் பொருளாகவும் கருதி அருந்துகிறார்கள்.

அறிவில்லா மக்கள்தான் இவ்வளவு முட்டாள் தனமாக இருக்கிறார்கள் என்றால், படித்தவர்களும், வைத்தியர்களில் சிலரும் கூட அது நல்லது என்றும், மருந்துப்பொருளென்றும் நினைக்கிறார்கள்.

உண்மையில் மதுபானத்தில் எவ்வித உணவுச் சத்தும் கிடையாது, அது உடலசதியைப் போக்குவதற்குப் பதிலாக, நரம்புகளைத் தளர்ச்சியடையச் செய்து கைகால் சோர்வைத்தான் உண்டாக்கும். எவ்வித நோயையும் குணப்படுத்தும் சக்தி அதற்கு இல்லை.

ஐம்பது பிரபல வைத்தியர்கள் ஒரு கமிட்டியாகச் சேர்ந்து மதுவின் பலாபலன்களைப் பரிசீலனை செய்து கீழ்க் கண்ட முடிவுக்கு வந்தனர்:—

1. சரீரத்திற்குத் தேவையானதாகவாவது, சரீரத்திற்கு உபயோகப்படக் கூடியதாகவாவது, உள்ள எந்தப் பதார்த்தமும் மதுவில் இல்லை.

2. மதுவானது ஒரு நஞ்சு போல் கொஞ்சமாகச் சாப்பிட்டால் நாளடைவில் சரீரத்தைக் கெடுக்கக் கூடியதாகவும், அதிகமாகச் சாப்பிட்டால் விரைவில் கொன்று விடக் கூடியதாகவும் இருக்கிறது.

மதுவானது இரத்தக் குழாய்களுக்குக் கெடுதியை உண்டு பண்ணுவதால் அவைகள் விரிவடைந்து விடுகின்றன. அதன் பயனாக இரத்த ஓட்டத்தின் வேகம் குறைந்து விடுகிறது. அதனாலே குடிகாரர்களுடைய மூக்கு சிவந்திருக்கிறது. கண்களிலும் சிவப்புகள் ஏற்படுகின்றன.

இவ்விதம் இரத்த ஓட்டம் குறைவதால் சரீரத்தில் சப்தநாடிகளும் ஒடுங்கத் தொடங்கி சரீரம் நோய்களிலிருந்து தப்புவதற்கு வழியில்லாமல் போய்விடுகிறது.

"மது இல்லாமல் குணப்படுத்தமுடியாத நோய் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதை உபயோகித்தால்தான் குணப்படுத்துவது கடினம்" என்று பிரிட்டிஷ் வைத்தியச் சங்கத்தின் தலைவரான சர் ஜேம்ஸ்பார் சொல்லுகிறார்.

மதுவானது எந்த வியாதியையும் குணப்படுத்துவதில்லை என்றும், அபின் முதலிய மயக்க மருந்துகளுக்குள்ள சக்திதான் அதற்கும் உண்டென்றும் அமெரிக்க வைத்தியச் சங்கப் பத்திரிகையில் டாக்டர் லீ என்பவர் சொல்லுகிறார்.

கிரேட் பிரிட்டனிலுள்ள மதுவிலக்கு இன்சூரன்ஸ் சங்கத்தின் புள்ளி விவரங்களிலிருந்து, மதுபானம் அருந்துபவர்களுடைய ஆயுள் காலம் 10 அல்லது 15 ஆண்டுகள் குறைகிறதென்று தெரியவருகிறது.

மதுவினால் மூளைக்கு மிகக் கெடுதி ஏற்படுகிறதாக டாக்டர் ஜான் ஹார்வே கெல்லாக் என்பார் கூறுகிறார்.

மூளையிலும், வலது பக்க மூளை இடது பக்க மூளை என்ற இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று களைத்துப் போனால் மற்றொன்று வேலை செய்கிறது. வழக்கமாக நாம் இடது பக்கத்து மூளையாலேயே சிந்தனை செய்கிறோம். இடக்கைக் காரர்கள் வலது பக்கத்து மூளையால் சிந்திப்பார்கள்.

ஆகையால் தான் இடக் கையை உபயோகித்துப் பழகிக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு வலக்கைப் பழக்கத்தை ஏற்படுத்தக் கூடாதென்று சொல்லப் படுகின்றது. அவர்கள் இடக்கைக் காரர்களாகப் பிறந்திருப்பதால் வலது பக்கத்து மூளையால் தான் சிந்திக்கிறார்கள்.

ஆனல் மதுவானது ஒரு பக்கத்து மூளையைத்தான் தாக்குகிறதென்பதில்லை. இரு பக்க மூளைகளுக்கும் சக்தியில்லாமல் செய்து விடுகிறது அது. இப்படி மேற்படி டாக்டர் கெல்லாக் கூறுகிறார்.

"வீணப்பா கள்ளுசா ராயத்தாலே
மெய்மறந்து செத்தவர் களனந்தங்கோடி
நேரப்பா இதுவிரண்டும் தள்ளு தள்ளு
நிச்சயமாய்ப் பூரணத்தை நினைவிற்கொள்ளு"

என்கிறார் அகஸ்தியர்.

இவ்வளவு தீமைகள் மதுபானத்தில் இருக்கிறதென்று தெரிந்து கொண்ட பின்புகூட, சிலர் மது அருந்துவதை விடுகிறார்களில்லை. மதுவின் பிடியில் அகப்பட்டபின் இவர்கள் தப்புவது அரிதே.

ஆகையால், துவக்கத்திலேயே மது பானம் அருந்தும் பழக்கத்தைக் கைக் கொள்ளாமல் எச்சரிக்கையாய் இருப்பதே நன்மை பயக்கும்.

கள் சாராயம் மட்டுமல்ல; அபின், கஞ்சா, புகையிலை முதலியனவும் போதை தரும் பொருள்களே. இந்த போதைப் பொருள்களை உபயோகப் படுத்துபவர்கள் அவைகள் கிடைக்காத சமயத்தில் பைத்தியம் பிடித்தலைகிறார்கள். மற்றும் கைகால் இழுத்தல், வாயில் நுரை தள்ளுதல் போன்ற கொடிய நோய்களுக்கும் ஆளாகி அருமையான இந்த உடம்பைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

இப்பழக்கத்தையும் துவக்கத்திலேயே கைவிடுதலால் நீடித்த துன்பத்துக்கு ஆளாகாமல் தப்பித்துக்கொள்ளலாம்.

★

அன்பு

இவ்வுலகத்தில் ஒருநாளும் பகையைப் பகையினல் ஒடுக்க முடியாது. அதை அன்பினுல்தான் தணித்தல் இயலும். தொன்று தொட்டு வரும் அழிவற்ற நியதி இதுவே.

உண்மையான பிக்கு

ஒருவன் வேத நூல்களில் ஒரு சிறிதே கற்றிருக்கலாம். எனினும் அந்நூல்கள் கூறும் நெறியை ஐயமற உணர்ந்து அதைப் பின்பற்றுவானுயின், சினத்தையும் பகைமையையும் அறிவின்மையையும் அறவே ஒழித்துத் தர்மம் இன்னதெனச் சரிவர உணர்வானுயின், மண்ணிலும் வானுலகத்திலும் எப்பொருள்மீதும் பற்றுவையாமல் கள்ளமற்ற உள்ளம் கொள்வானுயின், அவன் பிக்குகளின் திருக்கூட்டத்தில் இடம் பெறுவான்.

— ஸ்ரீ புத்தர்

உண்மையே கடவுள்

உண்மை என்பது கடவுளின் மற்றுமொரு பெயர். முதலில் உண்மையைத் தேடிக்காணவேண்டும். அப்புறம் அழகும் நலனும் உங்களுக்குத்தாமே கிட்டும். கிறிஸ்துநாதர் தம் மலைப்பிரசங்கத்தில் இதைத்தான் போதித்தார். இந்த உண்மையையும் அழகையுந்தான் நான் விரும்புகிறேன். இவற்றிற்காகவே வாழ்கிறேன். இவற்றிற்காகவே சாவேன்.

—காந்தி

இந்துமதம் காட்டும் அறநெறி

தவத்திரு ஸ்ரீ சாயிமாதா சிவபிருந்தாதேவி

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' எனத் தொல்காப்பியம் கூறும். சாதாரண மனிதன் சராசரி மனிதன் உயர்ந்தவனாகச் சிறந்தவனாக மேம்பட்டவனாகஆவதற்குஆவன செய்வது சமயம்.

உடலை வளர்ப்பது சமையல்; மனிதனது உள்ளத்தை வளர்ப்பது சமயம்.

உள்ளம் பெருங்கோயிலெனவும், ஊனுடம்பு ஆலயமெனவும், வள்ளற்பிரானுக்கு வாய் கோபுரவாசலெனவும், தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கமெனவும், கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கெனவும் உணர்த்துவர் சமயச் சான்றோர்.

இந்நிலை உலகில் எங்கணும் துன்பம், எதிலும் துன்பம், எப்போதும் துன்பம், இவற்றை மக்களே மட்டுமல்லாது மாக்களும் கூட வெறுக்கின்றன. எல்லா உயிர்களும் நாடுவது இன்பம், தேடுவது மகிழ்வு; ஆனாலும் இப்பரந்த உலகிடை விரிந்து கிடப்பது இன்பமும் துன்பமுமேயாகும். இரவும், பகலும்போல இருளும் ஒளியும் போல இரண்டும் கலந்தே நிற்கின்றன. துன்பத்தை நீக்கி இன்பத்தைக் காண இந்து மதம் மக்களுக்குக் கலங்கரை விளக்கம் போல காட்சி தருகிறது.

இந்து மதம் என்பதன் உட்பொருளே அதன் அளப்பரிய பரிணமத்தை நமக்குப் பக்குவமாக உணர்த்துகின்றது.

ஆரியர்கள் சிந்துநதி தீரத்தில் வசித்து வந்தபோது அவர்களை பாரசீகரும், கிரேக்கரும் 'சிந்துக்கள்' என்று அழைத்தனர். அந்த சிந்துக்களுடைய மதமே இந்துமதமாயிற்று எனச்சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். வேறுசிலரோ இந்திய நாட்டினரின் மதமே இந்து மதமாயிற்று என்கின்றனர்.

ஒரு நாட்டின் பெயராலோ அல்லது ஒரு நதியின் பெயராலோ நமது ஒப்பற்ற இந்துமதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றதாகும். ஆகவே இதன் உண்மைப் பொருளை நாமறிதல் அவசியமாகிறது. இந்து மதம் என்னும் பெயர் அதன் மேம்பட்ட உன்னதமான கொள்கையை அடிப்படையாகக் கொண்டு வந்ததாகும். இந்து அல்லது ஹிந்து என்ற சொல்லை ஹிம்+து எனப் பிரிக்கலாம். ஹிம் = ஹிம்சையில் து=துக்கிக்கிறவன்.

ஒரு உயிர் எந்தக் காரணத்திற்காவது வருந்துவதாக இருந்தால் அதற்காகத் தானும் வருந்தி அத்துன்பம் தனக்கு வந்ததாகக் கருதி, அதை அகற்ற எவனொருவன் பணிபுரிகிறானே அவனே இந்து ஆவான். அப்பண்பு வாய்ந்த மக்களைக் கொண்டமதமே இந்து மதமாகும். இக் கருத்தை 'ஹிம்ஸாயாம் தூயதே யः ஸः ஹிந்து இத்யபிதீயதே' என்ற வேதவாக்காலும் நாம் உணரலாம். இதிலிருந்து இந்து மதம் என்பதற்கு அன்பு மதம், அருள் மதம், அறநெறி மதம் என நாம் பொருள் கொள்ளலாம்.

''அஹிம்ஸா பரமோ தர்மः'' மேலான அறம் எனப்படுவது அஹிம்ஸையே. அஹிம்ஸை என்ற அரும்பே, அன்பாகிய மலராக மலர்கின்றது. அன்பிற்கு அடிப்படை அஹிம்சையேயாகும்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.''

எனப் பத்தாந் திருமுறையும் சத்தாக உதவுகிறது.

இந்து மதம் என்பதற்கு ''ஸநாதனதர்மம்'' எனப் பொருள் கூறுவாரும் உண்டு. ''ஸநாதனதர்மம்'' என்றால் ''அழிவிலாத அறம்'' என்பது பொருள். இதுவல்லாது

இதற்கு திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்நெறி, சன்மார்க்கம் என்ற பெயர்களைச் சூடி அழைப்பதும் இயல்பே. மதத்தைச் சமயம் எனவும் சொல்வதுண்டு. சமயம் என்பதற்கு சமை என்பது பகுதி. உடம்பை வளர்ப்பதற்கு உணவுப் பொருள்களைச்சமைப்பது போல, இறைவனை அடைவதற்கு உரிய சாதனங்களைச் சமைப்பது அல்லது பரிபக்குவப்படுத்துவது சமயம்.

இந்து மதம் காலத்தால் மிகவும் முந்தியது. அது ஒருகாலத்தில் உலகெங்கும் பரவியிருந்தது என்பதைத் தற்கால நவீன புதை பொருள் ஆராய்ச்சிகள் மூலம் அறிகின்றோம்.

பிறமதங்கள் கூறும் கொள்கைகள் பல நமது இந்து மதத்தில் அநாதியாகவே இடம் பெற்றுள்ளன. ஆதலால் உலகில் உள்ள எல்லா மதங்களுக்கும் தாயகமதம் இந்துமதம் எனக்கொள்ளலாம். இந்து மதத்தின் அறநெறி வெறும் நம்பிக்கையோடு மட்டும் நின்று விடாமல் ஒவ்வொரு கொள்கையையும் ஆராய்ந்து ஐயங்கள் எல்லாம் அகற்றி அறிவினைப் புகட்டுகிறது. இந்து மதத்தின் அறநெறி, இல்லறத்தாரும் துறவறத்தாரும் முத்தி பெறலாம் எனக் கூறுகிறது. அதோடு இந்து மதத்தின் அறநெறி உலக வாழ்க்கையோடு மத வாழ்க்கையையும் இணைத்து மேற்செல்ல உய்கதிபெற வழிகாட்டுகிறது.

ஆண், பெண், சிறுவர், சிறுமியர், வாலிபர், வயோதிகர், உயர்ந்த வகுப்பினர், தாழ்ந்த வகுப்பினர் எனும் பேதமில்லாது யாவரும் முத்தி பெறலாம் என இந்து மதத்தின் அறநெறி அறிவிக்கிறது.

மக்கள் செய்த நல்வினை தீவினைகளுக்குத் தக்கவாறு மறுபிறப்பு உண்டு என்பதை வலியுறுத்தி, மக்களின் இன்பதுன்ப வாழ்வுக்குக் காரணம் அவரவர் வினைப்பயனே என்பதை இந்துமத அறநெறி அரிய பெரிய கருத்தை இனிய எளிய முறையில் எடுத்தியம்புகின்றது. இந்துமதம் விஞ்ஞானத்தாலும் உணரமுடியாத மெய்ப்பொருள்களைத் தனது மெய்ஞானத்தால் இனிது இயம்புகின்றது.

உலகில் உள்ள ஒவ்வொரு மதத்திற்கும் அவரவர் போற்றி ஏற்ற முக்கியமானதாகக் கருதும் சமய நூல் ஒவ்வொன்று உண்டு. நமது இந்து மதத்திற்கு, வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், சாத்திரம், தோத்திரம் எனப் பல நூல்கள் இருக்கின்றன.

வேதம் என்பதற்கு அறிவு நூல் என்பது பொருள். தெய்வீகமான கருத்துக்களைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது மறையெனப் பெயர் பெற்றது. ஆசார்யனிடம் கேட்டுத் தெளியவேண்டிய நூல் இது. ஆதலால் இதனைச் சுருதி எனவும் கூறினர். இதனை இருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என நான்காக வியாச முனிவர் வகுத்துள்ளார்.

இருக் என்பதற்குத் துதித்தல் அல்லது வழிபடல் என்பது பொருள். இறைவனைத் துதிப் பாடல்களைப் பாடி வணங்குவதற்குரிய வழிகளை இதில் வகுத்துக் கூறியுள்ளனர். இது 10 மண்டலங்களைக் கொண்டது. ஒன்று முதல் ஏழு வரை இறைவனை அக்கினி என்ற பெயராலும் பத்தாவது மண்டலத்தில் பிரமன், இந்திரன் என்ற பெயர்களாலும் பாடப்பட்டுள்ளது.

யஜுர் வேதம்

'யாஜ்' என்னும் பதத்திற்கு 'யாகம்' என்பது பொருள். யாகம், பலி, தானம், செய்ய வேண்டிய முறைகள் இதில் விளக்கப்பட்டுள்ளன. அமாவாசை பௌர்ணமி காலங்களில் செய்யப்பட வேண்டிய வேள்விகளைப் பற்றியும், கூறப்பட்டிருக்கிறது. மிகவும் சிறப்பு வாய்ந்த 'ருத்ரம்' இதில் அமைந்துள்ளது.

ஸாமவேதம்

ஸாமம் என்னும் இன்னிசையால் பாடப் பெற்றது. இதில் பரமேஸ்வரனை அக்கினி இந்திரன் முதலான பெயர்களால் பாடப் பெற்றிருக்கிறது. பாபத்தை நீக்கிப் பலனைக் கொடுக்கும் பாடல்கள் இதில் அமைந்திருக்கின்றன. இசையுடன் இதனைப் பாடுவதால் பாபம் நீங்கும்.

அதர்வணம்

இதில் மந்திரம் உச்சரிக்க வேண்டிய முறைகளையும் விரோதிகளின் அழிவின் பொருட்டுச் செய்ய வேண்டிய கிரியா முறைகளையும் கூறியிருப்பதோடு வேதசாரக் கிரியைகளையும் அனுஷ்டானங்களையும் பற்றிய தோத்திரங்களும் உள்ளன.

உபநிஷதம் என்பது நான்கு வேதப் பிரிவுகளிலிருக்கும் சம்ஹிதை பிராம்மணம் ஆரணியகம் என்ற பாகங்களைச் சார்ந்தவை.

உபநிஷத் என்பதற்கு ஆசாரியன் அருகில் உட்கார்ந்து அறிந்து கொள்ளப்படும் ஞானம் என்று பொருள். உபநிஷதங்கள் நூற்றெட்டு இருந்தாலும் பத்து உபநிஷதங்களே சிறப்பாகக் கையாளப் பெறுகின்றன. இந்தப் பத்து உப நிஷதங்களுக்கும் ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பாஷ்யம் செய்திருக்கிறார்கள். பின்னர் ஸ்ரீ இராமானுஜர் ஸ்ரீ வித்யாரண்யர் ஸ்ரீ ஆனந்ததீர்த்தர் முதலியோரும் பாஷ்யம் செய்திருக்கிறார்கள்.

இந்து மதத்தின் அறநெறியைப் பரப்ப அள்ளி அள்ளி அகிலத்திற்கு வழங்க சூரிய சந்திராளைப் போன்று இரண்டு உண்டு. ஒன்று வேதம், அதன் சுருக்கத்தை இப்போது பேசினேம். மற்றொன்று ஆகமம்.

ஆகமம் என்ற சொல்லை ஆ + கமம் எனப் பிரிக்கலாம். ஆ = ஆன்மாக்களின் கமம் = பாசங்களை நிக்குஞ்செய்து முத்திப் பேற்றை அருளுவது. இறைவனது ஐந்து முகங்களிலிருந்து இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றின, என்று காரணாகமத்தால் அறிகின்றோம். இவற்றிலே பத்து ஆகமங்கள் சிவபேதங்களாகும். பதினெட்டு ஆகமங்கள் ருத்ர பேதங்களாகும்.

ஆகமங்களில்; தத்துவரூபம், தத்து தரிசனம், தத்துவ சுத்தி, ஆத்மரூபம், ஆத்ம தெரிசனம், ஆத்ம சுத்தி, சிவரூபம், சிவ தெரிசனம், சிவயோகம், சிவபோகம் முதலிய தசகாரிய அதாவது பத்துவித இலக்கணங்களும் உரைக்கப் பெற்றிருக்கின்றன.

இந்து மதம் காட்டும் அறநெறியின் சாரங்களை தோத்திரங்கள் என்று சொல்லக் கூடிய திருமுறைகளிலே சிறப்பாக நாம் காணலாம்.

"திருமுறை என்பதற்கு" "தம்மை அடைந்தவர்களைச் சிவமேயாக்குகின்ற முறை எனப் பொருள் கூறலாம். சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றிலே திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் 1, 2, 3 திருமுறைகளாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம் 4, 5, 6 திருமுறைகளாம். சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் ஏழாந் திருமுறையாகும்.

மாணிக்க வாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம் திருக்கோவையார், எட்டாந் திருமுறையாகும். திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது பேர்கள் அருளிச் செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, ஒன்பதாம் திருமுறையாம். திருமூலதேவர் அருளிச்செய்தது திருமந்திரம் பத்தாந் திருமுறையாம். திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார் முதலிய பன்னிருவர் அருளியவை பதினோராந் திருமுறை. சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணமெனும் பெரியபுராணம் பன்னிரெண்டாந் திருமுறையாகும். இதிலே 63 நாயன்மார்களது வரலாறும் கூறப்பட்டுள்ளது.

முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் எனப்படும். "தே" என்பதற்குத் தெய்வம் எனவும் "ஆரம்" என்பதற்கு மாலை எனவும் பொருள் கொண்டு தெய்வத்திற்குரிய பாமாலை எனக் கூறுவார்கள். திருவாசகம் என்பதற்கு தெய்வத் தன்மை வாய்ந்த வாசகங்கள் கொண்ட நூல் என்பது பொருள்.

சைவ சித்தாந்தசாத்திரங்கள் பதினான்கு. இப் பதினான்கு சாத்திரங்களும், இந்து மதத்தின் அரிய பெரிய உண்மைகளை, மிக நுணுக்கமாகக் கூறுகின்றன. ஆராய்ச்சி செய்து, அக மகிழ இது ஒரு பெருஞ் சுரங்கமாகும். இவற்றை மெய்கண்ட சாத்திரங்கள் என்பர். இப் பதினான்கு சாத்திரங்களிலே தலை சிறந்தது–அரிய கருவூலம் போல விளங்குவது சிவஞான போதமாகும். 'சிவம்' என்னும் ஒப்பற்ற மெய்ப்பொருள் 'ஞானம்' என்னும்

அதனை அறிதல். 'போதம்' என்றால் தெரிதல் 'சிவஞான போதம்' என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருளாகிய கடவுளை அறிந்து தெளிதலுக்குரிய நூல் எனப் பொருள்படும். இது மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பட்டது. இதில் பன்னிரண்டு சூத்திரங்கள் உள்ளன.

இந்துமதம் காட்டும் அறநெறியை நாம் உள்ளங்கை நெல்லிக் கனி போலக் காணக் கூடிய வழிவகைகளை நமக்கு உணர்த்துவது இதிகாசங்களே ஆகும். இதிகாசம் என்பதற்கு, ''ஐதிகத்தை நிரூபணம் செய்யும் வரலாறு'' என்று பொருள். வேத உபநிஷதங்களின் உட்பொருளை அடக்கிக் கதை வடிவத்தில் இவை எழுதப்பட்டுள்ளன. இராமாயணமும், பாரதமும் இதிகாசங்களாகும். இராமாயண காவியத்தை இயற்றிய மஹரிஷி வால்மீகி; அரசநீதி, சத்யபரிபாலனம், புத்திரர் கடமை, பெரியோர் வழிபாடு, கற்பு நெறியின் மேன்மை முதலிய பல அறங்களை அள்ளிப் பொழிந்திருக்கிறார்.

பூர்வீக கிரேக்கருக்கு ஹோமரும், ரோமருக்கு வர்ஜீலும், இத்தாலியருக்கு டாண்டேயும், ஜர்மானியருக்கு கதேயும், ஆங்கிலேயருக்கு ஷேக்ஸ்பியரும் மில்டனும் எப்படிப் புகழைச் சேர்த்தார்களோ, அது போல இந்துக்களுக்கும் இந்து மதத்திற்கும் புகழைக் கூட்டித் தந்தவர் வால்மீகி முனிவராகும். இவர்தாம் இயற்றிய இராமாயண காவியத்தின் மூலமாகப் பல ஆயிரக்கணக்கான இந்துமத தர்மங்களை – அறங்களை உயர்ந்த தத்துவ தரிசனங்களோடு அழகாகப் பின்னப்பட்ட கதைகளோடு உவமைச் செழிப்போடு, உன்னத லக்ஷியத்தோடு எடுத்து விளக்குவதைக் கற்றோர் உணர முடியும்.

அடுத்த இதிகாசம் – பாரதம். இதனை இயற்றியவர் வியாச முனிவர். இதனை ஐந்தாம் வேதம் என்றும் சொல்லுவார்கள். இதில் இல்லாத அறங்களே கிடையாது. எல்லா தர்மங்களும் இதிலே அடக்கம், உலக மக்கள் கடைப்பிடித்து நடக்கவேண்டிய உலக அறம் இதிலே உபதேசிக்கப்படுகின்றது. வியாசபகவான் தமது மாபெரும் ஞானத்திறத்தால், முதிர்ந்த அறிவின் பேரொளியால் அருளிய பகவத் கீதையும் இதனுள் அடங்கி இருக்கின்றது ஒன்றே போதும்!– பாரதம் பாரதநாட்டின் காமதேனு, கற்பகத்தரு, நந்தா விளக்கு நானிலத்தில் சுடர் விடும் ஞானபானு என்பதை, கீதை காட்டும் அறநெறிப் பாதையின் மூலம் பண்பட்டோர் பல்கோடி மக்களாகும்.

இந்த இரு இதிகாசங்களும் தர்ம அதர்ம போராட்டத்தில் தர்மமே முடிவில் வெற்றி பெறும் என்பதை, நிலைநாட்டி, இந்துமத தத்துவக் கோட்பாடுகளுக்குச் சிகரம்போல விளங்குகின்றன.

இந்துமதம் காட்டும் அறநெறிக்கு அரிய சான்றுக விளங்குபவை புராணங்களாகும். 'புராணம்' என்பதற்குப் பழைய வரலாறுகள் என்பது பொருள். புராணங்கள் பதினெட்டாகும். ''ஸத்யம்வத, தர்மம்சர'' உண்மையே பேசு, தர்மத்தைச் செய் என்று வேதம் வழிகாட்டுகிறது. நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு நான் சொல்லுகிறேன் என்பது போல இரண்டு சிறு வாக்யங்களும் அமைந்து, 'ஸத்யம்வத, 'தர்மம்சர' என்று சொல்லி நமக்கருகில் என்றும் நின்று நம்மை வழிநடத்துகிறது. இந்தப் பேருண்மையான அறத்தைப் புராணங்கள் வாயிலாக நமது மூதாதையர்கள் நமக்குப் புரிய வைக்கிறார்கள். இவ்வளவு பெரிய அகண்ட, ஆழ, நுணுக்கமான வேதாகம புராண, இதிகாச, திருமுறைகளைக் கொண்டவர்கள் இந்துக்கள். இவர்களில் ஒருசிலர் கடவுளைக் கண்ணால் கண்டதில்லை. ஆதலால் கடவுள் இல்லை எனக் கூறுகின்றனர்.

மின்சாரத்தைக் கண்ணால் காணமுடியாது. மின்சாரம் செய்யும் வேலைகளால் அது உண்டென உணருகிறோம். நமது உடம்பில் உயிர் இருப்பதைக் கண்ணால் காணமுடியவில்லை ஆதலால் எனக்கு உயிரில்லை என்று யாராவது கூறமுடியுமா? அதுபோலக் கடவுளைக் கண்ணால் காணமுடியவில்லை, எனவே கடவுள் இல்லை எனக் கூறுவதும் தவறாகும். இந்து மதத்தின் இருகண்கள் சைவம், வைணவமாகும்.

வைணவம் என்பதற்கு விஷ்ணு வைக் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம்எனப் பெயர். இது வடகலை, தென்கலை என இரு வகைப்படும். வடகலையார் வடமொழியில் உள்ள வேதசாத்திரங்களுக்கு ஏற்றங் கொடுப் பார்கள். தென்கலையார் தமிழ் மொழியில் உள்ள ஆழ்வாராதிகளின் வாக்குகளுக்குப் பெருமை கொடுப்பார்கள்.

வைணவத்தில் ஐந்து குறிகள் உண்டு. அவை; தாபம், புண்ட்ரம், நாமம், மந்திரம், அர்ச்சனம் என்பனவாம். இதனைப் பஞ்ச சமஸ்காரம் என்பார்கள். வைஷ்ணவம் கூறுகிற முக்யப் பொருள்கள் ஐந்து. அதனை அர்த்த பஞ்சகம் என்றழைப்பார்கள்.

1. அடைபவன் — யாரென்றால் ஜீவன்.
2. அடையப்படுவது — விஷ்ணு.
3. பயன் — முடிவிலா இன்பம்.
4. உபாயம் — பக்தி.
5. இடையூறு-சாஸ்திரவிரோதமான செயல்

சைவத்தைப் போலவே வைஷ்ணவத்திலும் முப்பொருள் உண்மை பேசப்பெறுகின்றது. இதனைத் தத்துவத்திரயம் என்பார்கள். அவை, ஈஸ்வரன், சித்து, அசித்து என்பனவாகும். உயிர்களை அணு, ஞானம், ஆனந்தம், அமலம் என நான்கு விதமாகப் பிரித்துள்ளனர். அவர்கள் பக்தர், முத்தர், நித்தியர் எனப்படுவார்கள்.

வைஷ்ணவத்தில் கடவுளுக்கு இலக்கணம் கூறும்போது அவர் விகாரமற்றவர், ஞான வடிவினர், அளவிலாதவர், மகிழ்ச்சி வடிவினர், மலப்பற்றில்லாதவர், எனக் கூறுவார்கள். அஷ்டாக்ஷரி, ஷடாக்ஷரி, துவாதசாக்ஷரி என்பவை மந்திரங்களாகும்.

யாதவம்,மாயாதவம், ஹிரண்யகர்ப்பம், இராமானுஜீயம், பாஸ்கரம், தத்துவவாதம் என ஆறு உட்சமயங்கள் இதிலே உண்டு. விஷ்ணு என்ற சொல்லுக்கு எங்கும் நிறைந்தவர், இரக்ஷகர், யாவரையும் காத்துப் படைத்து வருபவர் என்ற பொருள். ஸ்ரீவைகுண்டத்தில் பரவாஸீ தேவராய் வீற்றிருக்கும் இவர் தனது உந்தித் தாமரையிலிருந்து பிரமதேவரை உண்டாக்கி உலகத்தைப் படைக்கிறார் எனவும் பிரமதேவரிடத்திலிருந்து உருத்திரனை உண்டாக்கி அவரைக் கொண்டு சங்காரத்தைச் செய்கிறார் எனவும் வைஷ்ணவம் கூறுகிறது. உலகைக் காத்தருளும் கடமையைத் தாமே மேற்கொண்டிருக்கிறார்.

தேவர்களுக்காக மகாமேருவை மத்தாகவும் வாஸுகியைக் கயிறுகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்து உதவி புரிந்து தர்மத்தை நிலை நாட்டினார். தேவர்கள் முதலிய நல்லோர்களை ரக்ஷித்துள்ளார்.

ஆன்மாக்களைச் சார்ந்திருக்குந் தத்துவக் கட்டங்களும் அவனேயாவான். மாயையால் ஆன்மாக்களைப் பந்தித்து திரும்பவும் நீக்குவான். ஆதலால் அம்மாயனை அன்றி மாயை நீங்காது. மாயனை வழிபட மாயை நீங்கும். மாயை நீங்கினால் பரம புருஷனாகிய விஷ்ணு, விரஜை ஆற்றிலே ஆன்மாவைச் சுத்தமாக்கி வைகுண்டத்தில் சாரூப பதவியைக் கொடுத்தருள்வான் என இந்து மதத்தின் இருகண்களில் ஒன்றாக விளங்கும் வைஷ்ணவம் தமது சிறந்த அறநெறியை உலகுக்கு உணர்த்துகிறது.

இந்து மத வாழ்க்கையில் அறநெறியைக் கடைப் பிடித்து மக்களுக்கு மாபெரும் வழிகளை வகுத்தளித்த ஞானச்சார்யார்கள், சிவபெருமானையும், திருமாலையும் ஒன்றாகவே கண்டார்கள். 'ஒன்றாகக் காண்பதே காட்சி.' என்பது ஆன்றோரின் அருள்மொழி! தேவாரத்தில் சிவனை, விஷ்ணுவாகவும், பிரபந்தத்தில் விஷ்ணுவை சிவனாகவும் பாவித்து, நேசித்துப் பூஜித்துப் பாடியுள்ளார்கள். சிவபெருமானை, 'அலைகடல் நடு அறிதுயிலமர் அரியுரு இயல்பான்'' என்று சம்பந்தரும், ''அரி அவன் காண்'' என்று திருநாவுக்கரசரும் பாடியிருக்கின்றனர்.

நம்மாழ்வார் தம் பாசுரத்தில் விஷ்ணுவை; முக்கண் அப்பா' என அழைக்கிறார். இந்துமதம் காட்டும் அறநெறி மேலாம் பரம் பொருளுக்குப் பேதமில்லை எனப் புகட்டுகின்றது.

ஒருவருடைய திருமேனியில் மற்றொருவர் உறைவதாக உரைக்கப் பெறுகின்றது. சிவபிரானது இடது பக்கம் மஹா விஷ்ணு இடம் கொண்டிருப்பதாக தேவாரத்திலும்,

விஷ்ணுவின் வலது பக்கத்தில் சிவன் வீற்றிருப்பதாகப் பிரபந்தத்திலும் பாடப் பெற்றுள்ளது. நாரணனை இடப்பாகத்து அடைத்தார் போலும் எனத் தேவாரமும் ''பிறை தாங்குசடையானை வலத்தே வைத்து எனப் பிரபந்தமும் கூறுவது, இந்து மதத்தின் சைவ வைணவ இருபெருங் கரைகளுக்குப் பாலமாக அமைகின்றது. வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும், சாதகஞ் செய்திடும் வைணவம். சார்ந்திடவும், பாதகந்தீர்ந்து பலரும் அறத்தின் வழி நின்றிடவும், காதல்கொண்டு இந்து மதத்தை ஏற்றுவோம், அது சாற்றுகின்றபடி நாமனைவரும் நடந்து நற்கதி பெறுவோமாக!

மனிதர்கள் புகழ்வதும் சீக்கிரம்;
இகழ்வதும் சீக்கிரம்.
ஆதலால் மற்றையோர் உன்னைப்பற்றிச்
சொல்லும் வார்த்தைகளைக் கவனிக்காதே.

நியாயமான விலையில் ஆடவர், பெண்கள் சிறுர்களுக்குரிய
கண்ணுக்கழகிய சேர்ட், சூட், சாரி வகைகளைப் பெற்றுக்கொள்ள

விஜயம் செய்யுங்கள்

சரஸ்வதீஸ்

SARASWATHY'S

Dealers in Textiles & Fancy Goods.

19, KOTMALE ROAD — NAWALAPITIYA.

வீணாய்ப்போன நாள் எது?
நாம் ஒரு தடவைகூட சிரிக்காமல் கழித்துவிட்ட நாள்.

★ கட்டிட வேலைகளா?
★ சுவர் வர்ணம் தீட்டும் வேலைகளா?
★ இரும்புப் பொருட்களா?
★ கண்ணாடி வகைகளா?
★ மின்சார இணைப்பு உதிரிப் பாகங்களா?
சகலவற்றிற்கும் எம்மை நாடுங்கள்

Estate Supplies Agency

19-21, Gampola Road – Nawalapitiya.

T'phone: 262

யாரைக்கண்டாலும் தோலைப் பாராதே;
பூச்சைப் பாராதே; உள்ளே துடிக்கும்
சுத்தாத்ம சக்தியைக் காண்;
இதற்கே உள்ளுணர்வு என்பது;

நாகரீக நங்கையர், ஆடவர் விரும்பும் சாரி, சேர்ட்டிங், சூட்டிங் வகைகளுக்கும்
சிறார்களுக்கேற்ற சிறந்த ஆடைகளுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்

JAYARAM TEXTILES

DEALERS IN TEXTILES

No. 33, Gampola Road - Nawalapitiya.

காலத்தை கடமையாக்கு;
கடமையைப் பொதுநலமாக்கு;
பொதுநலப் பயனைக் கடவுளுக்கு நிவேதி
இதுவே கீதாசாரம்

எம்மிடம்

★ மிளகாய் ★ அரிசி ★ சோளம் ஆகியவற்றை
சுத்தமான முறையில் அரைத்து பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் பிரவுன் பேப்பர் பேக்ஸ்–பொலித்தின் வகைகளும் கிடைக்குமிடம்

Sri Sakthi Grinding Mills

98, Kotmale Road—Nawalapitiya.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

எம்மிடம் சகலவிதமான இரும்புச் சாமான்கள், மின்சார இணைப்புக்கள்
மற்றும் கட்டிட சாமான் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்

Central Trading Corporation

27, Gampola Road — Nawalapitiya. Phone: 323

எல்லாவித
ஆங்கில மருந்து வகைகளும்
பெற்றுக்கொள்ள



ரேணுகா மெடிக்கல்ஸ்
கொத்மலே வீதி,
நாவலப்பிட்டி.

ஆத்மஜோதி நிலைய
வெளியீடுகள்.

- கந்தக் கதம்பம் — 3-00
- தத்துவக் கதைகள் — 3-50
- திருமுறைச் செல்வம் — 7-50
- தீங்கனிச்சோலை — 2-50
- ஆத்மநாதம் — 3-00
- இளங்கோவின் கனவு — 2-25
- பாட்டாளி பாட்டு — 1-50
- ஏழாலை — 10-00

வியாபாரிகளுக்கு விசேட கழிவு
உண்டு.

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி.

மனிதனுடைய ஆயுளில் கழிந்த காலம் போக
உண்மையில் இருப்பது ஒரு கண நேரமே.
வாழ்வு என்பது ஆற்று நீரைப்போல் ஓடி ஓடிக் கழிந்துபோகும்
ஒரு நிகழ்ச்சியே;

நவநாகரீகமான தங்க ஆபரணங்களை
நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும் செய்துகொள்ளவும்
திருமணம், மற்றும் வைபவங்களுக்கான எவர்சில்வர்
மற்றும் பரிசுப் பொருட்களுக்கும்,
நகை ஈடு பிடிப்பதற்கும்
ஏற்ற இடம்



VENU JEWELLERS
26, Kotmale Road – NAWALAPITIYA.

ஆடவர்க்கு தொழில் உயிர்?
பெண்களுக்கு ஆடவர்களே உயிர்!

மிளகாய் ● கோப்பி ● பயறு
மற்றும் சகல அரைப்புச் சாமான்கள்
சுத்தமாக அரைத்துக்கொள்ளவும்
பொலித்தின் மற்றும் பிரவுன்பேப்பர்
வகைகள் பெற்றுக்கொள்ளவும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

Jayanthi Grinding Mills
No. 8, Gampola Road Back Lane
NAWALAPITIYA.

எங்களிடம் சகலவிதமான
ஜவுளிவகைகளும் ரெடிமேட் ஆடைகளும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

VASANS
Vaughan's Park Road
NAWALAPITIYA.

ஆத்மஜோதி 30வது ஆண்டுச் சிறப்பு மலருக்கு
எமது இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்!



ஆ. க. கணேசபிள்ளை & சன்

190, வடகரை வீதி, திருக்கோணமலை.



விநியோகஸ்தர்கள்:

- துவக்கு
- வெடிமருந்து
- தோட்டாக்கள்
- சைக்கிள் உதிரிப்பாகங்கள்

ஆகியன.

எங்களிடம்



ரொபியாலக் எனமல் பெயின்ட்
ரொபியாலக் எமல்சன் பெயின்ட்
பி. வி. ஸி. பைப் அன் பைப் பிற்றிங்
எலக்டிரிக்கல் சாமான்கள்
மற்றும் சாப்புச் சாமான்களும்
சில்லறைச் சாமான்களும்
மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

தர்மா ஸ்டோர்

261, நீதி மன்ற வீதி
திருக்கோணமலை.

தொலைபேசி: 331

எங்களிடம்

பாடசாலைப் புஸ்தகங்கள் உபகரணங்கள் சாய்ப்புச் சாமான்கள் மற்றும் இந்திய நாவல்கள், சஞ்சிகைகள் முதலியன மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



வே.ஆ.சிதம்பரப்பிள்ளை சன்ஸ்

புத்தகசாலை

43, பெருந்தெரு – திருக்கோணமலை

- ஆங்கில ஊசி மருந்துகள்
- ஆயுர்வேத மருந்துகள், சூரண வகைகள்
- கோவில் அபிடேகம், திருவிழாக்கள்
- திருமண விழாக்கள்
- புதுமனைக்கு அத்திவாரமிடல்

முதலிய வைபவங்களுக்கு தேவைப்படும் அபிஷேக திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, சூடம், விளாவு சூடம் சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர் அத்தர் நவரெத்தினம், பஞ்சலோகம், முதலிய சகல சாமான்களும் சந்தனம், குங்குமம், சாந்துப் பொட்டுக்கள் முதலியவையும், சாராயச் சூரணம் பெரியவேர்க்கொம்பு சூரணம், சிந்தாமணி சூரணம், மற்றும் கண் மருத்தெண்ணை வகைகளும் லேகிய வகைகளும், திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ்
RAJA MEDICAL STORES

46, 3ம் குறுக்குத் தெரு – திருக்கோணமலை



எங்களிடம்

சுவாமியும், சுவாமி அலங்காரங்களும், அழகிய முத்து இரதமும், முத்து மணவறையும், புஷ்பத்தால் வீட்டு அலங்காரங்களும், திருமண மாலைகளும் வரவேற்பு மாலைகளும் குறித்த நேரத்தில் குறைந்த செலவில் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

A. SUBRAMANIAM

21, KOTMALE ROAD
NAWALAPITIYA

மலிவு விலையில் ஜவுளி வகைகள்
பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்



நடராஜாஸ்

41, கம்பளை வீதி,
நாவலப்பிட்டி

பத்திரிகைகள்
சஞ்சிகைகள்
நாவல்களுக்கு

சிறந்த ஜவுளி வகைகள்
நியாயமான விலைக்கு
பெற்றுக்கொள்ள

பஞ்சலிங்கம் ஸ்டோர்ஸ்

4, பிரதான வீதி,
தலவாக்கொல்லை

எங்களிடம்

↓

பலசரக்கு மற்றும் சாப்புச்சாமான்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்

கிருஷ்ணன் கொம்பெனி

133-135. மத்திய வீதி,
திருக்கோணமலை.

தொலைபேசி இல: 403

- இரும்புச் சாமான்கள்
- சைக்கிள் உதிரிப்பாகங்கள்
- மின்சார உபகரணங்கள்
- மீன்பிடி உபகரணங்கள்

மற்றும் தேவைகளுக்கு



வேல் அழகன் ஸ்ரோர்ஸ்

184. ஏகாம்பரம் வீதி,
திருக்கோணமலை.

கன்னியா கன்ரீன்

கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு
வருபவர்கள்
எங்கள் சிற்றுண்டிச்சாலைக்கும்
விஜயம் செய்யுங்கள்.

★

சுத்தமான பசும்பால் மற்றும் இன்சுவைச்
சிற்றுண்டி வகைகளும்
இங்கே கிடைக்கும்.

★

உரிமையாளர்: S. கனகசபாபதி

★

Kanniya Canteen

KANNIYA.

நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்

↓

உள்ளூர் வெளியூர்
சகலவிதமான மருந்து வகைகளும்
எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

St. James Medical Hall

சென். ஜேம்ஸ் மருந்துச்சாலை

5, கல்லூரி வீதி,
திருக்கோணமலை.

Registered at the G. P. O. as a Newspaper M. L 359/00

Visit

HOTEL IMPALA

42, Dalada Veediya – KANDY

FOR
DELICIOUS FOOD
COOL DRINKS
ICE-CREAM
BURIYANI
SHORT EATS Etc.
&
Hotel Impala

FOR
BUYING ALL YOUR GEMS AT EXORBITANT RATES &
SELLING YOU THE BEST AT TAKE AWAY PRICES.

சுவையான உணவு வகை
ஐஸ்கிறீம்
சிற்றுண்டி வகைகளுக்கு

குளிர்பானங்கள்
புரியாணி

மலைநாட்டின் தலைநகர் கண்டியில்
யாவரும் விரும்பிச் செல்வது

ஹோட்டல் இம்பாலா

42, தலதா வீதி - கண்டி. நம்பிக்கையான இரத்தினக் கல் வியாபாரிகள்.

உங்கள் இரத்தினக்கற்களை விற்கவும் — வாங்கவும்
எம்மை நாடுங்கள். T'phone: 08-3307

Printed at Sri Athmajothi Press - Nawalapitiya (Sri Lanka)